இந்து தருமம் '96



இந்து மாணவர் சங்கம் 1995 - 96

குறிஞ்சிக் குமரன் கோவில்

போராதனைப் பல்கலைக்கழகம்

உ

சிவமயம்

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

இந்து தருமம் '96

மாணவர் பிரதி

"எழுமின், விழிமின் கருதிய கருமம்
கைகூடும் வரை தளராது உழைமின்."

இதழாசிரியர்
செல்வன். வஸ்தியாம்பிள்ளை சிவலோகதாசன்
வணிகவியல் விசேடதுறை,
கலைப்பீடம்.

இந்து மாணவர் சங்கம் 1995/96
பேராதனைப் பல்கலைக்கழகம்,
பேராதனை.

இந்து தருமம் '96

இதழாசிரியர் : செல்வன். வஸ்தியாம்பிள்ளை சிவலோகதாசன்

வெளியீடு : இந்து மாணவர் சங்கம்,
பேராதனைப் பல்கலைக்கழகம்,
பேராதனை.
இலங்கை. (ஜனவரி '97)

HINDU DHARMAM '96

EDITOR : VASTHIYAMPILLAI SIVALOGATHASAN

PUBLISHED BY : HINDU STUDENTS UNION,
UNIVERSITY OF PERADENIYA,
PERADENIYA,
SRI LANKA. (JAN. '97)

OFF SET : ZENITH LINE,
192, KOTTUGODELLA VEEDIYA,
KANDY. TEL: 08 - 234414

அட்டைப்படம் : எஸ். மஹிந்தன்
முன்றாம் வருடம் - பொறியியற் பீடம்,
பேராதனைப் பல்கலைக்கழம்.

காப்பு

கலைமாதும் திருமாதும் களித்தே வாழும்
கவின் பேராதனை நகரிற் கோயில் கொண்டு

நிலையான நற்கல்வி கலையின் ஞானம்
நெஞ்சுருகும் பக்தருக்கே யருளுஞ் சேந்தன்

தலையான தண்டமிழின் ஊஞ்சலேறித்
தமிழ் குறிஞ்சிக் குமரனவன் கனிந்தே யருள

மலை மீதில் பாரதத்தை எழுதும் ஞான
மதகரியின் செஞ்சரணம் காப்பதாமே.

வழிகாட்டும் ஒளி

–அட்டைக்கு அரை நிமிடம்

செல்வன். –எஸ். மஹிந்தன்
பொறியியற் பீடம்

"கருமம் ஒன்றை நிறைவேற்ற, சுட்டு விரலானது
எவ்வாறு தான் சேர்ந்திருக்கும் மூன்று விரல்களையும்
விடுத்து கட்டை விரலோடு இணைகின்றதோ, அவ்வாறே
ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களின்
சேர்க்கையில் இருக்கும் ஆன்மாவானது முத்திநிலையடைய,
மெய்ப்பொருளாகிய பரம்பொருளோடு கலக்கவேண்டும்."

கல்தோன்றி மண்தோன்றா காலத்திற்கும் முன்தோன்றிய மூத்த மதம் எம் இந்துமதம். இந்துக்களின் வாழ்வைச் செம்மையாக்கி, வளம் பெருக்குவது இந்துசமய விதிமுறைகளாகும். காலங்காலமாக இந்துக்களால் கடைபிடிக்கப்படுகின்ற ஆசார அனுட்டானங்களும், சித்தாந்தக் கொள்கைகளும் இறைவனால் உணர்த்தப்பட்டவையாமினும் எமக்கு நேரடியாக அருளப்பட்டவையல்ல.

பகலவன் ஒளியை எம் விழியால் நேராக நோக்க முடிவதில்லை. ஆனால் அக்கதிரோன் தயவால் கதிர்வீசும் தண்மதியின் மென்ஒளியை நம் கண் ஏற்க மறுப்பதில்லை. அதனாற்தான் எல்லா மக்களாலும் இலகுவில் புரிந்து கொள்ள முடியாத, இந்து சமயத்தின் உயிர் நாடிகளான உயரிய கருத்துக்களும், மெய்ப்பொருட் கோட்பாடுகளும், தத்துவசாஸ்திரங்களும் முதலில் அனுபூதிமான்களாகிய இருடிகளுக்கு இறைவனால் அருளப்பட்டன. இப்பொக்கிஷங்கள்தான் பின் முத்தர்களாலும் சித்தர்களாலும் எளியவடிவிலே பகுக்கப்பட்டு, தொகுக்கப்பட்டு இந்துக்களின் வாழ்க்கையில் ஒளி விளக்கேற்றி வழி காட்டிக் கொண்டிருக்கின்றன

ஆக்கங்களின் கருத்துக்களுக்கு ஆக்கியவர்களே பொறுப்பாளிகளாவர்.
–இதழாசிரியர்–

இராமகிருஷ்ணமிஷனின் சுவாமிகளின் ஆசிச்செய்தி

பேராதனைப்பல்கலைக்கழக இந்து மாணவர் சங்கம் ஒவ்வொரு ஆண்டும் "இந்து தருமம்" என்ற பெயரில் ஒரு சமய சஞ்சிகையை வெளியிடுவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். இவ்வாண்டும் இச்சஞ்சிகை வெளிவர இருப்பதையறிந்து அவர்களுக்கு எனது பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

இளைய தலைமுறையினர் நமது சமய உண்மைகளைக் குறித்து ஆழ்ந்து சிந்திக்கவும், சமயத்திலே நாட்டம் கொள்ளவும், இச்சஞ்சிகை ஒரு நல்ல தூண்டுதலாக உள்ளது என்பதில் ஐயமில்லை.

இன்று மனித சமுதாயம் அமைதியற்றிருக்கிறது; பல பிரச்சனைகளையும், சவால்களையும் எதிர்நோக்கியுள்ளது. இத்தகைய சூழ்நிலையிலே, சமயத்தை சரியான முறையிலே பின்பற்றி, சமுதாயத்திலே நல்ல மாற்றங்களைக் கொண்டு வர அனைவரும் பாடுபட வேண்டும். வெறும் பேச்சளவிலும், கொள்கையளவிலும் உள்ள சமயத்தை, வாழ்க்கை நெறியாக மாற்றியமைக்க வேண்டிய அவசர காலகட்டம் இது. அமைதி நிறைந்த எதிர்காலத்தை உருவாக்க வேண்டிய பொறுப்பு நம் அனைவருக்கும் உண்டு.

பேராதனைப் பல்கலைக்கழக இந்து மாணவர் சங்கத்திற்கும், அவர்களை நல்ல முறையிலே வழிநடத்திச் செல்லும் பொறுப்பாசிரியர்களுக்கும் எனது நல்வாழ்த்துக்களைக் கூறிக் கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

சுவாமி ஆத்மகனாநந்தா
தலைவர்

இலங்கைக்கிளை
இராமகிருஷ்ணமிஷன்
40, இராமகிருஷ்ண வீதி
கொழும்பு – 06

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் சுவாமிகளின் ஆசிச்செய்தி

பேரார்தனைப் பல்கலைக்கழக இந்து மாணவர் சங்கம் " இந்து தர்மம்" எனும் மலரை ஒவ்வொரு ஆண்டும் வெளியிட்டு இந்து மதத்திற்குப் பெருமையை சேர்த்து நிற்கின்றது. இப் பூவுலகில் மலர்கள் பல மலர்கின்றன. மனம் உள்ள மலர்களையே அதிகம் விரும்புகின்றார்கள். அதைப் போலவே இந்து தருமமும் மனம் உள்ள பல கட்டுரைகளைத் தாங்கி ஒவ்வொரு ஆண்டும் மலர்கின்றது. இளைய தலைமுறை யினர்களிடையே இந்து மதத்தினுடைய உண்மைக் கருத்துக்களை நெறிப்படுத்த வேண்டியது எல்லோருடைய கடமை ஆகும். மதங்கள் பலவாக இருந்தாலும் எல்லா மதங்களுமே தர்மத்தையும் அன்பையும், கருணையையும் போதிக்கின்றது. மேற்படிப்பிற்காக பல்கலைக்கழகம் போகும் மாணவர்கள் நல்ல சிந்தனையில் வாழ்கின்றார்கள் என்பதனையும் இந்த மலர் எடுத்துக் காட்டுகின்றது. எல்லோருக்கும் இறைவனுடைய ஆசி கிடைப்பிரார்த்திக்கின்றோம்.

" வாழ்க இந்து மன்றம். வளர்க அவர்கள் பணி
என்றும் வேண்டும் இன்ப அன்பு"

ஸ்ரீலஸ்ரீ. சோமசுந்தரபரமாசாரியஸ்வாமிகள்
ஆதீன முதல்வர்

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்
நல்லூர், யாழ்ப்பாணம்.

Vice - Chancellor's Message

It is my pleasure to send the message of greetings on the occassion of the release of the magazine 'HINDU DHARMAM" being published by the Hindu students union of the University of Peradeniya.

It is heartening to note that the Hindu students union promotes the spiritual life of students, and suceeds in bringing harmony among students of different ethnic and religious backgrounds through its activities. This is a national service par excellence.

I hope the Hindu students union would continue it's activities and publications of Hindu Dharmam, the magazine which fulfills the spiritual and educational needs of the society in the years to come also.

I appreciate the hardwork of the editor and the working committee for their untiring efforts to release this magazine perfectly.

Prof. C. M. Madduma Bandara
Vice-Chancellor

University of Peradeniya
3rd December 1996

செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் ஆசியுரை

குறிஞ்சிக்குமரன் திருக்கோயிலினால் அருட்பொழிவும் அறிவுப்பொழிவும் பெறுவது பேராதனைப் பல்கலைக்கழகம் " முருகா, நின்னிடம் யாமிரப்பவை பொன்னும் பொருளும் போகமுமல்ல: அன்பும் அருளும் அறமும் மூன்றே" என்ற குறிக்கோளுடனே இயங்கி வரும் இந்து மாணவர்களை தன்னகத்தே கொண்டது இந்நிறுவனம். எனவே இப் புனித பணியை முதலில் வாழ்த்தி நிற்கின்றேன். இம்மன்றத்தால் ஆண்டுதோறும் வெளியிடப்படும் " இந்து தருமம்" சஞ்சிகை சமய, சமூக, உறவைப் பலப்படுத்தி நிற்பதை நான் நன்கு அறிவேன். கலைத்துறையிலும், விஞ்ஞானத்துறையிலும் உயர்கல்வி பயிலும் பல்கலைக்கழக மாணவர்களின் தமிழ்ப் பண்பாட்டை வளர்க்கும் உயர்ந்த அறிவியல் ஏடாகவும் இது விளங்குகின்றது.

" கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்."

என்ற குறட்பாவை நன்கு சிந்தித்து அவ்வழியில் நின்று செயலாற்றுபவர்கள் இவர்கள்.

" படமாடக்கோயில் பரமற்கொன்று ஈயில்
நடமாடக்கோயில் நம்பர்க்கு அங்காகா
நடமாடக்கோயில் நம்பர்க்கொன்றீயில்
படமாடக்கோயில் பரமற்கங்காமே."

–திருமந்திரம்

சமஉரிமை, பொதுஉடமை என்று பேசுகின்றவர்கள் எல்லோரும் நன்கு வரவேற்கத்தக்க பாடல் இதுவாகும். ஆனால் சமய நெறியினால் மனிதன் அடைகின்ற நன்மைகளிலும் பார்க்க, சமய வெறியினால் அவன் அடைகின்ற தீமைகள் அதிகம். இந்த நிலையினால் மனித சமுதாயம் சீர்குலைந்து அல்லற்பட்டதை சமயவரலாறு காட்டுகின்றது. காலப்போக்கில் இவையே சமய சமரசத்தை ஏற்படுத்துவற்கும் ஏதுவாக அமைந்தது. எமது இந்து சமயத்தில் தீண்டாமை ஒரு சாபக்கேடு: வேண்டாத சமயச் சடங்குகள் மற்றொன்று: இதனால் சத்தைவிட்டு சக்கையையே பெற்றுக் கொண்டு வந்துள்ளோம். இது சமயத்தின் குற்றமல்ல: சமயிகளின் குற்றமாகும். எனவே ஒவ்வொருவரும் தத்தமது தாய்ச் சமயத்தின் தனித்தன்மையை பேணிப் பாதுகாத்து வருவதோடு ஏனைய சமயங்களில் நல்ல அம்சங்களையும் மதிக்கப் பழகிக் கொள்வதே தலையான கடனாகும்.

" இந்து தருமம்" என்ற இந்த சஞ்சிகையில் இந்துமதக் கோட்பாடுகளின் பெருமையினையும் தொண்டுகளின் மகிமையையும் மனித நேய ஒருமைப்பாட்டையும் வெளிப்படுத்தும் விடயதானங்கள் இடம்பெறுவது மிகவும் வரவேற்கத்தக்கது. இந்து தருமம் என்றும் நின்று நிலவுக!

" மேன்மை கொள் சைவ நீதி
விளங்குக உலகமெல்லாம்."

செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி
தலைவர்

ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பளை.

குறிஞ்சிக்குமரன் கோயில் பிரதம குருக்களின் ஆசிச்செய்தி

ஓம் ஏகதந்தாய வித்மஹே வக்ர
துண்டாய தீமஹி, தன்னோ, புத்திப்
ப்ரசோதயாத்.

ஓம் ஸரஸ்வத்யை வித்மஹே, ப்ரஹ்ம
புத்ரியை தீமஹி, தன்னோ வாணீ
ப்ரசோதயாத்.

ஓம் சரவணபவாய வித்மஹே,
சக்தி ஹஸ்தாய தீமஹி, தன்னோ,
குறிஞ்சிக்குமரப் ப்ரசோதயாத்.

இந்து தருமம் நூலை வெளியிடுகின்ற பேராதனைப் பல்கலைக்கழக இந்து மாணவ சங்கத்தினர், உபதேசங்கள், சொற்பொழிவுகள், என்று இல்லாது; தமது செயற்பாடுகளினால் மற்றவர்களுக்கு வழிகாட்டிகளாகவும் சிறந்த ஊக்குவிப்பாளர்களாகவும் விளங்குகின்றனர். இந்து தருமம் நூல் வெளியீடுகளும், குறிஞ்சிக்குமரன் ஆலயத்தில் இவர்கள் செய்கின்ற தொண்டுகளும், ஏனைய பணிகளும் எல்லோருக்கும் பயனளிப்பவையாக உள்ளன.

வருடாவருடம் மாறி வருகின்ற இந்து மாணவ சங்க நிர்வாகிகளால் இந்நூல் வெளியிடப்படுவதாலும், புதியவர்களின் ஆக்கங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுவதாலும் புதியவர்கள் ஊக்குவிக்கப்படுவதுடன் பலவித வாய்ப்புக்களும் அவர்களுக்கு வழங்கப்படுகின்றன.

ஆன்மீகத் துறையில் மற்றவர்களையும் ஈடுபடுத்தி தம்மை அடியொற்றி வருவோரும் பயன்பெறும் வண்ணம் இந்நூலை வெளியிடுகின்றனர்.

பல்வேறு பயன்களைத் தாங்கி வரும் இந்நூல் மேலும் வளர்ச்சி பெறவும், உதவி புரிவோரும் எழுதுவோரும், வெளியிடுவோரும், வாசிப்போரும் பெரும்பயன் பெற வேண்டுமென ஆசிகள் கூறி எல்லோருக்கும் எல்லாம் வல்ல குறிஞ்சிக்குமரன் திருவருள் பாலிக்க வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

சுபம் அஸ்து நித்தியம்.

சிவஸ்ரீ. பா. நித்தியானந்தக்குருக்கள்
பிரதமகுரு – குறிஞ்சிக்குமரன் ஆலயம்
பேராதனைப் பல்கலைக்கழகம்

பெருந்தலைவரின் வாழ்த்துச் செய்தி

" எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார் திண்ணியர் ஆகப் பெறின்"

ஒரு செயலைச் செய்து முடிக்க நினைப்பவர் மனத் திண்மை உடையவராக இருந்தால், நினைத்ததை நினைத்தபடி முடிப்பர்.

" சொல்லுதல் யார்க்கும் எளிய; அரியவாம் சொல்லிய வண்ணம் செயல்"

சொல்லுவது என்பது எல்லோர்க்கும் எளிய செயல்; சொல்லியபடி செய்வது என்பது கடினமான செயல்.

திருக்குறள் மாமேதை திருவள்ளுவர் செப்பிச் சென்ற செய்யுள்களே இம்முறை இந்து தருமம் இதழுக்கு வாழ்த்துரை எழுத முனைந்த பொழுதில் என் மனதில் எழுகின்றன. வள்ளுவன் வாக்குப்படி நம் மாணவர் நடந்து கொள்வது மிகவும் பாராட்டப்பட வேண்டிய ஒரு விடயமாகும்.

இந்து தருமம் இதழிலே இந்து சமயம் சார்ந்த பல கட்டுரைகள் வெளிவந்துள்ளன. இக் கட்டுரைகள் பெரும்பாலும் மாணவர்களினால் எழுதப்படுகின்றன. இது எம் மாணவர் மத்தியில் சமய அறிவினை வளர்க்கவும், எழுதும் திறனை ஊக்குவிக்கவும் வழி கோலுகின்றது. பல்கலைக்கழக வாழ்விலே இப்படியான சந்தர்ப்பங்களை மாணவர்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

தற்போதைய இந்து மாணவர் சங்க செயற்குழு இன்று வெளியிடும் " இந்து தருமம்" இதழுடன் தமது பணியினைப் பூர்த்தி செய்து கொள்கின்றனர். இச் செயற் குழுவின் காலத்திலே நிதி நெருக்கடிக்குள்ளான சில மாணவர்களுக்கு நிதி வழங்கும் ஓர் அருமையான திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இத்திட்டம் மேலும் விரிவுபடுத்த வேண்டிய அவசியத்தை உணர்ந்து இச் செயற்குழு எடுத்துக் கொண்ட முயற்சியின் பயனால் எதிர்வரும் ஆண்டுகளில் மேலும் சில மாணவர்களுக்கு நிதி உதவி வழங்கக்கூடிய வாய்ப்புக் கிட்டியுள்ளது. இப்படியாக தமது செயற்குழுவின் காலத்திலே தம் பணிகளைச் செவ்வனே நடாத்தி முடித்த இந்து மாணவர் சங்கத்தினர் அனைவருக்கும் எனது பாராட்டுகளும், நல்லாசிகளும் உரித்தாகுக.

" வெள்ளத்து அனைய மலர்நீட்டம்; மாந்தர் தம்
உள்ளத்து அனையது உயர்வு"

–தண்ணீரின் அளவுக்குத் தக்கபடி மலர்த்தண்டின் நீளம் அமையும்; அது போல, மக்களின் ஊக்கத்திற்கு தக்கபடி உயர்வு கிடைக்கும்

நம் மாணவரிடையே உள்ள ஊக்கம் அவர்களுக்குத் தகுந்த உயர்வினைக் கொடுக்கும். இதற்கு நாம் வணங்கும் குறிஞ்சிக் குமரன் அருள் நிச்சயம் கிட்டும்.

பேராசிரியர். இ. சிவகணேசன்
பெருந் தலைவர்

இந்துமாணவர் சங்கம்
பேராதனைப் பல்கலைக்கழகம்

பெரும் பொருளாளரின் வாழ்த்துச் செய்தி

இலங்கையில் அமைந்துள்ள முருகன் திருத்தலங்களுள் பேராதனைக் குறிஞ்சிக்குமரன் ஆலயம் தனிச் சிறப்பு வாய்ந்தது.

பல்கலைக்கழக இந்து மாணவர்கள் குறிஞ்சிக்குமரனின் நித்திய நைமித்திய வழிபாட்டிலும், திருவிழாக்கள், கூட்டுப்பிரார்த்தனைகளிலும் காட்டி வரும் ஆர்வம் பெருமைக்குரியது.

பேராதனைப் பல்கலைக்கழக இந்து மாணவர் சங்கம்; இப்பல்கலைக்கழகத்தின் முக்கியமானதும், பழமையானதுமான ஓர் மாணவர் அமைப்பாகும். இந்து மாணவர் சங்க இவ்வாண்டு செயற்குழுவினர் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியிலும் நிதி நெருக்கடிக்குள்ளான இந்து மாணவர்களுக்கு ஒரு நிதியை ஒதுக்கி ஒரு பண உதவித் திட்டத்தை ஆரம்பித்துள்ளார்கள். இது இச்சங்கத்தினரின் தளராத தன்னம்பிக்கையையும், அயராத உழைப்பையும் காட்டுகின்றது. இந் நிதியத்தை மேலும் வளர்த்து, நிதி நெருக்கடிக்குள்ளான மாணவர்களுக்கு உதவி செய்வது எமது கடமையாகும்.

மாணவரிடமும், அறிஞர்களிடமும் பெருமதிப்பை பெற்றுவரும் "இந்து தருமம்" சஞ்சிகை இவ்வருடமும் வெளிவருவதையிட்டு மிக மகிழ்ச்சியடைகின்றேன். இச் சஞ்சிகை வெளியீட்டிற்காகவும், மாணவர் உதவி நிதிக்காவும், கொழும்பில் நடாத்தப்பட்ட "குறிஞ்சித் தென்றல்" நிகழ்ச்சி, இந்து மாணவர் சங்கத்தின் திறமையையும், சுறுசுறுப்பையையும், ஒற்றுமையையும் காட்டுகின்றது.

இந்து மாணவர் சங்கத்தின் சமயப் பணிகளில் ஒன்றான "இந்து தருமம்" சஞ்சிகையினை வெளியிடுவதற்கு உதவி செய்த யாவருக்கும் எனது மனப்பூர்வமான பாராட்டுக்களைத் தெரிவிப்பதோடு, இந்து மாணவர் சங்கத்தின் எதிர்கால செயற்பாடுகள் சிறந்த முறையில் நிறைவேற குறிஞ்சிக்குமரன் அருளை வேண்டி வாழ்த்துகின்றேன்.

கலாநிதி. செ. திருச்செல்வம்
பெரும் பொருளாளர்
இந்துமாணவர் சங்கம்

விவசாயப் பொருளியல் துறை
விவசாயப் பீடம்
பேராதனைப் பல்கலைக்கழகம்

துலைவர்....!

பேராதனை வளாகமதில் பேரானந்தம் தருமுனது
ஆறுமுகமதனை ஆராதனை செய்வதற்கு – எம்மை
அரவணைத்த குமரா – உன் திருவடி பணிந்து இச்செய்தியை வரைகின்றேன்.

இயற்கையின் அரவணைப்புடன் கூடிய பேராதனையில் உறைந்து, எம்மை நேர்வழிப்படுத்தும் குறிஞ்சிக் குமரனுக்குத் தொண்டுகள் செய்ய எமக்குக்கிடைத்த நற்பாக்கியத்தை எம் சக்திக்கு உட்பட்ட வகையில் இயன்றவரை முடித்த திருப்தியில் மகிழ்ச்சியடைகின்றோம். இதற்கு மேலாக இவ்வருடமும் "இந்து தருமம்" பல சிறப்புடன் வெளிவருவது எம்மை மேலும் மகிழ்ச்சியடையச் செய்கின்றது.

எமது செயற்குழு பதவிஏற்ற காலந் தொட்டு எமது வழமையான ஆலயப்பணிகளைக் கிரமமாக செய்வதுடன், பல சிறப்பு நிகழ்ச்சிகளையும் செய்துள்ளது. சிறப்பாக பொருளாதார நெருக்கடிக்குள்ளான இந்து மாணவர்களுக்கு புலமைப்பரிசில் திட்டத்தை ஆரம்பித்துள்ளோம். பல சிரமங்களைத் தாண்டி எமது நிலையான வைப்பில் இருந்த பணத்திலிருந்து ஆரம்பித்த இத்திட்டம், இனிவரும் ஆண்டுகள் தோறும் சீரான முறையில் செயற்பட வருங்கால செயற்குழுக்களையும் மாணவர்களையும் செயலாற்றும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன். (புலமைப்பரிசில் திட்ட முழு விபரமும் இவ்விதழில் எழுதப்பட்டுள்ளது.)

இவ்வாண்டு நாட்டுநிலைமைகள் எமக்குப் பாதகமாக இருந்தாலும் கொழும்பு மாநகரில் "குறிஞ்சித் தென்றல் 96" எனும் கலை நிகழ்ச்சியை ஒழுங்கு செய்தோம். மிகவும் குறைந்தளவு ஒத்துழைப்புகளுக்கு மத்தியிலும் மிகச் சீராக, பலரும் பாராட்டும் படியாக நடாத்தி முடித்திருக்கின்றோம். எம்மையே எம்மால் நம்பமுடியாமல் இருக்கின்றது. எதிர்பார்த்ததிலும் சிறப்பாக நிதியும் சேகரிக்கப்பட்டது எமது கண்களில் இருந்து வரும் ஆனந்தக் கண்ணீரின் மத்தியில் இந்நிகழ்ச்சிக்காக முழுமையாக செயற்பட்ட செயற்குழு உறுப்பினர்கள் உ. கருணாகரன், ம. மயூரதன், த. செல்வவினிதா மற்றும் அனைவருக்கும் உள்ளங்கனிந்த நன்றியை தெரிவிப்பதை விட வேறொன்றும் எமக்கு தோன்றவில்லை. மேலும் நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்து தந்த எமது பல்கலைக்கழக தமிழ்ச் சங்கம், சங்கீத நாட்டிய சங்கம் ஆகியவற்றுக்கும் நன்றி தெரிவிக்க கடமைப்பட்டுள்ளோம்.

இவற்றை விட எமது செயற்பாடுகள் யாவற்றிற்கும் உறுதுணையாக இருந்து வெற்றியடையச் செய்த அனைவருக்கும் குறிஞ்சிக் குமரனின் திருவருள் கிடைக்க பிரார்த்திப்பதுடன், அடுத்த கல்வியாண்டிற்கான புதிய செயற்குழுவை அன்புடன் வரவேற்று, இச்சஞ்சிகையை திறம்பட வடிவமைத்த இதழாசிரியருக்கு நன்றி கூறுவதில் உவகையடைகின்றேன்.

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்."

இறுதி வருடம்
பொறியியற் பீடம்
பேராதனைப் பல்கலைக்கழகம்

செல்வன். ***பா. சஞ்சயன்***
தலைவர்
இந்து மாணவர் சங்கம்
பேராதனைப் பல்கலைக்கழகம்

செயலாளர்....!

பேராதனைப் பல்கலைக்கழக வளாகத்தில் மட்டுமன்றி நாடளாவிய ரீதியிலும் குறிஞ்சிக்குமரன் புகழ் பரவுவதற்கு பேராதனைப் பல்கலைக்கழக இந்து மாணவர் சங்கம் தம்மால் இயன்றளவு பணிகளை மேற்கொண்டு வருகின்றது. இந்த வகையில் 1995–1996 ஆம் ஆண்டிற்கான பணிகளை நிறைவேற்ற எமக்கும் ஒரு வாய்ப்பு கிட்டியதற்கு நாம் குறிஞ்சிக்குமரனுக்குத்தான் நன்றி கூறவேண்டும்.

இன்றைய காலக்கட்டத்தில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் தமிழ் மாணவர்கள் பலர் தங்களது கல்வியைத் தொடங்குவதற்கு பொருளாதாரம் மிகவும் முட்டுக்கட்டையாகவுள்ளது. இதனை ஓரளவேனும் நிவர்த்தி செய்யும் முகமாக எமது இந்து மாணவர் சங்கம், முதன் முதலாக புலமைப்பரிசில் திட்டம் ஒன்றை உருவாக்கி, அதனை நடைமுறைக்கு கொண்டு வந்தும் உள்ளது. இத்திட்டம் மென்மேலும் வளர்ச்சியடைவது, சகல மாணவரது பொருளாதார பிரச்சனையையும் நிவர்த்தி செய்வது இனிவரும் புதிய செயற்குழுக்களின் கையில் தான் தங்கியுள்ளது.

ஆண்டு தோறும் வெளிவருகின்ற " இந்து தருமம்" என்ற இதழை வெளியிடுவதற்கும் மாணவர் புலமைப்பரிசில் திட்டத்திற்குமான நிதியை திரட்டும் முகமாக எமது சங்கம் 1996ம் ஆண்டு " குறிஞ்சித் தென்றல் 96" என்ற பல்சுவை கதம்ப நிகழ்ச்சி ஒன்றை கொழும்பில் நடாத்தியது. இந்த நிகழ்ச்சிக்கு சகல வழிகளிலும் உதவி புரிந்த எமது சக மாணவ மாணவியர்களுக்கு எமது சங்கம் என்றென்றும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளது.

செயற்குழுவில் அங்கம் வகிப்போர் மட்டுந் தான் குறிஞ்சிக்குமரன் ஆலய வளர்ச்சிக்கு உழைக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் இந்து மாணவர் ஒவ்வொருவினதும் தலையாய கடமை என்பதை நீங்கள் மறந்துவிடலாகாது. பல்கலைக்கழகத்தை விட்டு நீங்கள் வெளியேறிய பின்னரும் உங்கள் பணியை குறிஞ்சிக்குமரன் ஆலயத்திற்கு வழங்கவேண்டும். குறிஞ்சிக் குமரன் புகழ் உலகெலாம் முழங்க வேண்டும் என்று உங்கள் அனைவரையும் பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

நன்றி

செல்வன். ம. மயூரதன்
செல்வி. த. செல்வவினிதா.
இணைச் செயலாளர்கள்

இந்துமாணவர் சங்கம்
பேராதனைப் பல்கலைக்கழகம்

இதழாசிரியர்.....!

பேராதனைப் பல்கலைக்கழகம் எல்லாச் சமய, கலை, கலாச்சாரங்களுக்கும் சிறப்பிடம் கொடுத்து அவற்றைப் பேணிக்காத்து வருவது அதன் சிறப்பம்சங்களில் ஒன்றாகும். பசுமை பொங்கும் அமைதியான குன்றில் அமைந்திருக்கும் குறிஞ்சிக்குமரன் ஆலயத்தின் இறைபணியில் தம்மை அர்ப்பணித்து, முன்னோடியாகத் திகழ்ந்து வரும் இந்து மாணவர் சங்க, இவ்வாண்டு (40வது) செயற்குழுவின் இதழாசிரியராக இருந்து "இந்து தருமம்" என்னும் இம்மலரினை வெளியிடுவதில் மிகுந்த இதய பூரிப்படைகின்றேன். இப்பேற்றினைத்தந்த தாய், தந்தை, குரு, குறிஞ்சிக்குமரன் அனைவருக்கும் எனது முதற்கண் நன்றிகள்.

பல்வேறு நெருக்கடிகளுக்கும் மத்தியில், சிதறுண்டு போயிருக்கும் எமது சமுதாயமும், எமது சமயமும் ஒரு விடியலை நாடி நிற்பது கண்கூடு. பல்வேறு அகப்புறக் காரணிகள் இந்து மதத்திற்கும், இந்துமத சமுதாயத்திற்கும் இடையூறாக அமையலாம். இவற்றில் நின்று விடுபட வேண்டியது இன்றைய எமது தேவையாகும். இவற்றினைக் கருத்திற் கொண்டே "இந்துமத வளர்ச்சியும், மறுமலர்ச்சியும், விழிப்புணர்வும்" என்று இவ்விதழின் பிரதான கரு அமையலாயிற்று. பிரதான கருவுக்கு அடங்காத பொருள்களிலும் எமக்கு ஆக்கங்கள் கிடைத்தன. எனவே இவ்விதழை மூன்று பகுதியாக பிரிக்க நேரிட்டது.

முதலாவது பகுதி "வரலாறும் தத்துவமும்" இதனுள் இந்துமதத்தின் வரலாற்று ரீதியான தத்துவத்தேடல்களைக் கொண்ட கட்டுரைகளை இயன்றவரைத் தொகுத்துள்ளேன். இரண்டாவது பகுதி "மதமும் விழிப்புணர்வும்" என்ற தலைப்பின் கீழ் பிரதான கருவுடன் தொடர்பான ஆக்கங்களை உள்ளடக்கியுள்ளது. மூன்றாவது பகுதி "கலைகளும் வழிபாடுகளும்" இதனுள் இந்துமத கலை, கலாச்சாரங்களை ஓரளவு பிரதிபலிக்கக்கூடிய ஆக்கங்களையும் தொகுக்க முயன்றுள்ளேன். இவற்றில் எவ்வளவு வெற்றி கண்டுள்ளேன் என்பது தெரியவில்லை.

பல்கலைக்கழக விரிவுரையாளர்களதும், மாணவர்களதும் ஆக்கங்களோடு வெளிவரும் இம்மலரானது இந்துமாணவர் சங்கத்தின் அயராத உழைப்பிற்கும், இறைபணிக்கும் ஒரு சான்றாக அமைவதோடு, இளைய சமுதாயத்தினரிடையே விழிப்புணர்வுடனான இந்துமத சமய சிந்தனைக்கு வழிவகுக்கும் என நம்பலாம்.

இவ்விதழுக்குரிய கட்டுரைகளைத் தொகுப்பதற்கும், ஆக்கபூர்வமான ஆலோசனைகளையும் வழங்கி உதவிய தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர்களான திரு. இரா. வை. கனகரத்தினம், கலாநிதி. துரை. மனோகரன், திரு. வ. மகேஸ்வரன் ஆகியோருக்கும், வழிகாட்டிய ஏனைய ஆசிரியர்களுக்கும் பல்வேறு வகையிலும் உதவிய நண்பர்களுக்கும் எல்லாவற்றிற்கும் மேலாக கட்டுரைகளையும் ஆக்கங்களையும் தந்து எமக்கு ஊக்கமளித்த ஆசிரியர்களுக்கும், நண்பர்களுக்கும், எனது உளமார்ந்த நன்றிகள்.

"எல்லோரும் இன்புற்றிருக்க
என்றும் அவனருளுண்டு"

செல்வன். வஸ்தியாம்பிள்ளை சிவலோகதாசன்
இதழாசிரியர்
இந்துமாணவர் சங்கம்

வணிகவியல் விசேடதுறை
கலைப்பீடம்
பேராதனைப் பல்கலைக்கழகம்

பொருளாதார நெருக்கடிக்குள்ளான இந்து மாணவர்களுக்கான புலமைப்பரிசில் திட்டம் (NEEDY HINDU STUDENTSHIP - NHSS / 1996)

பொருளாதார நெருக்கடிக்குள்ளான இந்து மாணவர்களுக்கான புலமைப்பரிசில் திட்டம் ஒன்றை ஆரம்பித்து வைப்பதில் எமது செயற்குழு பெருமகிழ்ச்சியடைகின்றது.

எமது சமுதாயத்தில் உள்ள முக்கிய குறைபாடாக கருதப்படுவது, நாம் பூசைகள், விழாக்களுடன் மட்டும் நின்று விடுவது தான். இதற்கு மேலாக சமுதாயத்திற்கு நேரடியாக உரிய நேரத்தில் பயன்படக்கூடிய திட்டங்களை செயற்படுத்துவதில் தயங்குகின்றோம். உண்மையில் இத்திட்டங்களைச் செயற்படுத்த முனையும் போது பல கோணங்களில் இருந்தும் விமர்சனங்கள் விளக்கங்கள் வெளிப்படும். இதற்காக நற்திட்டங்களை செயற்படுத்த பின் நிற்கக்கூடாது.

இந்த வகையில் எமது சங்கமும், பொருளாதார நெருக்கடிக்குள்ளான இந்து மாணவர்களுக்கான புலமைப்பரிசில் வழங்கும் திட்டத்தினை ஆரம்பிக்க திடசங்கற்பம் பூண்டது. 30-08-96 அன்று இடம்பெற்ற இந்து மாணவர் சங்க செயற்குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி, பொருளாதார நெருக்கடிக்குள்ளான இந்து மாணவர்களுக்கான புலமைப்பரிசில் நிதியத்தை ஆரம்பிப்பதற்கு முதற் கட்டணமாக சங்க நிலையான வைப்பில் உள்ள ரூபா 100,000/= (ஒரு லட்சம்) நிதியையும் ரூபா 15,000/= வட்டியுடன் (இலங்கை வங்கி இல. 2000 734-4, 646403, 13-09-96) ஆலய பொறுப்பாண்மைக் குழுவின் தனியான கணக்கிற்கு மாற்றுவதென தீர்மானிக்கப்பட்டது.

-9-96 அன்று நடைபெற்ற ஆலய பொறுப்பாண்மைக்குழுக் கூட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது போல், புலமைப்பரிசில் திட்டத்தை செயற்படுத்த உபகுழு ஒன்று அமைக்கப்பட்டதுடன் புலமைப்பரிசில் திட்டத்திற்கு என ஒரு யாப்பும் வரையப்பட்டது. இந்த உபகுழுவில் பொறுப்பாண்மைக்குழுத் தலைவர், செயலாளர், இந்து மாணவர்சங்க பெரும் தலைவர், பெரும் பொருளாளர் மற்றும் இந்து மாணவர்சங்கத் தலைவர் ஆகியோர் பதவிவழி அங்கத்தவர்களாக இருப்பார்கள். இவ் உபகுழுவே புலமைப்பரிசில் திட்டம் சீராக இயங்குவதை உறுதிப்படுத்தும். ஒவ்வொரு இந்துமாணவர்சங்க கல்வியாண்டிலும் புதிய விண்ணப்பங்கள் கோரப்பட்டு மாணவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். புலமைப்பரிசில்களின் எண்ணிக்கையும், தொகையும் நிலையான வைப்பில் இருந்துவரும் வட்டியில் இருந்து தீர்மானிக்கப்படும்.

-09-1996 அன்று நடைபெற்ற பொறுப்பாண்மைக்குழுக் கூட்டத்தில் யாப்பு அங்கீகரிக்கப்பட்டு, உபகுழுவின் சிபார்சின் படி விண்ணப்பித்த மாணவர்களில் ஐவர் (5) தெரிவுசெய்யப்பட்டனர். ஆவணித்திங்கள் 31ம் நாள் (16-9-96) திங்கட்கிழமை விநாயக சதுர்த்தி நன்நாளில் முதலாவது புலமைப்பரிசில் வழங்கும் வைபவம் ஒழுங்கு செய்யப்பட்டது. இந்துமாணவர்சங்கத் தலைவர் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் ஆலய பொறுப்பாண்மைக்குழுத் தலைவர் பேராசிரியர் த. யோகரட்ணம் அவர்களால் புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டது.

இந்நிதியத்தை மேலும் மேலும் வளர்த்து, உண்மையில் நெருக்கடிக்குள்ளான இந்துமாணவர்களுக்கு சென்றடைய வேண்டும் என்பதில் நாம் உறுதியாக நிற்கின்றோம்.

காலம்கனிந்து வந்தமையால் எமது செயற்குழுவின் காலத்திலேயே பல இடர்களுக்கு மத்திமிலும் 21-12-96 அன்று கொழும்பு மாநகரில் நடாத்தப்பெற்ற "குறிஞ்சித் தென்றல் 96" கலைநிகழ்ச்சியின் மூலம் பெறப்பட்ட பணத்தின் ஒரு பகுதியான ரூபா 100,000/= (ஒரு இலட்சம்) நிதியை மேலும் புலமைப்பரிசில் நிதியத்துடன் சேர்ப்பது என தீர்மானித்திருக்கின்றோம். திறந்த மனதுடன் சிறப்பான நற்செயற் திட்டங்களை முழுமையாக ஆரம்பித்தால் இறைவன் அதற்கு துணைநிற்பான் என்ற உண்மை மீண்டும் உயிர்பெற்றது.

புலமைப்பரிசில் நிதியம் இன்று 200,00/=(இரண்டு இலட்சம்) நிலையான வைப்புடன் இருக்கின்றது. இந்நிதியம் மேலும் வளர்வதற்கு எமது பட்டதாரிகளும், நலன் விரும்பிகளும், வர்த்தகப்பெருமக்களும் உதவிசெய்ய வேண்டும் என வேண்டிநிற்கின்றோம்.

தெளிவான சிந்தனையில் உதித்த இத்திட்டம் பூரண வெற்றியடைய வேண்டுமாயின் மாணவர்கள் ஒவ்வொருவரும் இதில் அக்கறை காட்ட வேண்டும். வரும் ஆண்டுகளில் புதிய செயற்குழுக்களும் தங்களின் கல்வி ஆண்டிற்கான ஒரு முக்கிய கடமையாக இதைக்கருதி ஆலய பொறுப்பாண்மைக்குழுவுடன் ஒத்துழைத்து, உண்மையில் நிதிநெருக்கடிக்குள்ளான மாணவர்களை தெரிவு செய்ய வேண்டும். இச்செய்தி பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு வரும் ஒவ்வொரு இந்து மாணவர்களுக்கும் கிடைக்க வேண்டும். எந்த காலக்கட்டத்திலும் எந்த விதத்திலும் இத்திட்டம் தடைப்படாமல் இயங்குவதற்கு ஒவ்வொரு இந்து மாணவரும் விழிப்பாக இருந்து பயனடைய வேண்டும் என்பதே எமது குறிக்கோள்.

இறுதியாக புலமைப்பரிசில் திட்டத்தை ஆரம்பிப்பதற்கு ஆரம்பகாலந்தொட்டு எம்மை ஊக்கப்படுத்திய எமது பெரும் தலைவர் பேராசிரியர் இரா. சிவகணேசன் அவர்களுக்கும், பெரும் பொருளாளர் கலாநிதி. செ. திருச்செல்வம் அவர்களுக்கும் நன்றிகூற கடமைப்பட்டுள்ளேன். இத்திட்டத்தை சிறப்பாக தொடர்ச்சியாக செயல்படுத்த உறுதியளித்த ஆலய பொறுப்பாண்மைக்குழுத் தலைவர், செயலாளர் மற்றும் ஊறப்பினர்களுக்கும் நன்றி தெரிவிப்பதுடன் தொடர்ந்து வருடந் தோறும் புலமைப்பரிசில் திட்டத்தை செயற்படுத்த ஒத்துழைக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

நன்றி

*செல்வன். **பா. சஞ்சயன்.***
தலைவர்.
இந்துமாணவர் சங்கம்,
பேராதனைப் பல்கலைக்கழகம்.

இறுதி வருடம்,
பொறியியற் பீடம்,
பேராதனைப் பல்கலைக்கழகம்.

- சுவாமி விவேகானந்தர் -



"பலவீனர்களின் பாதையில்
தடையாய் இருந்த பாறை..
பலசாலியின் கையில்....
படிக்கட்டானது."

- இலங்கை வருகையின் நூற்றாண்டுச் சின்னம் -
(1897 - 1997)

தோரணை வாயில்.....

	பக்கம்
முகப்பு	–
இராமகிருஷ்ண மிஷன் சுவாமிகளின் ஆசிச்செய்தி	I
நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம் சுவாமிகளின் ஆசிச்செய்தி	II
Vice - Chancellor's Message	III
செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் ஆசியுரை	IV
பிரதம குருக்களின் ஆசியுரை	V
பெருந்தலைவரின் வாழ்த்துரை	VI
பெரும் பொருளாளரின் வாழ்த்துரை	VII
தலைவர்.....	VIII
செயலாளர்.....	IX
இதழாசிரியர்.....	X
பொருளாதார நெருக்கடிக்குள்ளான இந்து மாணவர்களுக்கான புலமைப்பரிசில் திட்டம்	XI

பகுதி I – வரலாறும் தத்துவமும்

		பக்கம்
ஓம் விநாயகனே	– செல்வன். வெ. குணசேகரன்.	01
இருக்குவேதத்தின் தத்துவசிந்தனை	– பேராசிரியர். திருமதி. மகேஸ்வரி அருள்செல்வம்	02
சத்து–சித்து–ஆனந்தம்	– திரு. வை. நந்தகுமார்.	06
கௌடில்ய அர்த்த சாஸ்திரம் –நவீன அரசியற் கலையின் முன்னோடி	– செல்வன். ஆ. யோகராஜ்.	08
வருணக்கோட்பாட்டின் இன்றைய நிலை – ஒரு கண்ணோட்டம்	– செல்வி. இரா. சர்மிளாதேவி.	13
வேதங்களின் வழிவந்த இந்துப்பண்பாட்டு மரபுகள்	– செல்வி. கி. உமா.	17
ஆன்ம ஈடேற்றத்தில் புருடார்த்தங்கள்	– செல்வன். பொ. சகாதேவன்.	20
சங்கராச்சாரியாரின் வேதாந்தம் – ஓர் அறிமுகம்	– செல்வன். ஏ. எல். முகம்மட் றியால்.	22

பகுதி II – மதமும் விழிப்புணர்வும்

விழித்திடுவோம்	– செல்வி. பொ. கேதாரேஸ்வரி.	25
இறையருள்	– கலாநிதி. க. அருணாசலம்.	26
நற்றமிழ் வளர்த்த நாவலர் பெருமான்	– செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி.	29
சிந்தனை செய்மனமே	– செல்வன். யோ. பிரதாபன்.	32
ஓர் இந்துவின் சிந்தனைக்கு.....	– செல்வன். வ. சிவலோகதாசன்.	34
இந்துமதம்	– செல்வி. து. விஜயரேணுகா.	38
கல்லிலே கடவுள் இல்லையா	– செல்வன். சி. தனபாலசிங்கம்.	40
நாவலர் என்ற மானுடம்	– செல்வன். கு. சோ. செந்தில்குமார்.	43

இந்துமதத்தின் தூரநோக்கு
– சில கண்ணோட்டங்கள் – செல்வன். சி. மகேஸ்வரன். 47
மகாத்மா காந்தியடிகள் கூறும் சமயமும், சத்தியமும் – செல்வி. ஏ. சிவனேஸ்வரி. 50
மதங்களின் அறவியல் சிந்தனைகளும்
–ஆன்ம ஈடேற்றமும் – செல்வி. க. யோகேஸ்வரி. 54
கடவுளையே கடன் கொடுத்துவிட்டு.....! – செல்வன். கோ. சுரேஷ். 58

பகுதி III – கலைகளும் வழிபாடுகளும்

திரையிசையில் பக்தி மரபு – கலாநிதி. துரை. மனோகரன். 59
கலைத்துறையில் ஆனந்த குமாரசுவாமி
–அவர்களது ஒப்பியல் நோக்கு – திருமதி. மல்லிகா ராஜரத்தினம். 64
பக்தி இயக்கமும் தமிழும் – திரு. வ. மகேஸ்வரன். 70
முருகவழிபாடு – செல்வி. தா. மணிமேகலா. 77
தஞ்சைப் பெருங்கோயில்
–சமூக, சமய, பண்பாட்டு நோக்கு – செல்வி. பி. தேவகுமாரி. 81
கண்ணகி வழிபாடும் மட்டக்களப்பு பிரதேசமும் – செல்வன். செ. சிங்காரவேல். 85
ஆலய வழிபாடு – ஓரு வித்தியாசமான பார்வை – செல்வன். தே. சேந்தன். 89

1995/96 ஆண்டு 40வது இந்துமாணவர் சங்கச் செயற்குழுவின் ஆண்டறிக்கை
1995/96 ஆண்டு இந்துமாணவர் சங்கச் செயற்குழு
1995/96 ஆண்டு குறிஞ்சிக்குமரன் ஆலய பொறுப்பாண்மைக்குழு
பலகோடி நன்றிகள்.

With Best Compliments From:



NAGALINGAMS JEWELLERS

22 KT, SOVEREIGN GOLD QUALITY JEWELLERY

101, COLOMBO STREET, KANDY

T. PHONE: 08-232545





பகுதி – 1
வரலாறும் தத்துவமும்

With Best Compliments from:



V. K. M. Nagalingam & Sons

JEWELLERS, RADIO, TV. DEALERS

97, COLOMBO STREET
KANDY
☎08 - 223108

Famous over 96 years for Quality Jewellery
WHERE TRUST IS TRADITION



ஓம் விநாயகனே

வெ. குணசேகரன்
3ம் வருடம் கலைப்பீடம்

வேதமே....
விவேகத்தின் திரு உருவே
ஓம் என்ற வடிவத்தில்
உலகினைச் சுருக்கி
பிரணவப் பொருளாய்
கருவறை தொட்டு
காப்பவனே போற்றி....

ஓமென்ற வடிவில்
உயிர்களை வடிக்க
கருவறை தன்னை
ஓமாய் வடித்து
உயிரைப் படைத்தவனே – எங்கள்
உலகாய் உரைபவனே.....

முப்புரம் எரித்த முதல்வா
முனிவரின் ஞானத் தலைவா
நீ.....
ஆல மரமெங்கும்....
ஆற்றங் கரையெங்கும்
பிரசன்னமாகி
பிரணவம் சொல்லும் – எங்கள்
பிரஞ்சம்!

வினைகள் தீர்க்கும்.....
விக்னேஸ்வரா.
கவலைகள் போக்கும்
கணேஷ்வரா.....
ஐங்கரனே; கணபதியே
அகிலம் காக்கும்
தும்பிக்கையோனே சரணம்! சரணம்...!

நம்பிக்கைகளைக் கூட
நாங்கள்.....
நாகரீக நாணயங்களாக்கி விட்டு – உன்
தும்பிக்கையில் சீர் பெற
மண்டியிட்டு துதிக்கின்றோம்!

ஒருபிடி மண்ணில்
உனையமைத்து
அறுகம் புல்லால் அலங்கரிக்கும்
நாங்கள்....
வீட்டுக்குள் உனைச் சுமந்து – எங்கள்
கூடுகளைக் காக்க..
உருகுகின்றோம்.

அழிவின் விளிம்பில் – இன்று
ஆட்சி நடத்து கின்றோம்!
எங்கள்.....
சந்ததிகள்
ஊனப்பட்ட நிலையில் – நாளை
உருவாகும் வேளையில்
உன் தும்பிக்கையில் தான் – எங்களின்
நம்பிக்கை.

முற்றும் உணர்ந்தவனே...
மூத்தோனே..
"இந்து தருமம்...."
இவ்வாண்டு இதழை
மணக்கச் செய்வதோடு
நாளைகளை சுமக்க – எமக்கு
நம்பிக்கை தா...

இருக்கு வேதத்திற் தத்துவ சிந்தனை

பேராசிரியர். திருமதி. மகேஸ்வரி அருள்செல்வம், சமஸ்கிருதத் துறை.

ஏறக்குறைய கி. மு. ஆறாம் நூற்றாண்டளவிற் தோற்றம் பெற்ற உபநிடதங்களே இந்து தத்துவத்தின் மிகப் பழைய நூல்களாகப் போற்றப்படுகின்றன. எனினும் உபநிடதங்களுக்கு முற்பட்ட வேத இலக்கியத்திலே, குறிப்பாக இருக்கு வேதத்திலே, இந்து தத்துவத்தின் அடிப்படைக் கருத்துகள் சில தோன்றுவதை நாம் கவனிக்கலாம்.

கி. மு. ஆயிரத்து அறுநூறு மட்டிலோ, அதற்கு சற்று முன்னதாகவோ இந்தியத் துணைக் கண்டத்துட் புகுந்து குடியேறிய ஆரிய மக்கள், இயற்கை சக்திகளைத் தேவராகப் பாவித்து வணங்குமோர் சமயத்தைக் கொண்டவராக இருந்தனர். தமது தினசரி வாழ்க்கையிலே எந்த ஒரு நிகழ்வுக்கும் அதற்குக் காரணமாகிய உந்துதலொன்று இருப்பதைக் கவனித்த அம்மக்கள், இயற்கையின் ஒவ்வொரு மாற்றங்களுக்கும் நிகழ்வுகளுக்கும் காரணமாய் அமையும் தனித் தனிச் சக்திகளுண்டென்ற முடிவிற்கு வந்தனர். எனவே தான் ஆரிய மக்கள் சூரியன், ஆகாயம், பூமி, விடியற்காலை, மழை, காற்று, புயல், இடிமுழக்கம், நெருப்புப் போன்ற இயற்கைச் சக்திகளுக்கு இந்திரன், சவித்திரு, உஷை, வருணன், பர்ஜன்ய, உருத்திரன் எனத் தனித் தனி நாமஞ் சூட்டி வணங்கலாயினர். தம்மைப் பார்க்கிலும் சக்தி வாய்ந்த, தமக்கு நன்மையும் தீமையும் விளைவிக்கவல்ல இச்சக்திகளை சாந்தப்படுத்து முகமாக இவ்வியற்கைச் சக்திகளைப் பாடல்களாற் தோத்தரித்தும், அவற்றிற்கு அக்கினியிலே அவியுணவுகளைப் படைத்தும் வணங்கினர். இவ்வாரிய மக்கள் பாடிய தோத்திரங்களே இருக்கு வேதமென்று இன்று போற்றப்படும் நூலாகும். இந்து மக்களும் இந்து தத்துவமும் ஒரு மனமாக அங்கீகரிக்கும் மிகப் பழைமையான நூல் இதுவே.

இந்த வழிபாட்டு முறை பெருமளவு காணப்பட்ட இருக்கு வேதகாலத்திற் கூட இவ்வியற்கைத் தேவரில் நம்பிக்கையற்றோர் சமுதாயத்திலிருந்தனரென்று இப்பாடல்களிலே காணக் கூடியதாய் உள்ளது. தேவர்களில் அதிமுக்கியமான இந்திரனைப் பற்றியே சந்தேகங்கள் எழுப்பட்டன. 'இந்திரன் எங்கே?', 'அவன் இல்லை?' என்று கூறியவருமுளர். இவர்களுடைய வினாக்களுக்கு விடை கொடுக்குமுகமாக ஒரு பாடல் (இ. வே. 2. 12) இந்திரः தேவனுடைய வீர தீரச் செயல்களை நினைவூட்டி, ஒவ்வொரு செய்யுளின் ஈற்றடியாக 'அவன் தான் மக்களே இந்திரன்' என்ற பல்லவியை அமைக்கிறது. யாகக்கிரியை முறையில் நம்பிக்கையற்றோரும், புரோகிதருக்கு கொடுக்க வேண்டிய தானங்களைத் தட்சிணைகளைக் கொடுக்க விருப்பற்ற உலோபிகளும் சமுதாயத்திலே இருந்தனரென்றும் அறிகிறோம். இன்னும் சிலர் பல நாமங்களால் அழைத்துத் தான் வழிபடும் தேவர்கள் எல்லோரும் உண்மையிலே ஒருவர்தானோ என்று சந்தேகிக்கின்றனர்.

'மித்திரன், யமன், மாதரிஷ்வன் என நாம் அழைப்பதெல்லாம் ஒருவரே
உள்பொருளாகிய ஒன்றை ஞானிகள் பலவாகக் கூறுகின்றனர்.' (இ. வே. I.164.46.)

'அக்கினியே, நீ பிறப்பிலே வருணனாய் இருக்கிறாய். மூட்டப்பட்டதும் மித்திரன் ஆகிறாய். எல்லாத் தேவரும் உன்னிலே தங்கியிருக்கின்றனர். வழிப்படுபவனுக்கு நீ இந்திரன் ஆகிறாய்.' (இ. வே. V 3.1)

'ஒரே பறவையைப் புலவரும் புரோகிதரும் சொற்களால் பலவாக்குகின்றனர்.'
(இ. வே. X 114.5)

இத்தகைய கூற்றுக்கள் இறைவன் ஒருவனே என்ற கருத்து இருக்கு வேத காலத்திலேயே உதயமாகின்றது என்று நிரூபிக்கின்றன. இன்றும் பல நாமத்தாலும் பல வடிவங்களிலும் ஒரே தெய்வம் போற்றப்படுகின்றது.

இவ்வொரு தெய்வக் கோட்பாடு இன்னொரு வகையிலும் இருக்கு வேதத்திற் தோற்றமளிப்பதை நாம் காண்கிறோம். இருக்கு வேதப் பாடற் தொகுப்பிற் காணப்படும், சில பிந்திய பாடல்கள் இயற்கையின் எந்த ஒரு தனி அம்சத்தோடும் தொடர்பில்லாத பொதுத் தேவர்களாகிய பிரஜாபதி, பிரஹ்மணஸ்பதி, பிருகஸ்பதி, விஸ்வகர்மன் என்போரைப் போற்றுகின்றன. இவர்களின் நாமங்களே இவர்களின் பொதுமையைப் புலப்படுத்துகின்றன. பிரஜாபதி எனின் 'மக்களின் தலைவன்' எனப் பொருள்படும். பிருஹஸ்பதி, பிரஹ்மணஸ்பதி என்பன 'ஜபத்தின் தலைவன்' என்ற கருத்துப் பெறும். விஸ்வகர்மன் எனின் 'எல்லாவற்றையும் படைப்பவன்'. என்ற அர்த்தமாம். இவர்களுள் பிரஜாபதி பிராஹ்மண உபநிடத இலக்கியங்களிற் பெருமை பெற்று இதிகாச புராணகால சமயத்திலே படைத்தற் கடவுளாகிய பிரமாவோடு இணைக்கிறார். பிருகஸ்பதி தேவருடைய புரோகிதராகவும், விஸ்வகர்மன் தேவலோகத்தின் பிரதம சிற்பியாகவும் பிற்கால இந்து சமய கடவுட் கதைகளிற் காட்சியளிக்கின்றனர்.

இது மட்டுமல்ல. உலகம் எப்படி தோன்றிற்று? யார் இதனை படைத்தார்.? எதனைக் கொண்டு படைத்தார்? உலகம் தோன்றுவதற்கு முன் என்ன இருந்தது? இத்தகைய வினாக்கள் இருக்கு வேத கால இருடிகள் சிலருடைய மனதிலே எழுந்தனவென்றும் காண்கின்றோம். ஒரு தச்சன் இரதத்தை அமைப்பது போலவே உலகமும் நிர்மாணிக்கப்பட்டிருக்க வேண்டும் என்கின்றார் ஒருவர். அப்படியாயின் அதற்கு வேண்டிய மரத்தை எங்கிருந்து பெற்றார்? எங்கே நின்று கொண்டு உலகத்தை அமைத்தாரோ என்கின்றார் அவர்.

யாகத்தின் மகத்துவ சக்தியிற் கொண்ட நமம்பிக்கையின் அடிப்படையில், உலக சிருஷ்டியும் ஒரு யாகத்தின் விளைவே எனச் சிலர் கருதினர். உலகப் படைப்பாகிய மகத்தான கருமத்திற்குத் தேவர் பிரமாண்டமான வடிவுள்ள ஒரு புருஷனை யாகத்தில் பலியாகப் படைத்தனரென்று புருஷ சூத்தம் எனப்படும் பாடல் (இ. வே 10.90) குறிப்பிடுகிறது. ஆயிரம் தலைகளும், ஆயிரம் கண்களும், ஆயிரம் கால்களுமுடைய இந்த அபூர்வ புருஷனின் ஒரு காற் பங்கே எல்லா உயிர்களாக காட்சியளிக்கின்றது. அதன் முக்காற் பங்கு ஆகாயத்தில் மறைந்துள்ளது. இப்புருஷனினின்றே நால் வர்ணங்களும், மிருகங்களும், பறவைகளும் தோன்றின. சந்திரன், சூரியன், அக்கினி, வாயு, ஆகாயம், பூமி, திசைகள் எல்லாமே அதனின்றே எழுந்தன. இப்பாடல் சிருஷ்டிக்கு மூலம் ஒன்று என்னும் நம்பிக்கையை வலியுறுத்துவதோடு நில்லாது இன்னுமொரு முக்கிய கருத்தையும் கூறுகிறது. அந்த மூல சக்தி முற்று முழுதாக சிருஷ்டியில் வெளிப்படுவதில்லை. சிருஷ்டிக்கு அப்பாலும் இருக்கின்றது என்கின்றது. இந்த தத்துவத்தின் அத்துவித வேதாந்தமும் சைவ சித்தாந்தமும் பரம்பொருளை இரு நிலைகளிற் காண்கின்றன. குணம் குறிகளோடு, இயற்கையோடு ஒன்றிய தடத்த நிலையிலும், சிந்தனைக்கப்பாற்பட்ட நிர்குண நிலையாகிய சுயரூப நிலையிலும் இத்தத்துவங்கள் வருணிக்கின்றன. இக்கருத்து வளர்ச்சியின் கருவை இருக்கு வேதப் புருஷ சூத்தத்திற் காணலாம்.

சிருஷ்டிக்கு முற்பட்ட அந்த முதற்கணம் எத்தகையதாய் இருக்குமென்று நாச தீய சூக்தமென்று புகழ் பெற்ற இன்னொரு இருக்கு வேத பாடல் ஆராய்கிறது. (இ. வே. 10.129)

'அப்பொழுது அசத்தும் (இல்பொருள்) இருக்கவில்லை. சத்தும் (உள்பொருள்) இருக்கவில்லை. இடைவெளியும் ஆகாயமும் இருக்கவில்லை. என்ன இருந்தது? எங்கே? யார் கண்காணிப்பில்? ஆழமான நீர் தான் இருந்ததா?'

'அப்பொழுது சாவும், சாவாமையும் இருக்கவில்லை. இரவின் ஒளியும் (சந்திரன்) பகலின் ஒளியும் (சூரியன்) இருக்கவில்லை. ஆனால் ஏதோ ஒன்று இருந்தது அது சுவாசமில்லாமல் சுவாசித்தது அதனைவிட வேறு எதுவும் இருக்கவில்லை.....'

ஆதியிலே இருள் இருளால் மூடப்பட்டிருந்தது. எல்லாமே ஒரே நீர் மயமாய் இருந்தது. தோன்றியதாகிய அந்த ஒன்று சூன்யத்தால் மூடப்பட்டிருந்தது. அது தவத்தின் சக்தியால் எழுந்தது.

'அந்த ஒன்றின் மனதிலே சிந்தனை எழுந்தது.....'

'இந்த சிருஷ்டி எங்ஙனம் தோன்றியதென்று யார் அறிவார்? யார் அதனை விளக்குவார்? தேவர்கள் கூட சிருஷ்டிக்குப் பிற்பட்டவரேயாயினும் யார் சிருஷ்டியின் ஆரம்பத்தை அறிவார்?'

'மேலான விண்ணிலே இதனைக் கண்காணிப்பவன் அறிவான். அல்லது அவனும் கூட அறியான்.'

உலக தத்துவ இலக்கியத்திலும் சிறப்பிடம் பெறுகின்ற இந்த நாசத் தீய சூத்தத்தில் இந்து தத்துவத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் அரும்புவதை நாம் காணலாம். அசத், சத் என்னும் தத்துவ முக்கியத்துவம் வாய்ந்த பதங்கள் இப்பாடலில் இடம் பெறுகின்றன. இந்து தத்துவ சிந்தனையின்படி உள்பொருள் இல்பொருளின் நின்று ஒரு போதும் தோன்றாது. எனவே அசத் என்னும் பதம் என்றுமே இல்லாத வெறும் சூன்யமான இன்மையைக் குறிப்பதாகக் கொள்ளாமல், பரிணாமமடையாத வேற்றுமைகள் தோன்றாத சூக்கும நிலையாகிய காரண நிலையையே குறிப்பதாகக் கொள்ளப்படுகின்றது. இத்தகைய மூலகாரணமாகிய ஓர் உள்பொருளினின்றே வேற்றுமை மலிந்த, நாம உருவ வேறுப்பாடுடைய சிருஷ்டி மலர்கிறது. இப்பிந்திய நிலை இதன் காரிய நிலையாம். இப்பாடலில் இருடி இடை வெளி, ஆகாயம், நீர், சந்திரன், சூரியன், சாவு, சாவாமையென்றெல்லாம் வேறுப்படுத்துவன இந்த சிருஷ்டி பரிணாமமடைந்த காரிய நிலையைக் குறிப்பன. இருடியோ இந்த வேற்றுமைக்கப்பாற்பட்ட அதற்கு முந்திய நிலையாகிய காரண நிலை எத்தன்மைத்தாய் இருக்குமென்று கற்பனை செய்ய முயற்சிக்கிறார். எப்படியாயினும் சிருஷ்டிக்கு மூலகாரணமாகிய ஒரு வஸ்து இருந்ததென்ற முடிவுக்கு வருகிறார். அதனை ஆண்பாலிலோ பெண்பாலிலோ குறிப்பிட்டு வரையறை செய்ய முடியாது. எனவே அதனைத் 'தத் ஏகம்' 'அந்த ஒன்று' எனக் குறிப்பிடுகிறார்.

மேலும் சிருஷ்டிக்கு மூல காரணமாகிய இந்த வஸ்து சிந்திக்கும் ஆற்றல் படைத்ததாகவும் கூறப்படுகிறது. அதன் சிந்தனையின் பெறுபேறாகவே உலகம் தோன்றுகிறது. இங்கு இந்து தத்துவம் இறைவனின் மிக முக்கிய இலட்சணங்களாக் கொள்ளும் சத், சித் ,அதாவது இறைவன் உள்பொருள், அவர் சிந்தனா சக்தி படைத்தவர் என்பன குறிக்கப்படுகின்றன. இவ்விலட்சணங்கள் இருக்கு வேத காலத்திலேயே பரம்பொருளின் அடிப்படைப் பண்புகளாக கொள்ளப்பட்டனவென்பது தெளிவாகிறது.

இந்தத் தனி வஸ்து சுவாசமில்லாமற் தன் சொந்த சக்தியாற் சுவாசித்ததென்றும் கூறப்படுகிறது. இதுவும் ஒரு விசேஷித்த பண்பாகிறது. உலகத்திலேயுள்ள சீவராசிகள் அனைத்தும் தம் நாசியிலே இயங்கும். சுவாசத்தினால் உயிர் வாழ்வன. சுவாசமில்லையென்றால் அவையிறந்து போம். உலக சிருஷ்டிக்குக் காரணமாகிய இந்த மூலவஸ்து ஏனைய சீவராசிகளைப் போலல்லாது சுவாசமில்லாமற் தன் சொந்த சக்தியால் இயங்கக்கூடியது. இந்து மதம் இறைவனைப் பரிபூரணமானவராகவும், சுவாதீனமுடையவராகவும் காண்கிறது. இப்பண்பும் இப்பாடலிற் தொனிக்கின்றது.

இதனோடு பாடல் முடியவில்லை. ஈற்றுச் செய்யுட்களில் தேவரைப் பற்றிய ஒரு வினா எழுப்புகிறார். அவர்களுக்கும் கூடச் சிருஷ்டியின் தொடக்கநிலை பற்றி தெரியாது போலும் என்கிறார். இத் தேவர்கள் சக்தி வாய்ந்தவர்களாகவிருப்பினும் பரம்பொருளென்ற நிலையில்லை. அவர்கள் கூட சிருஷ்டிக்குட்பட்டவர்கள். உண்மையைத் துருவித் துருவி ஆராய்ந்தும் முற்றான திருப்தி காணாதவராகக் கவிபாடலை முடிக்கிறார். இப்பாடலின் சிந்தனை ஆழமும் அதன் சந்தேக உணர்ச்சியும் இது பெறும் மதிப்புக்குக் காரணமாகின்றன.

மரணத்தைப்பற்றியும் அதற்கப்பாலுள்ள நிலைப்பற்றியும் இருக்கு வேத கால மக்கள் சிந்தித்தார்களென்று நாம் பாடல்களிற் காண்கின்றோம் உபநிடதங்களுக்கு முன் ஆன்மா, மோட்சக் கோட்பாடுகள் தோன்றாவிடினும், மரணத்தோடு மனித வாழ்க்கை முடிவதில்லை. மரணத்திற்குப் பின்னுமொரு வாழ்க்கையுண்டென்றே இக்கால மக்கள் நம்பினர். இறந்தோர் யமராஜாவின் ஆளுகையிலுள்ள யமேலாகத்திற்குச் சென்று, அங்கே நோய் நொடியற்றச் சரீரத்தோடு தம் மூதாதைகளாகிய பிதிரரோடு சேர்ந்து மதுவருந்திக் கொண்டு நீடுழி சுகமே வாழ்வரென்றே நம்பினர். அங்கு தாம் பூவுலகத்தில் செய்த தானங்கள் யாகங்களின் பலனை அடைவர் என்றும் கருதினர். ஒவ்வொரு மனிதனுக்கும் அழியாத ஓர் ஆன்மா உண்டென்பதும், அவன் தான் செய்யும் நல்ல தீய கருமங்களின் பலனை அடைவானென்பதும் இந்து மதத்தின் நம்பிக்கை. உபநிடதங்களிற் காணப்படும் கரும மறுபிறவிக் கோட்பாடு இருக்கு வேதத்திலில்லை. எனினும் இக்கோட்பாடுகளின் வேர்களை இருக்கு வேதத்திற் காணலாம். மனிதன் ஏதோ ஒரு வடிவில் மரணத்திற்கப்பாலும் வாழ்வானென்றும் அவன் தன் யாகங்களின் தானங்களின் பலனை அடைவான் என்று கூறும் இருக்கு வேதம் பிற்காலத்து ஆன்ம, கன்ம கோட்பாடுகளுக்கு வித்திடுகிறது.

இந்து மக்களின் தர்மக் கோட்பாட்டுக்கு இருக்கு வேதத்தின் ருதக் கோட்பாடு வழிவகுக்கின்றது 'ருதம்' என்னும் சொல் இயற்கையிலும் மனித ஒழுக்கத்திலும் காணப்படும் ஒழுங்கை/ நேர்மையைக் குறிப்பதாகும். இயற்கைச் சக்திகள் தத்தமது கால வரையறையின்படி இயங்குவதைக் கவனித்த ஆரிய மக்கள் அதனை 'ருதம்' என அழைத்தனர். அதே வண்ணம் மனித ஒழுக்கத்திற்கும் ஓர் சட்டம் அல்லது வரம்பு உண்டெனக் கருதினர். இந்த ஒழுங்கின்படியே இயற்கையின் நிகழ்வுகள் ஏற்படுகின்றன. மனிதனும் நீதி, உண்மை, நேர்மை போன்ற விழுமியங்களைத் தன் வாழ்க்கையில் அனுசரித்து இவ் ருதத்திற்கமைய வாழ வேண்டும். அதற்கு மாறாக அவன் வாழ்வானேயாகில் அவனுக்குக் கெடுதலேற்படும். வருணன் போன்ற தேவருடைய தண்டனையும் கிட்டும். இந்து மக்களின் தர்மக் கோட்பாடும் இத்தகையதே 'தர்மம் வெல்லும்' என்று கூறுமிடத்து. அதுவே வாழ்க்கையின் சட்டமென்பது பெறப்படும். அதனை மீறி அதர்ம வழியிற் செல்வோர். துரியோதனன், இராவணன் போன்றோர் போலக் கெட்டொழிவர் எனவே இருக்கு வேத ருதக் கோட்பாட்டிக்கும் இந்து மதத்தின் தர்மக் கோட்பாட்டிக்கும் தொடர்புண்டு.

இங்ஙனம் இந்து மதத்தின் ஒரு தெய்வக் கோட்பாடு, இறைவனுடைய நிர்குண சகுண நிலைகள், அவர் இன்றியமையாத இலட்சணங்களாகிய உண்மை., அறிவுடைமையென்பன, இந்து மதத்தின் கர்ம, தர்ம, ஆன்மக் கோட்பாடுகள் வேதகாலத்திலேயே அரும்புவதை இருக்கு வேதத்தில் நாம் காணலாம். தத்துவ விசாரணைக்கு உந்துதலளிக்கும் சந்தேக உணர்ச்சியும் அங்கு மலிந்து காணப்பட்டது.

சத்து - சித்து - ஆனந்தம்

வை. நந்தகுமார். சிரேஷ்ட விரிவுரையாளர். புவியியல் துறை.

பரம்பொருளாகிய சிவன் பேரருள் பொருந்திய எண் குணங்களைத் தன்னகத்துக் கொண்டவர். அவற்றுள் முதன்மையுடையனவாகப் போற்றுதற்குரியவை மூன்று குணங்கள். அவை தோற்றக்கேடின்மை, பேரறிவுடைமை, வரம்பிலின்பமுடைமை என்பனவாகும். சிவபெருமான் ஒருவரைத் தவிர உலகில் பிறப்பு, இறப்பு உடையனவாகிய ஏனைய உயிர்கள் யாவும் தோற்றக்கேடுகளையுடையனவாகவும், பல்பிணி சிற்றறிவுடையனவாயும், இன்பத்துடன் துன்பத்தையும் உடையனவாய் வாழ்கையில் உழன்றுக் கொணடிருப்பவையாய் உள்ளன.

தனக்குவமை இல்லாதவனான இறைவன் ஆதியும் அந்தமும் இல்லாது அரும்பெரும்சோதியாகத் திகழ்பவர். உயிர்கள் தோறும் நீக்கமற நிறைந்து நிற்பவர். உயிர்களிடத்து நிறைந்த அன்பும், இன்பமும், தூய்மையும் ஆற்றலும் அருளும் உள்ளவர். அவர் ஆன்மாக்கள் மேல் கொண்டுள்ள பெரும் கருணையினாலே எங்கும் எழுந்தருளி அருள் புரிகின்றார். "அறிதரு சிவனே எல்லாம் அறிந்து, அறிவித்து நிற்பன". என்று அருணந்தி சிவாச்சாரியார் சிவஞான சித்தியாரில் அருளியுள்ளார். இறைவனாகிய பதி, பசுக்களாகிய ஆன்மாக்களுக்கு அறிவிப்பவர். அவர் பசுபதி. பதியாகி இறைவன் உலகத்தைப் படைத்துக் காத்து ஒடுக்குபவர். அவரே மெய்கண்டார் 'ஒடுங்கி' என்ற வினையாலணையும் பெயராற் குறிப்பிடுவார்.

திருவெம்பாவையில் "ஆதியும் அந்தமும் இல்லாத அரும் பெரும் சோதி" என்ற அடியெடுத்து ஆரம்பித்த மணிவாசகனார், திருவெம்பாவையின் இறுதித் திருப்பாடலில், "போற்றி எல்லா உயிருக்கும் தோற்றமாம் பொற்பாதம், போற்றி எல்லா உயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள், போற்றி எல்லா. உயிர்க்கும் ஈறாம் இணையடிகள்" என வாழ்த்தி, அனைத்து உயிர்களின் தோற்றநிலை, இறுதிநிலைகளை விளங்க வைத்தருளினார். சிவபுராணத்தில் வரும் "ஆக்கம் அளவு இறுதி இல்லாய் அனைத்துலகும் ஆக்குவாய், காப்பாய், அழிப்பாய், அருள் தருவாய், போக்குவாய"என்ற பகுதியும் இறைவனின் ஐந்தொழிற் பண்பை விளக்குவதேயாகும். நடராஜர் திருவுருவம் ஐந்தொழில்களின் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டதாகும்.

சத்துப் பொருளாய் விளங்கும் சிவபெருமான் பேரறிவுப் பிழம்பாக வீற்றிருந்து எல்லா உயிர்களுக்கும் நல்லருள் புரிந்து வருகின்றார். குருந்த மரநிழலில் மணிவாசகருக்கு குருவாய் வந்த இறைவன், சுந்தரரின் மணநாளன்று அடிமையோலை காட்டிய இறைவன் பாலகனான போது ஞானப்பாலூட்டி ஞானசம்பந்தருக்கு தெய்வீக அறிவூட்டிய இறைவன் ஆன்மாக்களின் பக்குவ நிலையை உணர்ந்து அவரவர்க்கேற்றவாறு ஞானத்தை ஊட்டியருள்வார். "மன்னுபவந் தீர்க்கும் மருந்து" என உமாபதி சிவாச்சாரியார் திருவருட்பயன், பதிமுது நிலையிற் குறிப்பிடுவதும் இதனையே குறிக்கும் விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் ஆகிய மூன்று தரத்திலுள்ளவர்கள் ஆன்மாக்கள். இவர்களுள் விஞ்ஞானகலர் ஆணவமலம் மட்டுமே உடையவர்கள். பிரளயாகலர் ஆணவமும் ,கன்மமும் உடையவர்கள். சகலர் ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களையும் கொண்டவர்கள். இவர்களது பக்குவ நிலைகளுக்கேற்ப இறைவன் திருவருள் தாங்கி உருக்கொண்டு தானாக முன்வந்து அவர்களை ஆட்கொண்டு அருள்கின்றார்.

பதி, பசு பாசங்களாகிய முப்பொருள்களுள்,

1. பதி – சத்து
2. பசு – சதசத்து
3. பாசம் – அசத்து

பதி எதனையும் அறிவிக்காமலேயே அறியவல்லது. பசு அறிவித்தால் அறிவது. பாசம் அறிவித்தாலும் அறியாதது. அதனால் பதியாகிய சிவபெருமான் வழங்கும் நல்லருளை அவர் செலுத்துகின்ற அளவுக்கு நாம் சென்று நுகரும் வாய்ப்பு பசுக்களாகிய ஆன்மாக்களுக்கே உண்டு.

சத்து என்றால் அறிவுள்ளது. அசத்து என்றால் அறிவற்றது. சதசத்து அறிவித்தால் அறியவல்லது. முப்பொருள்களுள் பதியாகிய இறைவன் சத்துப் பொருள் அசத்தாகிய பாசம் சடப் பொருள், சத்தாகிய சிவத்தையும், அசத்தாகிய பாசத்தையும் சார்ந்த அறிவலர் சதசத்தாக விளங்கும் ஆன்மாக்களுக்கே ஆகும். இதனையே,

"சத்தசத்தைச் சாரா தசத்தறியா தங்கணிவை
யுற்றசத சத்தாமுயிர்"

என திருவருட்பயன் தெளிவாக உணர்த்துகின்றது. முப்பொருள்களுள் ஆன்மா சிவத்தைப் போல சத்துப் பொருளாயின் மாயையைச் சேர்ந்து நின்று அறிய வேண்டுவதில்லை. ஆன்மா மாயை பொருள்களைப் போல அசத்துப் பொருளாயின் ஒன்றினையும் அறியாத அறிவில்லாதப் பொருளாகும். ஆகவே, சிவத்துடன் ஒப்பு நோக்க ஆன்மா அசத்தாயும், மாயையுடன் ஒப்பிட்டு நோக்க சத்தாயும் இருத்தலால் ஆன்மா சதசத்து (சத்து+அசத்து) எனப்படும்.

சத்துப் பொருளாகி அழியாது விளங்கும் சிவபெருமான் சித்துப்பொருளாகி, அறிவுப் பிழம்பாகவும் விளங்குவதனாலேயே உயிர்களுக்கு வேண்டுவனவற்றை அறிந்து உதவிப் புரிபவராக விளங்குகின்றார். "வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்" எனப்போற்றப்படுகின்றார். ஆன்மாக்களின் தேவையை அறிந்து உதவுகின்ற சிவம், உதவும் பொருளாகிய இன்பத்தையும் உடையதாய் இருக்கின்றது. அதனால் அது சத்தும், சித்தும், ஆனந்தமுமமாக விளங்குகிறது.

சத்து, சித்து, ஆனந்தம் என்ற மூன்று சொற்களும் சேரும் போது சச்சிதானந்தம் என வரும். உண்மை, அறிவு, இன்பம் என்பது அதன் பொருளாகும் சிவபெருமானது திருவுருவம் உண்மை அறிவின்ப வடிவினது. சோமஸ்கந்தமூர்த்தத்தில் சிவபெருமான், உமாதேவி, முருகன் ஆகிய மூன்று மூர்த்திகளும் இடம் பெற்றுள்ளனர். சிவபெருமானை சத்து மூர்த்தி என்றும் அவரின் வேறல்லாத உமாதேவியாரைச் சித்து மூர்த்தியென்றும், அவர்களின் வேறல்லாத முருகப் பெருமானை ஆனந்த மூர்த்தி என்றும் ஞானநூல்கள் எடுத்தியம்புகின்றன.

"சத்தெனச் சொல்லும் தாவில் சிவத்திலும்
சித்தெனச் சொல்லும் தேவி பீடத்திலும்
புத்திரப் பெயர் பூண்டில ஆனந்த
வத்துவின் கழல் வாழ்த்தி வணங்குவோம்"

என்று பாம்பன் சுவாமிகள் முருகப் பெருமானைத் துதிக்கின்றார்கள். சத்துப் பொருளாகிய சிவபெருமானும், சித்துப் பொருளாகிய உமாதேவியாரும், ஆனந்தப் பொருளாகிய முருகப் பெருமானும் எண்ணிக்கையால் மூவராக இருப்பினும் ஒன்றாக விளங்கி உயிர்களுக்கு அருள் பாலிப்பார்கள். சதசத்தாகிய ஆன்மாக்கள் அவ்வருள் பெற்று உய்வடைவார்கள்.

கௌடில்ய அர்த்தசாஸ்திரம் நவீன அரசியற் கலையின் முன்னோடி

ஆறுமுகம் யோகராஜா, அரசியல் விசேட துறை, விடுகையாண்டு.

முறையான அரசியற் தத்துவமென்தொன்று இந்து இந்தியாவில் இருந்ததில்லை என்பது ஒரு மரபுரிமைக் கருத்தாகும். ஆயினும் அவ் அரசுபாயக்கலை நன்கு வளர்க்கப்பட்டு வந்திருக்கின்றது. இத்துறையிலுள்ள முதன்மை வாய்ந்த நூல்கள் பல இன்று வரை அழியாதிருக்கின்றன. ஒறுத்தல் நீதியைக்கூறும் தண்டநீதி என்பதையோ, அரசர் ஒழுகலாற்றைக்கூறும் இராசநீதி என்பதையோ எடுத்துக் கொண்டால் அவை கண்டிப்பாகச் செயன்முறைக்குரிய நூல்களாகவே இருப்பதைக் காணலாம். இந்நூல்கள் உயர்ந்த தத்துவப் பாங்கான அரசியல் ஆராய்ச்சித்துறையை மேலெழுந்த வாரியாகக் கூறுவதோடு நின்றுவிடுவனவாயினும், அரசின் அமைப்புமுறை பற்றியும், அரசாங்க அலுவல்களை நடத்துவது பற்றியும் விரிவான அறிவுரை தருவனவாயுள்ளன.

பிற்பட்ட வேத இலக்கியங்கள் புத்தருக்கு முந்திய காலத்து அரசியல் வாழ்வு, சிந்தனை ஆகியவை பற்றிய சில செய்திகளை ஆங்காங்கு சார்பு வகையாற் கூறிச் செல்கின்றன. பாலி மொழியிலுள்ள பௌத்த சமயத்திரு நூல்களிலிருந்து நாம் பல செய்திகளைத்திரட்டலாம். ஆயினும் சிறப்பாக அரசுபாயம் என்பதொன்றே விரவிய தலை சிறந்த பழைய நூலாகக் கௌடில்ய அர்த்த சாஸ்திரமே புலப்படுகின்றதென்றால் அது மிகையாகாது.

கி.மு 4ம் நூற்றாண்டில் வாழ்ந்ததொரு அறிஞராகக் கருதப்படும் கௌடில்யர் மோரியப் பேராசு காலத்தில் வாழந்தவராவர். இவர் இக்காலத்தில் சந்திரகுப்த மோரியருக்கு முதலமைச்சராக இருந்து அதனடிப்படையில் பெற்றுக் கொண்ட அனுபவங்களிலிருந்து அர்த்த சாஸ்திரமென்னும் அரிய நூலை எழுதி அரசியற் கலையில் ஒரு முன்மாதிரி இடத்தினைப் பெற்றுக் கொண்டார். அரசினைக் காட்டியாள்வது பற்றியும் போரினைத் திறம்பட நடாத்துவது பற்றியும் தண்டனை, ஒற்றர்படை, வரிவிதிப்பு முறை என்றவாறு ஆட்சித் துறையின் பல்வேறு அம்சங்களை இந்நூல் படம் பிடித்துக் காட்டுகின்றது. பண்டைய இந்தியர் தம் வாழ்வின் அரசியற் கருத்துக்கள் பலவற்றில் இந்நூல் ஆழமாக வேரூன்றியிருப்பதைக் காணலாம்.

கௌடில்யர் வாழ்ந்த காலம் இந்திய அரசியல் வரலாற்றில் முக்கியமான காலமாகும். இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் சிற்றரசர் பலர் தோன்றி தமக்குள் சண்டையிட்டுக் கொண்டதன் மூலம் இந்தியாவின் ஐக்கியத்துக்கு பயமுறுத்தலை ஏற்படுத்திய காலமே அதுவாகும். இந்தியாவின் ஐக்கியத்தில் பூரண அக்கறை கொண்ட இவர் மோரியப் பேரரசின் கீழ் சந்திர குப்த மௌரியனின்கீழ் இந்தியா முழுவதையும் ஒரே தேசமாக ஆக்க வேண்டுமென முயற்சித்தார். மன்னனுக்கு அதிகாரங்களை வழங்கி அவனது அதிகாரத்தின் கீழ் இந்தியா முழுவதும் ஒரு பேரரசின் கீழ் ஆழப்பட வேண்டும் என்பதே இவரது எண்ணமாக இருந்தது.இதற்காக மன்னருக்கு அரசியல் ஆலோசனைகள் பலவற்றை வழங்க முன் வந்தார். இவ்விதம் அவர் எடுத்துக் கொண்ட முயற்சியிலிருந்து உருவானதே அர்த்த சாஸ்திரமென்னும் இவ்வரிய நூலாகும். மன்னனுக்கு ஆலோசனை வழங்குவதன் மூலம் அரசாங்க அதிகாரத்தை அடிப்படையாக வைத்து தந்திரங்கள் பலவற்றை எடுத்துக் கூறியிருப்பதனால் கௌடில்யரை சாணக்கியன்" என்றும் அழைப்பர்.

அரசியல் சாணக்கியங்கள் பலவற்றை தன்னகத்தே கொண்ட இந்நூல் அதற்கு முன்னர் வெளிவந்த நூல்கள் பலவற்றிலிருந்தும் வேறுபட்டதாகவே அமைந்துள்ளது. மனுவினுடைய மனு சாஸ்திரம், வியாசருடைய மகாபாரதம் முதலானவை எல்லாம் தர்மத்தையும் நீதிமுறையையும், ஒழுக்கத்தினையும் போதிப்பதாக அமைந்திருக்க அர்த்தசாஸ்திரம் அவற்றிலிருந்து வேறுபட்டு

அதிகாரத்தைப் போதிப்பதாக அமைந்துள்ளது. இதன்படி முன்னைய நூல்களெல்லாம் அரசை சமயத்தோடு தொடர்புபடுத்தி விளக்கியிருக்க கௌடில்யர் தனது நூலில் அரசை சமயத்திலிருந்து விடுவித்து அதற்கு அதிகாரத்தை வழங்கி அதனை லவ்கீக தாபனமாக படைக்க முயன்றிருப்பதை நாம் காணலாம்.

கௌடில்யரின் அர்த்த சாஸ்திரம் சட்டம், நிர்வாகம், நீதிப்பரிபாலனம், தண்டனை, வரிவிதிப்பு, ஒற்றர் சேவை, வெளிநாட்டுக் கொள்கை உள்நாட்டு பாதுகாப்பு என பல விடயங்கள் பற்றி எடுத்துகூறியதாக அமைந்துள்ள போதிலும் அவற்றின் சாராம்சம் அதிகாரத்தை விளக்குவதாகவே அமைந்திருக்கின்றது. இவர் தமது நூலில் அதிகாரத்திற்கு அடிப்படையாக அமைவது நாடு மன்னனின் அதிகாரம் சிறந்து விளங்க வேண்டுமே ஆனால் அதற்கு பெரிய நிலப்பரப்பைக் கொண்ட நாடு அவசியம். அங்கு மக்கள் ஒற்றுமையாக வாழக் கூடிய சூழ்நிலை காணப்பட வேண்டும். மன்னர் தமது அதிகாரத்தை படை பலத்தின் மூலமாகவும் பொருளாதார பலத்தின் மூலமாகவும் பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்பது அர்த்தசாஸ்திரத்தின் கருத்தாகும்.

இராச்சியத்தை கைப்பற்றல் என்ற விடயத்தில் கௌடில்யர் அதிகாரத்தை கைப்பற்றுதல் என்பதிலேயே முக்கிய கவனம் செலுத்தியுள்ளார். அதிகாரத்தைக் கைப்பற்றும் வழிமுறையில் மன்னன் தனக்குச் சாதகமாக எதை பயன்படுத்த முடிகின்றதோ அதனை பயன்படுத்திக் கொள்ளலாமெனக் கூறியிருக்கின்றார்.

"மனிதாபிமானம், தார்மீகம், ஒழுக்கநெறி என்பவற்றின் அடிப்படையில் நின்று அவற்றுக்குட்பட்டுதான் அதிகாரத்தை கைப்பற்ற வேண்டும். என்பது அவசியமல்ல. அதிகாரத்தை கைப்பற்றல் என்ற உயர்ந்த இலட்சியத்திற்கு எது பொருத்தமாக இருக்கின்றதோ அதனை பின்பற்றும் உரிமை ஆட்சியாளனுக்குண்டு" – என்றார்.

குறிக்கோள் சரியானதாக இருப்பின் அதை அடைய மன்னர் எந்த வழிமுறையினையும் கடைப்பிடிக்கத் தயங்கக்கூடாது. நவீன அரசியலின் தந்தை என வர்ணிக்கப்படும் மக்கியவலி (கி. பி 1469 – 1527) எனும் இத்தாலிய அறிஞர் தமது "இளவரசன்" (The Prince) எனும் நூலில் இளவரசன் என்பவன்

"சிங்கத்தைப் போல் பலமுள்ளவனாகவும் நரியைப்
போல் தந்திரமுள்ளவனாகவும் இருக்க வேண்டும்".

என்று கூறிய கருத்து, அர்த்த சாஸ்திரத்தில் ஏற்கனவே குறிப்பிடப்பட்டு விட்டது என்று தான் கூற வேண்டும்.

இராச்சியத்தைக் கைப்பற்றுதல் எனும் போது ஒரு நாட்டின் மீது படையெடுப்பை மேற்கொண்டு அதனை கைப்பற்றுவது மட்டுமல்ல அந்த நாட்டைத் தமக்கு கட்டுப்பட்ட ஒன்றாக, தனக்குத் திரை செலுத்தக்கூடியதொன்றாக, தனது ஆணையை கேட்கக்கூடியதொன்றாக ஆக்கிக் கொள்வதையும் உள்ளடக்கும் என அர்த்த சாஸ்திரம் கூறுகின்றது. இராச்சியத்தை கைப்பற்றும் முயற்சியில் எதிரி நாட்டோடு ஏனைய அரசுகள் வைத்துள்ள உறவை முறித்து பகை நாடாக ஆக்க வேண்டும். இதன் மூலம் எதிரியின் வல்லமையினை குறைக்கலாம் என்கின்றார்.

தான் எந்த நாட்டின் மீது படை எடுக்கின்றாரோ அந்த நாட்டோடு ஏனைய நாடுகள் கொண்டுள்ள நட்பை முறியடிப்பதற்கு சிறந்த ஒற்றர்களை மன்னர் பயன்படுத்திக் கொள்ளலாம். ஆட்சியாளர்கள் எதிரிகள் தமக்கு எதிராக பயன்படுத்தப்படுகின்ற சதி முயற்சிகளை அறிந்துக் கொள்வதற்கும் ஒற்றர்களை குதிரை வியாபாரிகள் போன்றும் குற்றவாளியாக்கி நாடுகடத்துவது போன்றும் ஏவுப்பார்க்க அனுப்பலாம். இதனை விட கடலோடிகளையும் நாட்டியக்காரிகளையும் பயன்படுத்தலாம். இவர்கள் மக்களிடையே மூட நம்பிக்கைகளை ஏற்படுத்துவதன் மூலம் தமது

கடமையை நிறைவேற்றுவர். குறிபார்த்தல், சாஸ்திரம் பார்த்தல் என்பனவும் இக்கடமையை நிறைவேற்றுவதற்கான வழியே.

ஒற்றர் சேவையில் துறவிகளையும் பயன்படுத்தலாம். இவர்கள் தமது அரசர்களிடத்தில் ஒரு ஆத்மீக சக்தி காணப்படுகிறதென்றும், அவர் எதிர் காலத்தைப் பற்றி எதிர்வு கூறும் சக்தியைப் பெற்றிருக்கிறாரென்றும் மக்களிடம் கூற வேண்டும். பொது மக்களிடம் நிலவும் சமய உணர்வுகளுடாக இதனை உறுதிப்படுத்த வேண்டும். கௌடில்யர் ஒரு புராதனராக இருந்தாலும் இவ்வாறு அரசியல் நோக்கத்திற்காகச் சமயத்தைப் பயன்படுத்த வேண்டுமென்ற கருத்து குறிப்பிடத்தக்கதாகும். மேலும் இவர் நாட்டில் மன்னனுக்கு என தனியான ஒற்றர் படைப் பிரிவு ஒன்று இருக்கவேண்டும் எனவும், அவர்களின் உரையாடல் இரகசியமான மொழியிலிடம்பெற வேண்டுமெனவும் பெண்கள் உட்பட பல சாதியினரைச் சார்ந்தோரும் ஒற்றர் படையிற் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டுமெனவும் கூறியுள்ளார். இவ்வாறு கௌடில்யர் கூறிய ஒற்றர் படைப்பிரிவு நவீன அரசுகளின் நடைமுறையில் இரகசிய பொலிஸ் பிரிவாக இருந்து வருவதைக் காண்கிறோம்.

கௌடில்யரின் அரசியற் சிந்தனையில் நாடுகளுக்கிடையிலான உறவுகள் பற்றிய கருத்து குறிப்படததக்கதாகும். அவர் இங்கு வெளிநாட்டுக் கொள்கையின் போது மீன் விதியின் அத்தியாவசியத்தை வலியுறுத்தியுள்ளார். பாதுகாப்பு என்பது உள்நாட்டு , வெளிநாட்டு ஆக்ரமிப்பிலிருந்து நாட்டைப் பாதுகாப்பதாகும். இப்பாதுகாப்புப் பற்றிய கௌடில்யரின் கருத்து ஒழுக்கவியற் சமயக் கருத்துக்களுக்கு அப்பாற்பட்டதாகும். நாட்டின் உள்நாட்டு வெளிநாட்டுப் பாதுகாப்புக்குத் தேவையான விடயங்களை அறிந்து கொள்வதற்காக அரசன் ஒழுங்கமைந்த ஒற்றர் சேவையை வைத்திருக்க வேண்டும். அந்த ஒற்றர் உள்நாடடில் அரசரைப் பற்றி மக்களிடையே நிலவும் கருத்துக்களையும், அயல் நாட்டு அரசர்களிடையேயும், மக்களிடையேயும் நிலவும் கருத்துக்களையும் அரசனுக்கு அறிவிக்க வேண்டும். இவற்றினை அடிப்படையாகக் கொண்டே வெளி நாட்டுக் கொள்கைகளை உருவாக்க வேண்டும்.அரசன் தமது வெளி நாட்டுக் கொள்கையை உருவாக்கும் போது சமாதானக் கொள்கை, யுத்தக் கொள்கை, நடுநிலைமைக் கொள்கை உடன்படிக்கைகளை மேற்கொள்ளல், இரட்டைக் கொள்கைகளைக் கடைப்பிடிக்க வேண்டுமென ஆலோசனை கூறுகின்றார்.

வெளி நாட்டு உறவுகள் பற்றிய அர்த்த சாஸ்திர கருத்தின்படி தனது நாட்டிற்கருகே அமைந்திருக்கும் நாடுகளைத் தனது எதிரிகளாகக் கருத வேண்டும். அதற்கப்பாலமைந்திருக்கும் நாடுகளை நட்பு நாடுகளாகக் கருத வேண்டும். அயல் நாடுகளுக்கெதிராக அப்பாலிருக்கும் நாடுகளுடன் சமாதானக் கொள்கைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.அயல் நாட்டில் வாழும் மக்களிடையே அந்நாட்டு அரசைப் பற்றி அதிருப்தி ஏற்படுத்தும் தந்திரோபாயங்களைப் பிரயோகிக்க வேண்டுமென்று ஆலோசனை கூறுகின்றது.

அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு மற்றொரு நடவடிக்கையாக எதிரியின் பொருளாதார பலத்தைக் குறைப்பதும், அவனுக்கு நாட்டுக்கு உள்ளேயும், வெளியேயும் இருக்கின்ற நற்பெயரைக் கெடுப்பதும் முக்கியமானதென ஆலோசனை கூறியுள்ளார். எதிரியின் கோட்டையைத் திட்டமிட்டு முற்றுகையிடுதலும், அவனது களஞ்சியசாலைகளை நாசப்படுத்தல், விளை பொருட்களை தீ மூட்டிக் கொழுத்துதல் என்பவற்றை பொருளாதார பலத்தைக் குறைப்பதற்கான நடவடிக்கையாகக் காட்டியுள்ளார். இவற்றை மன்னர் மிக இரகசியமான முறையில் செய்து விட்டுப் பின்னர் உடனடியாக மன்னருக்கு உதவுவது போல் நடிக்க்வேண்டும். உணவுப் பொருட்களையும் ஏனைய உதவிப் பொருட்களையும் தனது நாட்டிலிருந்து வழங்க வேண்டும் இதன் மூலம் மன்னனை தனக்கு கட்டுப்பட்டவனாக ஆக்கிக் கொள்வெதாடு இந்த நகர மக்கள் மத்தியில் தனது செல்வாக்கினையும் புகழினையும் விருத்திச் செய்துக் கொள்லாம் எனவும் கௌடில்யர் ஆலோசனைக் கூறியுள்ளார்.

மன்னன் மக்கள் மீது பற்றுக் கொண்டவனாக நடந்துக் கொள்ள வேண்டும். மன்னன் மீது

மக்கள் பற்றி வைக்காவிட்டால் ஆட்சி நிலைக்கமாட்டாது. அதனால் மன்னன் மக்களைக் கவரக்கூடிய நடவடிக்களில் ஈடுபட வேண்டும் என்பது அர்த்தசாஸ்திரக் கருத்தாகும். இதற்காக நோயுற்றவர்களுக்கு, அங்கவீனர்களுக்கு, நிவாரணம் வழங்குதல், அவர்களை பராமரித்தல் முதலான பணிகளில் ஈடுபடுவதோடு கல்விமான்களைப் பாராட்டுதல் பல துறைகளிலும் சிறந்து விளங்குபவர்களை தேர்ந்தெடுத்து இவர்களுக்கு உயர் பட்டங்கள் , விருதுகள் வழங்குதல், வரிகளைக் குறைத்தல், வரிச்சலுகை அளித்தல், மக்களிடத்தில் சூரையாடப்பட்ட பொருட்களைத் தேடி அவர்களிடத்தில் மீட்டுக் கொடுத்தல் முதலான நடவடிக்கைகள் மூலம் மன்னர் மக்கள் மத்தியில் நன்மதிப்பினை பெற்றுக்கொள்லாம் என்கின்றார் கௌடில்யர்.

மக்களை கவரும் நடவடிக்கைகள் தொடர்பாக வரிபற்றியும் குறிப்பிட்டுள்ளார். ஆட்சியாளன் தமது மக்களை ஆட்சி புரிவதற்கு தேவையான நிதியை சேர்க்கும் வழிமுறையாகவே இதை எடுத்துக் கூறியுள்ளர். இதன் படி நிலவரி, வணிக வரி என்பவற்றைக் குறிப்பிடலாம். செழிப்பான நிலங்களிலிருந்து 1/5 பங்கு வரியையும் மட்பாண்டம், புடைவை வர்த்தகத்தில் ஈடுபடுவோரிவலிருந்து 1/20 பங்கு வரியையும் ஆடம்பர பொருட்கள் உற்பத்தியில் ஈடுபடுவோரிலிருந்து 1/5 – 1/15 பங்கு வரியையும் அறவிட வேண்டும் என கூறியுள்ளார். இது நவீன அரசுகள் நிதியைப் பெற்றுக் கொள்வதற்காக பயன்படுத்தப்படும் வரிக் கொள்கையை ஒத்திருப்பதால் கௌடில்யர் நவீன அரசுகளின் ஆட்சிக்கலை வளர்வதற்கு திறவு கோலாக அமைந்திருந்தார் என்பது வெளிப்படை.

கௌடில்யரின் அரசுப்பற்றிய ஆய்வில் தண்டனை வழங்குதல் பற்றிய கருத்து முக்கியமானதாகும். அரசுக்கு எதிராக சூழ்ச்சி செய்தோர், பகைவருக்கு உதவியோர், படையில் பிளவினை உண்டுப்பண்ணியோர், அரசின் இரகசியத்திட்டங்களை அம்பலப்படுத்துவோர். பல்வேறு தண்டனைக்கு உள்ளாக்கப்படுவர். இவற்றில் மரணத்தண்டனைப்பற்றிய அர்த்தசாஸ்திரத்தில் விரிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. இருவர் செய்யும் போர் காரணமாகவோ, சண்டை காரணமாகவோ புண்பட்டவன் ஏழு நாட்களுக்குள் இறப்பானாயின், அக்குற்றத்துக்கு கொலைத் தண்டணை உரிதாகும். பொய் வதந்தி பரப்புதல், கன்னம் வைத்தல், அரசனுடைய யானை,குதிரை என்பவறறை திருடுதல் என்னும் குற்றங்களுக்குத் தூக்குத் தண்டணை விதிக்கப்படடுள்ளது. அரசனுக்கெதிராகச் சூழ்ச்சி செய்வோர், அரசனுடைய அந்தப்புரத்தில் அடாத முறையில் நுழைவோர் அவனுடைய பகைவர்க்குத் துணை செய்வோர், படையிற் பிளவுண்டாக்குவோர், தந்தை, தாய், மைந்தன், உடன் பிறந்தார், துறவி என்போரைக் கொல்வோர், தீக்கொழுவுவோர் ஆகிய இவரெல்லாம் உயிரோடு தீயிலிட்டு எரிக்கபடுதற்குரியவர். வேண்டுமென்றே செய்யுங் கொலைக்கும் ஆநிரை கவர்தலுக்கும் தண்டனே தலை வாங்குதல் (சிரச்சேதம்) என அர்த்த சாஸ்திரம் விதித்துள்ளது.

கௌடில்யர் தனது நூலில் நிர்வாகம் பற்றியும் குறிப்பிட்டுள்ளார். நாட்டைத் திறம்பட ஆள்வதற்கு நிர்வாகம் நன்கு ஒழுங்கமைக்கப்பட்டு இருக்க வேண்டும். கிராமம், நகரம், மாவட்டம் என பிரிக்கப்பட்டு நிர்வாகம் செயற்படுத்தப்பட வேண்டும். நிர்வாகத் துறைக்குப் பொறுப்பாக இருக்கும் மந்திரி சபை மிகவும் பெரியதாகவோ சிறியதாவோ இருக்கக் கூடாது. நிர்வாகத்தைச் செயற்படுத்தும் உத்தியோகத்தர்கள் திறமையலடிப்படையிற் பரீட்சை மூலம் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். நிர்வாக பனிமனையில் இடம் பெரும் ஊழல் செயல்களைத் தடுப்பதற்கு காரியாலயத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட உயர் அதிகாரிகளை நியமித்து அவர்களுக்குக் சம்பளம் வழங்க வேண்டும் எனவும் கூறியிருக்கின்றார். கௌடில்யரின் நிர்வாகம் பற்றிய கருத்தை ஓரளவுக்கு தற்காலத்து பொது துறை ஆட்சியியலோடு பொருந்தக்கூடியதாக இருக்கின்றது.

கௌடில்யர் நீதி பரிபால முறைப்பற்றியும் குறிப்பிட்டுள்ளார். இவர் பத்து கிராமங்களுக்கு ஒரு நீதி மன்றம் அமைக்கப்பட வேண்டும் என்றும் அவசரக்கால நிலைமைகளில் இரவு 8.30 மணியிலிருந்து அடுத்த நாள் அதிகாலை 3.30 மணி வரை அவசரக்காலச் சட்டத்தினை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும், கொலைக் குற்றவாளிகளுக்கு மரண தண்டனை அளிக்க வேண்டும் என்றும் கூறியுள்ளர்.

உள்நாட்டில் பாதுகாப்பினை ஏற்படுத்தி அதிகாரத்தினை எவ்வாறு பாதுகாக்கலாம் என்பது பற்றியும் விளக்கியுள்ளர். இது சமய ஒழுக்க கருத்துக்களுக்கு அப்பாற்பட்டதாகும். அவரது கருத்துப்படி அரசாலேயே சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நாட்டலாம். நாட்டின் பாதுகாவலன் அரசனாகும். சில வேளை அரசியல் அதிகாரத்திற்கு அவனது உறவினர்களோ பிள்ளைகளோ சவாலாக அமையலாம். அச்சந்தர்ப்பத்திலே அரசன் நண்டு விதியின்படி செயல்பட வேண்டும். அரசனின் பிள்ளைகளும் இளவரசர்களும் நண்டுகளைப் போன்றவர்களாகும். சிறிய நண்டுகளுக்கு பசி ஏற்படின் தாய் தந்தைகளைக்கூட சாப்பிட்டு பசியைப் போக்கிக்கொள்ளும் அரசனின் குமாரர்களும் அப்படிப்பட்டவர்களே அதிகாரத்தின் மீதி அவர்களுக்கு மோகம் ஏற்பட்டால் தகப்பனைக்கூட அளித்து அதனை பெற முயல்வர். அதனால் அரசன் தன்னையும் தனது அதிகாரத்தையும் பாதுகாக்க மிகவும் தந்திரமாகச் செயற்பட வேண்டும். சிறிய வயதிலிருந்து குமாரர்களுக்கு கல்வியைப் பெற்றுக்கொடுத்து ஒழுக்க சீலர்களாக வளர்க்க வேண்டும். அதன் மூலம் அவர்களை மாற்ற முடியாவிட்டால் அவர்களை வரி அறவிடல் போன்ற மக்கள் அருவருக்கும் தொழில்களை ஈடுபடுத்த வேண்டும். அங்கு ஒற்றர்கள் மூலம் குமாரர்களுக்கு எதிராக போராட்டங்களை ஏற்படுத்தி அவர்களை கொலை செய்து விடல் வேண்டும். அல்லது இரகசியமான வழிமுறைகள் மூலம் குமாரர்களைக் கொன்றுவிட வேண்டும். என்பதில் அர்த்தசாஸ்திர இராஜ தந்திரமாகும்.

ஆட்சியாளர் தமது அதிகாரத்தை நிலை நிறுத்துவதற்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தமக்கு எதிராகவுள்ள எதிர்ப்புச் சக்திகளை முறியடிக்கக் கூடிய சாணக்கியமுடையவனாக இருக்க வேண்டும். மன்னன் தமது புகழ், கௌரவ, சொத்து என்பவற்றிற்கு எதிராகவுள்ள அமைப்புக்களையும் இயக்கங்களையும் அழித்துவிட வேண்டும். வைரத்தை வைரத்தால் வெட்டுவது போன்று இந்த இயங்களை அழித்து விட வேண்டும். செல்வாக்கு பெருகுவதற்கு சொத்தே காரணம். எனவே தமக்கு எதிராகவுள்ள இயக்கங்களின் சொத்துக்களைப் படித்து அவற்றின் செல்வாக்கையும் குறைப்பதன் மூலம் மன்னர் அதிகாரத்தை நிலை நிறுத்திக் கொள்ளலாம். என்பதில் கௌடில்யரின் சாணக்கியம் நிறைந்த கருத்தாகும்.

நாட்டை பாதுகாத்தல் எனும் பொருளில் கௌடில்யர் அதிகாரத்தைப்பற்றியே பேசியுள்ளர். மன்னன் அதிகாரத்தை பாதுகாப்பதற்கு நடிக்க தெரிந்தவனாகவும் மக்களை ஏமாற்றக் கூடியவனாகவும் இருக்க வேண்டும் என்கின்றார். சமயத்தில் நம்பிக்கை கொண்ட சமூகமாக இருக்குமானால் அச்சமுகத்தில் மன்னன் தமது அதிகாரத்தை பாதுகாப்பதற்கு சமயத்தில் நம்பிக்கை கொண்டவன் போல் நடக்க வேண்டும். வேள்விகள், யாகங்கள் செய்த போன்ற செயல்களில் ஈடுபடுவதன் மூலம் மன்னன் மக்களை ஏமாற்றுவதோடு அதிகாரத்தை பாதுகாக்கும் வகையில் மக்களது ஆதர வையும் பெற்றுக் கொள்ள முடியும் என்கின்றார். இவரது நோக்கம் சமயத்திருந்து அரசை பிரிப்பதாக இருப்பினும் அதிகாரத்தை பாதுகாக்கும் விடயத்தில் சமயத்தினை ஒரு உபாயமாக எடுத்துக் கூறுகின்றார்.

சில அறிஞர்கள் அர்த்தசாஸ்திரத்தில் இடம்பெறும். கருத்துக்கள் உண்மையான கருத்துக்களா? என்று கேள்வியை எழுப்புகின்றனர். அவர்களின் கருத்துப்படி கௌடில்யரின் அர்த்தசாஸ்திரம் என்பது சமகாலத்தில் நிலவிய கருத்துக்களை முறையாக ஒன்று சேர்த்து எழுதப்பட்ட ஓர் ஆவணம் என்றுக் கருதுகின்றனர். எனினும் இவரது கருத்துக்களை அதற்கும் முன்னையவர்களின் கருத்துக்களோடு ஒப்பிடும் போது கௌடில்யர் புதிய கருத்தக்களையும் அரசைப் பற்றிய புதியதொரு நோக்கினையும் முன்வைத்திருப்பதைக் காணலாம். பழைய தத்துவார்த்த கருத்துக்களை யதார்த்த நிலைக்கு இயல்பானதாக ஒழுங்குப்படுத்தியுள்ளார்கள். அவ்வாறு செய்யும் போது அவர் அதற்கு புதியதொரு பொருளையும் வழங்கியுள்ளார். எவ்வாறாயினும் இந்துக்களின் ஆட்சிக்கலையில் கௌடில்ய அர்த்த சாஸ்திரம் நவீன அரசியலுக்கு பல்வேறு துறையிலும் வழிகாட்டியாகவும், திறவு கோலாகவும் அமைந்துள்ளது என்பதை இந்நூலை ஆழமாக ஆய்வோருக்கு புலப்படும்.

வருணக் கோட்பாட்டின் இன்றைய நிலை – ஒரு கண்ணோட்டம்.

செல்வி இரா. சர்மிளாதேவி தமிழ் சிறப்புக்கலை (மூன்றாம் வருடம்) கலைப்பீடம்.

இந்து மக்கள் பின்பற்றும் கோட்பாடுகளில் வருணக் கோட்பாடும் ஒன்றாகும். வருணம் என்ற சொல் நிறம், அல்லது சாதி என்பதைக் குறிக்கும். வருணக் கோட்பாடானது, சாதிகளைப் பற்றியும் ஒவ்வொரு சாதியினரும் மேற்கொள்ள வேண்டிய கடமைகள் பற்றியும் கூறுகின்றது. வருணக் கோட்பாடு பற்றியும் அது எந்த நோக்கில் ஆரம்பிக்கப்பட்டது என்பது பற்றியும் அதன் இன்றைய நிலை பற்றியும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

ஆரம்பத்தில் சாதிகள் நிறத்தின் அடிப்படையில் தோன்றின என்று கூறப்பட்ட போதும், அதற்கான ஆதாரங்கள் காணப்படவில்லை. ஆனால், இருக்கு வேத பத்தாம் மண்டலப் பாடல் காத்தற் கடவுளாகிய பிரம்மாவின் அங்கங்களிலிருந்து நான்கு சாதிகளும் தோற்றம் பெற்றன என்று கூறுகின்றது. அதாவது, பிரமனின் தலையிலிருந்து பிராமணனும் ,தோளிலிருந்து சத்திரியனும், தொடையிலிருந்து வைசியனும், பாதத்திலிருந்து சூத்திரனும் தோற்றம் பெற்றனர் என்று அப்பாடல் கூறுகின்றது. இக்கருத்து எவ்வளவு தூரத்திற்கு பொருத்தமானது என்பது ஆய்விற்குரியது.

வருணக் கோட்பாட்டின் தோற்றத்தினை வரலாற்று ரீதியாக நோக்குகின்ற போது, ஆசிரியர்களின் வருகையோடு அதனைத் தொடர்புபடுத்தி நோக்குதல் பொருத்தமானதாக இருக்கும். அதாவது, ஆரியர்கள் கி. மு. 1500ஆம் ஆண்டளவில் இந்தியாவிற்குள் நுழைந்த போது அவர்கள் இங்கு முன்பே வாழ்ந்த மக்களை எதிர்கொள்ள வேண்டி நேரிட்டது. இவர்களின் தோற்றம், உடல் நிறம், மொழி, சமயம் செயலாறுகள் அனைத்தும் வந்தேறிய ஆரியர்களுக்கு முற்றிலும் வேறுபாடாக இருந்தன. ஆகவே, வந்தேறிய மக்கள் இந்நாட்டு மக்களோடு கலக்காமல் தனித்து நின்றனர். இந்நாட்டு மக்களை தசுயூக்கள் அல்லது தாசர்கள் என்று ஆரியர்கள் குறித்தனர். இரு சாராரும் தனித்து நின்றதனால், ஆரியர்கள், தசுயூக்கள் என்ற இரு பிரிவுகள் அப்போது ஏற்பட்டன.

நாளடைவில் செயற்பாடுகள் பெருகியதன் காரணமாக ஆரியர்கள் தமக்கிடையே ஒரு தொழிற்பகுப்பை ஏற்படுத்திக்கொள்ள வேண்டி வந்தது. அந்த வகையில் ஆரியர்கள், இருக்கு வேத காலத்தின் பிற்பகுதியில் நான்கு பிரிவு அமைப்பை– பிற்காலத்தில் நால் வர்ண முறை என்றுச் சொல்லப்பட்ட அமைப்பை ஏற்படுத்தினர் அப்பிரிவுகள் பார்ப்பனர் (பிராமணர்) , சத்திரியர், வைசியர், சூத்திரர் என்று சொல்லப்பட்டன. இந்த நான்கு பிரிவுகளுக்கும் தனித்தனி தொழில்கள் ஒதுக்கப்பட்டன. பார்ப்பனர்கள் வேதம் கற்பித்தலையும், வேள்வி புரிதலையும், சத்திரியர்கள் படைக்கலமேந்தி நாட்டைப் பாதுகாத்தலையும், வைசியர்கள் உழவு, வணிகம், கால்நடை மேய்த்தல் முதலான தொழில்களையும் தத்தம் செய்தொழிலாக மேற்கொண்டனர். ஆரியர்களால் போரில் வெல்லப்பட்டு அவர்களுடைய ஆதிக்கத்தின் கீழக் கொண்டு வரப்பட்ட தசுயூக்கள் ,சூத்திரர்கள் என்று அழைக்கப்பட்டு மேற்கூறிய மூன்று வருணத்தாருக்கும் ஊழியம் செய்யப் பணிக்கப்பட்டனர்.

இந்த நால்வருண அமைப்பே இன்றைய சாதி அமைப்பின் முன்னோடியாகும். தொடக்கத்தில் நால் வருண அமைப்புமுறை கட்டுப்பாடுகள் இல்லாமல் அமைந்திருந்தது. அதாவது, ஆரம்பத்தில் தொழில் பகுப்பு முறைக்கே முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. பிரச்சினையின்றித் தொழில்களை சிறப்பான முறையில் மேற்கொள்வதற்கு இம்முறை வழிவகுத்தது. செய்தொழில் பற்றியோ, வருணங்களுக்கிடையே மணவுறவு வைத்துக் கொள்வது பற்றியோ எவ்வித கட்டுப்பாடுகளும் விதிக்கப்படவில்லை. ஒரு வருணத்தைச் சேர்ந்தவர் பிறிதொரு வருணத்துக்குரிய தொழிலை மேற கொள்ளவும், பறிதொரு வருணத்தில் மணமுடிக்கவும் உடன்பாடு இருந்தது. ஆயினும் ஒரு வருணத்தைச் சேர்ந்தவன் தன்னிலும் கீழான வருணத்தில் பெண் எடுக்கவே (அனுலோம – ஹ்யு"வுக்ஷ மணமுறை) ஒத்துக்கொள்ளப்பட்டது. தன்னிலும் மேலான வருணத்தில் பெண் எடுக்க (பிரத்திலோம – ழ்ரிக்ஷிஹ்யு"வுக்ஷ மணமுறை) ஒத்துக்கொள்ளப்படவில்லை.

ஓரளவு நல்ல நோக்கிலேயே ஆரம்பிக்கப்பட்ட வருணக் கோட்பாடானது, பின்னர் மாற்றம் பெறத்தொடங்கியது. வேத காலத்துக்குப் பிற்காலத்தில் நால்வகை வருண அமைப்பு முறையில் மேற்கூறிய உடன்பாடுகள் விலக்கப்பட்டு, செய்தொழில், மணஉறவு தொடர்பாகக் கட்டுப்பாடுகளும் விதிமுறைகளும் ஏற்பட்டன. இதன் பின்னர், மனுஸ்மிருதி காலத்தில் நால் வருண அமைப்பு முறை மறைந்து, பல்வேறு சாதிப்பிரிவுகள் அடங்கிய சாதி அமைப்பு முறை தோன்றியது.

வருணங்களுக்கிடையே ஏற்பட்ட கலப்புத் தான் பல்வேறு சாதிப் பிரிவுகள் தோன்றக் காரணமாய் இருந்தது என்று மனுஸ்மிருதி கூறுகின்றது. மண உறவு தொடர்பான தடை இருந்த போதிலும், வருணங்களுக்கிடையே கலப்பு ஏற்பட்டு, அந்தக் கலப்பில் பிறந்தவர்கள் வருணக்கலப்பிற்கு ஏற்பத்தனித்தனிப் பிரிவுகளாய் அமைந்தனர். அந்தக் கலப்புப் பிரிவுகள் வருணங்களுடன் கலந்த போதும் அத்தகைய கலப்புக்களின் விளைவாக மேலும் பல்வேறு பிரிவுகள் தோன்றின. கலப்புப் பெருகப்பெருக, ஒவ்வொரு கலப்பு வகைக்கும் ஒரு தனிப் பிரிவு அமைவதால், எண்ணற்ற பிரிவுகள் உண்டாயின. இக்கலப்புப் பிரிவுகள் அக மணத்தைக் கடைப்பிடிக்கத் தொடங்கிய போது, அவை சாதிகளாக உருவெடுத்தன என்பது மனுஸ்மிருதியின் கருத்து.

ஆனால், பேராசிரியர் குர்ரே (சுழீஹூ) வேறொருகருத்தை கூறுகின்றார். வேதகாலத்தின் பிற்காலத்தில் பார்ப்பனர்கள் தங்களது தூய்மையைக் கட்டிக்காப்பதில் பெரிதும் கவனம் செலுத்தினார்கள். புரோகிதத் தொழிலைத் தமக்கு உரிமையாகக் கொண்டும், தங்களுக்குள்ளேயே சமூக உறவுகளை வைத்துக் கொண்டு தங்களைத் தனிமைப்படுத்திக் கொண்டும் தமது தூய்மையைப் பேணிக் கொண்டார்கள். சத்தியர்களும், வைசியர்களும் தனித்து விடப்பட்டார்கள். அனைவரையும் கட்டுப்படுத்தக் கூடிய வலிமையான அரசியல் அமைப்பு இல்லாத காரணத்தினால் சூத்திரர்கள் வைசியர்களுடைய தொழிலிலும் சத்திரியர்களுடைய தொழிலிலும் ஈடுபடத் தொடங்கினர். இதனால், பார்ப்பனர்களுக்கு வெளியே சத்தியர்களும் வைசியர்களும் சூத்திரர்களும் கலந்த பல்வேறு செய்தொழில் குழுக்கள் தோன்றின. செய்தொழில்கள் கிளைத்துப் பெருகப் பெருக ஒவ்வொரு செய்தொழில் குழுவும் தனது ஒற்றுமையையும், பெருமையையும் பேணுவதற்காக தனக்குள்ளேயே மணவுறவுகளையும் கொடுக்கல் வாங்கல்களையும் வைத்துக் கொண்டது. இதன் காரணமாக அவை சாதிகளாக உருவெடுத்தன என்கின்றார், பேராசிரியர் குர்ரே. இவருடைய கருத்துக்கேற்ப, இன்றைய சாதி அமைப்பு முறையின் பார்ப்பனர், பார்ப்பனர் அல்லாதோர் என்று இரு பெரும் பிரிவுகளே இருப்பதைக்காணலாம். இப்பார்ப்பனர் அல்லாதோர் பிரிவினுள் பல்வேறு கிளைப்பிரிவுகள் இருப்பதும் கவனிக்கத்தக்கது.

ஆரம்பகாலத்தில் தொழில் செம்மையாக நடைபெறுவதன் பொருட்டு வகுக்கப்பட்ட வருணக்கோட்பாடானது, பின்னர் சாதிப் பாகுபாடாக மாற்றம் பெறத் தொடங்கியது. இந்து சமய வருண அமைப்பின் அடிப்படை இலட்சியமான தொழில் கூட்டமைப்பு மறைந்து, பதிலுக்கு அது சாதி" என்ற அமைப்பில் பல கொடுமைகளுக்கு வித்திட்ட போது, இந்து சமூகத்தவரிடையே உயர்வு, தாழ்வு, போட்டி பூசல்கள், பிறப்புரிமை கோட்பாடுகள், வம்சாவளி, சொத்துரிமை, வாரிசுரிமை, பரம்பரை மரபுரிமை எனப்படும் பல்வேறு அம்சங்களின் தோற்றப்பாடுகள், பிரச்சினைகளை ஏற்படுத்தியது. வர்ணப்பிரிவினரால் இதுவரை நிலவி வந்த சமூகப் பிணைப்பு, ஒருமைப்பாடு, வருண ப்பிரிவின் வழி கண்காணிக்கப்பட்ட ஒழுக்க கட்டுப்பாடுகள், சமூகக்கடமைகள் யாவும் சாதிவெறி" என்ற பகைமையினால் பறிபோயின. இந்திய சமூகத்தில் அந்நியர் தன்மை ஊடுருவல்களும், அதன் ஆத்மீகமும், தனித்தன்மைகளும், வழிவழியாக வந்த பண்பாட்டுப் பாரம்பரியமும் அறவே சிதைந்து போயின. எமது மதத்தைப் பிறமதத்தினர். கண்டித்தும், இழித்தும், பழித்தும் சொல்வதற்கு இச்சாதிப் பாகுபாடு காரணமாயிற்று. இவ்வேளையில், இந்தியாவில் தேசிய உணர்வு" தோற்றம் எடுப்பதற்கு அடிப்படையாக முதலில் சாதி உட்பிரிவுகளின் பிரிவினை வாதத்தை வெல்ல வேண்டியிருந்தது.

19ஆம் நூற்றாண்டில் உலகத்துடன் இசைபட ஒழுகல்" என்ற ஆர்வத்தால் மூடக்கட்டுப்பாடுகளை மாற்றியமைக்க வேண்டும் என்ற சிந்தனை படித்த வகுப்பாரிடையே எழுச்சி பெற்றது. பாரத சமுதாயத்தையே தூய இந்து சமயப் பண்பாட்டடிப்படையில் புனரமைப்பு செய்ய

வேண்டும் என்ற ஈடுபாடு காரணமாக அறிவெழுச்சி இயக்கமொன்று" இக்காலத்தில் தோற்றம் பெற்றது. இவ்வியக்கம் காரணமாக, இந்து சமயத்தில், சமூகத்தில், அரசியல், பொருளாதாரம், கலாசாரம் முதலிய கோட்பாடுகளிலெல்லாம் புதிய விழிப்புணர்ச்சி உருவாகியது.

19ஆம் நூற்றாண்டில் தான் சாதிப் பாகுப்பற்றிய விழிப்புணர்வு மக்களிடையே முதன் முதலில் ஏற்பட்டது என்று எண்ணிவிடக் கூடாது. ஏனெனில், இந்து சமயத்தின் புனரமைப்பு வேளைகளும் சீர்த்திருத்த கருத்துக்களும் தொன்று தொட்டு இந்து மத ரிஷிகளாலும் அறிஞர்களாலும் வெளியிடப்பட்டு வந்துள்ளன. இந்த வகையிலே இந்துமதத்தின் முதல் புரட்சியாளராக, ஒரு மறுமலர்ச்சியாளராக சித்தார்த்தரையே(கௌதம புத்தரையே) குறிப்பிடலாம்" என்ற கலைவாணி இராம நாதனின் கருத்து இங்கு மனங் கொள்ளத்தக்கது. ஏனெனில், வருண பிரிவு சாதி பிரிவாக உருவெடுத்த போதும் இந்து மதத்தில் பல முரண்பாடுகள் தோன்றிய போதும் இதனை எதிர்த்து இந்துக்கள் நடத்திய புரட்சியே பௌத்த மதம் தோன்றுவதற்குக் காரணமாய் இருந்ததையும் கடந்த கால வரலாறு புலப்படுத்தியுள்ளது.

இதன் பின்னர், ஆழ்வார்களும், நாயன்மார்களும் சாதிப் பாகுப்பாட்டை ஒழிப்பதில் தீவிர நாட்டம் செலுத்தினர். நாயன்மார்களிலும் ஆழ்வார்களிலும் பல சாதியினரும் கலந்திருப்பதைக்காணலாம். திருநாவுக்கரசர் ஓர் இடத்திலே,

ஆவுரித்துத் தின்று(உ)ழலும் புலைய ரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க் அன்ப ராகில்
அவர்கண்டீர் நாம்வணங்கும் கடவு ளாரே.

என்று பாடுகின்றார். இதன் மூலம் எல்லோரும் ஒரு குலமே" என்ற அவரது கருத்து புலனாகின்றது. இவ்வாறு 19ஆம் நூற்றாண்டிற்கு முன்பும் சாதிப் பாகுப்பாட்டை எதிர்த்து தனிமனிதர்கள் ஆங்காங்கே குரல் கொடுத்தனர்.

இதன் பின்னர் 19ஆம் நூற்றாண்டில் தான் இயக்க ரீதியாக ஒன்று சேர்ந்து சாதிப் பாகுப்பாட்டை ஒழிக்கப் பாடுபட்டனர். அந்த வகையிலே, நவீன இந்து சமய இயக்கங்களான பிரமசமாஜம், ஆரியசமாஜம், பிரமஞானசங்கம், இராமகிருஷ்ண சங்கம் (மிஷன்) ஆகியன முக்கியத்துவம் பெறுகின்றன. இவ்வியக்கங்களின் முக்கியக் கொள்கைகளுள் ஒன்று சாதி பாகுபாட்டை ஒழித்தலாகும்.

இவ்வாறு பல இயக்கங்கள் சாதி பாகுபாட்டை ஒழிக்க பாடுபட்டப் போதும், அவற்றால் பூரண வெற்றி பெற முடியவில்லை. இக்கால கட்டத்திலும் கூட சாதிப் பாகுபாடு இருக்கத் தான் செய்கின்றது. இக்கால கவிஞர்களான பாரதி, பாரதிதாசன், கவிமணி போன்றோர்களும் சாதிப் பாகுபாட்டை எதிர்த்துக் குரல் கொடுத்திருக்கின்றனர். வருணபாகுபாடு சாதிப் பாகுபாடாக உருவெடுத்த வேதனையைப் பாரதி,

நாலு குலங்கள் அமைத்தான்:- அதை
நாசமுறப் புரிந்தனர் மூடமனிதர்."

என்று பாடுகின்றார். மேலும் சாதி பாகுபாட்டை நீக்க வேண்டி பாடுபடுவதோடு, சாதியினை ஒழிக்க வேண்டுமாயின் அதற்குரிய விதையினை சிறுவர்களின் மனங்களிலேயே விதைக்க வேண்டுமென்று எண்ணுகின்றார் போலும் பாரதி. ஏனெனில் இன்றைய சிறார்கள் தானே வருங்கால நாட்டின் வளமான தூண்கள் அதனால் தான்

சாதிகள் இல்லடி பாப்பா, குல தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்"

என்று பாடுகின்றார்.

இவருக்குப் பின் வந்த பாரதிதாசனும் சாதிக் கொடுமையினை எதிர்த்துப் பாடியுள்ளார். சாதியினை எதிர்த்து கவிமணி

ஓடம் உதிரத்தில் - வடிந்து
ஒழுகும் கண்ணீரில்
தேடிப் பார்த்தாலும் - சாதி
தெரிவதுண்டோ - அப்பா".

என்று பாடியுள்ளார். உண்மை தானே. ஒடும் உதிரத்திலும் ஒழுகும் கண்ணீரிலும் சாதியா தெரிகின்றது? மகாத்மா காந்தி கூட நான் எப்போதும் இந்து மக்களின் நான்கு சாதிகளையும் மதிப்பவன். ஆனால் தீண்டாமையைப் பற்றி சிந்திக்கும் போது மனித சமுதாயத்திற்குச் செய்யும் குற்றமாகவே கருதுகின்றேன். இந்து மதம் வளர்ந்துவரும் கண்ணியமான மதமாகையால் தீண்டாமையை எவ்வளவு விரைவாக அகற்ற முடியுமோ அந்தளவிற்கு நன்மை ஏற்படும்" என்று கூறுகின்றார்.

இவர்கள் எல்லோரும் இவ்வாறு பாடுவதற்கும், கருத்து வெளியிடுவதற்கும் காரணம் சாதிப் பாகுப்பாடு இன்றும் நிலவுவது தானே. 20ஆம் நூற்றாண்டின் இறுதி பகுதியில் வாழ்ந்துக் கொண்டிருக்கும் நாம் இன்றும் கூட சாதிப் பாகுபாடு என்று பெருஞ் சக்திக்குள் சிக்கித் தவிப்பது வேதனையானது. வெட்கப்படக்கூடியது. இன்றும் கூட இப்பாகுபாட்டை ஒழிப்பதற்கு எத்தனையோ இயக்கங்கள் பாடுபடுகின்றன. இருந்தும் என்ன பயன்? எம்மிடையே சாதி பார்க்கும் எத்தனையோ பேர் இருக்கின்றனர். தொடர்ந்து திருமணம் என்றால் சாதி, மரண வீடு என்றால் சாதி, எங்கு பார்த்தாலும் சாதி சாதி என்று சாதி வெறிக் கொண்டு அலைகின்றனர். இது ஏன்? நாம் ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டும். சிந்திக்கும் சிலரும் சமூகத்தை கண்டு அஞ்சிகின்றார்கள். பூனைக்கு மணி கட்டுவது யார்? என்பது தான் இங்குள்ள பிரச்சினை நாம் ஒவ்வொருவருமே சிந்திக்க வேண்டும். இந்துக்களாகிய நாம் நமக்குள் சாதிப் பாகுபாடு கொண்டு, வெறுமனே கட்டுப்பாடுகளை விதித்துக் கொண்டு ஏற்றத் தாழ்வுகளை ஏற்படுத்திக் கொண்டு வாழ்வதால் என்ன பயன்?

ஒரு புறம் சாதி பாகுபாடு நிலவினாலும் கூட, இன்று பல்வேறு தாக்கங்களின் காரணமாகச் சாதி அமைப்பு முறை பல கூறுகளில் வலிவிழந்து நிற்பது வரவேற்கத்தக்கது. சந்தோஷப்படக்கூடியது. இது பரந்த சமத்துவ மனப்பான்மைக்கும் அறிவியல் கண்ணோட்டத்திற்கும் வழிவகுக்கும் புதியகல்விமுறை, சீர்திருத்த இயக்கங்களின் கருத்துப் பரம்பல், சட்டங்களாகியவற்றின் காரணமாக சாதி மனப்பான்மைகளும் செயலாறுகளும் குறைந்திருக்கின்றன.புதிய பொருளாதார முறை, பணத்தின் மதிப்புயர்வு புதிய திறமைகளுக்கும் உயர் வாழ்க்கைதரத்திற்கும், சமூக, பொருளாதார தகுதிக்கும், வழிகோலும் புதிய வேலை வாய்ப்புக்கள் ஆகியவற்றின் காரணமாகச் சாதித் தொழிலின் மீதுள்ள பற்றும் பிடிப்பும் குறைந்து, மக்கள் புதிய புதிய செய்த்தொழில்களில் அலுவல்களில் ஈடுபட்டு இருக்கின்றன. இரயில், பேரூந்து போன்ற பொதுமக்கள் போக்குவரத்து சாதனங்கள், தொழிலகங்கள், உணவகங்கள், திரையரங்குகள், பேரங்காடிகள் முதலியவற்றின் வளர்ச்சியினால் மக்கள் ஒருவருக்கு ஒருவர் ஒட்டி உறவாட வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

எனவே தொகுத்து நோக்கின், ஆரம்ப காலத்தில் தொழிலை செவ்வனே செய்வதற்காக உருவாக்கப்பட்ட வருணப் பாகுபாடானது காலப்போக்கில் சாதிப்பாகுபாடாக உருவெடுத்து சமூக ஏற்றத்தாழ்வுகளுக்கு வழிவகுத்தது என்பதை அறிய முடிகின்றது. இச்சாதிப் பாகுபாடானது சமூகத்தில் பல பிரச்சினைகளை ஏற்படுத்தியமையினால் அதனை எதிர்த்து தனிமனிதர்களும் இயக்கங்களும் குரல் கொடுத்தன. இன்றைய நிலையைப் பொருத்த வரையில் சாதிபாகுபாடானது பல்வேறு காரணங்களால் தளர்ச்சியுற்று காணப்படுகின்ற போதும் கூட இன்றும் பலர் சாதி வெறிக் கொண்டு அலைகின்றனர். இது கண்டிக்கப்பட வேண்டியது. எமது மதமானது பலராலும் ஏற்றவும் போற்றவும்பட வேண்டுமானால் எம்மிடையே காணப்படும் இச்சாதிப்பாகுபாட்டை முற்றாக அழித்து ஒடுக்க வேண்டும். ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற நிலை வரவேண்டும். அதற்காக இந்துக்களாகிய நாம் ஒவ்வொருவரும் பாடுபட வேண்டும். அப்போது வெற்றி வெகு தொலைவில் இல்லை.

வேதங்களின் வழிவந்த இந்துப்பண்பாட்டு மரபுகள்

செல்வி. கி. உமா, தமிழ் சிறப்புக் கலை, மூன்றாம் வருடம்.

ஓர் இனத்தின் பண்பாடு, அந்நாட்டின் இலக்கியம், வரலாறு, சமயம் அறிவியல் முதலியவற்றின் மூலம் விளக்கமுறுகின்றது. இப்பண்பாடு மனிதத்தன்மையை இயல்பாக வெளிப்படுத்துவதாகும். பண்பாட்டின் வகைகளும், வெளிப்பாடுகளும், சூழ்நிலை, சமூகம் உள்ளம் ஆகியவற்றைச்சார்ந்து உருவாகும். பண்பாட்டைப் புறத்தில் இவ்வாறு என்றுகாட்டமுடியாது. தனிமனிதன் சமூகத்திற்கும். சமூகம் தனிமனிதனுக்கும் உணர்த்துவது பண்பாடாகும். பண்புள்ள தனிமனிதனால் ஒரு சமுதாயமே நலன்பெறுகின்றது. மக்களிடையே நிலவும் பண்பாட்டு மரபுகள் பல்வேறு பரிமாணங்கள் கொண்டவை. மரபு என்பது ஒரு சமூகத்திலே நீண்டகாலமாக நிலவி வருவது. இத்தகைய மரபுகள் மக்கள் வாழ்க்கையை பண்புள்ளதாக மாற்றுவதால் இவற்றிக்கு மக்கள் மிகுந்த முக்கியத்துவம் அளிப்பதோடு, அவற்றை உரியவாறு கடைப்பிடிப்பதில் கூடிய கவனம் செலுத்துகின்றனர். இந்துப்பண்பாடு பற்றிக்கூறும் கருத்துக்கள் காலந்தோறும் எழுந்த சமய இலக்கியங்களில் வெளிப்படுத்தப்படுகின்றன. இந்தவகையில் இந்துப் பண்பாடுப்பற்றி கூறும் இலக்கியங்களாக வேதம், ஆகமம், இதிகாசப்புராணங்கள், தர்ம சாஸ்திரங்கள் தேவாரம், திருவாசகம், திவ்வியப் பிரபந்தங்கள் போன்ற இலக்கியங்களைக் குறிப்பிடலாம். இந்த இந்துப் பண்பாட்டுமரபு வேதமரபு, ஆகமமரபு, புராணமரபு, கலைமரபு, ஆன்மீகமரபு ஆகிய தலைப்புக்களில் வகைப்படுத்தி நோக்கப்படுகின்றது. ஆயினும், இங்கு நாம் வேதங்களின் வழிவந்த இந்துப்பண்பாட்டு மரபுகள்பற்றி நோக்குவோமாயின் பாரதத்திலே ஆன்மீக சிந்தனை வளர்ச்சிக்கு அடிப்படையாகத்திகழும் வேதங்கள் இந்துப்பாண்பாட்டு மரபின் ஊற்றாகத் திகழ்கின்றன. இந்து பண்பாட்டு மரபை வேதங்கள், சமயம், தத்துவம், மொழி ஆகியவற்றின் அடிப்படையில் வளம்படுத்தியுள்ளன.

வேதகாலத்தில் இந்துப்பண்பாடு உருவாக்கப்பட்டது என்றும் இக்காலப்பகுதியில் வாழ்ந்த ரிஷிகளின் பங்களிப்பு இதற்கு முக்கியமாக இருந்தது என்பதையும், இவர்கள் ஆசார அனுஷ்டானங்களில் சிறந்தவர்களாக விளங்கி, தமது உயர்ந்தகருத்துக்கள் மூலம் சிறந்த பண்பாடுடைய வாழ்க்கைக்கு வழிக்காட்டியுள்ளார்கள் என்பதையும் பாரதியாரின்

"மரணமில்லாத இந்து நாகரிகமாகிய
கற்பக விருட்சத்திற்கு ஆதியிலே
விதை ஊன்றியவர்கள் வேத ரிஷிகள்"

என்ற கருத்து எடுத்துக்காட்டுவதாக விளங்குகின்றது.

வேதங்களில் புரோகித மண்டல வேதங்களாக இருக்கு, யசுர், சாமம் ஆகிய மூன்றும் திரயிவித்தியா என்ற நிலையிற் சிறப்பிக்கப்பட்டன. இவை எடுத்துக்கூறிய கருத்து உயரிய தெய்வக் கொள்கையாகும்.தெய்வீக வழிபாட்டை அடிப்படையாகக் கொண்டு மக்களின் நல்வாழ்வுக்குரிய ஆற்றல் வழிபாட்டின் வழிகிட்டியது. பூரண வாழ்விற்கும், ஆன்ம ஈடேற்றத்திற்கும் இவை உதவின. மக்கள் பண்புடன் வாழ்வதற்கேற்ற உயர்ந்த அறவுரைகள் வேதங்களில் இடம் பெற்றுள்ளன. இருக்கு வேத இறுதியில்,

"எல்லா மாந்தரும் இணக்கமாய் வாழ்ந்து வருவார்களாக.
எல்லோரும் அன்புடன் உரையாடட்டும். அனைவர்
உள்ளங்களிலும் ஒற்றுமை உணர்வு நிலவட்டும்....."

என்பது போன்ற உயர்ந்த பண்பாட்டுச் சிந்தனைகள். கூறப்படுகின்றன. இதேபோன்று, யசுர் வேதம்

"எல்லா உயிர்களும் என்னை நண்பனாகக் கருதட்டும் நானும்
எல்லா உயிர்களையும் என் நண்பனாகவே கருதுவேனாக!"

என்று கூறுகின்றது.

அதர்வவேதத்திலும் தெய்வங்களைவிட வேறான சக்திகளுக்கு முக்கியத்துவம் அளித்து வந்தமையையும் காணலாம். இவ்வேதத்தில் சமயத்தின் முக்கிய நோக்கமாகச் சாந்தப்படுத்தல், ஆசீர்வாதம்பண்ணுதல், துதித்தல், சபித்தல் போன்றன விளங்குகின்றன.

அத்துடன், இதில் வேதங்களில் ஒன்றாக வைத்து எண்ணப்படும் பல சிறந்த தத்துவப்பாடல்களும் காணப்படுவதுடன், மக்களின் சமயநம்பிக்கைகள், கிரியைமரபுகள், மந்திரங்கள், இயற்கை சக்திகளைப் பெற்றோராகக் கொண்டு சமத்துவ உணர்வை வற்புறுத்துதல் போன்ற விடயங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. பிற்காலத்தில் இந்துமதத்தில் மக்களின் பண்பாட்டு மரபுக்கு வழிவகுத்த நூல்களில் ஒன்று, பகவத்கீதையாகும். இது பிரஸ்தானத்திரயத்தில் ஒன்று, இது வற்புறுத்தும் உயர்ந்த சிந்தனை கர்ம சந்நியாசமாகும். பலனில் பற்றுவைக்காத மனப்பக்குவத்தோடு ஒருவன் கடமையைச்செய்யவேண்டும் என்ற உயர்ந்த கருத்தை வற்புறுத்துகின்றது. இந்த சிந்தனைக்கு முன்னோடியாக யசுர் வேதத்தில் பல கருத்துக்கள் வற்புறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

"இந்த உலகில் கர்மம் அல்லது செயல் புரிந்தவாறே
நூறு ஆண்டுகள் வாழ விரும்பு இவ்வாறு பயன்கருதாது
பணிபுரிகையில் உனது செயல்கள் உன்னைப் பற்றமாட்டா
விடுதலை பெறுவதற்கு உள்ள வழி இதுவே"

இவ்வாறு, தனி மனித மேம்பாட்டுக்கன்றி வழிபாட்டு மரபிலும் பல புதிய மாற்றங்களை ஏற்படுத்துவதில் யசுர் வேதம் பெரும் பங்காற்றியுள்ளது.

இங்கு தெய்வத்தைக் குறித்துப் பல பெயர்களைக் கூறும் புதிய முறையும் காணப்படுகின்றது. இது பின்னர் சிவாகம வழிபாட்டில் சிறப்படைந்து காணப்படுவதும் குறிப்பிடத்தக்கதாகும். அடுத்துப் பெயர்கள் பல கொண்டு வழிபடும் முறையும் "நமசிவாய" என்ற ஐந்தெழுத்து மந்திரம், இந்து விக்கிரகவியல், சிவனது தெய்வ வரலாறு அகியவ வைப்பற்றிய விடயங்களும் எடுத்துக்கூறப்படுகின்றன.

வேத வரிசையில் முதன்மை பெறும் இருக்குவேதம் பக்தி நெறி, தோத்திரமரபு ஆகியவற்றிற்கு முன்னோடியாக விளங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. பக்தியின் ஆரம்பக் கருவை இங்கு வருணனது பாடல்களில் காண்கின்றோம். வழிபாட்டு முறையில் உறவுமுறை கடைப்பிடிக்கப்படுகிறது. உதாரணமாக வழிபடுவோருக்கும், வருணனுக்கும் இடையிலான தோழமை முறை, பக்திநெறியில் இறைவனைத் தந்தையாக, தாயாக, சகோதரனாக கருதி வழிபடுதல் முதலானவற்றைக் குறிப்பிடலாம். இறைவனை இத்தகைய நிலைகளில் வழிபடுவதற்குரிய சாதானங்களாக அமைந்தவை தோத்திரங்கள் ஆகும். இந்து சமயமரபிலே தோத்திரங்கள் வேதங்களிலேயே தமது ஆரம்பத்தைக் கொண்டுள்ளன எனலாம்.

"பிரபஞ்சத்தின் தந்தையாக இறைவனை நாம் இரவும் பகலும் பாடல்களால் போற்றுவோமாக" என்று இருக்குவேதம் கூறும். இங்கு "கீர்" என்ற பதத்தால் தோத்திரம் குறிக்கப்படுகின்றது. வழிபாட்டின் நோக்கம் இறைவனது திருவருளைப் பெறுவதாகும். இக்கருத்துக்கமையவும் இருக்கு

வேதப்பாடல்கள் உள்ளன. அடுத்து, இறைவனை புகழும் பாடல்களும் இருக்கு வேதத்தில் காணப்படுகின்றன. இவை பிரமன் என்று குறிக்கப்பட்டன. இச்சொல் மந்திரங்களைக் குறித்தது. வழிபாட்டில் இறைவனையும் வழிபடுபவனையும் இணைக்கும் சாதனங்களையும் தெய்வீகப் பாடல்களாகிய தோத்திரங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. இம்மரபு பிற்காலச் சமய மரபில் பக்தி மரபை வளர்ப்பதற்குரிய சிறந்த சாதனமாக அமைந்தது. பிற்காலச் சமய வழிபாட்டு மரபில் இறைவன் வழிபாட்டின் கண்ணே தேவார திருவாசகம், பன்னிரு திருமுறைத் தோத்திர பாடல்களையும், ஆழ்வார்களின் திவ்வியப் பிரபந்த பாடல்களையும், திருவருட் செல்வர்களாகிய அருணகிரிநாதர், குமரகுருபரர், தாயுமான சுவாமிகள் போன்ற பெரியார்கள் பாடிய தோத்திரப்பாடல்களையும் பாடித்துதித்தல் விசேட அம்சமாயுள்ளது. ஆன்மார்த்த பூசை, பரார்த்த பூசையாகிய கோயிற் பூசை, கடவுள் பிரார்த்தனை, ஆலய வழிபாடு ஆகிய நியமங்களில் ஈடுபடும் போது, தோத்திரப்பாடல்கள் பாடித்துதித்தல் பெருமை வாய்ந்த நெறிமுறையாகும். வட மொழியிலுள்ள சகஸ்ர நாமங்கள்,ஸ்ரீ ருத்ரம் முதலிய வேதப்பகுதிகள், புராண இதிகாசங்கள், சௌந்தரியலஹரி, மகிசாசுரமர்த்தனி ஸ்தோத்திரம், ஸ்ரீதேவி மாகாத்மியம் முதலியவையும் பாராயண நியம ஸ்தோத்திரங்களாகப் போற்றி அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றமை மரபாகும்.

தோத்திரப்பாடல்களை இசையுடன் பாடுதல் எமது மரபாகும். வேதப்பாடல்களை இசையுடன் பாட வழிவகுத்தது, சாம வேதம். வேதப்பாடல்களை ஸ்வரத்தோடும், தேவாரங்களை பண்ணோடும் பாடுவது எமது சமய மரபாகும். இறைவனுக்குரிய பூசை உபசாரங்களில் இதுவும் ஒன்றாக விளங்குகின்றது.

இக்காலச் சமயத்தின் இன்னுமொரு முக்கிய அம்சம் யாதெனில், பல தெய்வங்களில் ஒரே பரம்பொருள் தத்துவத்தைக்காணும் முறையாகும். வைதீக சமயத்தின் முக்கிய பண்பு ஒருமையிற் பன்மையையும் பன்மையில் ஒருமையையும் இனம் காணும் முயற்சியாகும். அக்கினியை ஏனைய தெய்வங்களாகிய இந்திரனாகவும், அதிதியாகவும் போற்றும் மரபு இதற்கு சிறந்த உதாரணமாகும். ஆன்மீக சிந்தனைகளுக்கு வழிவகுத்த வேதப்பாடல்களில் பரம் பொருள் தத்துவம் சிறப்பாக இடம் பெறுகின்றது. பகவத்கீதையில் மேம்பட்ட நிலையில் விரித்துக்கூறப்படும் பரம்பொருட்தத்துவச்சிறப்பிற்கு வேதப்பாடல்கள் வகுத்துக்கூறும் கருத்துக்கள் முன்னோடியாக விளங்கியவைபோற் காணப்படுகின்றது.

அடுத்து வேதங்கள் தெய்வங்களது வீர தீர செயல்களை விதந்து போற்றுகின்றன. இந்திரன், விஸ்ணு, உருத்திரன், புருஷன் பற்றிய பாடல்களின் இவ்வீரச் செயல்கள் சிறப்பிடம் பெறுகின்றன. இந்நிலை புராணங்கள் போற்றும் பரம்பொருள் தத்துவச் சிறப்பிற்கும் முன்னோடியாக அமைந்திருக்கலாம்.

இருக்கு வேதத்தில் காணப்படும் மறுமை பற்றிய சிந்தனைகளும் உபநிடத சிந்தனைக்கு வித்திட்டுள்ளன எனலாம். வேதங்களில் இடம் பெறும் இறப்புப்பற்றிய பாடலும், பிதிரர் பற்றிய பாடல்களும், யமன் பற்றிய பாடல்களும் இறப்புக்குப்பின் ஆன்மா பற்றிய கருத்துக்களை கொண்டுள்ளன. உபநிடதங்களில் சிறந்ததாகிய கடோபநிடதம் ஆன்ம விசாரணைக்கு முக்கியத்துவம் அளித்துள்ளது. இங்கு மறுமை பற்றிய கருத்துக்களும் உபநிடத சிந்தனைகள் விரிவுப் பெற வழிகோலியுள்ளன எனலாம்.

இவ்வாறு, வேதங்கள் இந்துப்பண்பாட்டின் பல்துறை சார்ந்த அம்சங்களை வளம்படுத்தியுள்ளன. சமயம், தத்துவம் ஆகிய இரண்டு துறைகளும் இவற்றில் முக்கிய இடம் பெறுகின்றன. பரம்பொருட்கொள்கை, வழிபாட்டுமரபு, பக்திநெறி, தோத்திரமரபு, இசைமரபு, தெய்வீக வரலாறு, உலகியல் நம்பிக்கைகள், மறுமைக் கோட்பாடு முதலிய இன்னோரன்ன பண்பாட்டு சிந்தனைகள் வளம் பெற வேதங்களே கருவூலமாக விளங்கியுள்ளன என்று கூறுவதில் மிகையில்லை. இத்தகைய அம்சங்களை ஆராயுமிடத்து, வேதங்களின் முதன்மையை நாம் நன்றாக உணர முடிகின்றது.

ஆன்மஈடேற்றத்தில் புருடார்த்தங்கள்

பொ. சகாதேவன், முதலாம் வருடம், கலைப்பீடம்.

பழமையின் சின்னமாகவும், தொன்மையின் உறைவிடமாகவும், ஒழுக்கத்தின் திறவுகோலாகவும், ஆன்மஈடேற்றத்தின் அச்சாணியாகவும் அறக்கருத்துக்களின் ஆணிவேராகவும் திகழ்ந்து கொண்டிருக்கின்ற இந்து மதமானது, தனக்கெனப் பல இலட்சியங்களைக் கொண்டுள்ளது. அந்த இலட்சியங்களில் முக்கியமானதும் சிறப்புவாய்ந்ததும் வீடு பேறாகும். இந்த வீடு பேற்றை அடைகின்ற வழிகளில் ஒன்றாகவே புருடார்த்தங்கள் திகழ்கின்றன.

அதாவது, உலகியலிலே வினை எனும் ஊழ்வட்டத்தில் சுழன்று, பிறவி எனும் பெருந்துயரை அனுபவிக்கின்ற கோடானுகோடி ஆன்மாக்களின் ஈடேற்றத்துக்கு வழிகாட்டுவது புருடார்த்தங்கள் எனலாம். அதாவது, எல்லா ஆன்மாக்களும் ஒரே வழியில் நின்று வீடு பேற்றினை அடைய முடியாது. யார் யாருக்கு எந்த எந்த நிலையில் நின்று வீடு பேற்றினை அடைய முடியுமோ, அவர் அவர்க்கு ஏற்ற வழிகளை இந்து தர்மம் கொண்டுள்ளது. ஒவ்வொருவருடைய முதிர்வுக்கும் ஏற்ப அவரவர் அவ்வவ்வழிகளில் நின்று வீடு பேற்றினை அடைவதற்கு அது அறம், பொருள், இன்பம் ஆகிய வழிகளை வகுத்துக்கூறுகின்றது. அடுத்த நிலையாகிய வீடுபேறு வார்த்தையால் விபரிக்க முடியாத ஒன்று. ஆன்மா தன்னிலையில் அனுபவிக்கின்ற ஆனந்தமயமான ஓர் உள்ளுணர்வு என அதனைக் கூறலாம். அறம், பொருள், இன்பம், அகிய மூன்றையும் நெறி வழுவாது கடைப்பிடிக்கின்ற ஆன்மா அடுத்த நிலையாகிய வீட்டு நிலையைத் தானாகவே பெற்றுக் கொள்ளும்.

அறம் என்பது தர்மம் எனப் பொருள் கொள்ளப்படுகின்றது. இந்த அறமானது வீடு பேற்றிற்கு வழிப்படுத்தும் முதலாவது படிக்கல்லாக அமைகின்றது. அறவாழ்க்கையானது இல்வாழ்க்கையில் ஈடுபடுபவர்களுக்குக் கட்டாயமாக விளங்குகின்ற விதியாகும். அறம் பற்றிப் பல்வேறு நூல்களும் பற்பல விளக்கங்களைத் தருகின்றன. நம் மூதாட்டி ஔவைப்பாட்டி, அறம் செய்ய விரும்பு" எனக்கூறுவதன் மூலம் விருப்பத்தின் அடிப்படையிலேயே செயல் பிறக்கும் எனக் கூறுகின்றார். முதற்பாவலர், பெருநாவலர், திருவள்ளுவர் கூட உலகப் பொது மறையாகக் கொள்ளப்படுகின்ற தமது திருக்குறளிலே, முதற் பாலிலே அறம் பற்றியே விளக்குகின்றார்.

"அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன் பழிப்ப தில்லாயின் நன்று" (49)

எனக்கூறுவதன் மூலம், அறத்தின் சிறப்பு எடுத்துகாட்டப்படுகின்றது. சமூகவாழ்வில் அறத்தினைக் கடைப்பிடிப்பவர்கள் உயர் நிலை அடைவார்கள். அதனை மறந்தவர்கள் தாழ் நிலையடைவார்கள் என்பதனை,

"அறத்தினூ உங் காக்கமும் இல்லை அதனை
மறத்தலின் ஊங்கில்லை கேடு" (32)

எனத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றார். மேலும் அறத்திற்கு விளக்கம் கூறிய வள்ளுவர்,

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற" (34)

எனக்கூறுவதன் மூலம் அறத்தின் இயல்பினைத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றார். மேலும் நமது முன்னோர்கள் தமது இலட்சிய வாழ்க்கையில் அறம், நெறி வழுவாது, வாழ்ந்து காட்டி, இருக்கின்றனர். வாய்மைக்கு அரிச்சந்திரன், கற்பிற்குக் கண்ணகி, பொறுமைக்குத் தருமன், கொடைக்குக் கர்ணன் போன்றோர் இவர்களில் சிலராவர். எனவே, சமுதாய வாழ்வில் அறம் ஒரு சிறந்த இலட்சியமாக அமைந்தமை தெளிவாகின்றது.

இதனையடுத்து, பொருள் இடம் பெறுகின்றது. அறத்தினைக் கடைப்பிடித்து வாழ்கின்றவர்கள், நீதியான வழியில் பொருள் தேட வேண்டும் அவ்வாறு தேடிய பொருளைத் தாமும் அனுபவித்து,

துக்காரும் அனுபவிக்க உதவ வேண்டும். பிழையான வழியில் தேடுகின்ற பொருள் நீடித்து நிலைக்கமாட்டாது, அது அழிந்துவிடும் என்பதை வள்ளுவர்,

"களவினாலாகிய ஆக்கம் அளவிறந்து
ஆவது போலக் கெடும்"

எனக்கூறுகின்றார். பொருளில்லார்க் இவ்வுலகில்லை, திரை கடலோடி திரவியம் தேடு". என்ற கருத்துக்கள் பொருளின் முக்கியத்துவத்தை எடுத்துகாட்டுகின்றன. மேலும், தமிழ் மூதாட்டி ஔவைப்பாட்டி பொருள்பற்றிக் குறிப்பிடுகையில்,

"பாடு பட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்துவைக்கும்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள்- கூடுவிட்டு
ஆவிதான் போன பின் யாரே அனுபவிப்பார்
பாவிதான் அந்தப் பணம்"

எனக்கூறுகின்றார்., இதிலிருந்து; இவ்வுலக வாழ்க்கைக்குப் பொருள் அவசியம் என்ப தையும் ஈட்டிய பொருளைச் சரியான முறையில் பிரயோகிக்க வேண்டும், தேவைக்கு மிஞ்சுமாயின் ஈதல் வேண்டும் என இந்து தர்மமம் வலியுறுத்துவதை உணரமுடிகின்றது.

அறத்தின் மூலம் வாழ்வில் பொருளை ஈட்டக் கூறிய இந்து தர்மமானது, மூன்றாவது நிலையாகிய இன்பம் பற்றி குறிப்பிடுகையில் இன்பத்தை சிற்றின்பம், பேரின்பம், என இரண்டாக வகுத்து கூறுகின்றது. உலக புலனுணர்வுகள் மூலம் பெறுகின்ற இன்பம் நிலையான இன்பமாக மாட்டாது. ஆன்மா தனது உள்ளுணர்வின் மூலம் பெறுகின்ற பேரானந்தமே உண்மையான இன்பமாகும். சிற்றின்பம் உலகியல் சார்ந்தது; வீட்டின்பம் ஆன்மீகத்தோடு தொடர்புள்ளது. எனவே, ஓர் ஆன்மா உலகில் வாழும் போதே இரண்டு இன்பங்களையும் அனுபவிக்க முடியும். காதலர் இருவர் கருத்தொருமித்து ஆதரவுப்பட்டது இன்பம்" என இச்சிற்றின்பத்திற்கு விளக்கம் கொடுக்கப்படுகின்றது. பேரின்பமானதோ இது போலன்றி, மிகவும் உயர்வானது. ஓர் ஆன்மாவின் இறுதி இலட்சியம் அதுவேயாகும். இந்த வீடு பேற்று நிலைக்காகவே ஆன்மாக்கள் இடையராது முயல வேண்டும். இந்த இன்பத்தை அனுபவிக்கின்ற ஆன்மா மீண்டும் பிறவாநிலையை பெற்றுக் கொள்கின்றது.

பேரின்பத்தின் எல்லையை அடைந்து விட்டால், அதுவே வீடுபேறாகும். அதாவது, தர்ம வாழ்வில் அறத்தின் மூலம் பொருள் ஈட்டவும் தேடிய பொருளின் மூலம் இன்பம் அனுபவிக்கவும் கூறிய இந்து தர்மம், ஆன்மாவின் இறுதி இலட்சியமான வீடு பேறானது இம்மூன்று படிகளையும் ஒழுங்காகத் தாண்டின் தானகவே கிடைக்கும் எனக்கூறுகின்றது. வீடு பேறு என்பது ஆன்மா தன்னை அறிந்து கொள்வது. தன்னை அறிகின்ற ஆன்மாவுக்கு இறையருள் அள்ளிச் சொரியப்படுகின்றது. இந்த வீட்டு நிலை வார்த்தையால் விபரிக்க முடியாத ஒன்று. எனவே தான், வள்ளுவர் கூட தமது முப்பாலில் இதுபற்றி விபரியாது விட்டார் போலும். சுவையான உணவை உண்ட ஊமை ஒருவன் தனது உள்ளுணர்வை வெளிப்படுத்த முயல்வது போன்றதே" வீட்டு நிலையை விளக்க முயல்வதாகும். இதன் மூலம், கண்டவர் விண்டிலர் விண்டவர் கண்டிலர்" என்ற உண்மை உறுதிப்படுத்தப்படுகின்றது. இந்த வீட்டு நிலையை உடலோடு வாழும் பொழுதோ, அல்லது உடல் அழிந்தப் பிறகோ பெற்றுக் கொள்ள முடியும். உடலோடு வாழுகின்ற போது பெறுகின்ற முத்தி சீவன் முத்தியாகும். இந்த நிலையில் ஆன்மாவுக்குப் பற்றுக்கள் இல்லை; ஆன்மா சதா இறை சிந்தனையுடன் திளைக்கின்றது. இவ்வாறு அறம், பெருள், இன்பம் ஆகிய நிலைகளினுடாக ஓர் ஆன்மாவானது வீடு பேறாகிய முத்தி நிலையைப் பெற்றுக் கொள்கின்றது. இதுவே உயர்ந்த நிலையும் ஆகும்.

ஆன்ம ஈடேற்றத்திற்குப் பல்வேறு மதங்கள் பல்வேறு வழிகளைக் கூற, இந்து மதமானது இல்வாழ்க்கை மூலமும் இறைவனை அடையலாம் என்பதனை புருடார்த்தங்களுடாக மிகவும் அழகாகவும் தெளிவாகவும் எடுத்துரைக்கின்றது. இதனையே

"ஈதல் அறம் தீவினை விட்டு ஈட்டல் பொருள் காதலர் இருவர்
கருத்தொருமித்து ஆதரவுப்பட்டது இன்பம்
என்ஞான்றும் பரனை நினைந்து இம்மூன்றும் விடல் வீடு"

என்ற ஔவையார் கூறும் கூற்றும் புலப்படுத்துகின்றது. இவற்றை நாமும் எமது வாழ்வில் கடைப்பிடிப்போமானால், உயரிய நிலையை அடைந்து கொள்ளலாம்.

சங்கராச்சாரியரின் வேதாந்தம் - ஓர் அறிமுகம்

ஏ. எல். முகமட் ரியால், மெய்யியல் துறை, விடுகை வருடம்.

வேதாந்த கொள்கை என்றால் உபநிடதங்களின் சாரத்தை அல்லது வேதத்தின் அந்தத்தை அடிப்படையாகக் கொண்டு வெளியிடப்பட்ட கொள்கை என்பது பொதுவான விளக்கமாகும். ஆயினும், வேதாந்தக் கொள்கையானது மூன்று நூல்களை முதன்மை மூலகங்களாகக் கொண்டுள்ளன. அவை உபநிடதம், பிரமசூத்திரம், பகவத்கீதை ஆகியவையாகும். இவை மூன்றும் "பிரஸ்தானதிரயம்" எனப்படும். இதன்படி அத்துவைத வேதாந்தமும் இம்மூன்று முதன்மை நூல்களை மூலகமாக ஏற்கின்றது.

மூன்று முதன்மை மூல நூல்களுக்கும் பேருரைகள் இயற்றி அவற்றின் மூலம் நிறுவப்பெற்ற வேதாந்த தத்துவங்களாக இன்று வழக்கில் இருப்பவை மூன்று கொள்கைகளாகும். அவை

1. ஆதி சங்கரரின் - அத்துவிதம்,
2. இராமானுஜரின் - விசிட்டாத்துவிதம்,
3. மத்துவரின் - துவைத்துவிதம் என்பனவாகும்.

ஆதி சங்கரரின் அத்துவிதம் என்பதானது அ+துவைதம் எனப்பிரிந்து நின்று இரண்டு அற்றது. (துவைதம் = இரண்டு, அ= அற்றது) என பொருள்படுகின்றது. பொருள் ஒன்றே, இரண்டற்றதாக நின்ற ஒன்றே என்பது அத்துவிதம் என்றச் சொல்லுக்கு சுருக்கமான விளக்கமாகும்.

இக்கொள்கையானது சங்கரின் காலத்திற்கு முன்னைமேயே நின்று வரலாற்று பெருமையுடையதாயினும் சங்கரருடன் இணைத்து நிறுத்திய வழங்கப்பெறும் மரபினைப் பெற்றிருக்கின்றது. அத்துடன் சங்கரர் அத்துவித வேதாந்தக் கொள்கையை தம் நூல்களிலும் தெளிவாக விளக்கியுள்ளார். சங்கரருக்கு முன்னே உபநிடதங்களிலும், யாக்ஞவல்கியர் உரையாடல்களிலும் அத்துவிதக் கொள்கை விளக்கம் பெற்றிருப்பதையும் காணலாம்.

சங்கரருடைய ஆசிரியரான கோவிந்தரின் ஆசிரியர் கௌடதபாதர், அத்துவிதக் கொள்கையை நிறுவிக்காட்டும் வகையில் மாண்டுக்கியம் என்ற உபநிடதத்திற்கு ஒரு விளக்கம் எழுதினார். அது மாண்டுக்கிய காரிகை எனப்படுகின்றது. இதற்கு பின்னர் வந்த சங்கரர் அத்துவிதக் கொள்கையை சிறப்பாக நிலைநிறுத்தும் பொருட்டு பிரஸ்த்தானத்ரயத்திற்கு விரிவுரை எழுதியதுடன் விவேகசூடாமணி உபதேசலகரி என்ற தனி நூல்களையும் எழுதி, அத்துவிதக் கொள்கையை வரையறுத்து நிறுவினார்.

வேதத்தை அடிப்படையாகக் கொண்ட அத்துவிதம் என்பது உத்திரமீமாம்சை எனப்படும் ஞானகண்டமான உபநிடதப் பொருளையும் அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டதாகும். "உண்மை ஒன்றுதான் அது இரண்டாவது இல்லாத ஒன்றேயாக இருக்கின்றது" என்று பிரமத்தைப்பற்றி பேசும் கொள்கை அத்துவிதம் எனலாம்.

சங்கரருக்கு முன்தோன்றிய புத்தர், கடவுளைப்பற்றி பேசாது ஏறத்தாழ கடவுள் இல்லை என்ற கொள்கையினரைப்போல் இந்த நிலை சூனியமே என விவாதித்து வேத சார்பற்ற மதமாக பௌத்தத்தை பரப்பியிருந்தார். ஆகவே உலக வாழ்க்கையையே பெரிதாக எண்ணி ஞானத்தையும், கடவுளையும் அவ்வளவாக கவனியாமல் இருந்த பூர்வமீமாம்சருக்காக - உலகத்தைபொய் எனக் கூறியும் ஒன்றுமற்று போகும் சூனியமே உண்மை என விவாதித்த பௌத்தருக்கும் சேர்த்து வேதத்தில் சொல்லப்பட்ட பிரமம் ஒன்றே உண்மை என்று போதித்தார் சங்கரர்.

சங்கரர் தனது அத்துவிதக் கொள்கையின் பிரமம் பரிணமிக்கின்றது என்பதை மறுத்து உலகம் என்பதானது பிரமத்தின் தோற்றம் என்றக் கொள்கையை நிலை நாட்டுகின்றார். இந்த உலகம் என்பது வெறும்தோற்றம் மாத்திரமே, உண்மையல்ல எனக் கூறியதுடன் உலக உற்பத்திக்கு பிரமத்தை விட வேறு மூலம் எதுவும் இல்லை என்பதையும் கருதுதல் வேண்டும். சிருட்டி நிகழ்வதாக தோன்றுகின்றதேயொழிய உண்மையில் சிருஷ்டி எதுவும் நிகழவில்லை. பிரமம் உலகாக மாறுவதாக காணப்படுகின்றதே ஒழிய உண்மையில் பிரமத்தில் மாற்றம் எதுவும் ஏற்படுத்துவதில்லை என கொண்டவர் சங்கரர்.

இக்கருத்தை விளங்கப்படுத்த சங்கரர் விவர்த்தவாதத்தை எடுத்துக் காட்டுகின்றார். அதாவது ஒரு பொருள் இன்னொன்றாக மாறாமல் இருந்தப்படியே மாறிவிட்டதாக கருதப்படுவதற்கு தான் விவர்த்தவாதம் என குறிப்பிடுவர். உதாரணமாக – கயிறு பாம்பாக காணப்படுவதைக்குறிப்பிடலாம். கயிறு பாம்பாக உண்மையில் மாறவில்லை. ஆனால் மாறிவிட்டதாக காணப்படுகின்றது. அதுபோலவே பிரமமும் உண்மையில் உலகாக மாறாமலே மாறிவிட்டதாக காணப்படுகின்றது இதன்படி காரணம் மட்டும் உண்மை. அக்காரணத்தில் இருந்துவரும் காரியம் உண்மையல்ல எனலாம். அதாவது காரணமாகிய கயிறு உண்மை., காரியமாகிய பாம்பு உண்மையல்ல என விளக்கப்படுகின்றது. இதேபோல் தான் சந்திரனை உதாரணமாக கொண்டு பிரதிவிம்பவாதத்தையும் காற்றினை உதாரணமாக கொண்டு அவச்சேதவாதத்தையும் எடுத்துக்காட்டுகின்றார். அத்துடன் திருமூலரின் திருமந்திரத்தில் "மரத்தை மறைத்தது மாமரயானை" என்ற விளக்கமும் இதற்கு இயைபானதாக உள்ளது எனலாம்.

என்றாலும் சங்கரருக்கு பிற்பட்ட வோதாந்திகளோ இதற்கு மாறான கொள்கையுடையவர்களாக இருந்தனர். இவர்களது கருத்துப்படி பிரமம் மாறுவதாக தோன்றுவது மட்டும் உண்மையல்ல அது உண்மையாகவே மாறி உலக சிருட்டி நிகழ்கின்றது என்கின்றனர். இத்தகைய மாற்றத்தை பரிநாமவாதம் எனப்படும். இதற்கு உதாரணமாக பால்- தயிராக மாறுவதை காட்டுகின்றனர். இதிலே காரணமும் உண்மை, காரியமும் உண்மையாகும். பாலும் உண்மை, தயிரும் உண்மை. அதாவது காரணமாகிய பிரமமும் உண்மை. இதில் தோன்றிய காரியமாகிய இவ்வுலகமும் உண்மை. பிரமம் உண்மையாகவே மாறி உலகமாகின்றது எனவே இதனை நாம் பரிநாமவாதம் என அழைக்கின்றோம் ஆனால் இப்பரிநாமவாதத்திற்கு நேர்மாறாக பௌத்தர்கள் ஆனியவாதத்தை பேசுகின்றனர்.

எனவே ஒரு புறம் பரிநாமவாதத்தையும் மறுபுறம் சூனியவாதம் இவ்விரண்டையும் மறுக்கும் சங்கரது விவர்த்தவாதம் அதன் அடிப்படை காரணம் காரியம் இவ்விரண்டில் காரணம் மட்டுமே உண்மை.காரியம் அவ்வளவு உண்மையல்ல எனலாம். இந்த விவர்த்தவாதத்தை மேலும் வளர்த்து இக்காரண காரிய தொடர்பு உலகத்துக்குரியது. பிரம்மத்தில் இதில் இடம் இல்லை எனக் கொள்ளும் வரை சங்கரர் சொல்லுகின்றார்.

வேதாந்திகள் உலகம் உண்மையல்ல என்பதை விளக்கும் போதும் உலகம் தோற்றம் என விளக்கும் போதும் உலகம் அறவே இல்லாத பொருள் என்பது அவர்களது கருத்தல்ல அவர்கள் பொருட்களை 3 வகையாக பிரித்து விளக்கினர்.

1. என்றுமே உள்ள பொருள், இது சத் எனப்படும். பிரம்மம் மட்டுமே இப்பிரிவுக்குரியது.
2. இதற்கு நேர் மாறானது எக்காலத்திலும் இல்லாத பொருள், இப்பிரிவில் அடங்கும். இது அசத் எனப்படும் முயற்க் கொம்பு, மலடிமகன் இதற்கு நல்ல உதாரணமாகும்.
3. இவை இரண்டிற்கும் இடையிலுள்ளது, உலகம் பிரமத்தைப் போல சத்துமல்ல. முயற்கொம்பைப் போல அசத்துமல்ல அதனாலே தான் உலகை ஒரு தனிப்பிரிவாக்கி அது சத்அசத்" இரண்டுமல்ல, என்பதை உணர்த்த அதனை "சதசத் விஷ்ணம் " 22என வழங்குகின்றனர்.

உலகம் உள் பொருள் அல்ல. என்பதையும் கௌடதபாதர் பல சான்றுகளை முன்வைத்து விளக்கியுள்ளார். இதற்கு அவர் நான் காணும் கனவையே இதற்கு ஆதாரமாக காட்டுகின்றார். பொதுவாக எல்லோருக்கும் கனவு ஏற்படுவதுண்டு. விழித்தப்பின்னர். கனவு நிலைப்பதில்லை. விழிப்பு கனவுலகை அழித்துவிடுகின்றது. பின்னர் உறக்கத்தால் கனவுத் தோன்ற நனவுலகு அழிகின்றது இவ்வாறு கனவுகளால் நனவுலகும், நனவுகளால் கனவுலகும் மாறி மாறி அழிகின்றன. எனவே இந்த விளக்கத்தைக் கொண்டுத்தான் உலகை உள்பொருள் அல்ல என விளக்குகின்றார்.

கனவுலகையும், நனவுலகையும் ஓரே இயல்புடையதாகவோ ஒரேயளவு மெய்மையுடையதாகவோ கொள்வது பொறுந்தாது என சிலர் விவாதிக்கலாம். இதனை வேதாந்தம் ஏற்றுக் கொண்டு மெய்ப்பொருளைப்பற்றி பேசும் போது பிராதிபாஷிகம், வியாபகாரிகம், பாரம் மார்த்திகம் என்ற 3 நிலைகளையும் எடுத்துக்காட்டி விளக்கினர்.

மேலும் ஏற்புடைய அறிவை பெறுவதற்குரிய வழிகள் என்ற வகையில் சங்கரரின் அத்துவித வேதாந்த கொள்கையானது காட்சியளவை, கருத்தளவை, உரையளவை , ஏப்புமையளவை, இன்மையளவை, ஒழியளவை என்ற ஆறு அளவைகளை ஏற்றுக் கொள்கின்றது. மேலே கூறப்பட்ட ஆறு அளவைகளாலும் ஒருவன் ஏற்புடைய அறிவைப்பெற இயலும் என அத்துவித வேதாந்தக் கொள்கை குறிப்பிடுகிறது. அத்துடன் இரு வகையான ஆய்வியற் கலைத்திறன்களை அமைத்து பிரமப் பொருளை அறிவதற்கு துணை செய்துள்ளது. இல்லாததை ஏற்றுப்பார்த்தல், அவற்றை மறுத்தல் என்பனவே அவ்விரு ஆய்வியற் கலைத்திறன் ஆகும். நாம் மாயைப் பற்றிய கருத்தை நோக்கும் போது ஒரு பொருளின் உண்மை தன்மை மறைப்பதும் – இல்லாத தன்மையை கூறுவதுமான இவ்விரு செயல்களைச் செய்யும் ஆற்றலுடையது தான் மாயையாகும். இவ்வாறு கூறும் மாயைக்கு பொருள் ஒன்றுமில்லை. சார்புடைய பொருளாக பார்க்கும் போது தான் மாயை என்பது பொருளுடையதாக காணப்படுகின்றது.

மாயை உண்மையானதா பொய்யானதா என்று கேட்டால் அதற்கான விடை உண்மையும் அல்ல பொய்யுமல்ல ஏன்பதாகும். உலகம் பலவிதமாக தோற்றம் அளிப்பதால் மாயை பொய்யன்று அதே நேரம் ஆத்மாவால் அது சுத்தம் செய்யப்படுவதால் உண்மையானதுமன்று. ஆணவ அறிவுதான் அவித்தையின் ஒரு வடிவமான மாயையாகும். அவித்தை உண்மையை மறைத்து நிலையான மாயையை தோற்றுவிக்கின்றது. அறியாமையை போக்குவதற்கான வழி ஞானமாகும். வேத அறிவு படைத்த ஒருவன் இல்லாத ஒன்றை மாயை என்று அறிவான். எனலாம்.

பிரமம் உள்பொருளாகவும் ஆன்மா உலகு, ஈஸ்வரன் போன்ற அனைத்தும் தோற்றப் பொருளாகவும் கருதப்பட்டன. மாற்றமில்லாததும் என்றுமுள்ளதும், சுயமுரண்பாடு அற்றதுமாக அமைவதே உண்மை என சங்கரரின் அறிவாராய்ச்சியலின் முடிவு தெளிவுப்படுத்துகின்றது. இவ்விளக்கத்தின் அடிப்படையில் பிரம்மம் உண்மையானது என்றார் அதேபோல் தோற்றப் பொருள் என்பது இல்பொருள் என சங்கரர் கருதவில்லை. இதனாலேயே உலகு உண்மையுமல்ல, இன்மையுமல்ல, வெறும் தோற்றம் என விளக்கினார்.

எனவே தான் சங்கரரது அத்துவிதக் கொள்கையை நாம் சுருக்கமாக நோக்கும் போது அவை ஆழமான ஆத்மீகத் தன்மையை உணர்த்துவதுடன் வாழ்க்கை முறையின் பின்பற்றும் சரியான முறையாகவும் அமைகின்றன. இவ்வாறு கருதப்படும். அத்துவித வேதாந்தம் அளவியல் ரீதியாகவும், அறவியல் ரீதியாகவும் அதிகாரபூர்வமாக பல வேதங்களின் ஆழமான அடிப்படைத் தத்துவங்களை வெளிப்படுத்துகின்றது எனலாம்.

பகுதி – 11

மதமும் விழிப்புணர்வும்

With Best Compliments From:

VASANTHAS

Jewellers & Pawn Brokers

56, D. S. SENANAYAKE VEEDIYA

KANDY

T.P. 08 - 233151, 224300

Fax. 08 - 233151, 232461

Famous Over 25 Years for Quality Jewelleries

மஹாராணிஸ்

MAHARANIS

JEWELLERS, PAWN BROKERS & EVERSILVER DEALERS

27, D. S. Senanayake Veediya

KANDY

08 - 222642

Chithra Jewellers

22 Kt Sovereign Gold Jewellery

41, D. S. Senanayake Vidiya

Kandy

Tel: 08 - 223290

11/2, Gold Plaza
Sea Street,
Colombo 11

25, Wattegama Road
Madawala Bazzar
072 - 22564

விழித்திடுவோம்

செல்வி. பொ. கேதாரேஸ்வரி, இறுதியாண்டு, பொறியியற் பீடம்

பாரதத்தாயவள் பலதவம் இயற்றி
பரமனின் தாளினைப் பற்றியகாலை
சீரிய வழியை எடுத்துக் காட்ட
சிவனும் சித்தம் கொண்டதனால்,
வீரியங் கொண்ட விடி வெள்ளியாக
விவேகா னந்தன் வந்துதித்தான்.
பாரினில் அம்மகன் வரவு கண்டு
பாரத மாதா மனம் மகிழ்ந்தாள்!

இந்து மதத்தைக் காத்திடவே
இளைஞன் ஒருவன் அவதரித்தான்.
எந்த மதத்தை நோக்கிடினும் – அங்கே
இந்து மதமே தாயென்றான்!
நொந்து வாழ்ந்த மனித நெஞ்சம் – அன்று
நொடிப் பொழுதில் மலர்ந்ததம்மா.
வெந்து போன சமய நெறி
விரைவில் மலர்ச்சி கண்டதம்மா!

விழிக்கச்சொல்லி முழக்கம் செய்த
வீரமகனின் வரவ தனால்,
வழிகள் மாறிப் போன பயணம்
வாழும் வழியைக் கண்டதம்மா!
திக்குகள் தோறும் தினம்சென்று – தெய்வ
தத்துவம் செப்பி வந்த மகான்
சிக்காக்கோ தேடி வழிகண்டு – மேனி
சிலிர்த்திட வைக்கும் உரை தந்தான்!

கண்ணாய் வளர்த்த சமயமின்று
கருக நேரும் நிலைகாண,
புண்ணாய் நெஞ்சம் எரிகிறதே – இதைப்
புரியச் செய்வது எப்படியோ?
மண்ணை மதிக்கும் கலியுகத்தில்
மனிதப் பண்புக் கிடமில்லை.
விண்ணுயர் புகழ்தான் வேண்டுகின்றார் – அனால்
விடிவின் வழியைத் தேடவில்லை!

ஆன்மீக வளர்ச்சி அகம்பெறவே
ஆலயம் கண்டனர் அடியார்கள் – அங்கே
தேனான தெய்வீக உணர்வலைகள்
தென்றலாய்த் தவழ்ந்து வந்ததம்மா!
ஏனோ அந்த இன்பநிலை – இன்று
எம்மை விட்டு நழுவியதே – மீண்டும்
மான்மகள் நாயகன் துணைகொண்டு – நாமும்
மனங்களை மலர்த்திட விழித்திடுவோம்.

இறையருள்

(அன்றுமுதல் இன்று வரை)- சிந்தனைக்குரிய சில குறிப்புக்கள் -

கலாநிதி க. அருணாசலம், தலைவர், தமிழ் துறை, பேராதணைப் பல்கலைக்கழகம்.

மனித வாழ்வையும் அதன் சிக்கல்களையும் நெளிவு சுழிவுகளையும் வெற்றி தோல்விகளையும் ஆசை நிராசைகளையும் வேதனைகளையும் சோதனைகளையும் சாதனைகளையும் அவற்றிற்கான காரணங்களையும் உள்ளப்படி உணர்ந்தவர்கள்; உணர்த்தியவர்கள் இவ்வுலகில் எத்தனை பேர்? உணர்த்த முயன்றவர்கள் அதில் எந்தளவு வெற்றி பெற்றுள்ளார்கள்?

மனித நாகரிகம் வளரத் தொடங்கிய காலத்திலிருந்து இன்று வரை ஒரு புறம் இறையுண்மை; இறையருள் முதலியன பற்றிய நம்பிக்கைகள், கருத்துக்கள், சிந்தனைகள் முதலியன காலத்துக்கு காலம் வலுப்பெற்று வந்துள்ளன. மனிதனிடத்தே இறைநம்பிக்கையையும் மனித விழுமியங்களையும் வளர்த்தெடுப்பதற்கு, சமயஞானிகள் பலர் முயன்றுள்ளனர். மறுபுரம் இறை மறுப்புப் பற்றிய கருத்துக்களும் சிந்தனைகளும் அன்று முதல் இன்றுவரை தொடர்ந்து கொண்டிருப்பதை நாம் அவதானிக்கலாம்.

விஞ்ஞான தொழில் நுட்பத்துறைகளில் மனிதன் அரும்பெரும் சாதனைகளைப் படைத்துவரும் இன்றைய காலகட்டத்தில் இறை நம்பிக்கை பற்றிய கருத்துகளும் சிந்தனைகளும் செல்வாக்கிழந்துக் கொண்டிருக்கின்றன. அதே சமயம் இறையருள் தொடர்பான அற்புதங்களும் நிகழ்ந்துக் கொண்டேயிருக்கின்றன என்பதை நாம் கவனத்திற் கொள்வது அவசியம்.

ஏறத்தாழ ஐயாயிரம் ஆண்டுகால வரலாற்றைக் கொண்டது இந்துமதம். சிந்துவெளி நாகரிக காலம், வேதகாலம் எனப் பல காலகட்டங்களையும் கடந்து இன்றுவரை இந்துமதமும் இந்துப் பண்பாடும் செழித்து வளர்ந்து நிலைத்து நிற்கின்றன. அதேசமயம் இறை மறுப்பை அடிப்படையாகக்கொண்ட சிந்தனைகளும் கருத்துக்களும் வேதகாலத்திலிருந்தே வளர்ந்து வந்துள்ளதனை அவதானிக்கலாம். இறைவன் இல்லை; ஆன்மா இல்லை; மறுபிறப்பு இல்லை; மருவுலகம் இல்லை. இவையாவும் வெறும் கருத்து நிலைகளை; உலக இயற்கையே முழு முதற் பொருளாகும் பஞ்ச பூதங்களின் சேர்க்கையினாலேயே யாவும் உண்டாகின்றன. எனும் கருத்துக்களைக் கொண்ட சிந்தனை வளர்ச்சியின் பிரதிப்பலிப்பே 'சார்வாகம்.', 'உலகாயதம்' முதலியனவாகும். இத்தகைய சிந்தனை வளர்ச்சியின் இன்னொரு வடிவமே பொதுவுடமைத் தத்துவம் எனலாம்.

"புராதன சார்வாகச் சித்தாந்தம் ஜடவாத சித்தாந்தமே ஆகும்; கடவுள் இல்லை; ஆன்மா இல்லை; மறு பிறப்பும் மறுவுலகமும் இல்லை. வாழ்க்கைச் சுகங்கள் துறக்கத் தகுந்தவையல்ல; அனுபவிக்கதகுந்தவை. உண்மையை அறிய நாம் அனுபவத்தையும் அறிவையும் வழிகாட்டிகளாக கொள்ள வேண்டும் என்பதே சார்வாகத்தின் சாரம் என்பர்.

சராசரி மனிதர்களிடம் நாம் காணமுடியாத அபூர்வ ஆற்றல்களைக் கோடிக்கணக்கான மக்களுள் ஒரு சிலரிடமே நாம் காண முடிகின்றது. அத்தகைய ஒருசிலர் செயற்கருஞ் செயல்களை செய்தவர்களாகவும் அபூர்வ ஆற்றல்களைக் கொண்டவர்களாவும் மாபெரும் சாதனைகளை

சாதித்தவர்களாகவும் விளங்குகின்றனர் நீண்ட கால மனிதர் வரலாற்றில் அன்று தொட்டு இன்று வரை காலத்திற்குக் காலம் இத்தகையவர்களை நாம் காண முடிகின்றது. புத்தர் பெருமான், இயேசு கிறிஸ்து நாதர், முகமது நபி, அருகத்தேவர், சுவாமி விவேகானந்தர், இராமகிருஸ்ண பரஹம்சர், மகாத்மா காந்தி, ஆறுநாவலர், சுவாமி விபுலானந்தர், ரவிந்ரநாத் தாகூர், மகாகவி பாரதி, அல்லாமா இக்பால், சேக்ஸ்பியர் முதலியோர் ஒரு புறம். காரைக்கால் அம்மையார், நக்கீர தேவ நாயனார், சைவசமய குரவர்கள், சத்தியசாயிபாபா முதலியோர் மறுபுறம். அவதார புருஷர்களாகப் போற்றப்படும் கண்ணன், இராமன் முதலியோர் இன்னொரு புறம். இராவணன், ஜுலிய சீஸர், நெப்போலியன், ஹிட்லர் முதலியோர் வேறொருபுறம்.

இத்தகையவர்களுள் ஒரு பகுதியினர் 'அவனருளாளே அவன் தாழ் வணங்கி' இறையருள் பெற்ற மகான்களாகப் போற்றப்படுகின்றனர். மறுப்பகுதியினரின் செயல்களுக்கும் இறையருளுக்கும் இடையில் தொடர்புகள் காட்டப்படவில்லை.

சம்பந்தர் ஞானப்பாலுண்டு மூன்று வயதிலேயே தேவாரம் பாடியதோடமையாது தமது 16 வயதிற்குள் பல்லாயிரக்கணக்கான பக்திப் பனுவல்களைப் பாடிப் பல அற்புதங்களை நிகழ்த்திப் சைவ சமயத்தைத் தழைத்தோங்கச் செய்து சைவ சமய உலகில் நிலையானதோர் இடத்தைப் பிடித்துக் கொண்டார். இன்றும் நம்மிற் பலர் சம்பந்தர் மூன்று வயதில் தேவாரம் பாடியதையும் இறையருள் பெற்றதையும் 16வயதிற்குள் அவர் சாதித்தவற்றையும் நம்பத் தயாரில்லை. இறையருள் பெற்றதை மறுத்து அவரது செயல்களுக்கு விஞ்ஞான ரீதியாக முழுமையான விளக்கம் கொடுக்கவும் முடியவில்லை.

இதே போன்று எமது காலத்தில் பாரதியார் சிறுபராயத்திலேயே கவித்துவ ஆற்றல் மிக்கவராகவும் அதீத இறை பக்தராகவும் திகழ்ந்து 39 வயதிற்குள்ளேயே யுகப்பெருங்கவிஞனாக விஸ்வரூபம் பெற்றமையை எம்மால் இலகுவில் அலட்சியப்படுத்த முடியாது.

இன்று எம் கண்முன்னாலேயே நம்பமுடியாத பல அற்புதங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. இராமகிருஷ்ண பரமஹம்சர், சுவாமி விவேகானந்தர் முதலியோர் வரிசையில் இன்று பகவான் என்று போற்றப்படும் சத்திய சாயிபாபா இனம், மதம், மொழி, பிரதேசம், நாடு முதலிய எல்லைகளைத் தாண்டி கோடிக்கணக்கான பக்தர்களைக் கொண்டவராகவும் அற்புதங்கள் பலவற்றை நிகழ்த்துபவராகவும் விளங்குகின்றார்.

ஞானக்குழந்தை, குறலரசு, கலியுக திருஞானசம்பந்தர், நவயுக திருஞானசம்பந்தர், முப்பால் ஞானி, கல்விக்கடல், திருகுறள் கனணி முதலிய 47 விருதுகளைத் தமது ஏழாம் வயதிற்குள் பெற்று திருக்குறள் திருமூலநாதன் எனப் போற்றப்படும் திருமூலநாதன் எனும் குழந்தை தமிழ் நாட்டின் திருச்சிரா பள்ளி மாவட்டத்தைச் சேர்ந்த துரை ஊரில் 19. 12. 1988 பிறந்தது. நாகவல்லி தயாபாரன் என்போர் தாய் தந்தையராவர்.

இறைபக்தி மிக்கவர்களாகிய தாய் தந்தையர் அதிகாலை எழுந்து இறைவழிபாடு செய்யும் போது பாடும் பக்தி பாடல்களைக் குழந்தையாகிய திருமூலநாதன் கேட்டு யாவரும் வியக்கும் வண்ணம் இரண்டரை வயதிலிருந்து தெளிவாகப் பாடும் ஆற்றலை பெற்றிருந்தான்; நான்கு வயதிற்குள் திருகுறள் முழுவதையும் பிழையின்றி ஒழுங்காக கூறி உலக சாதனை படைத்தான்; நான்கு வயதிற்குள் திருக்குறளை மட்டுமன்றி இருநூறுக்கும் மேற்பட்ட பாடல்களையும் கேட்போர் வியக்கும் வகையில் பண்ணோடு பாடி பரவசப்படுத்தினான். இச் சிறுவனது புலமைத்திறனையும் ஞாபக சக்தியையும்

வியந்து கலிபோர்ணியாவிலுள்ள உலகக் கலை, பண்பாட்டுக் கலகத்தின் சார்பில் 16. 8. 1995 அன்று ஆறரை வயதில் கௌரவ டாக்டர் பட்டம் வழங்கப்பட்டது. உலகிலேயே இவ்வயதில் டாக்டர் பட்டம் பெற்றவர். வேறு எவரும் இலர் என கூறப்படுகின்றது.

திருமூலநாதன் தமது ஐந்தாவது வயதிலேயே ஏழாம் வகுப்பிற்கான 'இந்தி பிராத்மிக்' தேர்விலும் ஆறாம் வயதில் எட்டாம் வகுப்பிற்கான 'மத்திமா' - பாடத்திட்ட தேர்விலும் வெற்றி பெற்று சாதனை புரிந்துள்ளான். சைவ திருமுறைகள் முதல் சீறாப்புராணம் வரை, புரநானூறு முதல் மகாகவி பாரதியார் பாடல்கள் வரை எழுநூற்றுக்கும் மேற்பட்ட பாடல்களைப் பாடுந்திறனைப் பெற்றுள்ளான். அதே சமயம் தமிழ், மலையாளம்,சமஸ்கிருதம், இந்தி, தெலுங்கு, படுகு முதலிய மொழிகளில் பாடுந்திறனையும் கொண்டவனாக ஏழுவயதுச் சிறுவன் திருமூலநாதன் விளங்குகின்றான்.

தனது நான்காவது வயதிற்குள்ளேயே திருக்குறளில் வியத்தகுப் புலமையை பெற்ற திருமூலநாதன், சென்னை உலகத் திருக்குறள் மையத்தால் அலங்கரிக்கப்பட்ட தேரில் வைத்து ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டான்; அறிஞர் பெரும் மக்களும் பொது மக்களும் கேட்ட வினாக்களுக்கு வியக்கத்தக்க வகையில் தெளிவான விடைகளைக் கூறி உலக சாதனை படைத்தான். ஞானசம்பந்தர் ஞானப்பாலுண்டே மூன்று வயதில் தேவாரம் பாடினார். ஆயின் திருமூலநாதனோ 'அம்மா,.அப்பா' என சரியாக உச்சரிக்கச் தெரியாத தனது இரண்டரை வயதிலேயே ஒலி இழை மூலம் கேட்ட தொண்ணூற்றைந்து வரிகளைக் கொண்ட சிவபுராணத்தைப்பக்தி சிரத்தையோடு பாடிப் பெற்றோரை வியப்பிலாழ்த்தினான்.

கடந்த சில ஆண்டுகளுள் திருமூலநாதனைப் போன்றே உலகின் பல்வேறு பகுதிகளிலும் சில குழந்தைகள் இத்தகைய அற்புதங்களை நிகழ்த்தி வருதல் சிந்திக்கத்தக்க ஒன்றாகும். தென்னாபிரிக்கா, டென்மார்க், சுவிட்சலாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த மூன்று குழந்தைகள் திருமூலநாதனைப் போன்றே வியத்தகுப்புலமை பெற்றவர்களாக விளங்குவதைக் கண்டு அவ்வந் நாட்டைச் சேர்ந்த உயர்கல்வி நிறுவனங்கள் அவர்களுக்கு பத்து வயதிற்குள்ளேயே கௌரவ டாக்டர் பட்டங்களையும் பல விருதுகளையும் வழங்கியுள்ளன.

"உலகாயதம் என்னும் சண்டமாருதம் சுழித்தடித்தார்த்து" இன்று வரை நாத்திகமாக விஷ்வரூபமெடுத்து நிற்கின்ற போதும் பிரமிக்கத்தக்கவகையில் விஞ்ஞான தொழில் நுட்பத்துறைகள் முன்னேறியுள்ள போதும் இவை எல்லாவற்றையும் மீறிக் கை விரல்களுள் அகப்படாத பாதரசம் போன்றும் வேதாந்திகளின் கைக்குள் சிக்காத கடவுள் போன்றும் இறையருள் தொடர்பான அற்புதங்கள் 20ம் நூற்றாண்டின் இறுதியிலும் தொடர்வது உண்மையை அறிய முயலும் எவரது சிந்தனையையும் மென்மேலும் தூண்டுவதாக அமைந்துள்ளன.

யேசு கிறிஸ்து நாதர் முதல் முஹமதுநபி வரை, சம்பந்தர் முதல் சுவாமி விவேகானந்தர் வரை, வள்ளுவன் முதல் பாரதி வரை, காளிதாசன் முதல் காந்தி வரை உலகில் எத்தனையோ பெரியார்களின் வாழ்வும் வரலாறும் சாதனைகளும் மீண்டும் மீண்டும் எமது சிந்தனையை தூண்டுவனவாகவும் எம்மால் முழுமையாக விளங்கிக் கொள்ள முடியாதனவாகவும் செம்மையான முறையில் காரணகாரியத் தொடர்பு காட்ட முடியாதனவாகவும் விஞ்ஞான அறிவுக்கு எட்டாதனவாகவும் இறையருள் பற்றி ஆழமாக சிந்திக்க வைப்பனவாகவும் காணப்படுகின்றன.

நற்றமிழ் வளர்த்த நாவலர் பெருமான்

செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி,
தலைவர், ஸ்ரீ துர்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பளை.

பெருமை பெற்ற பிறவி

நாவலர் அவர்களை ஈன்று புறந்தந்த பெருமை யாழ்ப்பாணம் நல்லயம்பதிக்குக் கிடைக்கின்றது. நல்வினையினால் ஒரு சற்புத்திரனை ஈன்றெடுத்துச் சைவத் தமிழ் உலகிற்கு வழங்கிய பெருமை திரு. கந்தப்பிள்ளை தம்பதியர்களுக்குக் கிடைக்கிறது. நாவலர் அவர்கள் பிறந்த ஆண்டு என்று பெருமை அடைகிறது 1822ஆம் ஆண்டு. ஏட்டு சுவடியாய் இருந்தவை இலக்கண இலக்கிய நூல்களாக அச்சேறப்பெற்ற பெருமையும் இப்பெருந்தகையின் பிறப்பினால் கிடைக்கின்றது. இன்னும் உரைநடைகளுக்கு உரமேறியதும், பேச்சு என்பது ஒரு கலையாக மாறியதும் , கல்விக்கூடங்கள் கலைக்கோயிலாக மாறியதும் இப்பெருந்தகையின் பிறப்பினால் கிடைத்தவையாகும். அத்துடன், இவது வயதில் தமிழ் மொழி, வடமொழி, ஆங்கிலம் ஆகியவற்றில் சிறந்த தேர்ச்சிபெற்று, விவிலிய நூலைத் தமிழில் மொழிபெயர்க்கும் வல்லமை விளைகிறது. குறிப்பாகக் கூறினால், நாவலர் அவர்களின் புனிதப் பிறவியினால் தமிழ் தழைக்கிறது. சைவம் எழுச்சி பெறுகின்றது என்பதை அனைவரும் ஏற்றுக் கொள்வர்.

பல்துறைப் பணிகள்

நாவலர் சகாப்தம் யாழ்ப்பாணச் சைவத்தமிழ் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டியவை. தனக்கென வாழாப் பிறர்க்குரியாளனாக விளங்கிய இப்பெருந்தகையைப் போற்றுவதற்குச் சொற்களும் போதாது; எழுத்தில் இவர் பணிகளைவடிப்பதற்கு ஆற்றலும் போதாது. இம்பத்திஏழு ஆண்டுகள் இவ்வுலகில் வாழ்ந்த நாவலர் அவர்கள், இருபத்தி மூன்று ஆண்டுகளைத் துறை போகக் கற்பதில் செலவு செய்தார். அதன் பின்பே சொற்பொழிவு செய்யவும், நூல்களை எழுதவும் ஆரம்பித்தார். ஏட்டில் இருந்தவையெல்லாம் அச்சு வாகனமேற்றப்பட்டபோது, தமிழ்த் தாய் மனங் குளிர்ந்தாள். மேலும் இத்தாய்க்கு வசன நடையில் தான் வழங்கு நடை, ஒழுங்கு நடை, பயனுள்ள நடை என்ற ஒரு திருப்பத்தை ஏற்படுத்தி, செய்யுள் நூல்களையெல்லாம் வசன நடையில் மாற்றிய சிறப்பு இவருக்குண்டு. முப்பத்திரண்டு ஆண்டுகள் முழுமையானதும் பயனுள்ளதும் தமிழ் மக்களின் எழுச்சிக்கும் சைவ மறுமலர்ச்சிக்குமான பணிகளை மெய் வருத்தம் பாராது, பசி நோக்காது, கண்துஞ்சாது ஆற்றி வந்தமை குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாணத்திலும், சிதம்பரத்திலும் சைவ பிரகாச வித்தியாசாலைகளையும், அச்சியந்திரசாலைகளையும் அமைத்து, கல்விப் பணிக்கு ஊட்டம் அளித்தார். மேலை நாட்டாரின் நிறுத்தக் குறியீடுகளின் மூலமாகத் தமிழ் உரை நடையை தெளிவுப்படுத்தினார். பண்டிதர்கள் மாத்திரம் பயின்று வந்த செய்யுள் நூல்களை உரை நடையில் மாற்றி "வசன நடை கைவந்த வல்லளார் " என்ற பெருமையைப் பெற்றார். கேட்டாரைப் பிணிக்கும் வண்ணம் பல மணி நேரம் பிரசங்கஞ் செய்து, தெருவெல்லாம் சிவமுழக்கத்தை ஏற்படுத்தினார். நோயினாலும், வறுமையினாலும் மக்கள் நலிவடைந்த நேரத்தில் பிணிமருத்துவனாகவும், பசி மருத்துவனாகவும் மாறிக்கஞ்சித் தொட்டித் தர்மம் போன்றவற்றை ஏற்படுத்தினார். மதத்தின் பெயரால் மாசு கற்பிக்க விழைந்தவரைக் கண்டனத்தினால் சாடி உண்மைச் சமயம் எது என்பதை தெளிவுபடுத்தினர்.

குறிக்கோளுடன் இணைந்த கல்விப் பணி

முதலில் நாவலர் ஐயாவின் நாலாம் பாலர் பாடத்திலிருந்து ஒரு பகுதியை எடுத்துக் கொள்ளுவோம்.

"சரீர சுகத்திற்கு ஏதுவாகிய அன்னவஸ்திர முதலியவற்றையும் ஆன்ம சுகத்திற்கு ஏதுவாகிய ஞானத்தையும் கொடுப்பது வித்தையேயாதலின், எல்லாத் தானங்களிலும் வித்தியா தானமே சிறந்தது. ஒருவருக்கு அன்ன வஸ்திரங் கொடுத்தால், அவை அவருக்கு மாத்திரமே பயன்படும். பயன்படுவதும் சிறிது பொழுது மாத்திரமே ஒரு விளக்கேற்றுதல், அவ்வொரு விளக்கிலே பல விளக்கும் அப்பல விளக்கினுள்ளும் ஒவ்வொரு விளக்கிலே பற்பல விளக்குமாக எண்ணிலாத விளக்கு ஏற்றப்படுதலுக்கு ஏதுவாதல் போல, ஒருவருக்குக் கல்வி கற்பித்தல், அவ்வொருவரிடத்தில் பலரும், அப்பலருள்ளும் ஒவ்வொருவரிடத்திலே பற்பலருமாக, எண்ணிலாதவர் கல்வி கற்றுக் கொள்ளுவதற்கு ஏதுவாகும். அவர் கற்ற கல்வியோ அப்பிறப்பினன்றி மற்றைப் பிறப்புக்களினும் சென்று சென்று உதவும். ஆதலின் வித்தியாதானத்துக்குச் சமமாகிய தருமம் யாதொன்றுமில்லை. தாங்கற்ற கல்வியை நன்மாணாக்கர்களுக்குக் கருணையோடு கற்பியாதவர் காட்டிலே நச்சுமாமரமாவர் .

வாழ்க்கை முத்திரைகளாக இவர் ஆற்றிய கல்விப்பணி உயர்ந்த குறிக்கோளுடன் மேற்கொள்ளப்பட்டது. சைவத்தமிழ் உலகுக்கு இவர் வழங்கிய நூற்கொடைகளை வரையறுத்துச் சொல்ல முடியாது. பால பாடங்கள் நான்கு, திருவிளையாடற்புராண வசனம், பெரியபுராண வசனம், பெரியபுராண சூசனம், நன்னூல் காண்டிகையுரை, இலக்கணச் சுருக்கம், நன்னூல் விருத்தியுரை, இலக்கணக் கொத்து, பிரயோக விவேகம், தொல்காப்பியம் சேனாவரையம், தருக்க சங்கிரகம், நிகண்டு ஆகிய நூல்களை எழுதியும், பதிப்பித்தும் வழங்கிய அருமைப்பாடு சிந்திக்கத்தக்கது. அத்துடன், நிறைவான சமயப் பணிகளாக முதல் இரண்டு சைவ வினா விடைகள், நித்திய கரும விதி, சிவாலய தரிசன விதி, புட்ப விதி, சிதம்பர மான்மியம், கோயிற் புராணம், திருமுருகாற்றுப் படை உரை என்பனவும் சிவஞானபோதச் சிற்றுரை, பதினோராம் திருமுறை, திருவாசகம் முதலியவற்றைப் பதிப்பித்தமையும் சைவ உலகினால் மிகவும் வரவேற்கத்தக்கவை.

பாராட்டுரைகள்

1913ம் ஆண்டிலே சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலை என்ற பெயருடைய கல்வி நிலையத்தின் விழாவிலே பங்கு கொண்ட சென்னை உயர்நீதிமன்றத் தலைவர் திரு. சதாசிவ ஐயரவர்கள் நாவலரைப் பாராட்டிய உரைகள், பொற்கட்டிலே பதிக்கப்பட்ட இரத்தினமணிகள் என்று சொல்லத்தக்கப் பெருமையுடையன.

"நாவலரைப் போல முன்னும் இப்பொழுதும் தமிழ் வித்துவான்கள் இல்லை. ஒரு வேளை இருந்தாலும் அவரைப் போல தமிழ் மொழியையும், நல் ஒழுக்கத்தையும், சைவ சமயத்தையும் வளர்த்து நல்ல தமிழ் வசன நடையில் நூல்களை எழுதி அச்சிட்டு வெளிப்படுத்தித் தமிழ் நாட்டாருக்கு உதவி செய்தவர் வேறொருவரும் இல்லை. பொருள் வரும்படிக்காகப் பிறரை வணங்காதவர்களும் அவரைப் போல் ஒருவரும் இல்லை."

"அவருடைய தூய்மையான வாழ்க்கை யாவராலும் பாராட்டுதற்குரியது. "என்கடன் பணி செய்து கிடப்பதே" என்னும் அப்பர் திருவாக்கிற்கு இலக்கியமாக அவரைக் கூறலாம்".

டாக்டர். உ. வே. சாமிநாதஐயர்

"தமிழ் மக்களின் நன்மையின் பொருட்டுத் தம் உடல், பொருள் ஆவி மூன்றையும் அர்ப்பணம் செய்த பெரியார்."

– எஸ். வையாபுரிப்பிள்ளை.

" இவர் திருத்தி அச்சிட்ட நூல்களே பிற்காலத்தில் தமிழ் நூல்களை அச்சிட வந்தோர்க்கு ஒரு வழிகாட்டியாக இருந்தன."

– டாக்டர் க. கணபதிப்பிள்ளை.

" சொல் வன்மையில் அவர்கள் அக்காலத்தில் தமக்கு நிகராக எவருமின்றித் திகழ்ந்த வரலாறு எம் ஆசிரியர் சொல்லக் கேட்டோம்."

மறைமலை அடிகள்

உருக்கமான இறுதிச் சொற்பொழிவு

1879 ஆடிச்சோதி தினத்தில் இவர்கள் ஆற்றிய சொற்பொழிவே இறுதிச்சொற்பொழிவாக அமைந்தது. சுந்தரமூர்த்தி நாயனார் வழி நின்று அடியார்களைப் போற்றும் திண்மை கொண்டவர் நாவலர் .சாதியிலும் பார்க்க சமயமே மேலானது என்றும் சமயமும் ஒழுக்கத்திலும், ஆசாரத்திலும் பெரிதும் தங்கியுள்ளது என வலியுறுத்தியவர் நாவலர். அத்துடன்,மதத்தின் பேரால் மனித நேயத்தை வளர்க்க வேண்டும் என்ற கொள்கையே அவரிடம் முதன்மை பெற்று விளங்கியது. இவரின் பூதவுடல் மறைந்து நூற்றிப்பதினைந்து ஆண்டுகள் உருண்டோடி விட்டன. ஆனால் , இலட்சோபலட்சம் தமிழ் நெஞ்சங்களில் சுடரொளியாகப் பிரகாசிக்கிறார் இவர். ஒரு மனிதன் அரை நூற்றாண்டு காலம் மாத்திரம் வாழ்ந்து ஆற்றிய மக்கள் சேவை எம்முள்ளத்தை ஈர்த்துக் கொண்டிருக்கிறது. ஒருவன் தன் வாழ் நாளை இந்த மண்ணுக்காகவும் , மக்களுக்காகவும் எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதை நடைமுறையில் நிரூபித்துக் காட்டியவர் நாவலர்.

இவருடைய இறுதி உரை எம்முள்ளத்தின் உணர்வை மக்கள் சேவையில் தூண்டி விடுகிறது. "நிலையில்லாத என்சரீரம் உள்ள பொழுதே என் கருத்து நிறைவேறுமோ,நிறைவேறாதோ என்னுங் கவலை என்னை இரவும் பகலும் வருத்துகின்றது. அதாவது தமிழ்க் கல்வியும், சைவ சமயமும் வளர்ச்சியடைவதற்கு கருவிகள், முக்கிய தலம் தோறும் வித்தியாசாலைகளைத் தோற்றுவித்தலும், சைவ பிரச்சாரம் செய்வித்தலுமேயாகும். யான் உங்களிடத்துக் கைம்மாறு பெறுதலை சிறிதும் எண்ணாது முப்பத்திரண்டாண்டுகள் உங்களுக்குச் சைவ சமயத்து உண்மைகளை போதித்து வந்தேன். எனக்குப் பின் சைவசமயம் குன்றிப்போம் எனப்பாதிரிமார்கள் சொல்லுகிறார்கள் . யான் உயிருள்ள போதே உங்களுக்காக ஒரு சைவப்பிரச்சாரகரைத் தேடிக் கொள்ளுங்கள். இன்னும் என்னைப் போன்று படித்தவர்களும் ஒழுக்கமுடையவர்களும் பலர் வருவார்கள். ஆனால் உங்கள் பழிப்புரையைக் கேட்டுக் கேட்டு கைம்மாறு கருதாது சமயத்தைப் போதிக்க என்னைப் போல ஒருவரும் வரார். இதுவே என்னுடைய கடைசிப்பேச்சு." என்று கண்ணீருடன் முடித்தார்.

எனவே நாவலர் பெருமானை இன்றும் நினைவு கூற வேண்டிய நாம், அவர் வழியிலே நின்று செந்தமிழ் வளர்ச்சிக்கும் சிவநெறி உயர்வுக்கும், இயன்ற வரையில் தொண்டாற்ற உறுதிபூணுவோமாக. அரைநூற்றாண்டு காலமாக எம்மினத்திற்கு அவர் ஆற்றிய உயர்பணிகளை நினைந்து, என்றும் உள்ளத்தில் இருத்தி நன்றியுடையவர்களாக விளங்குவோமாக.

சிந்தனை செய்மனமே!

செல்வன். யோ. பிரதாபன். 13ம் வருடம், பொறியியற் பீடம்.

இவ்வுலகிலே மனிதன் பிறந்து, வாழ்க்கை நதியிலே அடியுண்டு, அள்ளுண்டு ஈற்றிலே இறந்தும் போகின்றான். இந்த இடைப்பட்ட வாழ்க்கை ஓட்டத்திலே எத்தனையோ அனுபவங்களும், நிகழ்வுகளும் எம்மை அறிந்தோ, அறியாமலோ நிகழ்ந்து விடுகின்றன. வாழ்க்கையைச் சீராக்க எத்தனையோ மதங்கள் நிலவுகின்ற போதும், நாளுக்குநாள் பிரச்சினைகள் அதிகரிப்பதேயன்றி, குறைவதைக் காணோம். ஒவ்வொருவனுடைய தனிவாழ்க்கையும் நிம்மதியின்றியே முடிந்து விடுகிறது. இதன் அடிப்படைக் காரணம் யாது? மிக எளிதாகச் சொல்வதானால், அகவாழ்வுக்கும், புறவாழ்வுக்கும் இடையே நிலவுகின்ற வேற்றுமைத் தன்மையென்பது! புலப்படும். அகவாழ்வு என்பது மனத்தை அடிப்படையாகக் கொண்டது!

சாதாரணமாக நாம் மனம் என்றவுடன் இதயத்தையோ, நெஞ்சப் பகுதியையோ மேலெழுந்த வாரியாகக் கருதுகின்றோம். ஆனால், ஆழ்ந்து கருதுமிடத்து, எம்மால் எளிதில் அணுக முடியாத பலவிடயங்கள் மனத்தின் அடி ஆழத்திலே புதையுண்டு போயிருப்பது புலப்படும். மனமானது மாபெரும் சக்தி படைத்தது. மனிதனின் எண்ணங்களின் மையமே மனம் எனலாம். அதாவது, ஒவ்வொரு எண்ண அலையும் மனத்திலிருந்தே புறப்படுகின்றது. எனவே, இந்த மனமானது தலைமைச் செயலகமாகிய மூளையின் சிந்தனை ஆற்றலினால் உருவாக்கப்படுகின்றது. மனமும் எமது வாழ்வு எவ்வாறு தொடர்புபடுகிறது? கடவுளுக்கும் மனதிற்கும் உள்ள தொடர்புதான் என்ன?

மேற்கூறிய வினாக்களுக்குப் பலபேர் பலவாறாக விளக்கங்கள் கூறுவர்? கடவுள் என்ற எளிதில் புரியாத பொருளுக்கு பாண்டித்திய அறிவைக் கொண்டு விளக்கம் கொடுப்பவருக்கும், நாத்திகனுக்கும் இடையில் பெரிய வேறுபாடு ஒன்றுமேயில்லை. உண்மையில் கடவுளைக் காண, அல்லது உணர முடிந்த ஓரே ஊடகம் மனம்தான். உபநிடதங்களோ, வேதங்களோ சீரிய பாதை காட்டுவனேவயன்றி, இதோ! கடவுள் பார்! என்று ஒரு போதும் சொல்வில்லை. எனவே இங்கு எமது தனி முயற்சி தான் முக்கியம். மனதிலே ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருக்கும். மாபெரும் சக்தியை விழிக்கப் பண்ணுவதுதான் மிக முக்கியமானது. அதன் பின் எமக்கு மாதம் என்பது தேவைப்படாத ஒன்று. இது உணரப்பட வேண்டுமே தவிர, வெறுமனே செய்கையில் காட்டப்பட முடியாதது.

கடவுள் என்பவர் இருக்கின்றாரோ, இல்லையோ, முதலில் மனத்தைப் பண்படுத்த வேண்டும். அதன் பின்னர்தான் ஆராய்ச்சி செய்து உண்மையை விளங்க முற்பட வேண்டும். சரியான பாதையில் செலுத்தப்பட்ட ஏவுகணைதான் இலக்கை அடையும். வெறுமனே, நான் கடவுளுக்கு விசுவாசமானவன். தினமும் கோயிலுக்குப் போகிறேன். கடவுளைக் கண்டு விடுவேன் என நினைத்து ஆணவ மனப்பான்மையை வளர்த்தல் வீணேயாகும். முதலில், மனமானது எல்லாவற்றிலிருந்தும் விடுபட வேண்டும். அதாவது எந்தவிதமான கட்டுப்பாடுகளுக்கும், உணர்ச்சிகளுக்கும் அடிமைப்படாமல், வரையறுக்கப்படாமல் இருக்க வேண்டும். இது இப்படி சொல்லியிருக்கிறது. எனவே அது தான் சரி என நினைத்து சிந்தனை ஓட்டத்தை மட்டுப்படுத்த முயலக்கூடாது. இது மூடிய அறைக்குள் இருந்து எறிந்த கல்போன்றது. ஒரு போதும் வெளியே சிந்திக்க முடியாதது. எப்பொருளிலும் மெய்ப்பொருள் காண வேண்டும்.

மனது பண்பட முதலில் அவசியமானது, நல்ல சிந்தனை மனமானது ஒவ்வொரு அதிர்வுள்ள எண்ண அலைகளை எமது உணர்ச்சிகளுக்கு ஏற்ப உற்பத்தி செய்கிறது. இந்த அதிர்வுகளுக்கு ஏற்பவே எமது உணர்வுகள் தோன்றுகின்றன. நல்ல சிந்தனை உள்ள அலைகள் மனதிலே மோதும் போது, உள்ளம் மகிழ்ச்சியிலே திளைக்கிறது. அதுதான் மனத்தின் இயற்கை தினம், தினம் நல்ல அதிர்வுகளை பிறப்பிக்கும் மனம், அதற்குப் பழக்கப்பட்டு, காலப் போக்கிலே பண்பட்டு விடுகிறது. அப்போது மாபெரும் வலிமை மெல்ல மெல்ல எமது மனத்திலே எழ ஆரம்பிக்கின்றது. இத்தகைய வலிமை பெற்ற மனம் தான் கடவுளை உணர முடியும். மன ஓட்டத்திற்கு ஏற்பவே மனமானது ஆட்டுவிக்கப்படுகின்றது. இந்த இடத்திலே எம்மைச் சுற்றியுள்ள சூழல் மிக முக்கியமானது. அதிர்வுகள் எம்மைச்சுற்றி நல்லவையாக இருக்கும் போது, எமது மனமும் அதனுடன் சேர்ந்து ஒத்து அதிர முயலும். எனவேதான், நல்லசூழலும், இனிய மனிதர்களின்

சகவாசமும் தேவை. நல்ல உணர்வுகளை உற்பத்தி செய்வது எமக்கு மட்டுமன்றி, எம்மைச் சுற்றியிருப்பவர்களுக்கும் நன்மைபயக்கும். தெளிந்த நீரைக்குழப்புவதற்குச் சிறு கல்லுப் போதுமானது. எனவே அவதானம் தேவை. ஒவ்வொரு கணமும் மன ஓட்டத்தைச் சரி பார்க்க வேண்டும்.

மனம் சரியான வழியில் சிந்திக்க, உடலில் ஆரோக்கியமும் தேவை. சுவாமி விவேகானந்தர் தினம் தினம் கோயில், குளம் என்று திரிபவனை விட, உடற்பயிற்சி செய்பவனைப்பராட்டுகின்றார். காரணம், சரியாகச் சிந்திக்கும் ஆற்றல்தான் ஏதோ போனேன். வணங்கினேன். வந்தேன். என்று அமையும் வாழ்க்கை, நேரத்தை வீணடிக்கும் செயலே! இன்று பெரும்பான்மையாரின் பிரச்சினை, எவ்வளவு கோயில் தரிசித்தும், எத்தனையோ செய்தும், இன்னும் மகிழ்ச்சியைக் காணமுடியாமையே. உண்மையில், கோயில் என்பது ஆன்மீக முன்னேற்றத்தின் ஆரம்பப் படிக்கட்டே! ஆன்மீகத் துறையிலே முதிர்ந்தவனுக்கு விக்கிரக வழிபாடு தேவேயயில்லை. ஆம் அவனால் தனக்குள்ளேயே எக்கணமும் கடவுளை உணரமுடியும் கோயிலுக்குப் போனால் தான் மனம் சாந்தியடைகின்றது என்றால் மிகுதி நேரம் எமது மனமானது கட்டுப்பாட்டில் இல்லை என்றுதான் அர்த்தம்.

மனதைக்கட்டுப்படுத்துவது இலகுவான காரியமல்ல. படிப்படியாக அதன் போக்கில் ஓடவிட்டுத் தான் திருப்ப வேண்டும். எடுத்த எடுப்பிலேயே கட்டுக்குள் வரவே வராது. நல்லசிந்தனை தான் ஓடுகின்ற மனதை ஓரிடத்திலே நிறுத்தவல்லது. இதன் பின்னரே தியானம் மேற்கொள்ள வேண்டும். அப்போது தான் மனத்தின் வலிமையானது ஓரிடத்திலே குவிக்கப்படுகின்றது. நல்லசிந்தனைக்கு, நல்ல நண்பர்கள், நல்ல சொற்கள் இனிய இசை நற்செய்கைகள், இனிய புத்தகங்கள் அவசியமானவை. மனச் சாட்சிக்கு மாறாக ஒரு போதும் நடக்கக்கூடாது. அது பானையில் உள்ள சிறுதுவாரம் போல் மனத்தை எப்போதுமே வாட்டவல்லது. மனதினை வெறுமையாக விடுங்கள். ஒரு பொருளையோ, ஒருவரையோ முன்னுதாரணமாகக் கொள்ளும் போது, அவற்றில் உள்ள நல்ல தன்மைகளையே பதிக்கப் பழக வேண்டும்.

ஒருவர் எம்மைத் துன்புறுத்தினாலோ, இழிவாகப் பேசினாலோ, அவரது அறியாமையை நினைத்து இரக்கப்பட வேண்டுமேயன்றி, நாமும் அவ்வாறு திருப்பிச் செய்யக் கூடாது. இவ்வாறு செய்யின், மிகவும் மோசமான சிந்தனை ஓட்டங்கள் தோன்றுவதால், அடிமனத்தில் உறைந்து போயிருந்த நல்ல தன்மைகளும் தளம்பலடைகின்றன. எனவே, சுயகட்டுப்பாடு மிகவும் முக்கியம். கோபம் வந்தாலும், அடக்க வேண்டுமே என்ற உணர்வில் அடக்காமல் உண்மையாகவே சாந்தமடைய வேண்டும். இல்லாதுவிடின், இந்நிகழ்ச்சிகள் அடிமனதிலே அமிழ்ந்து பின்னொரு காலத்திலே விசுவரூபம் எடுத்துவிடும். இவ்வாறே ஆசை, பொறாமை, பொய் முதலியன அகற்றப்பட வேண்டுமேயன்றி, அடக்கப்படக்கூடாது நல்லவராக வாழ வேண்டுமேயன்றி, நல்லவராக நடிக்கக் கூடாது. படிப்படியாகப்பண்பட்டு வரும் மனத்திலே நிச்சயம் மெல்ல மெல்ல ஒரு மாற்றம் ஏற்பட்டுக் கொண்டே வரும். அதுதான் அறிகுறி வெளியுலகிலே நல்லவராகத் தோன்றி, மனதாலே தீயவற்றை நினைப்பவர்கள் மிகவும் கீழான நிலையிலுள்ளவர்கள். இவ்வாறான நிலையிலுள்ளவர்கள், சிந்தனை, சொல், செயல் ஆகியன ஒன்றாக இருக்கும்படி பழக வேண்டும்.

ஒருமுகப்படுத்தப்பட்ட மனத்திலே திரண்டு எழும் மாபெரும் சக்தி மூலமே பரம்பொருளான பிரம்மத்தைக் காண முடிகின்றது. இது அனுபவத்தின் மூலமே உணரமுடியும். இவ்வாறு எழுகின்ற சக்தியை லௌகீக வாழ்வின் பொருட்டு வீணடித்தல் கூடாது. ஒவ்வொரு கணமும் கடவுளைக் காண வேண்டும் என்ற உத்வேகம் உரமூட்டப்பட்ட வண்ணமே இருக்க வேண்டும். எம்மைச் சூழவுள்ள மனிதர்கள், அழகிய பொருட்கள், சுகங்கள் அனைத்துமே அரைநொடியில் அழிந்து விடவல்லன. அதற்காக, உலகவாழ்வும் வேண்டாம். ஒன்றும் வேண்டாம் என்று காட்டுக்கு போக வேண்டிய அவசியமே இல்லை. மனிதப்பிறவி அற்புதமானது உலகவாழ்வு படைக்கப்பட்டதே பிறவிப் பெருங் கடலைத் தாண்டுவதற்குத்தான் மனிதனால் மட்டுமே மனதை ஒருமுகப்படுத்தி இறைவனை உணரமுடியும் மனத்தால் கட்டுப்படுத்தப்படும் விடயங்கள் தவிர்ந்தவற்றில் மனிதனுக்கும், விலங்குக்கும் வேறுபாடேயில்லை. உலகவாழ்க்கையை ஒட்டியும், ஒட்டாமலும் வாழப் பழக வேண்டும். அடிமனமானது இறைவனை நினைந்தே அதிர்ந்து கொண்டிருந்தால், உலக வாழ்க்கை பெரும் பாரமாக அமையாது. இன்பம், துன்பம் , நன்மை, தீமை, ஆகியவற்றினாலே பாதிக்கப்பட முடியாத மனநிலை ஏற்பட்டு விடும். இவ்வாறானதொரு பக்குவப்பட்ட மனமே அண்ட சராசரங்களைப் படைத்து, பாதுகாக்கின்ற பிரம்ம சக்தியைத் தன்னுள்ளே கண்டு, அதனுடன் ஐக்கியப்பட முடியும்

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பாலயம்
வள்ளல் பிராணார்க்கு வாய் கோபுரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சிவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளாமணிவிளக்கே."

ஓர் இந்துவின் சிந்தனைக்கு .....

வ. சிவலோகதாசன் வணிகவியல் (சிறப்பு) இறுதி வருடம்.

பழமையிலும் புதுமையிலும் புகழ் பூத்து நிற்கும் இந்துமதம் பூர்வீக காலத்திலிருந்தே உலகப் பேரரிஞர்களை வெகுவாக கவர்ந்து வந்து இருக்கின்றது. இதன் வளர்ச்சிக் கட்டத்தில் பல வர்க்கங்கள், மதங்கள், நாஸ்திகம் போன்றவைகளின் கடும் தாக்கங்களையும் ஏற்று வளர்ந்து வந்துள்ளது. தோன்றியும் தோன்றாமலும் இருக்கின்ற சகல தருமங்களையும், சகல சாஸ்திர ங்களையும் தன்னகத்தே உள்ளடக்கியது இந்துமதம்.இந்து என்ற பதத்திற்கு இந்து மத சாஸ்திர ங்களில் பலவிதமான அர்த்தங்களைக் காணலாம்.

"ஹீனம் தூ-ஷய தீதி ஹிந்து " – அதர்மங்களை ஒழிக்கின்றவன் இந்து.
"ஹிம்ஸாம்தமய நீதி ஹிந்து " – சகல கருமங்களையும் நீக்கி உயிர்களை ஏகாத்ம பார்வையுடன் பார்க்கின்றவன் இந்து

"ஹிம் ஸந்தி தர்மோ நிதி ஹிம் -ஸா" – சனாதன தர்மங்களுக்குக் கேடு விளைவிப்பவரை ஒடுக்குகின்றவன் இந்து

எது எவ்வாறெனினும் இவை அதன் பொருளைப் பூரணப்படுத்துவதாயில்லை. இந்து என்ற பதப் பிரயோகத்தின் ஆரம்ப காலம், இது வரையில் அனுமான நிர்ணயமாயிருப்பதைத் தவிர சரியான கால நிர்ணயம் நிச்சயக்கப்படவில்லை. ஆனால் இதுவரை காலமும் தோன்றியிருக்கின்ற ஆத்மீக பௌதீக ஒளிகளும், சகல மதங்களுடைய அடிப்படைச் சித்தாந்தங்களும் இந்துக்களுடைய வேதாந்த தரிசன சாஸ்திரங்களின் சுடரொளிகள் என்பது வெளிப்படையான ஓர் உண்மையாகும்.

சனாதன தர்மமான இந்து மதம் உயிரினங்களுடைய நிலைப்பேற்றிற்கும் மாணவ சமுதாயத்தின் சேம நலத்திற்கும் அவ்வப்போது விலைமதிக்கமுடியாத பலவற்றையும் ஈன்று கொடுத்திருக்கின்றது. இவைகள் உலக அரங்கில் இந்துக்களுக்கு நிலையானதொரு அந்தஸ்தை வழங்கியிருக்கின்றன. நாம் நம்முடைய தர்மத்தைப் பற்றியும், கலை, கலாச்சாரங்களைப் பற்றியும் பெருமையடைகின்றோம். எனினும் கண்மூடித்தனமாக பழையவை எல்லாம் நல்லவை என்றும், புதியவை எல்லாம் தீயவை என்றும் கருதுவது பொருத்தமற்றது. பழமையிலும் புதியதிலும் நல்லவற்றை மாத்திரம் தேர்ந்தெடுத்து இரண்டும் கலந்ததொரு புதிய வெளிச்சத்தில் நடந்து செல்ல வேண்டும்.

மாற்றமும் வளர்ச்சியும் இயற்கையின் நியதிகளென்பதை அறிந்து செலாற்றாவிட்டால் காலச் சக்கரம் நம்மை ஒரு மூலையில் உருட்டி விடும். இந்து மதத்தின் சகல துறைகளும் காலா காலத்தில் படிப்படியாக மாற்றியமைக்கப்பட்டு வந்தது தான் இன்று காணும் உயர்நிலை. ஆகையால் அடிப்படையில் மாற்றமில்லாமல் தேவையான மாற்றங்களை செய்வதற்கு தயங்கக்கூடாது. எனினும் காலத்தால் சில நெறிகள் தாமே மாறுபடும். நாமே மாற்றக் கூடாது. வயது முதிர முதிர தலைமயிர் தாமே உதிர வேண்டுமேயன்றி நாமே பிடுங்கி எறியக்கூடாது. இதற்கேற்ற விசாலமான மனதையும், அறிவையும், ஆற்றலையும் இந்துக்கள் பெற்றெடுக்க வேண்டும்.

இந்து மதத்தின் அடிப்படையே மாணவர்களிடம் தான் தொடங்குகின்றது. அதன் முக்கியமான சாஸ்திர நூல்கள், தத்துவ நூல்கள் யாவுமே குருநாதர் மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கும்

பாடங்களாகவும், போதனைகளாகவும் தான் அறிமுகமாகின்றன. ஆகையால் குழந்தை பருவத்திலேயே நல்ல தத்துவங்களை உணர்வதற்குரிய நிலை, மாணவனின் நிலை என இந்து மதம் கூறுகின்றது.

ஒரு மாணவன் காகத்தைப் போல கவனிக்க வேண்டும் என்றும், நாயைப்போல செவிக் கூர்மையுடன் இருக்க வேண்டும் என்பது மாணவப்பருவத்தின் பண்புகளாகும். வீட்டில் பெற்றோரிடம் மரியாதைக்காட்டிய குழந்தை, மாணவனாக குருநாதரிடம் மரியாதை செலுத்துகின்றான். அவர் மூலமாக அவர்களுக்கிடையில் ஒற்றுமையையும், தெய்வீக உணர்வையும் பெறுகின்றான். இவ்வாறு சமூகத்தில், பின்னால் பொறுப்புள்ள அங்கத்துவத்தை வகிக்கத் தயாராகியுள்ளான். இன்றைய நிலையில் நாமும் இந்த பண்புகளையும் ,ஆற்றலையும் பெறவேண்டும்.

இந்து மதம் தியானத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து அதனை தெய்வீக உணர்வுடன் மனப்பயிற்சி மூலம் புகுத்துகின்றது. ஒவ்வொரு மனிதனிடமும் உள்ளே ஒரு சக்தி அதைக் கண்டுபிடித்து வெளியே கொண்டு வர முயலுவதும் தியானத்தின் மூலம் சாத்தியமாகும். அன்றாடம் நமது வாழ்க்கைக்குத் தேவையான புத்தி கூர்மை, நிதானம் , ஆழ்ந்த சிந்தனை , உடல் ஆரோக்கியம், உள்ள உறுதி இவைகளை மனோ தத்துவ அடிப்படையில் பெறத்தியானம் உதவுகிறது. இவ்வகையில் வாழ்க்கையின் ஒவ்வொரு படிகளிலும் இறைவனை நினைவு கூறி வாழ்க்கை வேறு, தெய்வீகம் வேறு என்று பிரிக்க முடியாத வகையில் தினமும் ஒவ்வொரு வேளையிலும், வீட்டிலும், ஆலயத்திலும் கலந்து நிற்கும் விதமாக நமது மதம் அமைக்கப்பட்டிருப்பது அதற்குரிய தனிச் சிறப்பாகும்.

நாமே முதலில் நம்மை அறிய வேண்டும். நம்முடைய எண்ணங்களைப் பொறுத்துத்தான் நம்முடைய வாழ்க்கை அமையும். வாழ்க்கையில் முன்னேற விரும்புகின்றவர்களுக்குத் தன்னம்பிக்கைக்கு அடிப்படையாக நல்ல எண்ணங்கள் இருக்க வேண்டும். இதனைத் தான் நமது சாஸ்திர நூல்கள் "நீ எதுவாக நினைக்கின்றாயோ அதுவாகவே ஆகி விடுகின்றாய்" என்றும் "உன் எதிர்காலம் உன் கையில் தான் இருக்கின்றது" என்று கூறுகின்றன. நாம் கொள்ளும் பற்றுக்களும், ஆசைகளுமே நமது முடிவுக்கு காரணமாக இருக்கின்றது. இதிகாசங்களும், புராணங்களும் இதையே நமக்குக் கதை வடிவமாக, கதாபாத்திரங்களாகக் கோடிட்டுக் காட்டுகின்றன.

நமது சனாதன தர்மத்தின் அத்திவாரம் மிக ஆழத்தில் பதிக்கப்பட்டிருப்பதால் இதுவரை எந்த ஒரு சக்திக்கும் அதை சிதைக்கவோ, நொறுக்கவோ முடியவில்லை. வேறு எந்த மதமும் அளிக்காத தனிமனித சுதந்திரத்தை இந்து மதம் எமக்கு அளித்திருக்கின்றது. இந்து மதத்தின் பலமும் அதுதான் பலவீனமும் அது தான் . இதனால் தான் என்னவோ பிரபஞ்சத்தில் பரஸ்பர விரோதங்கள் என்று தோன்றக் கூடிய பலவற்றையும் இணைத்து வாழத் தகைமையுடைய இந்துக்கள் தங்களுடைய சமுதாய முரண்பாடுகளைச் சமப்படுத்துவதில் தோல்வி கண்டிருக்கின்றனர்.

வேற்றுமையிலும் ஒற்றுமையைக் காணும் ஆத்மீக இரகசியங்களை உலகிற்கு எடுத்தோதிய இந்துக்கள் குலம், கோத்திரம், சாதி, தீண்டாமை, மத தத்துவக் கொள்கைகள், குரு பாரம்பரிய பேதங்கள், சுயநலம், வரதட்சணை, பெண்ணடிமை, வழிபாட்டு முறைகள் போன்றவற்றிலிருந்து எழுந்த பிணக்கும், போராட்டமுந் தான் இந்துக்களுடைய ஐக்கியத்தைச் சீர்குலைத்து வந்திருக்கின்றது. இந்த பலவீனங்களை அந்நியர் தங்கள் சுயநலத்திற்குச் சாதகமாக பயன்படுத்தினார்கள் என்பது தான் உண்மை. நமது ஐக்கிய சக்தியை பிளவுபடுத்திக் கொண்டிருக்கும் உயர்வு தாழ்வுகளையும், முரண்பாடுகளையும் அறவே ஒழிக்க வேண்டும்.

இந்து ஆலயங்கள் இந்து சமுதாயத்தின் நடு நாடியாகவே இருந்து வந்திருக்கின்றன. வருண பேதங்களும், முரண்பாடுகளும், சம்பிரதாய பேதங்களுமுடைய இந்துக்களெல்லாம் ஆலயத்தின் ஏக சைதன்ய சக்தியில் ஐக்கியப்படுகின்றனர். இத்தகைய மகா மகிமை பொருந்திய ஆலயகருமங்களும், நிர்வாகமுறைகளும் எவ்வளவு தூரம் இலட்சிய சுத்தியோடும், ஆத்மார்த்தத்தோடும்

நடைபெறுகின்றதென்பது இன்று விமர்சன விடயமான ஒன்றாகும். ஆலய குருமார்களும், தர்ம கர்த்தாக்களும் அவ்வாறே ஆலய கைங்கரியங்களை நிர்வகிக்கத் தவறும் பட்சத்தில் ஆலயங்கள் விரைவில் இரவு சந்தைகளாக மாறிவிடும். இதில் பரவலாக காணப்படும் சீர் கேடுகளைத் தகுந்த முறையில் திருத்தியமைப்பதற்கு ஆலய பக்தர்கள் சிரத்தை எடுக்க வேண்டும். தவறினால் வளர்ந்து வரும் நமது பசுமை நிறைந்த இளமுள்ளங்களில் மதத்தைப் பற்றிய தப்பபிப்ராயங்கள் ஏற்பட்டு சூனியவாதிகளாக மாறிவிடுவர். பக்தர்களுடைய பக்தி விசுவாசங்களைத் தவறான வழியில் சுரண்டியெடுத்து ஆலயங்களை வளர்க்கப் பார்ப்பது ஆலயங்களுக்கும், மதத்திற்கும் பெரும் களங்கத்தை ஏற்படுத்துவதாய் இருக்கும்.

இந்துமதம் ஆரம்பமோ முடிவோ இல்லாத ஒற்றயடிப்பாதையைப் போன்றது. நாம் தொடங்குவது தான் தொடக்கம் முடிப்பதுதான் முடிவு. இந்து சமயமானது மனிதர்களுக்குச் சொல்லப்பட்ட கடமைகளை அன்புள்ளத்துடனும், தியாக உணர்வுடனும் செய்யும் போது தான் நன்றாக வளர்கின்றது. நாம் செய்யும் பணி எதுவானாலும் அதில் நல்லொழுக்கம், கொள்கையில் பிடிப்பு, மனப்பூர்வமான ஈடுபாடு ஆகியவற்றை சேர்த்துக் கொள்ள வேண்டும். பக்தி மார்க்கத்திற்கு இவை மிகவும் முக்கியமானது. எங்கும் நிறைந்துள்ள ஆகாயத்தை மேகங்கள் மறைப்பது போல எங்கும் நிறைந்த பரம்பொருளின் தத்துவத்தைக்கூறும் இந்து சமயமும் சிற்சில தீய சக்திகளால் மறைக்கப்பட்டது போல தோன்றுகின்றது. முதன் முதலில் இந்து சமயத்தை வளர்க்கவும், பரப்பவும் விரும்புகின்றவர்கள் முக்கியமாக தங்கள் வாழ்க்கையைச் சுத்தமாக வைத்துக்கொள்வதற்கு பழக வேண்டும். தீயவற்றை தவிர்த்து நல்ல முறையில் வாழ முயல்வது இந்துக்கள் தமது மதம் வளர்வதற்குச் செய்யும் மிகப் பெரிய தொண்டாகும்.

இந்துக்கள் பெரும்பாலானவர்கள் கிராமப் புறங்களில் தான் வாழ்கின்றார்கள். அவர்கள் அஞ்ஞானத்தாலும், வறுமையாலும், அதிகார வர்க்கத்தாலும், மத ரீதியான ஐக்கியத்தை இழந்து கூறு கூறாகப் பிரிந்து கொண்டிருக்கின்றன. நமது மத சங்கங்களும், புகழ்பெற்ற மத இயக்கங்களும் இந்த கிராம இந்துக்கள் மத்தியில் ஒரு கை விளக்கையாவது கொழுத்தி வைக்க முயற்சி செய்ய வேண்டும். அண்மைக் காலங்களில் இந்துக்களின் எண்ணிக்கை கணிசமான அளவுக்கு குறைந்துக் கொண்டு வருகின்றது என்பது ஆழமாக சிந்திக்க வேண்டிய விடயம். இந்து ஆலயங்கள், இந்து கலை கலாச்சாரங்களும் இவற்றிற்கு விதிவிலக்கல்ல. பல தலைமுறைகளால் பழையையே பேணி வரும் அடிமைத்துவ நிலை எங்களுடைய சுய அறிவிலும் சிந்தனையிலும் முரண்பாடுகளையும், மயக்கத்தையும் உண்டாக்கி இருக்கின்றது. இந்நிலையில் நாம் சொந்தக் காலில் நிற்பதற்கும், சுயமாக சிந்திப்பதற்கும், தன்னம்பிக்கையுடன் செயலாற்றுவதற்கும் முயற்சிக்க வேண்டும்.

இன்றைய வாழ்க்கையில் மதத்தின் காரணமாகவே சண்டை சச்சரவுகள் ஏற்படுகின்றன, மதம் இல்லாமல் இருந்திருந்தால் நாட்டில் ஒற்றுமை நிலவக்கூடும் என்ற எண்ணமும் தோன்றலாம். உலக சரித்திரத்தில் பல மகான்கள் தோன்றி பல்வேறு சமயங்களை அமைத்தார்கள். இவை புது சமயங்கள் போலத் தோன்றினாலும் நம்முடைய வைதீக சமயத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை கற்றுத் தெளிந்து தாங்கள் அறிந்த விதமாக விளக்கம் கூறி எடுத்துச் சொன்னார்கள் என்பதே உண்மை. எல்லா மதங்களிலும் அடிப்படையாக நம்முடைய வாழ்வு, பக்தி என்கின்ற ஒரு சமயத்தில் அவசியமான மார்க்கங்கள் தான் அமைந்திருக்கின்றன.ஆகவே வேதத்தின் சாரமே எல்லா மதங்களும்.

சமயங்கள் எல்லாமே இறைவனை நாம் அடைவதற்குத் தான் உதவுகின்றன. அவை நம்முடைய சக்திக்கும், ருசிக்கும் ஏற்ப பிரிக்கப்பட்டிருக்கின்றன. பகவான் கீதையில் "மனிதர்கள் என்னை பலவாறாக எந்த ரூபத்திலும் எப்படி வணங்கினாலும் அவர் அவர்களுடைய பக்தியை நான் வேரூன்றச் செய்வேன்" என்று கூறுகின்றார். இதை அறிந்துக் கொண்டால் சமயம் காரணமாக சண்டை ஏற்பட நியாயமில்லை. வேறுபட்ட சிக்கல்களில் இருந்து ஒருமையை காண நினைப்பதனால் தான் தேசிய ஒருமைப்பாடு ஒரு சிக்கலான பிரச்சினையாகி விட்டது. இதனால் தான் உலக பெரியோர்கள் எல்லோரும் மொழியையும் மதத்தையும் கருதி உலக அமைதியை நிலை நாட்டினார்கள்

எனவோம். **தாய்** மொழியிலும், தாய் நாட்டிலும், தன் சமயத்திலும் பற்றிருக்க வேண்டும். ஆனால் **பிறமொழிகளிடத்திலும்**, பிற சமயங்களிடத்திலும் வெறுப்புணர்ச்சி இருக்கக் கூடாது சமயவெறி **மொழிவெறி**, இனவெறி மனிதனுடைய முன்னேற்றத்தை தடுத்து விடும் .

எனவே இன்றைய இளைஞர்களாகிய நாம் எடுத்த காரியத்தை முனைப்புடன் செய்து முடிக்க வேண்டும். இதற்கு இந்து மதம் வழிகாட்டுகின்றது. இதையே மிக தெளிவாக சுவாமி விவேகானந்தர் கூறுகின்றார்.

"ஒரு கருமத்தை எடுத்துக் கொள், அதையே உன் வாழ்வின் நோக்கமாகக் கொள், எப்பொழுதும் உன் சிந்தனையிலும் கனவிலும், செயலிலும் அதுவே உயிர் துடிப்புடன் இருக்கட்டும். உனது **மூளை**, தசை, நரம்பு ஒவ்வொன்றும் அதை நிறைவேற்றும் வேகத்துடன் செயல்படட்டும். உன்னுடைய நோக்கம் அது மட்டுமே மற்றவற்றை மறந்து விடு."

ஒரு சிறந்த மனிதனையும், சாதாரண மனிதனையும் பிரிப்பது கூட இந்த சிந்தனை ஆற்றல் தான். அதற்காக தியானத்தில் ஈடுபட வேண்டும். அப்போது சிந்தனையைச் செயல்படுத்தும் **துணிவும்**, மனவலிமையும் கிடைக்கும். எண்ணங்களிலும் காரியங்களிலும் தூய்மை பிறக்கும். அது இறுதியில் வெற்றியை கொடுக்கும். இதுவே இந்துவுக்கு இன்றைய தேவையாகவும் இருக்கின்றது.

சுருங்கக்கூறின் இந்து மதத்தின் பல் துறைகளிலும் நிலவி வருகின்ற பாகுபாடுகளும் ஆலய **கைங்கரியங்களிலும்**, நிர்வாக துறைகளிலும் வளர்ந்து வருகின்ற சீர்கேடுகளும், கிராமிய இந்துக்களுடைய பரிதாபகரமான நிலையும், மதமாற்றம் மத அறிவின்மையால் இளம் வயதினர்களுக்கிடைலில் தோன்றிக் கொண்டிருக்கும் தப்பபிப்பிராயங்களும், பூரணமடையாத விஞ்ஞான அறிவால் வரும் சூனியவாதமும், சமயவெறி, மொழிவெறி இவற்றிற்கு மேலாக மேற்கத்திய விழுமியங்களைப் பற்றிக் கொண்டு எம்மை நாமே இழிவாக பார்க்கும் இழிந்த நிலை போன்றவற்றிற்கு முடிவுகாணும் வண்ணம் சக்தி வாய்ந்த ஒரு மார்க்கத்தை கண்டறிய வேண்டியிருக்கின்றது. இதற்கு தியானம், பயிற்சி, இளைஞர்களின் கூமையுணர்வு, மனவுறுதி, ஒழுக்கம் என்பன இன்றியமையாததாகின்றது. இது தான் இன்றைய தேவையும் நோக்கமும் ஆகும். இந்து என்ற அபிமானமும, மனப்பூர்வமான இருதயமும் இருக்குமாயின் இதற்குரிய சக்தி நம்மிடமே இருக்கின்றது. எங்கள் கலை, கலாச்சாரத்திற்கு முத்துமணிகளாய் இருப்பவைகளைப் பேராபிமானத்துடன் தயங்காமல் ஏற்றுக் கொள்ளும் பொழுது எங்களுடைய குக்கும சரீரத்தில் ஒரு சுதந்திரமான யதார்த்த இந்து உருவாகுவான் என்பது திண்ணம்.

உசாத்துணை

- இந்துமதம் பதிலளிக்கிறது – எஸ் லட்சுமி சுப்பிரமணியம்.
- இந்துசமய தத்துவங்கள் 500 – பி எஸ். ஆச்சார்யா
- இந்துதர்ம சாஸ்திரங்கள் – பி எஸ். ஆச்சார்யா
- வீர இளைஞருக்கு – சுவாமி விவேகானந்தர்
- ஞான மண்டலம் – ஸ்ரீமத்சுவாமி கெங்காதாரானந்தா

இந்து மதம்

செல்வி து. விஜயரேணுகா தமிழ்ச்சிறப்புக் கலை 3ம் வருடம்.

இந்து மதம் உலகப் பிரசித்தி பெற்ற மதங்களுள் ஒன்றாக விளங்குகிறது. உலகெங்கும் பரந்து வாழும் பேரறிஞர்களின் சிந்தனையைக் கவரவல்ல உயரிய அம்சங்கள் உள்ளதாகவும் இது விளங்குகின்றது. மேலைத் தேசத்தவர்களும் இம்மதப்பண்பாட்டுச் சிறப்புக்களால் கவரப்பட்டு, நாளடைவில் இந்து மதச் சிந்தனைகளில் மூழ்கத் தொடங்கினர்.

வாழ்க்கையில் மனிதனுக்குப் பல தேவைகள் ஏற்படுகின்றன. மனிதனின் வாழ்க்கைப் பிரச்சினைகள் தேவை, பயம் தொடர்பானவையாகக் காணப்படுகின்றன. இவ்விரு இன்னல்களையும் போக்குவதற்கே மக்கள் இறைவனை நாடுவார்கள். இவர்களது வேண்டுதல்களை நிறைவேற்றும் வகையிலேயே இந்துமதம் அமைந்துள்ளது. தேவைகளை வழங்குவதும், பயத்தை நீக்குவதும் தெய்வத்தின் இயல்புகள் இவ்வியல்புகளை வெளிப்படுத்தும் வகையிலேயே இந்துத் தெய்வங்களின் வரலாறுகள் கூறப்படுகின்றன. மேலும், இவ்வரலாறுகளின் வெளிப்பாடாகி, வடிவந்தாங்கி வழிபாட்டிற்காக இந்து ஆலயங்களில் காணப்படும் தெய்வங்கள் "பயப்பட வேண்டாம்" என உணர்த்தி நிற்கும் அபயகரத்தையும், "தேவைகளைத் தருகிறேன்" எனச் சுட்டி நிற்கும் வரதகரத்தையும் காட்டி நிற்கின்றன.

இறைவன் எங்கும் என்றும் நிலைத்து நிற்பதனால் "சத்" எனப்படுவான். இமைப் பொழுதும் நெஞ்சில் நின்றும் நீங்காதவனாய், மனதில் அறிவு, சிந்தனை ஆகியவற்றைப் பெருக்கவல்ல ஞானவடிவினன் ஆதலால் "சித்" எனப்படுவான். எப்பொழுதும் இன்பமயமானவனாய் உள்ளத்தில் பேரின்பம் பெருக்கும் இயல்பு படைத்தவன் என்பதால் "ஆனந்தம்" எனவும் சுட்டப்படுவான். இந்துசமயச் சாத்திர நூல்கள் மட்டுமே இறைவனைச் சச்சிதானந்த சொரூபியாக வருணிப்பன. இத்தகைய உயர்வு தந்து, இறைவனைப் பரிபூரண நிலையில் உள்ளத்திலிருத்தித் தியானிக்கும் வாய்ப்பு, இந்து நெறி நிற்பவருக்கே உரியது.

இந்து மதத்திற்குப் பெரும் புகழ் ஈட்டித்தருவது, அதன் பரந்த நோக்காகும். இந்து சமயத்தைச் சார்ந்தோருக்குப் பலவகைச் சுதந்திரங்கள் இருப்பதை அவதானிக்கலாம். இந்து மதத்தினர் ஒவ்வொருவரும் தாம் கடைப்பிடிக்க இருக்கும் சமய உள்ளமைப்புக்களைத் தானே தெரிந்தெடுக்கவும், தன் இஷ்ட தெய்வத்தை தான் விரும்பியபடி வழிபடவும் இந்து மதத்திற்குரிய பல்வகை வழிபாட்டு முறைகளுள் தனக்கு உகந்தது எனத் தென்படும் முறையைத் தெரிந்து கடைப்பிடிக்கவும் ஒருவருக்கு உரிமை உண்டு. இந்து மதத்தில் காணப்படும் இன்னொரு சிறப்பு, வேறு மதங்கள், இயக்கங்கள் ஆகியவற்றில் காணப்படும் நற்பண்புகளைத் தெரிந்து தனதாக்கிக் கொள்ளலாகும்.

இந்து மதத்தில் "யாதொரு தெய்வங்கண்டீர் அத்தெய்வமாகி" என்ற பாடல் கூறுவது போன்று, எத்தெய்வத்தை வழிபடினும், அத்தெய்வமாகி அருள் சுரப்பர் மாதொரு பாகன் என்ற கருத்து பரந்த கண்ணோட்டத்தைப் புலனாக்குகிறது.

சமயம், நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டது. இவ்வடிப்படை, உலகச் சமயங்கள் எல்லாவற்றுக்குமே பொதுவானது. தெய்வத்தை ஊனக்கண்ணால் காணமுடியாத நிலையில், தெய்வம் உண்டென்ற நம்பிக்கை, தெய்வத்தின் பேராற்றலில் நம்பிக்கை, எல்லாம் தெய்வத் திருவருளாலேயே நிகழ்கின்றன. தெய்வத்தாலேயே எல்லாவித நன்மைகளும் உண்டாகின்றன. தெய்வத்தை விட வேறு புகலிடம் இல்லை என்பதில் உறுதிப்பாடு ஆகியன சமயங்கள் எல்லாவற்றுக்கும் உள்ள பொது அமிசங்களாகும்.

இந்நிலையில் இந்துசமயம் இறைவனை அணுகவும், அவன் திருவருளைப் பெறவும் உபாயங்களை வழங்கி, தன் எல்லைக்குள் நின்று உரியவாறு வழிகாட்டும். தெய்வம் பற்றிய பல விபரங்களை, அவரவர் நிலைக்கேற்ப இந்திரியங்களால் கிரகிக்கக்கூடிய வகையிலும், அகக்கண்ணால் பார்க்க இயலாதவர்க்குப் புறக்கண்ணால் கண்டு அனுபவிக்கக் கூடிய திருவுருவங்களாகவோ, ஓவியங்களாகவோ வடிவம் கொண்டு, நேரே பார்க்கவும் வழிபடவும் கூடிய வகையில் வாய்ப்புக்களை இந்துசமயம் அமைத்துள்ளது.

இந்து மதத்திற்குத் தனிச்சிறப்புத் தருபவை புருடார்த்தங்கள் ஆகும். இந்துமத நெறி நிற்பவன் ஒவ்வொருவனும் புருடனே. அர்த்தம் என்பது இலட்சியம் எனப் பொருள் பெறும். சமய அடிப்படையில் கூறப்படும் இலட்சியங்கள் வாழ்க்கையைச் சிறப்பானதாகவும், பயனுள்ளதாகவும் அமைக்க வழிவகுக்கும். அறம், பொருள், இன்பம், வீடு என்பனவே இலட்சியங்களாகும். இவை இந்துக்களின் இவ்வுலக வாழ்க்கையை மட்டுமல்லாமல், மறுவுலக வாழ்க்கையையும் சிறக்கச் செய்வனவாகும்.

மனிதனுடைய உயர்ந்த பண்புகளான ஒற்றுமை, அன்பு, பொதுநலம் முதலானவற்றை வளர்க்கச் செய்வதுதான், சமயம். வாழ்க்கையோடு நெருங்கி, இணைந்த சமயம், கலைகள் வளரவும், பண்பாட்டு நாகரிகத்தைப் பேணவும் சிறப்பிடம் அளிக்கின்றது.

"மதம்" என்ற வார்த்தையின் பொருள், அது எல்லோரையும் ஒன்றுபடுத்தும் ஒரு சக்தி என்பதாகும். ஆனால் ஒவ்வொரு மதமும் தான் கண்டதே முடிவு, தன் கொள்கைக்கு ஈடே இல்லை என்று சாதிப்பதால் ஏற்படும் பலன், ஒவ்வொரு மதமும் மற்றொன்றைத் தன் நேர் எதிரியாக பாவிப்பதுதான்.

பிரசாரத்தையே முக்கிய நோக்கமாகக் கொண்ட சில மதங்கள் உயர்வில் தமக்கு இணையான மதமே இல்லை என்ற உறுதியான நம்பிக்கை கொண்டவை. எங்கள் கொள்கைகளில்தான் உயர்ந்த உண்மை இருக்கிறது என்று அவை வாதாடுகின்றன. ஆனால், இந்துமதம் எவ்வித வாதாட்டத்திலும் கலந்து கொள்ளாமல் தமது கொள்கைகள் இலட்சியங்களை மனித வாழ்க்கையின் ஊடாக வெளிப்படுத்தி வருகின்றது.

> பொறுமையும் விடா முயற்சியும் உள்ளவர்கள் சிரமங்கள் என்னும் மலைகளை மதித்தே கடந்துவிடுவார்கள்.
>
> – காந்திஜி

கல்லிலே கடவுள் இல்லையா?

செல்வன். சி. தனபாலசிங்கம், பொருளியல் சிறப்புக் கலை, 3ம் வருடம்

அலையிலே சிக்குண்ட துரும்பாய் உலகியல் வாழ்வில் அல்லற்பட்டுக் கொண்டு திரியும் ஆன்மாக்களைச் சிறிதளவேனும் சாந்தமாக வாழ்க்கையினை அனுபவிக்கத் தூண்டுகோலாக நிற்பது சமயங்களே. இந்த வரிசையில் ஆன்மீக வாழ்க்கையினூடாக மனிதனைச் சாந்தியும் சமாதானமும் கொண்ட நல்ல ஜீவனாக உலகில் நெறிப்படுத்தி நிலை நிறுத்துவதில் இந்துமதம் முதன்மை பெறுகின்றது.

இறைவழிப்பாட்டில் ஆலய வழிபாடென்பது உலகளாவிய ரீதியில் மிக பரந்துப்பட்டதோர் விடயம். இந்து சமயம் இந்த ஆலய வழிப்பாட்டின் உன்னதமான நிலையில் பொலிவுடன் திகழ்கின்றது. ஏனைய சமய வழிபாட்டுத் தலங்களுடன் ஒப்பிடும் போது, இந்துமத வழிபாட்டுத் தலங்கள் முற்றிலும் மாறுபட்ட தன்மையினையும் வேறுபட்ட அமைப்பினையும் கொண்டவையாகக் காணப்படுகின்றது. இந்தமத வழிபாட்டுத் தலங்கள் முற்றிலும் மாறுபட்ட தன்மையினையும் வேறுபட்ட அமைப்பினையும் கொண்டவையாகக் காணப்படுகின்றன. இந்துமத ஆலய வழிபாட்டின் சிறப்பான தன்மைக்கு கோயில் அமைப்புக்களே முக்கிய காரணம். இதற்கு அடிப்படையாக அமைவது ஆகமங்களாகும். ஏனைய வழிபாட்டு தலங்களுக்கில்லாத ஒரு சிறப்பினை ஆகமங்கள் இந்துக் கோயில்களுக்கு வழங்குகின்றன. ஏனெனில், ஆகம விதிகளுக்கு ஏற்பவே இந்துக் கோயிலின் அமைப்பு காணப்படுகின்றது. இவ்வாறான விதிமுறை ஏனைய சமய வழிபாட்டு தலங்களுக்கு இல்லை.

வெறுமனே வழிப்பாட்டுத்தலமாக மட்டுமன்றி, உலக படைப்புக்கள் அனைத்துக்கும் காரணமான இறைவனின் தூலமயமான சக்தி சேகரித்து வைக்கப்பட்டிருக்கும் ஒரு கருவூலமாகவே இந்து ஆலயம் திகழ்கின்றது. இந்துக்களைப் பொறுத்தமட்டில் இறை சக்தி இல்லாத இடமே இல்லை. ஆனால், இந்த இறைசக்தியும் ஓர் விதிக்கு உட்பட்டு செயற்படுகின்றது. எங்கும் வியாபித்துப் பரவி நிற்கும் இறை சக்தியினைத் தேவையறிந்து ஓர் இடத்தில் தேக்கி வைத்து, ஆன்மாக்களுக்கு அச்சக்தியினால் முழு கருணை வழங்குவதும் ஞானத்தினைக் கொடுப்பதுமே ஆலய வழிப்பாட்டின் நோக்கமாகவும், ஆலய அமைப்பின் விளக்கமாகவும் காணப்படுகின்றது.

கடவுளினது சக்தியின் வல்லமையினை அளவிடுவதனை விடுத்து, தேவைக்கேற்றவாறு அதை ஓரிடப்படுத்தி பாதுகாப்பாகக் கொண்டு வர நம் முன்னோர் பல வழிகளையும், கிரியை முறைகளையும் கொண்டிருந்தனர். சக்தியின் பல்வேறு வடிவங்களான சூரியஒளிச்சக்தி, ஒலிச்சக்தி, என்றுமே அழியாத மின்சாரம், அணுச்சக்தி போன்றவையெல்லாம் சிவத்தினது சக்தியின் தோற்றங்களில் நிலைக் கொண்டவை என்பதனை நம்முன்னோர் அறிந்து வைத்திருந்தனர். இறைவனுடைய சக்தி மனிதனுடைய செயற்பாடுகளுக்கு எல்லாம் மேலானது என்பதனை, இந்தச் சக்திகள் மனிதனின் கட்டுப்பாட்டிற்கு அப்பாலும், செயற்படுவதிலிருந்து நாம் கண்டு கொள்கிறோம். இன்று இந்துக்களைப் பொறுத்த வரை, கண்கண்ட தெய்வமாக எல்லோருக்கும் வாழ்வளிப்பவன், சூரியன். இது வேதங்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. எல்லோரையும் கிலி கொள்ளச் செய்யும் வல்லமை பொருந்தியது, மின்சாரம். சோகமான வேளையிலும் உள்ளத்தினைக் கொள்ளை கொள்வது தெய்வீக இராகம் கொண்ட ஒலியிலான இசை எனவே தான், இறைவனின் பெருமையினை,

"ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே!
உலகிற்கொருவனாய் நின்றாய் நீயே!"

என்றும் இறைவன் நாத வடிவம் கொண்டவன் என்றும் திருநாவுக்கரசு சுவாமிகள் குறிப்பிடுகின்றார்.

இதனையே மாணிக்கவாசக சுவாமிகளும் "நமச்சிவாய வாழ்க நாதன் தாழ் வாழ்க" என்று ஆமோதிக்கின்றார். நாதன் என்பது நாதத்தின் (இசையின்) வடிவாக இருப்பவன் இறைவன். எனப் பொருள் கொண்டு விளக்கப்படுகின்றது. "உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற" என்ற சிவபுராண வரிகளும் இந்த இசையின் வசமான உலகத்தினையும் அந்த இறைவனின் பெருமையினையும் வலியுறுத்துகின்றது.

இந்தச் சக்திகள் அனைத்தும் இறைவனின் சக்தி என உணரப்பட்டதன் விளைவாக, அவற்றினை மக்களும் பயன்படுத்தவே ஆலயம் என்பது உருவாக்கப்பட்டது. எனவே கோயில்கள் வெறுமனே கற்களாக மட்டுமன்றி, இறைவனின் சக்தியின் கருவூலமாகவும் விளங்குகின்றது. இந்த ஆலயங்களின் நிர்மாணம்பற்றி ஆகமங்கள் விரிவாக எடுத்துக்கூறுகின்றன. இந்து ஆலயக் கட்டிட நிர்மாணம், விக்கிரகங்களை உருவாக்கல், அவற்றினை ஒழுங்கின் பிரகாரம் ஆலயத்தில் நிலை நிறுத்துதல், இதன் பொருட்டு செய்ய வேண்டிய முன்னோடியான செயல்கள் எல்லாம் சிற்ப சாஸ்திரம்,ஆகமம், வாஸ்து சாஸ்திரம், என்பனவற்றில் முறைப்படி தொகுத்து வைக்கப்பட்டுள்ளன.

முற்காலத்தில் கருங்கல்லினால் கட்டப்பட்ட ஆலயங்கள் சரித்திரப் புகழ் வாய்ந்தவை.சிற்ப சாஸ்திரம், ஆகம நூல்களில் குறிப்பிட்டுள்ள ஒழுங்கின் பிரகாரமே இக்கோயில்கள் கட்டப்பட்டு பராமரிக்கப்பட்டு வந்ததனாலேயே, இவை இன்றும் சிறப்புடன் திகழ்கின்றன. இன்றைய விஞ்ஞானக் கோட்பாடுகள் கூட, இன்று காணப்படும் மிகப் பழைமை வாய்ந்த இந்து ஆலய அமைப்பில் பல உண்மைகள் உள்ளடக்கப்பட்டிருப்பதனை முரண்பாடுகள் ஏதுமின்றி ஏற்றுக் கொள்கின்றன. இத்தகைய பெருமை கொண்ட இந்து ஆலயங்களில் நாம் காண்பது கருவறை எனப்படும் "கர்ப்பக்கிருகம்" (மூலஸ்தானம்), தெய்வத்திருவுருவங்கள், அத்துடன் ஆலயத்திற்குரிய மணி இவை மூன்றும் கோயிலில் மிக மிக அவசியமானவை. இந்த விக்கிரகங்கள் கருங்கல்லினாலோ; செப்பு உலோகத்தினாலோ; அபூர்வமான மரத்தினாலே; செய்யப்பட்டு, ஆலயத்தில் நிலை நிறுத்தப்படுகின்றன. கல்லில் வடிக்கப்படும் திருவுருவங்கள் ஓர் இடத்தில் நிலையாக, மீண்டும் எடுக்கமுடியாதபடி குறிப்பிட்ட ஆண்டுக்காலம் வரை இருக்கும்படி பிரதிஷ்டை செய்யப்பட்டவையாகும். செம்பு, வெண்கலம் போன்றவற்றினால் செய்யப்பட்டவை உற்சவ மூர்த்திகள் எனப்படும். இவை அடிக்கடி ஆலய விழாவின் போது இடம் மாற்றியோ, வெளியில் எடுத்துச் செல்ல வசதியாகவோ, இருப்பதற்காக ஆக்கப்பட்டவை.

மலைப்பிரதேசங்களில் நின்று ஒலி எழுப்பினால் எதிரொலி கேட்கின்றது. கல்லின் இயல்பு ஒலிமயமானது அது ஒலியினைப் பிரதிபலிக்கும். அத்துடன், ஒலித் தன்மையினை பெரிதுபடுத்திக் காட்டும். சில கோயில்களில் காணப்படும் இசைத்தூண்களும் இந்தத் தத்துவத்தினை அடிப்படையாகக் கொண்டே உருவாக்கப்பட்டன. எனவே, நாத வடிவினனான இறைவனின் ஒலித்தன்மையினை பிரதிபலிக்கும் கல்லில் உருவகப்படுத்தப்படுகின்றது. ஒலி வடிவிலான மந்திர உச்சாடனங்களினால் இந்த கல்லினாலே உருவாக்கப்பட்ட உருவங்களில் இறைவனின் சக்தி கிரகித்து நிறுத்தப்பட்டு ஆலயங்களில் வைக்கப்படுகின்றது. கும்பாபிஷேகத்தில் இச்செய்கை முக்கியமானதொன்றாகும். கல்லானது எல்லாவிதமான பௌதீக, இரசாயனத் தாதுப் பொருட்களின் செயற்கையாகவே காணப்படும். இது காலப் போக்கில் மாற்றத்திற்கு உட்படும் தன்மை உடையது. எனவே, இறைவனின் உருவத்தினை வடித்தெடுக்க கல்லை பரிசோதித்து தெரிந்தெடுக்க வேண்டும். கல்லிலான

விக்கிரகங்களை வைக்கும் பீடமும் கல்லினாலே ஆக்கப்பட வேண்டும். பீடத்திற்கும் விக்கிரகத்திற்கும் இடையில் மதிப்பு மிக்க உலோகங்களும் இரத்தினங்களும் இறை சக்திக்குரிய மூலமயமான இயந்திரத் தகடும் வைக்கப்படுவது வழக்கம். பீடமும், விக்கிரகமும் வேறுபடாதபடி சில இரசாயனக் கலவைகளும் பூசப்படுகின்றன.

தெய்வீகச் சக்தி பூமியிலிருந்தும் விக்கிரகங்களில் இருந்தும் இணைந்து இயங்குகின்றது. கல்லிலான விக்கிரகத்தில் எவ்வேளையிலும் "ஓம்" என்ற பிரணவ மந்திரம் ஒலிப்பதற்காகவே இயந்திர தகடு வைக்கப்படுகின்றது. அர்ச்சனைச் செய்யும் போதும் பூஜை செய்யும் போதும் ஓதப்படும் மந்திர சக்தி விக்கிரகத்தில் பிரதிபலிக்கப்பட்டு, அதன் எதிரொலி எங்கும் அலையாகப்பரவுகின்றது. பூசைக்காலங்களில் மணி அடிப்பதன் தத்துவமும், பிரணவ நாதமாகிய ஓங்காரம் எங்கும் பரவி மக்களை ஆலயம் நோக்கி ஈர்ப்பதற்கான ஏற்பாடாகவே காணப்படுகின்றது.

கல் விக்கிரகங்களில் பல பொருட்களைக் கொண்டு அபிஷேகம் செய்யப்படுகின்றது. தேன், தயிர், இளநீர், பால் பழம், நீர் என்பன விக்கிரகத்தில் படிந்து, அவற்றின் மூலம் நுண்ணிய இரசாயன மாற்றங்கள் விக்கிரகங்களில் ஏற்படுகின்றன. அபிஷேகம் செய்யப்படும் பொருட்களுடன் அதிகமானப் பொருட்கள் இந்த விளைவின் காரணமாக கலந்து விடுகின்றன. இவற்றினை (பஞ்சாமிர்தம்) உண்ணும் போது எமது உடலுக்கும், உள்ளத்திற்கும் வலிமை ஏற்படுகின்றது. மனமும் தெளிவான சாத்துவீக நிலையினை அடைகின்றது. இவற்றினை உண்ணுவதன் மூலம் இறைவனின் சக்தியினையும் சேர்த்தே உட்கொள்கின்றோம். இதன் மூலம் "சிலா சத்து" என்ற சக்தி உடலுக்கு கிடைக்கின்றது. இந்த "சிலா சத்து" வைத்தியத்துறையிலும் பெரிதும் மதிக்கப்படும் ஒன்றாகக் காணப்படுகின்றது.

ஆறுபடை வீடுகளில் ஒன்றான பழனியில் உள்ள முருகனின் விக்கிரகம் "நவபாஷானம்" எனப்படும் உயரிய கல்லினால் உருவாக்கப்பட்டதென்று கூறப்படுகின்றது. அந்த விக்கிரகத்தினை அபிஷேகம் செய்யப் பயன்படும் பொருட்கள் எவ்வளவு காலமானாலும் பழுதடைந்து போவதில்லை என்பது உலகறிந்த விடயம்.

வீட்டில் அம்மி, ஆட்டுக்கல் என்பவற்றினை நாம் பயன்படுத்துவது சிலாசத்தினைப் பெறும் நோக்குடனேயே என்பதனைத் துணிந்து கூறலாம். முற்கால ஆலயங்கள் அனைத்தும் கல்லினாலே அமைக்கப்பட்டன. கல்லானது உஷ்ணத்தையும், வெயிலையும் விரைவில் கிரகித்துக் கொள்ளும் தன்மை கொண்டது. அபிஷேகத்தின் மூலம் குளிர் நிலையினையும்; கர்ப்பூர தீபம், ஆரத்தி மூலம் உஷ்ண நிலையினையும் மாறி மாறி பூசைக் காலத்தின் போது விக்கிரகங்கள் அடைகின்றன. இதன் மூலம் இறை சக்தி வெளிப்பட்டு, எமக்கு நன்மைகள் ஏற்படுகின்றன. வேதம் திருமுறை ஓதல், புராணபடணம் என்பன ஒலி வடிவான இறை சக்தியைப் பிரதிபலிக்கச் செய்து நன்மை பெறுவதற்கேயாகும்.

ஆலயங்களில் இசைக்கப்படுகின்ற வீணை, மத்தளம், நாதஸ்வரம், சங்கு, தாளம், முரசம் என்பன இறை சக்தியினை வெளிப்படுத்தும் வழிமுறைகளாகும். ஒலி வடிவிலான இறைவனது சக்தியினை இசையின் மூலம் பிரதிபலிக்கச் செய்யும் நோக்குடனேயே இவை பூசையின் போது பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஆலய விக்கிரகங்கள் கல்லினாலே உருவாக்கப்படுகின்றன. இந்த விக்கிரகங்கள் இந்து சமயப் பண்பாட்டின் உயர்வினை விளக்குகின்றன. இந்து சமயம் மட்டுமே இத்தகைய விக்கிரக வழிபாட்டில் முழுமை நிலையினை எய்தியிருக்கின்றது என்றால் அது மிகையாகாது.

நாவலர் என்ற மானுடன்

செல்வன். கு. சோ. செந்தில் குமார், இரண்டாம் வருடம், விஞ்ஞான பீடம்.

தொன்மையும் நீண்ட கால வரலாறும் கொண்ட கலாசாரப் பாரம்பரியத்தையுடைய இலங்கைத் தமிழ் மக்கள் கி. பி. 17ம் நூற்றாண்டளவில் தம்முடைய ஆதிக்கத்தையும் சுயாதீனத்தையும் இழக்க வேண்டி நேர்ந்தது. ஐரோப்பிய ஏகாதிபத்திய நாடுகளின் படையெடுப்பும், அதன் பயனாகப் புகுத்தப்பட்ட அந்நியக் கலாசாரம், வேற்றுமதம், பிறமொழி, அடிமை உத்தியோகங்கள் என்பவற்றின் மீது எம்மவர் கொண்டிருந்த மோகமும் இந்நிலைக்கு காரணங்களாக அமைந்தன. அவலம் நிறைந்த இக்கால கட்டத்தில் தோன்றியவர் தான், ஸ்ரீலஸ்ரீ.ஆறுமுகநாவலர். அவருடைய காலம் 1822–1879 ஆகும். அவர் அத்தருணத்தில் தோன்றியிருக்காவிட்டால், இப்போது நாம் காணுகின்ற, உணருகின்ற சைவத்தையோ, எமது தமிழ் கலாச்சாரப் பண்பாடுகளையோ கண்ணுற்று இருக்க மாட்டோம். அவர், தனி மனித இயக்கமாக நின்று, சைவசமயத்திலும் தமிழ்க் கலாச்சாரத்திலும் புகுந்திருந்த கலைகளை நீக்கவும் மங்கி மறைந்து கொண்டிருந்த சைவத் தமிழ்க் கலாசாரத்தை மறுமலர்ச்சியடையச் செய்யவும் அரும் பணியாற்றினார். அவர் சைவத்தின் ஐந்தாங் குரவர் என போற்றப்படுகிறார்.

இன்றைய இளஞ்சந்ததியினரில் பலர் நாவலர் என்று ஒரு மகான் ஈழத்தில் வாழ்ந்து, சைவத்தையும் தமிழையும் பாதுகாத்தார் என்ற உண்மையை அறியாது உள்ளமை பெரும் கவலையைத் தரும் செய்தியாகும். எல்லோரும் நாவலரைப் பற்றி அறிய வேண்டும் என்று ஏன் நான் கூறுகின்றேன் என்றால், அறிஞர் பெருமக்கள், போற்றுதற்குரியவர்கள் என்போர் போற்றப்படாத நாட்டில், மீண்டும் அறிஞர் பிறக்கமாட்டார்கள் என்பதனால் ஆகும். நாவலர் பெருமான் வாழ்ந்த காலத்திலும், பிற்காலத்திலும் வாழ்ந்தவர்களே அவரைப் பற்றி பொதுமக்கள் அறியாமைக்கு காரணமானவர்கள். அதுமட்டுமல்ல இவர்கள் அவர் பற்றிய செய்திகளை உண்மைகளை திரித்தும் கூறியுள்ளனர். இவர்களுள் படித்த மேதாவிகளும் அடங்குவர். நாவலர் பற்றிய நல்ல செய்திகளைப் பரப்பாது, நவநாகரீக காலமாற்றத்துக்கு நாவலர் பெருமான் விரோதமானவர், சாதி வேற்றுமை பாராட்டியவர் என்ற கருத்துக்களையே மக்கள் மத்தியில் வேண்டுமென்றே தூவி விட்டனர். இதுவும் நாமம் மக்கள் மத்தியில் மறைவதற்குக் காரணமாகும். பண்டிதமணி சி. கணபதிபிள்ளை போன்ற ஒரு சிலர், நாவலரின் உண்மைச் சரித்திரத்தை அறிய முயன்றனர். அவரைப் பற்றியோ, அல்லது அவர் செய்த தொண்டுகள் பற்றிய தகவல்கள் பேணப்படாத நிலையில் தற்போதைய இளஞ்சந்ததியினருக்கு ஆதாரபூர்வமாக அவரைப் பற்றி கூறமுடியாமல் உள்ளது. எனினும், சில பதிப்புக்களில் சிறு பகுதிகளாக உள்ள அவர் பற்றியே தகவல்களைப் பொறுக்கி எடுத்து, இக்கட்டுரையில் கூறலாம் என நினைக்கின்றேன்.

நாவலர் பெருமான் 1822ஆம் ஆண்டு மார்கழி மாதம் 18ம் நாள், யாழ்ப்பாணம் நல்லூரில் பிறந்தார். இவரது குடும்பத்தினர் நல்லூர் கந்தனையே தங்கள் குலதெய்வமாகக் கொண்டவர்கள். இவரது தந்தையார் கந்தப்பிள்ளை; தாயார் சிவகாமிப்பிள்ளை. இவருக்கு ஐந்து சகோதரர்களும் ஆறு சகோதரிகளும் இருந்தனர்.நல்லூர், யாழ்ப்பாணத் தமிழ் அரசின் தலைநகராக விளங்கிய காலம் ஒன்று இருந்தது. அதன் பின்னர், நல்லூர் கந்தசாமி கோயில் சைவ சமயத்தினரின் இருதய ஸ்தானமாய் விளங்குவதற்கு, நாவலர் எடுத்த முயற்சியே காரணமாகும். நல்லூரை மையமாக வைத்து சைவத்தை மறுமலர்ச்சி செய்வதே நாவலரின் குறிக்கோளாய் இருந்துள்ளது. இதனால், அப்போதைய நல்லூர் கோயில் தர்மகர்த்தாக்கள் நாவலரின் கண்டனத்துக்கு உட்படுத்தப்பட்ட

சம்பவங்களும் உள்ளன. தமது குறிக்கோளை நிறைவேற்ற நைட்டிகப் பிரமச்சாரியாகவே அவர் வாழ்ந்தார். அவருக்கு தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் நல்ல புலமை இருந்தது. யாழ்ப்பாண மக்கள் தற்போது பின்பற்றுகின்ற கந்த புராணக் கலாசாரத்திற்கு வித்திட்டவர், நாவலர் பெருமான் ஆவார்.

இவர் நல்லூர் வை. வேலாயுதம் முதலியார் , இருபாலை சேனாதிராய முதலியார், நல்லூர் ம. சரவணமுத்துப் புலவர் ஆகியோரிடம் தமிழ் பயின்றுள்ளார். தமது ஆங்கில கல்வியை யாழ் மெதடிஸ்த கல்லூரியில் பெற்றார். அதன் பின், அங்கு தமிழ் ஆசிரியராக பணிபுரிந்தார். கிறிஸ்தவ மிஷனரிமார்கள் பாடசாலைகள் மூலம் கிறிஸ்தவக் கல்வி, மேலைநாட்டுப் பழக்கவழக்கங்கள் பரப்பப்படுதல் மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருந்த காலம், இவரது காலம். அதனால், சைவ சமயக்கல்வியறிவு குறைந்துக் கொண்டு சென்றது. இதே போல், தமிழ் படிப்பதை நிறுத்தி, ஆங்கிலக்கல்வியில் அக்கறை செலுத்தும் போக்கும் பெருகியக் காலம் இவற்றையெல்லாம் கண்டு பொறுக்காத நாவலர், சைவ தமிழ்க் கல்வியைக் கற்பிக்க ஆரம்பித்தார். காலையிலும் பிற்பகல் நேரத்திலும் மாணவர்களைக் கூட்டி, சைவசமயம், தமிழ் ஆகிய பாடங்களை இலவசமாக படிப்பித்தார். பின்னர், கிறிஸ்தவ மிஷனரிமாரின் பலத்த எதிர்ப்புக்கு மத்தியில் 1848ல் வண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலையை நிறுவினார். இதை நடத்துவதற்கு அரசாங்கத்திடம் பணம் கேட்ட வேளையில், இப்பாடசாலை கிறிஸ்தவமத பிரசாரத்துக்குத் தடைக்கல்லாக அமைய இருப்பதை உணர்ந்து பணம் தரஆங்கில அரசு மறுத்தது. மிகவும் கஷ்டப்பட்டு, பிடியரிசிப் பெற்று, அதனை விற்றுப் பெற்ற பணத்தின் மூலம் சில ஆசிரியர்களுக்குச் சம்பளம் வழங்கப்பட்டது. சில காலம் சென்ற பின், நாவலரின் விடாமுயற்சியினால், தனியார் சிலர் தமது சொந்தப்பணத்தைக் கொடுத்துப் பாடசாலையைத் தொடர்ந்து இயக்க உதவினர். காவியப் பாடசாலையையும் நிறுவி, மரபு தமிழ் கல்வியை விருத்திச் செய்தார்.

இவர் தமது கன்னிப்பிரசங்கத்தை 1847 டிசம்பர் 31ஆம் நாள் வண்ணைச் சிவன் கோவிலில் நிகழ்த்தினார். இதனை தொடர்ந்து, யாழ்ப்பாணத்தின் பல பாகத்திலும் தமது வாய்ச் சொல் வன்மையால் சைவ சமய அழிவு எதிர்ப்பு பிரச்சாரத்தை நிகழ்த்தியுள்ளார். சம்பள உயர்வுக்காகவும், நல்ல உயர் பதவிகளை வகிப்பதற்கும், கிறிஸ்தவ மதத்துக்கு மாறி, தமது பெயர்களையும் மாற்றிப் பலர் வாழ்ந்த காலத்தில் நாவலர் தொடர்ந்தும் சைவ சமயியாக வாழ்ந்திருந்தமைக்கு அவர் தமது அதிபராக இருந்த ஜோன் வால்ரன் பாதிரியாருக்கு 1856ல் எழுதிய மடல் சான்று பகர்கின்றது. அதில் ஒரு பகுதி பின்வருமாறு:

"நான் ஞானஸ்நானம் பெற்றிருந்தால் என்னுடைய சேவையின் மாதச் சம்பளம் பத்து பவுண் அது பெறாததால் எனக்கு மாதம் முப்பது ரூபாய் மட்டும். இங்கு ஏழு பவுண் தியாகம் செய்யப்படுவதை நீர் காணலாம்."

பிற மத வெள்ளத்தால் சைவம் அடித்துச் செல்லப்படுவதை தடுத்து அணை போடும் இவரது முயற்சி, இலங்கையில் மட்டும் நின்று விடவில்லை, இந்தியாவிலும் தொடர்ந்தது. இவர் அடிக்கடி இந்தியா சென்று வருவார். அவரது குறிக்கோள் சிதம்பர தரிசனம். ஈழத்து மக்களுக்கு சிதம்பரத்தில் அதிக நாட்டம் இருந்துள்ளது; இருந்தும் வருகின்றது. அத்தோடு, சிதம்பரத்திலும் சைவ தமிழப் பாடசாலையை நிறுவும்படி தமிழ் நாட்டவர்களை வேண்டினார். அதற்கு அவருக்கு ஆதரவு கிடைக்கவில்லை. உடனே தமது சொந்தச் செலவில் பள்ளிகூடம் ஒன்றை நிறுவினார்.

"யான் பெற்ற இன்பம் பெருக இவ்வையகம்",

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாரே"

என்ற திருமூலர் திருமந்திரத்துக்கு அமைய தாம் கற்ற சைவத்தையும் தமிழையும் பிறருக்கு கொடுக்க வேண்டும் என்ற ஆவலே அவருக்கு இருந்தது. சிதம்பரத்தில் இப்பள்ளி 1864 ஐப்பசி 28ல் நிறுவப்பட்டதாகக் கூறப்படுகின்றது. இவரது தீவிர சமய நாட்டம் இலங்கையில் மட்டுல்ல, இந்தியாவிலும் பகையை இவருக்குத் தேடிக் கொடுத்தது. இதற்குப் பல சான்றுகள் உள்ளன. அவற்றில் ஒன்று இராமலிங்க அடிகளாருக்கு எதிராக இவரால் போடப்பட்ட மானநஷ்ட வழக்காகும்.

இவர் சிதம்பரத்தில் தங்கியிருந்த காலத்தில், சிதம்பரத்தில் பூசை செய்கின்ற தீட்சிதர்கள் விடும் தவறைச் சுட்டிக்காட்டித் திருத்த முனைந்தார். இதனைக் கண்டு தீட்சிதர்கள் வெகுண்டு எழுந்தனர். இவரது சமகாலத்தில் வாழ்ந்த இராமலிங்க அடிகளாரைக் கொண்டு இறைதுதிப் பாடல்களைப் பாடுவித்து, அவற்றைத் "திருவருட்பா" எனப் பெயர் சூட்டி வெளிப்படுத்தினர். மேலும் சில கோயில்களில் பஞ்ச புராணத்துக்குப் பதிலாக, அவற்றை ஓதினர். இதனைக் கண்டு சினங்கொண்ட நாவலர்,பஞ்சபுராணத்துக்குப் பதிலாக அவற்றை ஓதக் கூடாது எனத் தாம் செய்கின்ற பிரசங்கங்களில் கூறி வந்தார். இதனால், இருபகுதியினருக்கும் இடையே பகை மூண்டது. பல எதிரும் புதிருமான கண்டனக் கூட்டங்கள், பிரசங்கங்கள் நடத்தப்புட்டன. அக்கூட்டங்களில் நாவலரை மட்டுமல்ல, ஈழத்தையும் பழித்துரைத்தனர்.

நாவலர் தமிழ் நாட்டவரல்லர் எனவும் பிரசாரம் செயதனர். இதன் விளைவே நாவலரால் போடப்பட்ட மான நஷ்ட வழக்காகும். ஆறு வருடங்கள் தன்னந் தனியனாக நின்று. தமக்கு எதிராக எழுந்த குரல்களை எதிர்த்து சைவம் காக்கக் குரல் கொடுத்தார். சைவ உலகினைச் சிதம்பரத்தைக் கேந்திர ஸ்தானமாகக் கொண்டு நெறிப்படுத்த ஆசைப்பட்டார். இத்தகைய விசால மனம் கொண்ட நாவலரை, குறுகிய பிரதேச அடிப்படையில் அவமானம் செய்ததால், இலங்கை திரும்ப முடிவு செய்தார். 1870ம் ஆண்டு இலங்கைக்கு மீண்டும் திரும்பினார். அப்போது யாழ்மக்கள் மிகப் பெரிய வரவேற்பு விழா எடுத்து நாவலரை வரேவற்றனர். எனினும், இவரால் இந்தியாவில் ஆரம்பிக்கப்பட்ட சைவப் பிரகாச வித்தியாசாலையும் வித்தியாநுபாலன யந்திரசாலையும் (அச்சகம்) சைவமும் தமிழும் வளரத் தொடர்ந்து பணிபுரிந்துள்ளன. இவருக்கு இந்தியாவில் பலத்த எதிர்ப்பு இருந்த போதிலும் அவரது நாவன்மையை பாராட்டி திருவாடுதுறை ஆதீனம் "நாவலர்" பட்டம் கொடுத்து கௌரவித்தது.

இவர் சைவம் தமிழ் இரண்டும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கம் போன்றவை என்று கருதி, சைவத்தையும் தமிழையும் வளர்க்கப் பாடுபட்டார். அவர் உரையாசிரியராகவும், பதிப்பாசிரியராகவும், வசன நூல் ஆசிரியராகவும் விளங்கியுள்ளார். இதற்குப் பல ஆதாரங்கள் உள்ளன. பாரதம், சூடாமணி, நிகண்டு, பெரியபுராணம், திருக்குறளுரை, திருக்கோவையார். என்பவற்றுக்கு வசன நடையில் நூல் எழுதி வெளியிட்டுள்ளார். இவை அவரால் பதிப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்ட நூல்களுள் சிலவாகும். இவருக்குப் பெரியபுராணத்தில் சிறு வயது முதலே ஈடுபாடு இருந்துள்ளது. இதனால், தமது சொந்த செலவில், இவரால் ஆரம்பிக்கப்பட்டு, நடாத்தப்பட்ட யந்திரசாலையில் இதனை பதிப்பித்துள்ளார். மேலும், இலக்கணச்சுருக்கம், இலக்கண வினாவிடை, பாலபாடம், சைவ வினாவிடை ஆகியவையும் இவரால் எழுதப்பட்டு வெளியானவையே. சைவ வினாவிடையில் சைவ சமய ஒழுக்கங்கள், கடமைகள், செய்யத்தக்கவை,- செய்யதகாதவை போன்ற விடயங்கள் வினா-விடை வடிவில் எழுதப்பட்டுள்ளன. இவர் வேற்றுமத எதிரி அல்ல என்பதற்கு, இவராலேயே முதல் முதலில் செய்யப்பட்ட கிறிஸ்தவ பைபிள் மொழி பெயர்ப்பு சான்றாக உள்ளது.

"போற்றுபவர் போற்றட்டும்
புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்
தொடர்ந்து செய்வேன்!
ஏற்றெதாரு கருத்தை எனது
உள்ளம் ஏற்றால்
எடுத்துரைப்பேன் எவர் வரினும்
நில்லேன்! அஞ்சேன்" (கண்ணதாசன்)

என்ற போக்கிலேயே நாவலரின் நடை முறை இருந்தது.

நெஞ்சில் உரம், நேர்மைத் திறன், அஞ்சாமை , மதிநுட்பம், நூலறிவு, ஒழுக்கம், இறையருள் ஆகியவையே நாவருக்கு துணை நின்றன. நாவலர் சைவத்திற்கும் தமிழுக்கும் மறுமலர்ச்சி காணத் தலைப்பட்ட அதே வேளையில், நாட்டின் அரசியல், சமுக விடுதலைக்கும் வித்திட்டார். அந்த வகையில் இவரையும் இலங்கையின் தேசிய வீரர்களில் ஒருவராக நாம் ஏற்றுக் கொள்ள முடியும்.

"மனதில் உறுதி வேண்டும்
வாக்கினிலே இனிமை வேண்டும்.
நினைவு நல்லது வேண்டும்." (பாரதியார்)

என்ற கூற்றுக்கு வடிவம் கொடுப்பின், அவரே நாவலர் என்றால் மிகையாகது. இவரது சிறப்பு என்னவெனில் நல்ல தூய வாழ்வு எவ்வாறு வாழ வேண்டும் என்பதை தமது சொந்த வாழ்வில் செய்து காட்டினார். அவர் பிற்போக்குவாதியாகத் திகழவில்லை. அதே நேரத்திலே எதிர் காலத்திலும் சைவம் தொடர்ந்து இருக்க, தூரநோக்கோடு செயல்பட்டுள்ளார். அவரின் பாதையில் வாழ்ந்த பெரும் மக்களே, இன்று உலகம் முழுவதும் பரந்து சைவத்தைப் பேணி வருகிறார்கள். அவரது தொண்டுகளைத் தொடர்ந்து நாமும் செய்து, சைவ சமயம் தலைத்தோங்க எம்மாலான தொண்டை அணுவளவாகினும் செய்வோம்.

உசாத்துணை நூல்கள்

மு. ரா. அருணாசலக் கவிராயர் – யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சரித்திரம்.
த. கைலாசப்பிள்ளை – ஆறுமுக நாவலர் சரித்திரம்
உ. சோமசுந்தரம் – நல்லைநகர் நாவலர்
போ. பூலோக சிங்கம் – ஈழம் தந்த நாவலர்.

நம்மைத் தெரிந்து கொள்ளாமல் வெளி உலகத்தைத் தெரிந்து கொள்ள முடியாது. நம்மை தெரிந்து கொண்ட பிறகோ வெளி உலகத்தில் தெரிந்து கொள்ள ஒன்றும் கிடையாது.

–ரமண மகரிஷி

இந்துமதத்தின் தூரநோக்கு - சில கண்ணோட்டங்கள்

செல்வன். சி. மகேஸ்வரன்,வர்த்தகம் (சிறப்பு),இறுதி வருடம், கலைப்பீடம்.

தென், தென்கிழக்காசியாவின் ஆதிமதம் இந்து மதமாகும். கற்காலம் தொட்டு பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு இனமக்களால் கடைப்பிடிக்கப்பட்ட மத நம்பிக்கைகளின் வளர்ச்சியாகவே இந்து மதம் தோன்றியது எனலாம். பௌத்தம், கிறிஸ்தவம், இஸ்லாம் போன்ற மதங்கள் நிறுவப்பட்ட மதங்கள் அவற்றைத் தோற்றுவித்தவர்கள் யார்? அவை தோன்றிய காலம் எது? என்பவை நமக்குத் தெரியும் ஆனால் இந்து மதம் தோன்றிய காலமோ, தோற்றுவித்தவர் யார்? என்பதோ நமக்குத் தெரியாது எனவே, இந்து மதத்தினை நாம் சனாதன தர்மமென அழைக்கின்றோம். இதனால், உலகின் மிகத் தொன்மையான கலாசாரம் நமது இந்து கலாசாரமாகும். வாழ்ந்து அனுபவித்து சிந்தித்து ஏற்படுத்தியவைகளே இந்து மத சாஸ்திரங்கள் சர்ச்சைகளுக்கு அப்பாற்பட்ட தத்துவங்களின் அடிப்படையிலேயே இந்து சாஸ்திரங்கள் வகுக்கப்பட்டுள்ளன. பகவத்கீதை, உபநிடதங்கள், சைவ சித்தாந்தம் என்பவற்றை இவற்றுக்கு உதாரணமாக குறிப்பிடலாம். மதவுணர்வு வாழ்க்கையின் பல அம்சங்களில் ஒன்றெனக் கருதப்படுகின்றது. ஆனால் நமது இந்து மத சாஸ்திரங்கள் சமயமே வாழ்வின் முழுமை எனப் போதிக்கின்றன.

இந்து மதம் எந்தக் காலத்திலும் ஏனைய இனத்தவரையோ, மதத்தினரையோ குறை கூறுவதில்லை. அது எல்லோரையும் ஒரே தன்மையிலேயே நோக்குகின்றது. சமயங்களின் கொள்கைகள் வேறுபடலாம். அவை ஒன்றுக்கொன்று முரணாகத் தோன்றலாம். ஆனால்;, சமயமனப்பான்மை அவைகளுக்கெல்லாம் ஒன்றேதான். உலகில் உள்ள பிறசமயங்கள் தமது சமயமே உண்மை சமயம் என்றும் தங்கள் வேதங்களே உண்மை என்றும் கூறிப் பிறமதங்களை சாடுகின்றன. ஆனால், இந்தமதம் இவ்வாறு கூறவில்லை. அது அனைத்தையும் தன்னுள் அடக்கி, ஒற்றுமை காணமுயல்கின்றது. எனவே, இந்து மதத்தினை அன்பு மதம் என்று கூடக் கூறலாம். சமயங்களின் இறுதி இலட்சியம் இறைவனை அடைவதற்கு உதவுவதாகும். இதனை 'சுவாமி விவேகானந்தர், வெவ்வேறு பகுதிகளில் இருந்து வருகின்ற பல நதிகள் ஒரே இடத்தில் சங்கமமாவதனைப் போன்று, எல்லாச் சமயங்களின் இறுதிநோக்கமும் இறைவனை அடைவதாகும்". எனக் கூறுகின்றார். மனிதனின் ஆன்மீக உணர்வுகளை ஒழுங்குபடுத்தி, அவனைச் சரியான பாதையில் செல்வதற்கு துணை புரிவது, இந்துமதம். மனிதன் இறுதியாக முக்தியடைய வேண்டும். என்பதை விட அவன் இவ்வுலகில் வாழ்வாங்கு வாழ வழிகாட்டவது நமது மதம். இறைவனிடம் பக்தி வைக்க வேண்டியது. ஒவ்வொருவரதும் கடமையாகும். அந்தப் பக்தி நெறிக்கு ஆழ்ந்த நம்பிக்கையே அடிப்படையாகும். அந்தப் பக்தியால் ஒழுக்கம், மன அமைதி, மன ஒருமைப்பாடு என்பன ஏற்படுகின்றன. என்பது இந்து மதத்தத்துவமாகும். இந்து மதத்தின் எந்தவோர் அம்சமும் ஒழுக்கத்தையே போதிக்கிறது. இந்து மதக் கோட்பாடுகள் ஜனங்களின் மனோபாவத்துக்கு இயைந்தபடி இருக்கின்றன. ஆனால், எல்லா மதங்களிலும் அடிப்படையாக வாழ்வு, பக்தி என்கிற ஒரு சமயத்தின் அடிப்படையான மார்க்கங்கள் தான் அமைந்திருக்கின்றன. ஏனையவர்களின் கொள்கைகள் நம்மைப் பிரித்தாலும், பக்தி உணர்வு நம்மை ஒன்று சேர்க்கும் என்பது இந்துமதம். பகவான் கீதையில் "மனிதர்கள் என்னைப் பலவாறாக எந்த ரூபத்திலும், எப்படி வணங்கினாலும் அவர்களது பக்தியை நான் வேரூன்றச் செய்கின்றேன் "என கூறுகின்றார். இதனை நாம் அறிந்துக் கொண்டால், சமயத்தின் காரணமாகச் சச்சரவு ஏற்பட நியாயம் இல்லை. எனவே, இந்து மதத்தில் பக்தி ஒரு பிரதான அம்சமாகும்.

உலகில் உள்ள அனைத்தும் இறைவனின் அம்சமாக இந்து மதம் கருதுகின்றது. நாம் எல்லாம் ஒரே கடவுளின் குழந்தைகள் எனவும் சகோதர பாசத்தோடு பிறருக்காக வாழ வேண்டும் என்றும் உயர்ந்த கருத்தை அது வலியுறுத்துகின்றது. இந்து மத சாஸ்திரங்கள் ஐந்து வகை வேள்விகளை வலியுறுத்துகின்றன. அவை தேவயக்ஞும், பிதிர்யக்ஞும், ரிஷியக்ஞும், நிருயக்ஞும், பூதயக்ஞும் ஆகும்.அதில் நிருயக்ஞும் நம்முடன் சேர்ந்து வாழும் சகோதரர்களின் நன்மை கருதி செய்யப்படும் கடமைகளை கூறுகின்றது. இறைவனின் அம்சத்தைப் பெற்றவர்கள் மனிதர்கள் என்றும் அனைத்திலும் இறைவன் மறைந்து வாழ்கின்றான் எனவும் இந்துமதம் கூறுகின்றது. ஆகவே, நம்முடன் வாழ்கின்றவர்களுக்கு செய்கின்ற நன்மைகள், அவர்களின் துயரங்களைக் களைய மேற்கொள்ளும் முயற்சிகள் என்பவற்றினால் , அவர்கள் மகிழ்கின்றார்கள். இது நாம் இறைவனுக்கு செலுத்தும் சிறந்த வழிபடாகும். எனவே, மனிதனின் மனதில் ஒரு புனிதமான குறிக்கோளினை வளர்க்கவே இந்து மதம் முயலுகின்றது.

இந்து மதத்தில் பெண்களுக்கு உரிமைகள் மறுக்கப்படுவதாகக் கூறப்படுவது திருத்தப்பட வேண்டியதொன்றாகும். இந்துமதந்தான் தெய்வீக வடிவமாகப் பெண்ணை வைத்து வழிபட வகை செய்கின்றது. அதனால், பெண்களுக்கு மிக உயர்ந்த இடம் தருவது நமது மதந்தான்.முக்கியமான காரியம் எதுவாகினும் , கணவனுடன் மனைவி இடம் பெற வேண்டும் எனக் கூறுவது இந்துமதம். மனைவியின் சம்மந்தம் இல்லாமல் கணவன் எக்காரியங்களிலும் ஈடுபட முடியாது. தானம் கொடுப்பது எதுவாகினும் மனைவி உடன் இருந்தே கொடுத்தாக வேண்டும். இதனாலேயே மனைவியுடன் இல்லாதவர்களுக்கு ஹோமம் யோகம் போன்றவை செய்ய அருகதை இல்லை எனக் கூறப்படுகின்றது. இராமாயணத்தில் இராமர் அசுவமேத யாகம் செய்ய முனையும் போது, சீதை பிரிந்து வாழ்வதால் ராமர் யாகம் செய்யத் தடை என வசிட்டர் குறிப்பிடுகின்றார். எனவே, பெண்களுக்கு இந்து மதத்தில் எல்லாக் காரியங்களிலும் சமத்துவம் காணப்படுகின்றது. இந்து மதம் கணவன், மனைவி, அண்ணன், தாயும் மகளும், தந்தையும் மகனும், மூத்தோர் இளையோர் முதலிய குடும்பபந்தங்களின் புனித உறவை வலியுறுத்தி, அன்புமிக்க சமுதாய வாழ்விற்கு வழிவகுக்கின்றது. பெண்களின் ஓழுக்க நெறியில் ஒன்றான கற்பு என்ற அற்புத நெறியைப் பெண்களும், மனைவியைத்தவிர அனைத்துப் பெண்களையும் அன்னை எனப்போற்றும் உயர்ந்த நெறியை ஆண்களும் கடைப்பிடிக்கக் கூறுகின்றது. எனவே, இந்துமதம் பெண்களுக்குப் பெருமையளிக்கிறது. கடவுளை உலகத்தைக் காக்கும் அன்னையாக மதிப்பதும் அதன் சிறப்பாகும்.

மற்ற மதங்களைப் போன்று இந்துமதம் மதமாற்றம் எனும் செயலில் ஈடுபடுதில்லை மனிதன் இந்துமதத்தை சேர்ந்தவன் ஆவதற்குப் பெரும்பாலும் பிறப்பு எனும் ஓரே முறைதான் உள்ளது. ஆனால் அவன் இந்து மதத்தினின்று வேறு மதங்களுக்கு மாற்றப்படுவதற்கு மார்க்கங்கள் பல உள. சரித்திர பூர்வமாக ஆராய்ந்து பார்க்குமிடத்துப் புற மதஸ்தர்களை தன்னுள் எடுத்துக் கொள்ளும் கிருத்தியத்துள் ஈடுபடாதிருக்கின்றதெனினும், உள் வலிவிலே வேறு எந்த மதத்துக்கும் இந்து மதம் பின் வாங்கியதன்று. தாய் ஒருத்தி தன் குழந்தைகளின இயல்புக்கு ஒப்ப வெவ்வேறு முறைகளில் அவைகளைப் பேணி வருகின்றாள். அச் செயலை இந்து மதம் செய்து வருகின்றது. தன்னோடு தொடர்பு வைக்கும் மற்றைய மதங்கள் எல்லாவற்றையும் நேர் முகமாகவோ மறைமுகமாகவோ இந்து மதம் ஆதரித்து வருகின்றது. தற்கால யுகத்தில் தர்ம நியாயங்கள் மறக்கப்பட்டு, சமூகம் தற்கால இனங்களால் பின்னால் சென்று, பின்பு வருந்தும்படியான சூழ்நிலையில் சிக்குற்றிருக்கிறது. இந்நிலையை மாற்றி, தமது பண்புகளையும், கலாசாரத்தையும் உயிர்ப்பித்துக் கொள்ள வேண்டிய நிலை தற்போது ஏற்பட்டிருக்கின்றது. இதனால், இந்து மதம் மிக அண்மையில் தனது சிறப்பை மற்றவர்களுக்கு விளக்கிக் காட்டும் செயலில் ஈடுபட்டு வருகின்றது. அதன் மூலம், தனது தாய்மை ஸ்தானத்தை உறுதிப்படுத்தி வருகின்றது. ஆனால் புற மதத்தவரைத் தத்தம் மதங்களைப் புறக்கணித்து விட்டு இந்து மதத்திற்கு வரவேண்டுமென்று அது புகட்டுவதில்லை.பலாத்காரம் பண பலம் எனும் இவற்றை மேற் கொள்ளாத எல்லா மதங்களும்

அவற்றின் குருமார்கள், போதகர்கள், பிரசாரகர்கள் ஆகியோரது குணத்தைக் கொண்டுதான் வளர்கின்றன. அவர்களிடம் நல்லொழுக்கமும் சாந்தமும் கருணையும் நிறைந்திருக்க வேண்டும். இப்படிப்பட்டவர்களை உருவாக்குவதே இப்போது நம்முடைய மதத்தைக் காக்கவும், தழைக்கவும் செய்ய முக்கியமான வழியாகும். மத நெறிகளை உயிரோடு வாழ்ந்து காட்டிக் கொண்டிருக்கின்ற பிரதிநிதிகளைத் தன்னகத்தே கொண்டது எமது இந்து மதம். இப்படிப்பட்ட்ர்களால் தான் நமது மதம் காலாகாலமாக காப்பாற்றப்பட்டு வருகின்றது. இனி மேலும் இப்படிப்பட்டவர்களால் தான் உயிர் வாழ வேண்டும்.

இந்து மதம் விஞ்ஞான ரீதியான கொள்கைகளைத் தன்னகத்தே கொண்டது. உதாரணமாக, இந்து சமயத்தின் மிகச் சிறந்த கோட்பாடுகளில் ஒன்றான மறுபிறப்புக் கொள்கை, ஆதாரபூர்வமாக விஞ்ஞான ஆராய்ச்சிகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட கொள்கையாகும். இது அவனவன் செய்யும் நல்வினை, தீவினைக்கேற்ப அவனவன் பலனை அனுபவிக்க வேண்டும் என்ற கோட்பாட்டை உடையது. எனவே முற்பிறவி, இப்பிறவி, மறுபிறவி என்ற விஞ்ஞான ரீதியான உண்மையை அது விளக்குகின்றது . இயற்கையில் நடக்கும் ஒவ்வொரு வினைக்கும் எதிர்வினை உண்டு என்பதை நாம் தினசரி வாழ்க்கையில் கண்கூடாகப் பார்க்கின்றோம்.இதையே சேர்ஐசக் நியூட்டன் ஒரு பௌதிக சட்டமாகவே வகுத்துள்ளார். வினைப் பயன் இல்லாதிருக்குமாயின், பிறக்கின்ற குழந்தைகள் அனைத்துமே இறைவன் படைப்பில் வேறுபாடின்றி தான் பிறக்க வேண்டும். ஏனெனில், விருப்பு வெறுப்பற்றிருக்கின்ற இறைவன் நேர்மையற்றவனாக இருக்க முடியாது. ஆனால் குழந்தைகள் பிறக்கும் போது குருடாகவும், சில செவிடாகவும், சில ஆரோக்கியமாகவும் சில ஏழையாகவும், சில பணக்காரனாகவும் பிறக்கின்றன. எவ்வித காரணமுமின்றி பிறக்கும் போதே குழந்தைகளைப் பாரபட்சத்துடன் கடவுள் உருவாக்குகின்றார் என்பது கடவுளை நேர்மையற்றவராகக் காட்டி விடும். எனவே, இதற்குக் காரணம் ஒவ்வொருவரும் முற்பிறப்பில் செய்த வினையின் பலன்தான் எனக் கண்டு பிடித்திருக்கின்றனர்.

குறிக்கோளுக்குச் செலுத்தும் கவனத்தை, அதை அடைய மேற்கொள்ளும் பாதைக்கும் செலுத்தவேண்டும் என்பதில், வெற்றிக்குரிய எல்லா இரகசியமும் அடங்கியிருப்பதாக எனக்குத் தோன்றுகிறது."

–சுவாமி விவேகானந்தர்.

மகாத்மா காந்தியடிகள் கூறும் சமயமும் சத்தியமும்

செல்வி, A. சிவனேஸ்வரி, இறுதிவருடம், கலைப்பீடம்.

என் சமயம், சம்பிரதாயச் சமயமோ அல்லது வழக்கமானதான சமயமோ ஆகாது. ஆனால் எல்லார் சமயங்களுக்கும் முக்கியமானதும், படைத்தவனிடம் நேருக்கு நேராக வைப்பதுமே என் சமயம் என்கிறார் காந்தியடிகள்.

சமயம் என்று நான் எதைக் கூறுகிறேன் என்பதை விளக்கிச் சொல்லுகிறேன். மற்றெல்லா சமயங்களுக்கும் மேலானது இந்து சமயம் என்று நிச்சயமாகக் கூற நான் மறுக்கிறேன் ஆயினும் இந்து சமயத்தையும் கடந்தது என் சமயம் என்று கூறுகிறார். அது ஒருவரின் இயல்பையும் கூட மாற்றி விடுகிறது.உள்ளுக்குள்ளிருக்கும் சத்தியத்தோடு அது ஒருவரைப் பிரிக்க முடியாத வகையில் பிணைப்பதுடன் எப்பொழுதும் தூய்மைப்படுத்துகிறது. முழுமையும் வெளிப்படுத்துவதைக் காண்பதற்கு எந்தச் சிரமத்தை மேற் கொள்ளுவதையும் ஒரு பொருட்டாகக் கருதாததும், தன்னைத்தானே கண்டு கொண்டு, படைத்தவனை அறிந்து, படைத்தவனுக்கும் தனக்குமுள்ள உண்மையான தொடர்பை உணர்ந்து கொள்ளும் வரையில் ஆன்மாவைக் கொஞ்சமும் நிம்மதியற்றதாக்கும் மனித இயற்கையிலுள்ள அடிப்படையான தன்மையே என் சமயம் என்றார்.

என்னைச் சுற்றிலும் இருப்பவை யாவும் எப்பொழுதும் அழிவனவாகவும் மாறுவனவாகவும் இருக்கும் போது, இந்த மாறுதல்களிலெல்லாம் மாறுதலே இல்லாத ஜீவசக்தி ஒன்று இருக்கிறது.அதுவே எல்லாவற்றையும் ஒன்றாகப் பிணைத்து வைத்திருக்கின்றது. அதுவே படைத்து, அழித்து, திரும்பவும் படைக்கிறது என்பதை மங்கலாக நான் காண்கின்றேன். உணர்ச்சியூட்டும் அந்தச் சக்தி அல்லது ஆன்மாவே தான் கடவுள்.

இந்தச் சக்தி நன்மைமையே செய்யவல்லதா, தீமையையே செய்யக் கூடியதா? முற்றிலும் நன்மையையே செய்ய வல்லதாகவே நான் காண்கிறேன். ஏனெனில், சாவின் நடுவே உயிர் நிலைத்திருப்பதையும் , பொய்யின் நடுவே மெய் நிலை பெற்றிருப்பதையும், இருளின் நடுவே ஒளி நிலவுவதையும் நான் காண முடிகின்றது. எனவே உயிரும், உண்மையும், ஒளியும் கடவுள் என்று அறிந்து கொள்கிறேன். அவனே அன்பு. எல்லாவற்றிற்கும் மேலான கடவுள்.

சத்தியமும் அன்புமே எனக்குக் கடவுள். தருமமும் ஒழுக்கமுமே கடவுள் அச்சமின்மையே கடவுள். ஒளிக்கும் உயிருக்கும் ஆதாரமாக இருப்பவர் கடவுள். ஆனால் இவைகளுக்கு எல்லாம் மேம்பட்டவரே, அப்பாற்பட்டவரே அவர் மனச்சாட்சியே கடவுள். நிரீஸ்வர வழியில் நிரீஸ்வரமாகவும் இருக்கிறார். கடவுள். பேச்சையும் பகுத்தறிவையும் கடந்து நிற்பவர் அவர்.. அவர் நேரில் தோன்றுவது அவசியம். என்றிருப்போருக்கு அவர்களுடைய சொந்தக் கடவுளாயிருக்கிறார். அவர். அவருடைய ஸ்பரிசம் தேவைப்படுவோருக்கு அவர்கள் உடலிலேயே அவர் இருக்கிறார். மிகத்தூய்மைச் சத்து அவர். நட்பிக்கை வைத்தோருக்கு எளியனாக விளங்குகிறார் அவர். எல்லா மனிதருக்கும் எல்லாமாகவும் அவர் இருக்கிறார்.அவர் நம்முள் இருக்கிறார் என்றாலும் நமக்கு மேலும் அப்பாலுமாகவும் இருக்கிறார். சகிப்புத் தன்மையில் மிக்கார் அவர், பொறுமையுடனிருக்கிறார்.

ஆனால் பயங்கரமானவராகவும் இருக்கிறார். அவர் விஷயத்தில் அறியாமை சமாதானமாகி விடாது. அப்படியிருந்தும் எப்பொழுதும் மன்னிக்கிறார். ஏனெனில் தவறுக்கு வருந்துவதற்காக

சந்தர்ப்பத்தை அவர் நமக்கு எப்பொழுதுமே அளித்துக் கொண்டிருக்கிறார். நல்லதையோ, தீமையையோ நம் இஷ்டம் போல தேர்ந்தெடுத்துக் கொள்ள தடையின்றி நம்மை அவர் விட்டு விடுவதால் உலகம் அறிந்து ஜனநாயகவாதிகளிலெல்லாம் மிக உயர்வான ஜனநாயகவாதி அவர். அவரை மிஞ்சிய கொடியரையும் கண்டதில்லை. ஏனெனில், நம் வாய்க்கு எட்டியதை அவர் எப்பொழுதும் தட்டி விடுகிறார். இதை எல்லாம் அவர் திருவிளையாடல்கள் என்று இந்து சமயம் சொல்லுகிறது.

உண்மையில் மததருமம் நம்முடைய ஒவ்வொரு செயலிலும் வியாபித்திருக்க வேண்டும். இங்கே மதம் என்று நான் கூறுவது, பாகுபாட்டோடு கூடிய மதக் கொள்கை என்று பொருளாகாது. பிரபஞ்சத்தின் ஒழுங்கான ஒழுக்க ஆட்சியில் கொள்ளும் நம்பிக்கையையே அது குறிக்கும். கண்ணுக்குத் தோன்றாததாக அது இருப்பதனால் அது உண்மையல்ல என்றாகாது. இந்த மதம் இந்து சமயம், இஸ்லாம், கிறிஸ்தவம் முதலிய எல்லாவற்றிற்கும் மேம்பட்டது. அந்த மதங்களை அது நிராகரித்து விடுவதில்லை. அவற்றை அது ஒருமுகமானதாக்கி அவற்றிற்கு உண்மைத்துவத்தை அளிக்கிறது.

ஒரே இடத்தை நோக்கிச் செல்லும் பல சாலைகளைப் போன்றவையே மதங்கள் அடையும் லட்சியம் ஒன்றாகவே இருக்கும் போது வெவ்வேறு பாட்டையின் வழியாக நாம் போவதில் என்ன தவறு இருக்கிறது? உண்மையைப் பார்த்தால் தனிப்பட்டவர்கள் எத்தனை பேர்களுண்டோ அத்தனை மதங்களும் இருக்கின்றன.

ஒருவர், தமது சொந்த மதத்தின் உள்ளத்தை அடைந்து விடுவாரானால், மற்ற மதங்களின் உள்ளங்களையும் அடைந்து விட்டவராவர். வெவ்வேறு மதங்கள் இருந்துகொண்டிருக்கும் வரையில் அவற்றில் ஒவ்வொன்றுக்கும் ஏதாவது தனியான சின்னம் இருக்க வேண்டியது அவசியமாகலாம். ஆனால் அந்த சின்னமே மிகவும் முக்கியமானதாக்கப்பட்டு , மற்றவர்களின் மதங்களை எல்லாம் விட தம் மதமே உயர்வானது என்பதை நிரூபிக்க ஒரு ஆயுதமாகவும் அது செய்யப்பட்டு விடும் போது, உதாசீனம் செய்யப்படத் தகுதி வாய்ந்ததாகவே அச்சின்னம் ஆகிவிடுகிறது.

கடவுளை வழிபடுகிறவர்கள் எல்லா மதங்களிலும் இருப்பதைப் போன்றே வெவ்வேறு சமயங்களையும் கடவுள் உண்டாக்கி இருக்கிறார். அப்படியிருக்க, என் மதத்தை விட அக்கம்பக்கத்திலிருப்பவரின் மதம் தாழ்வானது என்ற எண்ணம் அந்தரங்கத்தில் கூட எனக்கு எப்படி இருக்க முடியும்? அவர் தம் மதத்தை விட்டு விட்டு என் மதத்தில் சேர வேண்டும் என்று நான் எவ்விதம் விரும்ப முடியும்? அவர் தம் மதத்தின்படி வாழ்ந்து அதில் பூரணத்துவத்தை அடைய வேண்டும் என்றுதான் உண்மையான விசுவாசமுள்ள நண்பன் என்ற முறையில் நான் விரும்பிப் பிரார்த்திக்க முடியும். கடவுளின் இல்லத்தில் எத்தனையோ மாளிகைகள் இருக்கின்றன. அவை யாவும் சமமான தெய்வீகத் தன்மை வாயந்தவைகளே.

தங்கள் மதத்தைப் பற்றிப் பிறருக்கு அதுவும் முக்கியமாக மதம் மாற்றும் நோக்கத்தோடு சொல்கிறவர்களை நான் நம்புவதில்லை. சொல்லுவது என்பதை சமயம் ஒப்புக் கொள்வதில்லை. அதன்படி வாழ்ந்துக் காட்ட வேண்டும். அப்பொழுது அது தனக்குத் தானே பிரசாரம் செய்து கொண்டு விடுவதாகிறது.

கடவுள் ஒருவரே என்ற நம்பிக்கையே எல்லா மதங்களின் அடிப்படையுமாகும். ஆனால் நடைமுறையில் உலகில் ஒரேஒரு மதம் மாத்திரம் இருக்கும் காலம் ஒன்று வரும் என்று நான் எண்ணவில்லை, என்கிறார் காந்தியடிகள். தத்துவ ரீதியில் பார்த்தால் கடவுள் ஒருவரேயாகையால் ஒரே ஒரு மதம் தான் இருக்க முடியும். ஆனால் அனுபவத்திலோ கடவுளைப் பற்றிய கருத்து எந்த இருவருக்கும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. ஆகையால் பலவிதமான மனப் போக்குகளுக்கும் ஏற்ற வகையில் பல மதங்கள் எப்பொழுதுமே இருக்க வேண்டியதாகலாம்.

கோயில்களோ, மசூதிகளோ, சேர்ச்சுகளோ ஆண்டவனின் இந்த உறைவிடங்களில் பாகுபாட்டை நான் காண்பதே இல்லை. நம்பிக்கைக்கு ஏற்ப அவை அமைக்கப்பட்டிருக்கின்றன.கண்களுக்குத் தோன்றாதவனை அடைந்து விடுவதில் மனிதன் கொண்டுள்ள ஆர்வத்தினால் ஏற்பட்டவையே அவை. மதம் பல கிளைகொண்ட ஒரு மரம். கிளைகளைப் போன்றே மதங்களும் பல என்று நீங்கள் சொல்லலாம். ஆனால் மரத்தைப் போன்று மதமும் ஒன்றே ஒன்று தான்.

ஒரு கிறிஸ்தவர் என்னிடம் வந்து, பாகவதம் தம்மைக் கவர்ந்து விட்டது என்றும், ஆகையால் இந்துவாகிவிட விரும்புவதாகவும் கூறுகின்றார் என்று வைத்துக் கொள்ளுவோம். அவரிடம் இவ்வாறுதான் நான் கூறுவேன் என்கிறார் காந்தியடிகள். கூடாது, பாகவதம் என்ன கூறுகிறதோ அதையேதான் பைபிளும் சொல்லுகிறது. அதைக் கண்டு கொண்டுவிட நீர் முயற்சி செய்யவில்லை.அந்த முயற்சியைச் செய்ய நல்ல கிறிஸ்தவராக இரும்.

கடவுள் ஒரு ஆள் இல்லை. கடவுள் ஒரு சக்தி. வாழ்வின் சாரமே அவர்தான். தூய ,மாசுபடாத உணர்வே அவர். என்றும் இருப்பவா அவர். ஆயினும், எங்கும் வியாபித்திருப்பவரான அவரிடமிருந்து நன்மையைப் பெறவோ , அவரிடம் அடைக்கலம் புகவோ எல்லோராலுமே முடியாமல் இருப்பதுதான் ஆச்சரியமானதாகின்றது.

மின்சாரம் பலமுள்ள ஒரு சக்தி, அதனிடமிருந்து எல்லோருமே பயனை அடைந்து விட முடியாது. சில விதிகளை அனுசரிப்பதன் மூலமே அதை உற்பத்தி செய்ய இயலும். அது உயிரற்ற ஒரு சக்தி அதன் விதிகளைப் பற்றி போதிய அறிவை பெறுவதற்காகக் கஷ்டப்பட்டு உழைத்தால் மனிதன் அந்தச் சக்தியைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

அதே போன்று தான் கடவுள் என்று நாம் சொல்லும் உயிருள்ள சக்தி விஷயத்திலும். தம்முள் கடவுளைக் காண்பதற்கு உதவும் அவனுடைய நியதிகளை அறிந்து அவற்றைப் பின்பற்றுவோமாயின் அவனை நாம் காணலாம்.

கடவுளைத் தேடி அடைவதற்கு யாரும் ஸ்தல யாத்திரை செய்ய வேண்டியதில்லை .தீபம் ஏற்றி அதன் முன்பு சாம்பிராணி போட வேண்டியதில்லை. விக்கிரகத்திற்கு அபிஷேகங்களைச் செய்து குங்குமத்தைப் பூச வேண்டியதும் இல்லை. ஏனெனில் கடவுள் நம் உள்ளத்திலேயே இருக்கிறார். நம் பூத உடலைப் பற்றிய் உணர்வையே நம்முள்ளிருந்து முற்றிலம் போக்கிக் கொண்டு விடுவோமாயின், கடவுளை நேருக்கு நேராக நாம் காணலாம்.

சரியான விஞ்ஞான ரீதியில் பார்த்தால் நன்மை, தீமை ஆகிய இரண்டின் அடிப்படையிலும் கடவுளே இருக்கிறார். மருத்துவரின் கத்தியை எப்படி இயங்க வைக்கிறாரோ அதே போலவே கொலைகாரரின் கத்தியையும் இயங்க வைக்கிறார். ஆனால் மனிதரைப் பற்றிய காரியங்களுக்கு, அந்த நன்மையும் தீமையும் ஒன்றுக்கொன்று வேறானதும், சேர்ந்து இயங்கமுடியாததுமான ஒளியையும் இருளையும் போன்று, கடவுளாகவும் சைத்தானாகவும் இருக்கின்றன.

அன்பே கடவுள்" என் கூறுவோருடன் சேர்ந்து கொண்டு அன்புதான் கடவுள் என்பேன். ஆனால் அன்பே கடவுளாக இருந்தாலும் எல்லாவற்றையும்விட சத்தியமே கடவுள் என்றுதான் என் உள்ளத்தின் ஆழத்தில் நான் சொல்லிக் கொண்டு வருகிறேன். கடவுளைக் குறித்து முழுவர்ணனையையும் மனிதரின் நாவினால் செய்வது சாத்தியம் என்றால் கடவுளே சத்தியம் என்ற முடிவுக்கே நான் வந்திருக்கிறேன்.

இந்து வேதாநதத்தில் கடவுள் ஒருவரைத் தவிர வேறு எதுவுமே நிலைத்திருப்பதில்லை. என்ற மற்றொரு விஷயமும் இருக்கிறது. இதே உண்மை இஸ்லாமிக் கல்மாவிலும் வற்புறுத்திக் கூறப்பட்டிருப்பதோடு உதாரணங்களாலும் விளக்கப்படுவதையும் காணலாம். கடவுள் ஒருவரே நிலைத்திருக்கிறார். வேறு எதுவும் நிலைத்திருப்பதில்லை. என்று அதில் தெளிவாக கூறப்பட்டிருப்பதை காண்கின்றீர்கள். உண்மையில் சமஸ்கிருதத்தில் சத்தியம் என்பதற்கு சொல் "சத்" என்பது நிலைத்திருப்பது என்பதுதான் அச்சொல்லுக்குப் பொருள் இவைகளினாலும் இன்னும் பல காரணங்களை முன்னிட்டும் சத்தியமே கடவுள் என்ற விளக்கத்திற்கு நான் வந்திருக்கின்றேன். என்கின்றார் காந்தி அடிகள்.

சத்தியத்தை தவிர வேறு எதிலும் எனக்கு பக்தியில்லை. சத்தியத்தை தவிர எதற்கும் நான் கட்டுப்பட நான் கடமைப்பட்டவனும் அல்ல. முதலில் அடையப்பாடுபட வேண்டியது. சத்தியத்தையே பிறகு அழகும் நன்மையும் உங்களை வந்தடையும். உண்மையில் கிறிஸ்து இதையே மலைப்பிரசங்கத்தில் உபதேசித்தார். யேசு மிக உயர்வான கலைஞர் என்று எனக்கு தோன்றுகின்றது. ஏனெனில், அவர் சத்தியத்தை தரிசித்து அதை விவரித்தார் முகமதுவும் அதேயே செய்தார். அராபிய இலக்கியத்திலே மிகவும் பூரணமான படைப்பு குர்ஆன். பெரிய மேதைகளும் இதையே கூறுகின்றனர். இவர்கள் இருவருமே சத்தியத்தை அறிந்து கொள்ள முதலில் பாடுபட்டதனாலேயே விவரிக்கும் அருள் அவர்களுக்கு இயல்பாகவே ஏற்பட்டது. என்றாலும் யேசுவோ முகமதுவோ கலையைப் பற்றி எழுதவில்லை. நான் பாடுபடுவதும் ,வாழ்வதும் , சாகவும் தயாராக இருப்பதும் அந்தச் சத்தியத்தையும் அழகையும் அடைவதற்கே.

கடவுளைப் பொறுத்த வரையில் அது இன்னது என்று விவரிப்பது கஷ்டமானது. ஆனால் சத்தியத்தைப் பற்றிய விளக்கம் ஒவ்வொரு மனித உள்ளத்திலும் சேர்த்து வைக்கப்பட்டிருக்கிறது, அத்தருணத்தில் உண்மையானது என்று எதை நம்புகிறீர்களோ,அது தான் சத்தியம்.அதுவே உங்கள் கடவுள். இவ்வாறு பெரும் சத்தியத்தை ஒருவர் வழிபடுவாரானால், நாளாவட்டத்தில் பரிபூரணமான சத்தியத்தை, அதாவது கடவுளை அவர் அடைந்து விடுவது நிச்சயம்.

உண்மையான மதமும், உண்மையான ஒழுக்கமும் பிரிக்கமுடியாத வகையில் ஒன்றுக் கொன்று பிணைத்திருக்கின்றன. நிலத்தில் விதைக்கும் வித்திற்கு நீர் எப்படி அவசியமோ அதேபோல தான் ஒழுக்கத்திற்கு மதமும்.

ஒழுக்க அடிப்படையை நாம் இழந்து விட்டதுமே, மதத்தை அனுசரித்து நடக்காதவர்களாகவும் ஆகிவிடுகின்றோம். ஒழுக்கத்தை புற்கணித்து விடும் . மதம் என்பது ஒன்று இல்லவே இல்லை. உதாரணமாக மனிதன் அசத்தியவானாகவும், கொடுமைக்காரனாகவும், தன்னடக்கம் இல்லாதவனாகவும் இருந்து கொண்டு கடவுள் தன்பக்கம் இருக்கின்றார் என்று சொல்லிக் கொள்ளவே முடியாது.

இறுதியாக காந்தியடிகள் கூறியது எனக்கு சத்தியமே கடவுள் சத்தியத்தையோ, கடவுளையோ தியாகம் செய்துவிட்டு நாட்டுக்கு சேவை செய்ய நான் முற்படவில்லை. ஏனெனில், சத்தியத்தை கைவிட்டு விடுபவன் நாட்டைக் கைவிட்டு விடுவான். உற்றார்களையும் அன்பர்களையும் கைவிட்டு விடுவான் என்பதை நான் அறிவேன்.

மதங்களின் அறவியல் சிந்தனைகளும் ஆன்ம ஈடேற்றமும்

செல்வி க. யோகேஸ்வரி, 2ம் வருடம், தமிழ் விஷேட பிரிவு, கலைப்பீடம்.

அறம் என்ற சொல் தர்மம், நேர்மை, கடமை, வாய்மை, ஒழுக்கம், நீதி, அன்பு, ஈகை, கள்ளாமை, கொல்லாமை, பிறர் மனை நயவாமை, தன்னடக்கம், இன்முகம் காட்டல் போன்ற நற்பண்புகளை உள்ளடக்கிய களஞ்சியமாகத் திகழ்கின்றது. இறைவன் மனிதப் பிறவியை படைத்ததன் நோக்கம் பிறவித் தளையிலிருந்து விடுவித்து அவனை வீட்டின்பம் அடைய வைப்பதற்காகும். இந்த வகையில் தனி மனித வாழ்வில் அவனது இலட்சியக் குறிக்கோளுடன் இணைந்து வாழ்வதற்காக இன்ன, இன்னசெய்தல் தவறானது, இன்ன, இன்ன செய்தல் தவறற்றது என அறியவும், அறிந்தவாறே செயற்படவும் வேண்டிய அறிவை அவனுக்கு ஊட்டி அவனை நல்ல மனிதனாக வாழ வைத்து வீட்டின்ப இலட்சியத்திற்கு அழைத்துச் செல்லும் ஊடகமே அறவியலாகும். அதாவது ஒருவனுடைய நடத்தையை செம்மை செய்து வலிமைப்படுத்தும் துறையே அறவியலாகும். இக்கருத்தினை இந்து மதம் மாத்திரமன்றி உலகில் உள்ள அனைத்து மதங்களும் ஏற்றுக் கொள்வதுடன் ஒவ்வொரு மதங்களும் அறக் கருத்துக்கள் பற்றி எடுத்துக் கூறியும் இருக்கின்றன. இந்த வகையில் ஒவ்வொரு மதமும் குறிப்பிடும் தனிமனித இலட்சிய அறக் கருத்துக்களை நோக்குவோமாயின்,

"தர்மம் தலை காக்கும் அது தக்க சமயத்தில் உயிர் காக்கும் "என்பது இந்து சமயக் கருத்தாகும். இந்து மதத்தில் இவ்அறம் பற்றிய கருத்து முதன் முதலில் வேதத்தில் "ரிதம" என்னும் சொல்லால் அழைக்கப்படுகிறது. "ரிதம்" என்னும் சொல் பிரபஞ்சத்தை பிணைத்திருக்கும் ஒழுங்கமைப்பைக் குறிக்கும். எனவே ஒழுக்கத்தை அடிப்படையாகக் கொண்ட வாழ்வே அறமாகும். இந்து மதம் கூறும் அறநெறிக் கருத்துக்களை நாம் நோக்குகின்ற போது, நீ கடமையைச் செய்யும் போது அக்கடமையில் பற்றின்றி கடமையை கடமையாகவே செய்! பயனை எதிர் பாராதே! நீ எவற்றை செய்தாலும் எத்துன்பத்தை அனுபவித்தாலும் அவை அனைத்தினையும் அறம் என்ற ரீதியில் செய். நீ நன்மை செய்தால் நல்ல குணமுடையவனாகி விடுவாய். தீமை செய்தால் தீய குணமுடையவனாகி விடுவாய். நீ எதைச் செய்கின்றாயோ அதுவாகி விடுவாய். நீ அறவோர் வட்டத்திற்குள் சேர விரும்பினால் பொறாமை, அவா, வெகுளி, கோபம், இன்னாசொல், கள்ளாமை, கொல்லாமை, கள்ளுண்ணாமை, புலாலுண்ணாமை பிறர் மனை நயவாமை என்பனவற்றை நீக்கி விடு. உண்ணும் போது ஓர் கைப்பிடியும், ஆவிற்கோர் பச்சிலையும் கொடு. இரப்போர்க்கு இல்லை என்னாது கொடு. அதுவே உன்னை உயர் குலத்தவனாக்கும். இதை **இலமென்னும் எவ்வம் உரையாமல் ஈதல் குலனுடையான் கண்ணே உளர் "** என திருக்குறள் கூறுகின்றது.நீ உனக்குத் துன்பம் என எதை நினைக்கின்றாயோ, அதை பிறருக்கும் செய்யாதே. தாய், தந்தை, குரு ஆகியோரை தெய்வமாகப் பேணு. பெரியோர் வார்த்தையினை தட்டி நடவாதே. வர்ணாச்சிர ம தர்மக் கொள்கையைக் கடைப்பிடி. நீ செல்வத்தை மட்டும் இழந்தாயானால் செல்வத்தை தவிர வேறு எதுவும் இழந்தவனாகாய். ஆனால் அறமாகிய ஒழுக்கத்தை இழந்தாயானால் அனைத்தையும் இழந்தவனாக ஆகி விடுவாய். தன்னை இரப்போர்க்கு கொடுக்காத செல்வம் நச்சு மரத்துக்கு சமனானதாகும். இரப்போர்க்கு கொடுக்கும் செல்வம் கற்பகத் தரு மரத்துக்கு சமனானதாகும். நீ உன்னுடைய இல்வாழ்க்கையை அறத்தின்படி நடத்துவாயானால் தேவர் உலகில் ஒருவனாக மதிக்கப்படுவாய். இதை **வையத்து வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"** என இக்குறள் தெளிவுபடுத்துகின்றது. எனவே, மறுமைப் பயனைக்

கருதி இப்பிறவியிலே அறத்தைச் செய். இவை யாவும் இந்து மதம் கூறும் தனிமனித அறவியல் இலட்சியக் கருத்தை விளக்கி நிற்கின்றது.

பௌத்த மதம் கூறும் சில அறவியல் கருத்தை ஆராய்ந்து பார்க்கின், பௌத்த மதமும் தனி மனித இலட்சியத்தை வலியுறுத்துவதாகவே அமைகின்றது. நீ அறநெறி உடையவனாக இருந்தால் அறிவு, நோக்கம், வாக்கு, செயல், ஒழுகலாறு, முயற்சி, மனம், தியானம் என்ற எட்டு அம்சங்களையும் நேர்மையுடன் கடைப்பிடி இதை நீ கடைப்பிடிக்க தவறும் பட்சத்திலே அறியாமை உணர்வு, நாம ரூபம், நுகர்ச்சி வேட்கை, பற்று, சாதி, முதுமை, இறப்பு என்ற சங்கிலித் தொடர் தோன்றுகின்றது. எவ்வுயிரையும் தன்னுயிராக கருது. உன்னிடமுள்ள நல்லறிவும், மனத்தூய்மையும், தன்னடக்கமுந்தான் முதன்மையே தவிர, சமயச் சடங்குகள் அல்ல. நீ பெரியோரால் போற்றப்பட வேண்டுமானால் அறிவும் அறமும் உடையவனாய் தன் கருமத்தில் கண்ணுடையவனாய், உண்மை உரைப்பவனாய், நடுநிலை தவறாதவனாய் இருந்தால் மட்டுமே பெரியோர் உன்னை மதிப்பார்கள். நீ பிறந்த குடியும் குலமும் உனக்குப் பெருமை தராது. பெருமை தருவன உன்னிடமுள்ள உண்மையையும் ஒழுக்கமுமே

"ஆற்றுநர்க்கு அளிப்போர் அறவிலை பகர்வோர்
ஆற்றா மாக்கள் அரும்பசி களைவோர்
மேற்றே உலகின் மெய்ந்நெறி வாழ்க்கை"

என பௌத்த மதம் கூறுகின்றது. இக்கருத்துக்களும் தனிமனித ஆன்மீக இலட்சியத்தை வெளிப்படுத்துவதாகவே அமைகின்றது.

கிறிஸ்தவ மதத்தில் பொதிந்துக்கிடக்கும் அறவியல் கருத்தை நோக்கும் போது, இயேசு கிறிஸ்து நாதர் கூறுகின்றார். அறவோனை அறவோன் என்பதற்காக வரேவற்பவன் அறவோனுக்குரிய அருளைப் பெறுவான். கடவுள் மக்களுள் வேற்றுமை பாராட்டுவதில்லை. எவராயினும் தம்மை அஞ்சி அறநெறி நிற்போர் அனைவரையும் அவர் தம் அடியவராக ஏற்றுக் கொள்வார் என்பதை நீ அறிந்துக் கொள். நீ அறத்திற்காக துன்புற நேர்ந்தால் நீ இன்ப வாழ்வு பெற்றவனே கடவுள் அறவன், அறஞ் செய்வோன் அனைவரும் அவனுடைய குழந்தைகளே, என்பதை நீ அறிவாய். கடவுளை உன் இதயம் முழுவதும் கொண்டு நேசிப்பாய் இது முதல் கட்டளை. இது போன்றே இரண்டாவது கட்டளை உன்னைப் போலவே பிறரையும் நேசிப்பாய். இந்த இரண்டு கட்டளைகளிலும் எல்லா அறநூல்களும் அடங்கும் நீ பிறவிப்பயனை போக்க விரும்பினால் நேரான வாயில் வழிப்புகுக. அழிவுக்கு செல்லும் வாயிலும் அகலமானது. அறன் வழிச் செல்வோர் பலராவர். ஆனால் அறக்கருத்துக்கு செல்லும் வழி நேரானது. குறுகியது. அதில் செல்வோர் சிலரே. எனவே, கிறிஸ்தவ மதம் கூறும் இவ்வறக்கருத்துக்களும் தனி மனித இலட்சியத்தை வெளிப்படுத்துவதாகவே இருப்பதை அறிய முடிகின்றது.

தனி இலட்சியததிற்கு இஸ்லாமிய மதம் கூறும் அறவியல் கருத்தை பார்ப்போமானால், நீ அறம் செய். அறம் செய்தாலே உன்னை "அல்லா விரும்புவார்." அனாதைக்குழந்தைகளை காப்பாற்றுகின்ற வீடே அல்லாவுக்கு மிகவும் பிரியமான வீடு என்பதை தெரிந்துக் கொள். நீ மக்களில் மிகவும் கெட்டவன் என யாரை நினைக்கின்றாய். உதவிக் கேட்கும் போது ஒறுத்தல் எல்லோரிடமும் நீதி செய்தல், பெரியோரை பேணுதல், சிறியோரிடம் அன்புச் செய்தல், ஏழைகளிடம் இறக்கம் கொள்ளுதல், நண்பருக்கு நல்லுரை கூறல், பகைவரிடம் பொறுமையாக இருத்தல் அயலலோன் பசிக்கு உணவளித்தல், இவை யாவற்றையும் நீ கடைப்பிடிடிப்பாயானால் அதுவே சிறந்த அறெநறியாகும். என் இஸ்லாமிய மதம் கூறுகின்றது.

இதே போன்று ஜைன மதம், கன்பூஷிய மதம், தாவோ மதம், ஷின்டோமதம், ஜாராதுஷ்டிர மதம், எபிரேய மதம், சீக்கிய மதம் போன்ற மதங்களும் அறவியல் கருத்துக்கள் மூலம் தனி மனித இலட்சியத்தை நிலை நாட்டுவதை அறிய முடிகின்றது.

அதாவதுஜைஜனமதம் கூறுகின்றது நல்ல நம்பிக்கை இன்றி உனக்கு நல்ல அறிவு உண்டாகாது. நல்ல அறிவின்றி உனக்கு நல்ல ஒழுக்கம் உண்டாகாது. நீ ஆசைகளை அகற்றினால் மட்டுமே அறநெறியில் நிற்க்க முடியும். உண்மையைக் காண முயல் உண்மையை கண்டுகொள்ள அதற்குறிய அறவழியில் நில். நீ பொய் பேசற்க பிறரைப் பொய் பேச செய்யட்க பிறர் பொய் பேச ஏற்றுக் கொளலக்க எனக்கூறுவதுடன்

"இருளே உலகத்து இயற்கை – இருளறுக்கும்
கைவிளக்கே கற்க அறிவுடைமை, கைவிளக்கின்
நெய்யே தன் நெஞ்சத்து அருளுடையை நெய்யற்ற
பால்போல் ஒழுக்கத்தவரே பரிவிலா"
மேலுலகம் எய்துபவர்.

எனும் கருத்து மிக்க பாடல் மூலம் அறநெறியின் சிறப்பினையும் தனிமனித இலட்சியத்தையும் தெளிவுப்படுத்துகின்றது.

இரக்கமுள்ள நெஞ்சில் அன்பு பிறக்கும் நாணமுள்ள நெஞ்சில் அறம் பிறக்கும் நன்மை தீமை தெரியும் நெஞ்சில் மெய்யுணர்வு பிறக்கம் ஆனவமில்லா நெஞ்சில் மரியாதை பிறக்கும். மனித குணம் அறத்தை நாடுவது தண்ணீர் தாழ் நிலத்தை நாடுவதை ஒக்கும் கீழ் நோக்கி ஓடாத நீர் இல்லாதது போல அறம் நோக்கும் இயல்பில்லாத மனித கிடையாது என்பதை உள்மனதில் நிலை நிறுத்திக் கொள். உன்னிடமுள்ள உண்மையான அறம், பிறரிடம் நீ அன்புக் கொள்ளுதல், உன்னிடமுள்ள உஉண்மையான அறிவு பிறரை நீ அறிந்துகெகாள்ளுதல். நீ அறம், உயிர் ஆகிய இரண்டையும் போற்று. அனால் இரண்டையும் பெற இயலாதது ஆயின் உயிரை துறந்துவிட்டு அறத்தைக் காப்பாற்று. அதுவே உனது இலட்சியத்தை அடைய வழிவகுக்கம், என காண்பூசிய மதம் கூறுகின்றது.

இனி தாவோ மதம் கூறும் அறநெறி கருத்தை நோக்குகையில் இவர்களும் அறநெறி பற்றி சிறப்பாக கூறுகின்றார்கள். நீ தீமையை மறைவாக செய்தால் உன்னைக் கடவுள் தண்டிப்பான். மறைவின்றிச் செய்தாயானால் மக்களால் தண்டிக்கப்படுவாய். நீ கடவுளுக்கும் மக்களுக்கும் அஞ்சி நடப்பாயானால் தனியே நடக்க வல்லவனாவான். நீ அறத்திடம் அசையா நம்பிக்கை உடையவனானால் உன்னால் ஆகாத காரியம் எதுவும் கிடையாது. அறத்தை விரும்புபவன் கடமைகளை செய்பவன். அறத்தை விரும்பாதவன் உரிமைகளைக் கேட்பவனாவான். இம்மதக் கருத்துக்களும் தனிமனித இலட்சியத்தையே நன்கு புலப்படுத்துகின்றது.

நீ கோவிலில் போய் மூன்று நாள் உண்ணாவிரதம் இருப்பினும் சாலச் சிறந்தது ஓர் அறச் செயல். உண்மையை சிக்கெனப் பிடித்தல், இறைவனிடம் சரண் புகுதல், தன்னை அறவே ஒழித்தல், எப்போதும் மகிழ்ந்திருத்தல், இறைவனை சிக்கெனப் பிடித்தல் இவை யாவற்றையும் ஒருவன் கடைப்பிடித்தால் அவனே சிறந்த அறநெறியாளன் என ஷின்டோ மதம் கூறுகின்றது. நீ அறச் செய்கைகளை சேகரம் செய்க. அவையே விமோசனம் அளிக்கும். உலகில் தோன்றுவன அனைத்தும் அழியும். அழியாமல் நிற்பன ஒழுக்கமும் பிறர்க்கு உதவுவதுமேயாகும். நீ செய்ய வேண்டிய தலையாய அறங்கள் மூன்று. அவை பகைவனை நண்பனாகச் செய்தல்,

தீயொழுக்கமுடையவனை நல்லொழுக்கமுடையவனாக செய்தல், அறிவில்லாதவனை அறிவுடையதாகச் செய்தல் என்பன உலகில் நீ ஆசைப்படக் கூடிய ஒன்று உள்ளது. அதுவே அறம் ஆகும். அறவாழ்வு என்பது யாது? என்றால் உள்ளத்தில் உயர்ந்த எண்ணங்கள், வாக்கில் இனிய மொழிகள், மெய்யில் நல்ல செயல்கள் உடையதே அறவாழ்வாகும். உண்மையில் நீங்கள் அதநெறியில் நிற்க விரும்பினால் பொய்யையும், கோபத்தையும், இம்சையையும் விட்டு ஒழியுங்கள். பகைமையையும், துவேசத்தையும் அகற்றுங்கள் அத்தகைய நல்லோர் இறைவன் சந்நிதி அடைவார்கள். என ஜாரதுஷ்திர மதம் தனிமனித அறவியல் சிந்தனையை எடுத்து விளக்குகின்றது.

நீ அறநெறியில் நின்றாயானால் ஆன்டவன் தேவதூதரிலும் பெரியோராக மதிக்கப்படுவாய். அறம் செய்பவர் துன்பமுறுவதும், அல்லாதவர் இன்பமுறுவதும் யாராலும் அறியமுடியாதவையாகும். இது எபிரேய மத அறக்கருத்தாகும். சீக்கிய மதம் கூறும் அறக்கருத்தை பார்க்கும் போது, அழியா இன்பம் தரும் அறம் நெறி குறுகியது. கடுகளவு அகலம் கூட இராது. ஆனால் மனமோ யானையளவு பெரியது. அது எப்படி இந்த அறநெறியில் செல்ல முடியும். கடவுள் ஒருவனை அழிக்க விரும்பினால் முதற்கண் அவனது அறிவை இழக்குமாறு செய்கின்றார். சிறிதே உண். சிறிதே உறங்கு, பொறுமையையும் கருணையையும் பூண்டுகொள். என்றுக்கூறி தனி மனித இலட்சியத்தை எடுத்துக்காட்டுகின்றது.

காந்தியடிகள் கூறும் அறக்கட்டளையை நோக்கம் போது, பிறரைத் தாழ்த்துபவன் தாழ்ந்து போவான். என்பது இயற்கை தர்மமாகும். சொர்க்கத்தை விரும்பியோ, நரகத்தை அஞ்சியோ செய்யும் அறம் அறமாகாது. அறம் அறத்திற்காகவே செய்யப்பட வேண்டும். சொர்க்கமும் நரகமும் நம்மகத்திலேயே உள்ளன. எது சரியாக தோன்றுகின்றதோ அதை பயமின்றி கடைப்பிடித்து ஒழுக வேண்டும். பொய்யும் சூதும் இருந்துகொண்டுதான் இருக்கும். நாம் சரியான காரியத்தை செய்தால் அந்த இரண்டும் குறையுமே அன்றி கூடாது. நம்முடைய வாழ்வின் இலட்சியத்திற்கு உறுதுணையாய் இருப்பது சத்தியமும், நேர்மையும், அகிம்சையுமாகும். தன்னுடைய அறிவைப்பற்றி ஆனவம் கொள்வது அறிவீனம் வலியார் மெலியலாம். அறிஞர் தவறலாம். எப்பதை ஞாபகப்படுத்திக் கொள்வது நல்லது.

எனவே மேற்கூறப்பட்ட ஒவ்வொரு மதத்தினதும் அறிவியல் சிந்தைனகளையும் நாம் நோக்குகின்ற போது, அவை யாவும், தனிமனிதன் ஒருவன் தனது வாழ்க்கையில் எவ்வாறான கடைமையை பின்பற்றி வாழ வேண்டும் என்பதை எடுத்துக்காட்டி, அதுவே ஆன்ம இலட்சியத்திற்கு வழிவகுக்கும் என்பதையும் கூறி நிற்கின்றது. இதன் மூலம் எம்மதமும் சம்மதமே என்பது புலனாகின்றது. அதாவது ஆறுகள் பலவாக இருந்தாலும் அவை அனைத்தும் போய் சங்கமிக்கும் இடம் ஓர் இடமே. இதே போல் மதங்கள் பலவாயினும் அவைக்கூறும் ஆன்மீக இலட்சியக்கருத்துக்கள் ஒன்றாகவே இருப்பதை அறியக்கூடியதாகவுள்ளது.

நம்மைக் கெடுப்பதும் , உயர்த்துவதும் நமது எண்ணந்தானே தவிர, எந்த மனிதனாலும் நம்மைக் கெடுக்க முடியாது.

-வாரியார்

கடவுளையே கடன் கொடுத்துவிட்டு.....

கோ. சுரேஷ், பொருளியல் (விஷேடம்), 2ம் வருடம்,கலைப்பீடம்,

இந்துக்களே
விழித்தெழுங்கள்.....!

நாம்
இன்னும்
இன்னும் தூங்கிப் போனால்
இந்து மதம்
தூரமாகி..
தொலைந்து போகலாம் !

காலம் செய்கின்ற
கோலத்தினால்
மனிதனின்
வாழ்க்கையைப் போல...
நம் மதமும்
மறைந்து கொண்டிருக்கிறது!

ஈழத்தில்
இன்று
இந்து மதம்
முடமாக்கப்படுகிறது.

இது
சகோதர
தோழமைக்காகவா..?
இல்லை.
இந்து மதத்தின்
தோல்விக்காக..!

எம் ஆலயங்களெல்லாம்
பறிபோகும்
பரிதாப நிலையில்
நாமிருக்கிறோம் !

கதிர்காமக் கந்தனை
நம்மிலிருந்து
அகற்றி...
அபகரித்து....
அதிக நாட்களாகி விட்டது.

சொந்த மதத்தையே
சுத்திரமாய்
வழிபட
வழியில்லை!

கடவுளையே
கடன் கொடுத்து விட்டுக்
கண்ணீர்
வடிக்கின்றோம்.

இன்னும்
கொஞ்சக் காலத்தில்
இந்து மதம்
இடிந்து..
இல்லாமல் போகலாம் !

விழித்தெழுங்கள்
இந்துக்களே...!

அழிவு என்பது
நம் மதத்திற்கு
அப்பாற் பட்டது
எனக் காட்டுவோம் !

நல்ல மரத்தைத்
தாக்கும்
புல்லுருவியை
அழிப்பதைப் போல...
நம் மதத்தை
இடிக்க நினைப்பவர்களை
அழி(டி)த்தொழிப்போம் !

விழித்தெழுங்கள்
இந்துக்களே.....!

இன்னும்
நாம்
தூங்கிப் போனால்
இந்து மதம்
தூரமாகி .....
தொலைந்து போகலாம் !

பகுதி - 111

கலைகளும் வழிபாடுகளும்



With Best Compliments From:

SRI MURUGAN'S

Dealers in Textiles

94, Colombo Street
Kandy - Sri Lanka

Dial: 08 - 223399

With Best Compliments From:

Estd. 1947

SARASWATHI STORES

90,Colombo Street
KANDY
Tel: 08 - 222104, 233027

திரையிசையில் பக்திமரபு

– கலாநிதி. துரை. மனோகரன், தமிழ்த்துறை, கலைப்பீடம்.

தமிழ் இலக்கியத்தில் பக்திமரபு சங்கக் காலத்தின் பிற்பகுதியிலிருந்தே மெதுவாக ஆரம்பமாவதைக் காணலாம். பரிப்பாடல் என்ற தொகை நூலில் இடம் பெற்றுள்ள தெய்வங்கள் பற்றிப் பாடப்பட்ட பாடல்கள் இதனை உணர்த்துகின்றன. அவற்றை எடுத்து திருமுருகாற்றுப்படை பக்தி பாடல், மரபு வளர்ச்சியில் இன்னொரு குறிப்பிடத்தக்க கட்டத்தை உணர்த்துகின்றது. சங்கம் மருவிய காலத்தின் இறுதி கட்டத்திலிருந்து பக்திப் பாடல் மரபு பிரங்ஞை பூர்வமாக வளர்க்கப்பட்டு வந்துள்ளமையை காணலாம். இதற்கு கால்கோல் அமைத்தவர்கள், சைவத்தைச் சார்ந்த காரைக்காலம்மையாரும், வைவணவத்தை சார்ந்த பொய்கையாழ்வார், பேயாழ்வார் பூதத்தாழ்வார் எனும் முதலாழ்வார் மூவருமாவர். பல்லவர் –பாண்டியர் காலத்தில் (கி. பி. 7ஆம் நூ. முதல் 9ஆம் நூற்றாண்டு வரை) பக்தி இலக்கியம் அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய சைவ குரவர்களாலும, பெரியாழ்வார், ஆண்டாள், திருமங்கையாழ்வார், குலசேகர ஆழ்வார், தொண்டர டிப் பொடியாழ்வர்., நம்மாழ்வார், திருப்பாணாழ்வார், திருமழிசையாழ்வார், மதுரகவியாழ்வார் ஆகிய ஒன்பது ஆழ்வார்களாலும் பெருவளர்ச்சி பெற்றது. இதனைத் தொடர்ந்து, சோழப் பெருமன்னர் காலத்தில், பல்லவர், பாண்டியர் கால பக்தி எழுச்சியின் தொடர்ச்சியினைக் காணமுடிகின்றது. திருமாளிகைதேவர் முதலான ஒன்பது சைவ அடியார்கள் பாடிய திருவிசைப்பா, திருப்பல்லாண்டு என்பன இவ்வகையில் குறிப்பிடத்தக்கன.அத்தோடு சோழர் காலத்தில் சைவ திருமுறைகளும், வைணவ ஆழ்வார்கள் பாடிய நாலாயிரத் திவ்விய பிரபந்தமும் தொகுக்கப்பட்டன. இவை இசையமைதியோடு விளங்கும் பக்தி நலங்கனிந்த பாடல்களாகும்.

சைவ அடியார்களுக்கும் வைணவ ஆழ்வார்களுக்கும் பின்னர், இசையுணர்வோடு தமது பக்தி பாடல்களைப் பாடியவர் நாயக்கர் காலத்தில் வாழ்ந்த அருணகிரிநாதர் ஆவார். அவரது திருப்புகழ், கந்தரலங்காரம், கந்தரனுபூதி, இசையமைதி கொண்ட பக்திப் பாடல்கள், தெவிட்டாத சுவை வளம் கொண்டவை. இனிய சந்தச்சுவை கொண்டவையாக அவை விளங்குகின்றன.

பல்வேறு கவிஞர்களும் பக்திச் சுவை பொதிந்த பாடல்களைப் பாடியுள்ள போதிலும் அருணகிரிநாதருக்குப் பின்னர் இசையுணர்வோடு பக்திப் பாடல்களைப் பாடியவர்களாக கோபாலகிருஸ்ணபாரதியார், அருணாசலகவிராயர் முதலானோர் விளங்கினர். கோபால கிருஸ்ணபாரதியாரின் நந்தனார் சரித்திரக் கீர்த்தனை மிக பிரபலம் பெற்றது.

20ஆம் நூற்றண்டில் பாரதியும் பாரதி வழிவந்த கவிஞர்கள் சிலரும் பக்திரசம் கலந்த இனிமையான இசைப் பாடல்களையும் எழுதியுள்ளனர். 1940களிலிருந்து தமிழிசை வளர்ச்சிச் சங்கம் போன்றவை, தமிழில் இசைப்பாடல் பெருக வேண்டும் என்ற உணர்வோடு செயற்பட்டு வந்தன.

அதே வேளை தமிழ் நாடகத்துறையும் நீண்ட காலமாக இசைத் துறையோடு தொடர்புபட்டு வளர்ச்சியடைந்து வந்துள்ளது. தமிழிற் கொட்டகைக் கூத்துகளும், தெருக் கூத்துகளும் பெருமளவுக்கு புராண, இதிகாச கதை மரபுகளை தழுவியமைந்தமையால் அவற்றில் இடம்பெற்ற பாடல்களும் கணிசமான அளவுக்கு இசை அமைதியும் பக்தி சுவையும் இணைந்தவையாக அமைந்தன.

பின்னர், 1931 முதல் பேசும் படங்கள் தமிழில் தயாரிக்கப்படத் தொடங்கிய போது, ஆரம்ப காலத்தில் பெரும்பாலும் புராண, இதிகாசக் கதைகளை பின்பற்றியவையாகவே அவை விளங்கின. நாடக மரபை பின்பற்றி திரைப்படங்களிலும் இசையினிமை கனிந்த பக்திப் பாடல்களும் இடம்பெறத் தொடங்கின.

இந்நூற்றாண்டின் ஆரம்ப கட்டத்தில் நாடகத்துறையிற் பங்களிப்பு நல்கிய சங்கரதாஸ் சுவாமிகள் இயற்றிய பல பாடல்கள் இசைச்சுவையும் பக்தி நலமும் கனிந்த பாடல்களாக விளங்குகின்றன. குறிப்பாக, "ஞானப்பழத்தை பிழிந்து..." என்ற பாடல் மிக பிரபலமானது. அப்பாடல் ஔவையார், திருவிளையாடல், ஆகிய திரைப்படங்களில் ஔவையாராக பாத்திரம் ஏற்று நடித்த கே. பி. சுந்தராம்பாளால் இருமுறை பாடப்பட்டது . சுந்தராம்பாளின் கணீரென்ற குர லுடன் இணைந்து, அப்பாடல் மக்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றது.

திரையிசையில், தேவாரங்கள், நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் ஆகியவற்றிலிருந்தும் பாடல்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதேபோன்று, அருணகிரிநாதர், இராமலிங்கசுவாமிகள் முதலியோரின் பாடல்கள் சிலவும் திரைப்படங்களில் இடம் பெற்றுள்ளன.

திரை இசைத்துறையில் பக்திப்பாடல் மரபினை வளர்த்தோருள் முக்கியமானவர், பாபநாசம் சிவன் ஆவார். 1890ல் தஞ்சை மாவட்டத்து சிற்றூர் ஒன்றில் பிறந்த இராமையா என்ற இயற்பெயரைக் கொண்ட இவர், 1932ஆம் ஆண்டு முதல், ஏறத்தாழ 15 ஆண்டுகள் திரைப்படங்களுக்குப் பாடல்கள் எழுதியுள்ளார். திரைப்படத்துறைக்கு வருவதற்கு முன்னரே ஏராளமான கீர்த்தனங்களை சிவன் இயற்றியிருந்தார்.அவர் எழுதிய " கிருஸ்ணா முகுந்தா முராரே", "தீன கருணாகரனே நடராஜா நீலக்கண்டனே", "சொப்பன வாழ்வில் மகிழ்ந்து சுப்பிரமணியசுவாமி உனை மறந்தால்" என்பன போன்ற பக்திப்பாடல்கள் பழைய திரைப்படங்களை அலங்கரித்தன. அவை இன்றும் நம் செவிகளுக்கு விருந்தளிக்க வல்லன. அவரது பாடல்களை எம். கே. தியாகராஜ பாகவதர், பி. யு. சின்னப்பா, கே. பி. சுந்தராம்பாள், டி. ஆர். மகாலிங்கம் முதலியோர் பாடிச்சுவைச் சேர்த்தனர். பிராமண சமூகத்தைச் சார்ந்த வட மொழி பண்டிதராகவும் விளங்கிய பாபநாசம் சிவனின் பாடல்களில் வட மொழிச் செல்வாக்கு அதிகமாகவே இடம்பெற்றுள்ளது. கர்நாடக இசையும், பாடகர், பாடகிகளது இனிய குரல்வளமும் இணைந்து, அவரது பாடல்களுக்கு தனிச்சுவை சேர்த்துள்ளன.

தெய்வத்தின் மீது பக்தி சார்ந்த காதலை வெளிப்படுத்துவதாக அமைந்த பாடல்கள் தமிழிலக்கியத்தில் உள்ளன. நாயன்மாரும், ஆழ்வார்களும் தம்மை பெண்களாக பாவனை செய்தும் பாடியுள்ளனர் .அதேவேளை, ஆழ்வார்களுள் ஒருவராகிய ஆண்டாள் இயல்பாகவே பெண்மைக்குரிய முறையில் வெளிப்படையாக தமது பக்திக் காதலைப் பாடியுள்ளார். அவரது பாடல்கள் கண்ணன் மீதான காதல் உணர்வை அற்புதமாகப் புலப்படுத்துகின்றன. அந்த அளவிற்கு இல்லாவிடினும் பக்திப்பாடலை வெளிப்படுத்தும் பாடல்கள் திரைப்படங்களிலும் இடம் பெற்றுள்ளன. அவற்றுள் ஒரு பாடல் குறிப்பிடத்தக்கது: மீரா என்ற திரைப்படத்திற்காக கல்கி எழுதிய "காற்றினிலே வரும் கீதம் "என்ற பாடல். அப்பாடலில் ,

"நிலா மலர்ந்த இரவினில் தென்றல்
உலாவிடும் நதியில்
நீலநிறத்துப் பாலகன் ஒருவன்
குழல் ஊதிநின்றான்
காலமெல்லாம் அவன் காதலை எண்ணி
உருகுமோ என் உள்ளம்
கர்றினிலே வரும் கீதம்"

என அமைந்துள்ள அடிகள், கல்கியின் கவிதா உள்ளத்தை அற்புதமாக படம் பிடித்துள்ளன. எம். எஸ். சுப்புலட்சுமி தமது இனிய குரல் வளத்தால் அப்பாடலுக்கு மெருகேற்றிச் சிறப்பித்துள்ளார்.

தமிழ்த் திரைப்படப் பாடல்களில் என்றும் அழியாத புகழோடு விளங்கும் தனித்துவமான பக்திப்பாடலாக விளங்குவது, காருகுறிச்சி அருணாசலத்தின் நாதஸ்வர இசையோடு எஸ். ஜானகி தமது இனிய குரலில் பாடிய,

"சிங்கார வேலனே தேவா! – முல்லைச்
சிரிப்போடும் முகத்தோடு வா வா!
செந்தூரில் நின்றாடும் தேவா – அருள்
சீராடும் மார்போடு நீவா! "

என்று தொடங்கும் பாடலாகும் .கொஞ்சும் சலங்கை என்ற திரைப்படத்தில் இடம் பெற்ற இப்பாடலை, கு.மா.பாலசுப்பிரமணியம் இயற்ற, எம். எஸ். சுப்பையா நாயுடு இசையமைத்திருந்தார்.

தமிழ்த் திரைப்பாடல் துறையில் பொதுவுடைமைக் கருத்துகளைத் துணிச்சலோடு சந்தர்ப்பம் வாய்க்குந்தோறும் கையாண்டு வெற்றி கண்டவர், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம். அவ்வகையில், திரைப்படங்களுக்காகப் பக்திச்சுவை மிக்க பாடல்களை எழுதவேண்டிய தேவை ஏற்பட்ட போதும், பொதுவுடைமைக் கருத்துகளுக்கு முக்கியத்துவமும், அழுத்தமும் அளித்து அவர் எழுதினார். ஆளுக்கொரு வீடு படத்தில் இடம்பெற்ற,

"ஊருக்கெல்லாம் ஒரே சாமி
ஒரே சாமி ஒரே நீதி
ஒரேநீதி ஒரே ஜாதி
கேளடி கண்ணாத்தா"

என்று தொடங்கும் பாடல், இவ்வகையிற் குறிப்பிடத்தக்கது. அப்பாடல் முழுவதும் சமதர்மக் கருத்துகளையே பேசுகிறது. கே. ஜமுனாராணியும், எல்.ஆர்.ஈஸ்வரியும் சுவை ததும்ப இப்பாடலைப் பாடியுள்ளனர். மகேஸ்வரி என்ற திரைப்படத்தில் ஏ. எம். ராஜா, ஜிக்கி குழுவினர் பாடிய, "அறம் காத்த தேவியே! குலம் காத்த தேவியே! நல்அறிவின் உருவமான ஜோதியே! காத்தருள்வாயே!" என்று தொடங்கும் பாடலை எழுதியவரும் இவரே. "சத்தியமே இலட்சியமாய்ச் சேவை செய்யவே பராசக்தியே நீ வரம் தா! " என்ற அடிகள் இப்பாடலில் திரும்பத் திரும்ப இடம் பெறுகின்றன . இதுவே இப்பாடலின் தொனியுமாகும்.

தமிழ்த் திரைப்படங்களில் ஏறத்தாழ 6000 பாடல்களை எழுதிய கண்ணதாசனின் கணிசமான பாடல்கள், பக்திச்சுவை மலிந்தவையாகவும் விளங்குகின்றன. பக்திப் பாடல்களைத் தத்துவச் செறிவோடு எழுதியவர் அவர். எடுத்துக்காட்டாக, அவன்தான் மனிதன் என்ற படத்துக்காக அவர் எழுதி, எம். எஸ். விஸ்வநாதன் இசையமைத்து, ரி. எம். சௌந்தரராஜன் பாடிய பாடலைக் குறிப்பிடலாம்.

"ஆட்டுவித்தால் யாரொருவர்
ஆடாதாரே கண்ணா!
ஆசையெனும் தொட்டிலிலே
ஆடாதாரே கண்ணா!"

என்று தொடங்கும் அப்பாடல், உருக்கமான பக்திச்சுவையும், தத்துவக் கனதியும் கொண்டு விளங்குகின்றது. இதேபோன்ற எண்ணிறந்த பாடல்களை எழுதியுள்ளார், கவிஞர் கண்ணதாசன்.

திரைப்பாடல்களிற் பக்திரசத்தைப் பிழிந்தெழுதிய பிறிதொரு குறிப்பிடத்தகுந்த கவிஞர், பூவை செங்குட்டுவன் ஆவர். அவர் எழுதிய,

"திருப்பரங் குன்றத்தில்
நீ சிரித்தால் – முருகா
திருத்தணி மலைமீது
எதிரொலிக்கும்"

என்ற பாடல் மிகப் பிரபலமானது. இப்பாடல் முதலில் சூலமங்கலம் சகோதரிகளால் தனிப்பாடலாகப் பாடப்பட்டது. பின்னர், கந்தன் கருணை திரைப்படத்துக்காகச் சூலமங்கலம் ராஜலட்சுமி, பி. சுசிலா ஆகியோரால் மீண்டும் பாடப்பட்டு, படத்தில் சேர்க்கப்பட்டது. "திருப்புகழைப் பாடப்பாட வாய் மணக்கும" (கௌரி கல்யாணம்), "ஏடு தந்தானடி தில்லையிலே" (ராஜராஜ சோழன்) போன்ற இனிய பக்திப் பாடல்களையும் படங்களுக்காக அவர் எழுதியுள்ளார்.

திரைப்படங்களில் இடம்பெற்ற கணிசமான பக்திப் பாடல்கள் சுவையும், இசையினிமையும் நிறைந்தவையாகவுள்ளன. எடுத்துக்காட்டாக, எதிர்பாராதது படத்துக்காகக் கவிஞர் சுரபி எழுதி, நடிகர் வி. நாகையா பாடிய, "திருமுருகா என்று ஒருதரம் சொன்னால் உருகுது நெஞ்சம் பெருகுது கண்ணீர", அம்பிகாபதி திரைப்படத்துக்காக கே. டி. சந்தானம் எழுதி ரி. எம். சௌந்தரராஜன் பாடிய " சிந்தனை செய் மனமே" , களத்தூர் கண்ணம்மா படத்தில் சுந்தரவாத்தியார் எழுதி, எம். எஸ். ராஜேஸ்வரி பாடிய, "அம்மாவும் நீயே அப்பாவும் நீயே; அன்புடனே ஆதரிக்கும் தெய்வமும் நீயே", தஞ்சை ராமையாதாஸ் எழுதி ரி. எம். சௌந்தரராஜன் பாடிய, "ஆண்டவனே இல்லையே தில்லைத் தாண்டவனே உன்போல் தாரணி மீதினிலே" , நல்லவன் வாழ்வான் படத்துக்காக ஆத்மநாதன் எழுதிய "ஆண்டவன் ஒருவன் இருகின்றான்; அவன் அன்பு மனங்களில் சிரிக்கின்றான", காவல் தெய்வம் படத்துக்காக மாயவநாதன் எழுதி பி. சுசிலாவும், பொன்னுச்சாமியும் பாடிய "ஐயனாரு நெறைஞ்ச வாழ்வு கொடுக்கணும் "; அருணகிரிநாதர் படத்துக்காகப் பிரபல வசனகர்த்தா சக்தி கிருஷ்ணசாமி எழுதி, ரி. எம். சௌந்தரராஜனும், எஸ். ஜானகியும் பாடிய ஆடவேண்டும் மயிலே! அழகோடு விளையாடும் முருகோடு நான் சேர்ந்து , தெய்வம் படத்துக்காக மருதகாசி எழுதி, மதுரை சோமு பாடிய "மருதமலை மாமணியே முருகையா", அகஸ்தியர் படத்துக்காக இரா. பழனிச்சாமி எழுதி சீர்காழி கோவிந்தராஜன் பாடிய, "நமச்சிவாய எனச் சொல்வோமே; நன்மைகள் ஆயிரம் கொள்வோமே" போன்ற எண்ணிறந்த பல பக்திப் பாடல்கள் திரைப்படங்களை அலங்கரித்துள்ளன.

அண்மைக் காலத் தமிழ்த் திரைப்படங்களில் சற்று மாறுபட்ட நிலையில் பக்தி உணர்வைப் புலப்படுத்தும் போக்கினையும் இனங்காணலாம். சமுதாயப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத் தெய்வம் முன்வர வேண்டும் என்ற ஆவேசக்குரல் சில பாடல்களில் இடம் பெறுவதைக் காணலாம். எடுத்துக்காட்டாக மீண்டும் பராசக்தி என்ற திரைப்படத்தில் கவிஞர் வைரமுத்து எழுதிய வரிகளை நோக்கலாம்.

"அடி ஆத்தா நீ பாத்தா
வெயிலடிக்கும் மழையடிக்கும்
உள்ளே நீயும் உறங்கிட்டிருந்தா
உனக்கும் கூட ஆபத்து
திரிசூலம் எடுப்பாயா?
தீமையை அழிப்பாயா?"

நா.காமராசனும் சில பக்திப் பாடல்களை எழுதியுள்ளார். ஆயினும் பழைய திரைப்படங்களோடு ஒப்பிடுகையில் இப்போதைய திரைப்பங்களில் பக்திப்பாடல் மரபு குறைந்து வருகின்றது. தனி பக்திப்படங்கள் தயாரிக்கப்படுவதும் வெகுவாக குறைந்துவிட்டது. அருமையாகவே சில திரைப்படங்களில் பக்திப்பாடல்கள் இடம் பெறுவதுண்டு. இலாப நோக்கில் திரைப்படங்களை தயாரிக்கும் போக்கு மிகுந்து வருவதால் கவர்ச்சிக்கு அளிக்கப்படும் முக்கியத்துவம் பிற அம்சங்களுக்கு வழங்கப்படுவதில்லை.

தனி பக்தி பாடல்களுக்கும் திரைப்படங்களில் இடம் பெறும் பக்திப்பாடல்களுக்குமிடையே சில வேறுபாடுகள் உள்ளன. தனி பக்திப்பாடல்களில் பக்திச்சுவையும், இசை இனிமையும் இடம்பெறும். ஆனால், திரைப்பட பக்திப்பாடல்களில் காட்சி அமைப்பு, பாத்திரங்களின் மனோநிலை போன்றவற்றிற்கும் ஏற்ற வகையிலே பாடல்கள் அமைந்திருக்கும்.

திரைப்பட பக்திப்பாடல்களை எழுதிய கவிஞர்களை பொறுத்தவரையில், ஏலவே குறிப்பிட்ட கவிஞர்களை விட, வேறு சிலரும் பாடல்கள் இயற்றியுள்ளனர். பாபநாசம் ராஜகோபாலய்யர், மாயவரம், ஸ்ரீ தியாகராஜ தேசிகர், ச.து.சு. யோகியார், ஏ.என். கல்யாணசுந்தரம், மாரியப்பா, சி. எஸ். ராஜப்பா, தஞ்சைவாணன், நெல்லை அருள்மணி, அறிவானந்தம், பூங்குயிலன், பைரவி , முருகன், வள்ளியம்மை கண்ணதாசன், ராதாகிருஷ்ணன், உடையப்பத் தேவர், தசரதன் முதலானோரும் இவ்வகையிற் குறிப்பிடத்தக்கவர்கள்.

திரைப்பாடல்களில் தியாகராஜ பாகவதர், ரி. ஆர். மகாலிங்கம், கே. பி. சுந்தராம்பாள் முதலான நாடக நடிகைகள் பக்தி பாடல்களை பாடி நடித்துள்ளனர். ரி. எம். சௌந்தர ராஜன், சீர்காழி கோவிந்தராஜன், பாலமுரளிகிருஷ்ணா போன்ற பாடகர்கள், சில திரைப்படங்களில் பாடி நடித்துள்ளனர். பல திரைப்படங்களுக்குப் பின்னணிக்குரல் கொடுத்துள்ளனர். இவர்களுள், ரி. எம். சௌந்தரராஜனே தமிழ் திரைப்படங்களில் அதிகமான பக்திப்பாடல்களையும் பாடிய பாடகராக விளங்குகின்றார். இவர்களை விட, சூலமங்கலம் இராஜலட்சுமி, ராதாஜெயலட்சுமி, சிதம்பரம் ஜெயராமன், ஏ. எம். ராஜா, திருச்சி.லோகநாதன், பி. லீலா, பி. சுசிலா. எஸ். ஜானகி, ஜேசுதாஸ், பாலசுப்பிரமணியம், வாணிஜெயராம், எம்.எஸ் இராஜேஸ்வரி, எல்.ஆர். ஈஸ்வரி, மலேசியா வாசுதேவன், சித்ரா போன்ற பல பின்னணி பாடக, பாடகியரும் திரைப்படங்களில் இனிய பக்திப்பாடல்களையும் பாடியுள்ளனர்.

திரை இசையில் அமைந்துள்ள பக்திப்பாடல்கள் திரைப்பட இசைத்துறைக்கு வளம் சேர்த்துள்ளன. தமிழ் திரைப்படங்களில் இந்து பக்திப்பாடல்கள் மாத்திரமன்றி, கிறிஸ்தவ, இஸ்லாமிய பக்திப்பாடல்களும் இடம் பெற்றுள்ளன. சில திரைப்படங்களில் பௌத்த பக்திப்பாடல்களும் சேர்க்கப்பட்டுள்ளன. திரைப்பட பக்திப்பாடல்கள் பெரும்பாலும் சாஸ்திரிய சங்கீதத்துடன் இணைந்து மெல்லிசைப்பிரியர்களுக்கும் மனமகிழ்வை தருவனவாக விளங்குகின்றன. இயல்பாகவே கருத்துச் செறிவும் இசை நயமும் வாய்ந்தவையாக அவை அமைந்துள்ளன. திரைப்படங்களில் இசை, நடன அம்சங்களும் பக்கத்துணையாக விளங்கி வந்துள்ளன.

கலைத்துறையில் ஆனந்த குமாரசுவாமி அவர்களது ஒப்பியல் ஆய்வு

திருமதி. மல்லிகா இராஜரத்தினம். சிரேஷ்ட விரிவுரையாளர், மெய்யியற்துறை.

"Indian art and culture are a joint creation of the Dravidian and Aryan genuins, a welding together of symbolic and representative, abstract and explicit language and thought."

-Dr . Ananda Coomaraswamy in his " History of Indian & Indonesian art"

ஒரு பண்பாட்டை புரிந்து கொள்ள சரியான முறையில் மதிப்பீடு செய்ய மற்றொரு பண்பாட்டுடன் சார்பு படுத்தி அதனை நோக்க வேண்டும். ஒப்பியல் ஆய்வு முறையே சரியான ஆராய்ச்சி நடைமுறையாகும். சார்பு படுத்திய ஆய்வு முறையின் மூலம் ஒரு நாட்டின் பண்பாட்டம்சங்களின் தனித்துவம் அதன் செழுமை என்பவற்றை அவதானிக்கும் அதே வேளையில் மனித நாகரிகம் என்ற வகையில் அவற்றுள் கலப்பற்று விளங்கும் ஓர் ஒற்றுமை நிலையினையும் அவதானித்தவர் கலாயோகி. சார்பு படுத்தி ஆராயும் பொழுது பண்பாட்டின் அனைத்துலகப் பொது உண்மை ஒன்றை ஒருவர் கண்டுகொள்ள முடியும். பற்றற்ற ஞானியைப் போல் கிழக்கையும் மேற்கையும் ஒப்பிட்டார் கலாயோகி. தெற்காசியக் கலைகளினதும் மேற்குலகக் கலைகளினதும் அடிப்படையான, உட்கிடையான தத்துவங்களிடையிலான முக்கிய வேறுபாட்டினை மிக ஆழமாகப் புரிந்து கொண்டவர் என்ற வகையில் ஆனந்தக் குமாரசுவாமியின் ஒப்பியல் ஆய்வு கலை விமர்சன வரலாற்றில் காத்திரமான ஓர் இடத்தைப் பெறுகின்றது.

ஒரு பண்பாட்டைப் புரிந்துகொள்ள மற்றொரு பண்பாட்டுடன் சார்பு படுத்தி அதனை நோக்க வேண்டும் என்று கலாயோகி ஆனந்தக் குமாரசுவாமி கருதினாரென அவர் எழுத்துக்களிலிருந்து ஊகிக்கலாம். அப்பொழுது தான் மனித இயல்புகளின் அனைத்துலகப் பொதுமையும், பேதங்களின் மேலோட்டத் தன்மையும் புலப்படும்.[1] இந்த வகையான ஓர் ஒப்பியல் ஆய்வு மூலந்தான் அடிப்படையான ஓர் ஏகத்துவத்தை பொதுமையை உணர்ந்தவர் ஆனந்தக் கமாரசுவாமி அவர்கள் உரிய கலாச்சாரப் பின்னணியை உண்மையாகப் புரிந்து கொண்ட எழுதினார். இதனால் தெற்காசியப் பண்பாட்டினைப் போலவே அதில் அவர் கண்ட அனைத்துலகம் பொதுவான உண்மைகளும் பழமை வாய்ந்தது. காலத்தால் புதுமை குன்றாத தன்மையையும் உள்ளடக்கி மிளிர்கின்றன.[2] இதனால்தான் இவர் ஏனைய கலைத்துறை ஆராய்ச்சியாளர்களை விட தனித்துவமான அனைத்துலகப் பொது மனிதனாக, தத்துவஞானியாகப் பரிணமிக்கின்றார். அனைத்துலகப் பொதுமை அம்சங்களைக் கண்டு கொள்ள முடியும் என்னும் குமாரசுவாமியின் நம்பிக்கையை 1915ல் அவர் வெளியிட்ட ஓர் அறிக்கையில் காணலாம்.

> "எந்த ஓர் இனத்தின் அனுபவத்திலும் கலப்பே அற்ற முற்று முழுதான தனித்துவம் என்று எதுவும் இருக்க முடியாது." என்பதே அதில் இடம் பெறும் குறிப்பாகும்.

இத்தகைய உலகக் கலைகளின் ஒப்பீட்டு ஆய்வின் மூலம் தான் ஆனந்தக் குமாரசுவாமி அவர்கள் கலையை ஒரு வாழ்க்கையின் அம்சமாக அடிப்படையில் எவ்வித வேறுபாடுகளும் இல்லாத பொதுத் தன்மையைக் கொண்டு விளங்குவதை எடுத்துக்காட்ட முடிந்தது.

எனக் கூறும் தன்மை ஆனந்தக் கமாரசுவாமி அவர்களின் ஒப்பியல் ஆய்வின் மூலமாகக் கிடைத்த பொதுமை உணர்வேயாகும். இந்த வகையில்தான் தனது மரபில் உலக மரபையும் உலக மரபில் தனது மரபையும் உணர்ந்த கொள்ளக்கூடிய ஆளுமை ஆனந்தக் குமாரசுவாமி அவர்களுக்கு ஏற்பட்டது.

இவர் கீழைத் தேசக் கலைகளின் மறுமலர்ச்சிக்கு ஆற்றிய பெரும்பணி இந்து சமய மறுமலர்ச்சிக்கு சுவாமி விவேகானந்தர் ஆற்றிய பணியையும் இந்திய சுதந்திரத்திற்கு காந்தியடிகள் ஆற்றிய பணியையும் நிகர்த்ததாகும். இந்திய கலாசார மறுமலர்ச்சிக்கு கலைத்துவ விழிப்புணர்ச்சிக்கு மட்டுமல்ல உலக கலாச்சாரத்திலேயே, உலகக் கலை வரலாற்றிலேயே ஒரு புதிய மறுமலர்ச்சிக்கு உதவியவர் கலாயோகி ஆனந்தக் குமாரசுவாமி.

தெற்காசியாவின் கலாச்சாரத்தைப் புரிந்துகொள்ள முயலும் ஐரோப்பியர்களுக்கும் வட அமெரிக்கர்களுக்கும் குமாரசுவாமியின் எழுத்துக்கள் மிகவும் உறுதுணையாயின. அவரது பங்களிப்பு பற்றிய ஆய்வில் மேற்கில் அவர் ஏற்படுத்திய தாக்கம் மிகப் பாரியது. ஆசியரல்லாதவருக்கு மட்டுமன்றி ஆசிய மக்களுக்கே ஆசியக் கலைகளின் பெருமையை எடுத்து உணர்த்தியவர் ஆனந்தக் குமாரசுவாமி. இவர் இலங்கையில் செய்த சேவை மேல்நாட்டு நாகரிகத்தில் மூழ்கியிருக்கும் மக்களை எழுப்பி சகல துறைகளிலும், கல்வி, சமூகம், சமயம் இவற்றிற்கே உயிர்ப்பினை ஊட்டின. காந்தியடிகளுக்கு முன்பிருந்தே சுதேசியத்தைப் பற்றி ஆழ்ந்த கருத்துணர்வைக் கொண்டிருந்தவர் கலாயோகி.

இலங்கையின் கலைகளைப் பற்றிய ஆய்வுடன் தனது ஆத்மார்த்த கலை விமர்சனத் துறையில் காலடி எடுத்து வைத்த ஆனந்தக் குமாரசுவாமி படிப்படியாகக் குறுகிய எல்லைகளையும் கடந்து இந்தியனாக, ஆசியனாக உலகப் பொது மனிதனாக உலகப் பிரஜையாக ஓர் அற்புதமான பரந்த பொதுமைவாதியாக அடிப்படையில் இந்து அல்லது இந்திய கலாசாரத்தில் காலூன்றியவராக விளங்கினார். ஒப்பியல் நோக்கும் ஒருமைப்பாட்டுணர்வும் அவரை ஒரு சர்வதேசவாதியாகப் பரிணமிக்கச் செய்தன. அவரது பிற்கால ஆக்கங்கள் உலகப் பொதுவான விஷயங்களைப் பற்றினவாக அமைந்தன. "மொழிகளின் ஒப்பியல் ஆய்வின் விளைவான மொழியியல், இசை, சிற்பநூல் முதலியவை மட்டுமன்றி தத்துவம் சமயம் அறவியல் ஒழுக்கவியல் என்பனவும், நவயுகத்தின் வாழ்க்கைப் பிரச்சனைகளும் அவற்றின் விளக்கத்திற்கு இன்றியமையாது அரசியல், சமூகவியல், மானிடவியல் என்பனவும் அவருடைய ஆய்வுத் துறைகளாக அமைந்தன. இறுதி ஆய்விலே உலக கலாச்சாரம் நாகரிகம் என்பவற்றின் எழுச்சி பற்றியதாக அவரது ஆய்வு அமைந்தது."

செழுமையான ஆக்கம் நிறைந்த தன் ஆயுட்காலத்தில் ஐந்நூற்றுக்கும் மேற்பட்ட நூல்களும் கட்டுரைகளும் எழுதினார் ஆனந்தக் குமாரசுவாமி. இவற்றில் பலவற்றை இவை வெளியாகிப் பல்லாண்டுகளின் பின்னரும் தெற்காசியக் கலைக் கலாச்சாரத்துறை மாணவர்கள் விரும்பிக் கற்கின்றார்கள் என்பது கலாயோகியின் வெற்றிக்குச் சான்றாகும்.

ஆளுமையுடன் ஆய்ந்ததன் விளைவாக இவ்விரு கலாச்சாரங்களின் பொதுமை அம்சங்களையும் தனித்துவமான சிறப்பம்சங்களையும் உரியவாறு விளங்கிக் கொள்ள முடிந்தது. இதன் காரணமாக குமாரசுவாமி ஏனையவர்களை விடத் தனித்துவம் பெறுகின்றார்.

தனக்குப் பின்னணியாக அமைந்த தெற்காசிய ஐரோப்பிய கலாசாரம் இரண்டையும் பற்றிய குமாரசுவாமியின் கருத்துக்கள் அவரின் சொந்த அனுபவங்களைக் கொண்டு உருவானவையல்ல. பதிலாக அவருடைய தத்துவக் கருத்துக்களும், அனைத்துலகப் பொதுமை அம்சங்களைக் கண்டறிய அவர் செய்த முயற்சிகளுக்கும் அடி ஆதாரமாக அமைந்து கிழக்குலக மேற்குலகக் கலாசாரங்களின் அதி உன்னத சாதனைகளை, அவை பற்றிய நூல்களையும் அவை படைத்த கலை ஆக்கங்களையும் விடாப்பியாக ஆராய்ந்ததன் மூலமாக ஆழமாகக் கற்றுக் கொண்டனர்.

சமீபகாலத்தில் மேற்குலகில் அபிமானம் பெறத் தொடங்கி விட்ட "கலை கலைக்காகவே" என்ற கொள்கையை ஆனந்தக் குமாரசுவாமி அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. கலைஞன் கருதாவிட்டாலும் கூட ஒரு கலைப்படைப்பு சிருஷ்டியாளனின் அடிப்படை நம்பிக்கைகள் அல்லது கொள்கைகளையும் அவன் பலத்தையும் பிரதிபலிக்கவே செய்யும் என்ற கருத்தில் ஆனந்தக் குமாரசுவாமி ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருந்தார். கலையைப் பற்றிய அவரது விளக்கம் ஓவியம், சிற்பம்,கட்டிட ஆக்கம் இவற்றையும் தாண்டி மிக சாமானிய ஒரு வேலை முதல் தெய்வீக பணிகள் வரை அனைத்தையும் உள்ளடக்கியதாக அமைந்தது. நுண்கலை பிரயோகக்கலை என்ற வேறுப்பாட்டைக்கூட கலாயோகி ஏற்றுக் கொள்ளவில்லை. கலையையும் கலையின் அர்த்தத்தையும் பற்றிய தன் அடிப்படைக் கொள்கைகளை நிரூபிப்பதற்கு தெற்காசியக் கலாசாரத்தை விடச் சிறந்தது எதுவும் இல்லை என உணர்ந்து கொண்டவர் ஆனந்தக் குமாரசுவாமி. ஆயிரக்கணக்கான வருடகாலம் மரபு தவறாமல் தொடர்ந்து வந்த ஆதாரம் கொண்ட அந்தச் செழுமையான கலைத்துவப் பாரம்பரியம் கருத்துத் தொடர்புறுத்தலுக்குரிய ஒரு சாதனமாகக் கலையைக் கொண்டிருந்தது என்பது அதன் சிறப்பியலிலக்கணமாகும். இவ்வகையில் அழியாக் கலைகளின் உட்கிடையான கருத்துக்களைக் கூர்ந்தறிந்து வெளிப்படுத்தியமையே ஆசியரல்லாதவர்களுக்கு ஆனந்தக் குமாரசுவாமி அவர்கள் செய்த அதிசிறந்த சேவையாகும். தெற்காசியக் கலைகளினதும் மேற்குலகக் கலைகளினதும் அடிப்படையான உட்கிடைத் தத்துவங்களிடையிலிருக்கும் முக்கிய வித்தியாசங்களை அவர் விளங்கிக் கொண்டார். தெற்காசியக் கலை, மனித விளக்கமாக வான மண்டலப் பின்னணியிலும் அமைந்து அனைத்துலகம் பொதுமையாகிய ஏகத்துவத்தை அவன் புரிந்து கொள்ளும் ஆற்றலை அதிகப்படுத்துவது. மேற்குலகக் கலையோ மனிதன் வணங்கும் தெய்வத்தையும் மனித சாதனைகளையும் மனிதனின் நாளாந்த மண்ணுலக வாழ்க்கைப் பின்னணியில் வைத்து ஒப்புமை வேற்றுமை பார்த்து அவற்றைப் புகழ்ச்சி செய்வது தெற்காசியாவில் மனிதன் கோவிலிலிருக்கும் தெய்வத்தில் "தானும்" ஓர் அங்கமாக இருக்கின்றான். ஐரோப்பாவிலும் வடஅமெரிக்காவிலும் மனிதன் கோவிலிலிருக்கும் தெய்வத்தைத் தரிசிக்கின்றான். "இந்தக் கருத்துப் பிளவிற்காகப் பாலாமிட்டு இணக்கத்திற்கான வாசலைத் திறந்து வைத்த சாதனையே ஆனந்தக் குமாரசுவாமி உலகிற்கு அளித்த அருஞ்செல்வம் என்று கூறலாம்". எனவே இந்த வகையில் இரு கலாசாரங்களினதும் இணைப்புப் பாலமாக ஓர் அரிய சாதனையை நிலைநாட்டியவர் ஆனந்தக் குமாரசுவாமி. தெற்காசியக் கலைகளினதும், மேற்குலகக் கலைகளினதும் அடிப்படையான தத்துவங்களைப் புரிந்து கொண்டு அவற்றைப் பொதுமைப்படுத்த முனைந்தவர் கலாயோகி.

மேலைநாட்டுக் கலைக்கு அந்நாட்டுச் சிற்பிகள் சிறந்த மனிதத் தன்மையை அளித்துள்ளனர். ஆனால் இந்தியக் கலைஞர்கள் அவர்களின் கலைப்படைப்புகளுக்கு கருத்தைக் கவரும் தெய்வத் தன்மையைக் கொடுத்துள்ளனர். இதனால்தான் ராஜாஜி

"amoung the few sho saw beauty and the form of God in such Beauty Ananda Coomarasamy ranks high. He was a great man and saw many thinks which others did not see."[6] எனக்குறிப்பிடுகின்றார்.

இந்தியச் சிற்பி உண்மையில் இயற்கையின் அழகினைக் காணும் ஆற்றல் வாய்க்கப் பெறாதவனல்லன். பிரகிருதிவாதம் (Realism) என்பதற்கு நாம் கொள்ளும் அர்த்தத்தை அவன் கொள்ளாவிடினும் ஐரோப்பியச் சிற்பிகளைப் போல் இயற்கை ஒழுங்குகளை அனுசரித்துக் கலைப்படைப்புக்களை ஆக்கம் திறன் அவனிடத்தில் உண்டு. இந்தியச் சிற்பிகளாற் பின்பற்றப்படும் தத்துவ முடிவுகள் இயற்கையிற் காணப்படுவன வெல்லாம் நிலையற்றனவெனவும், மாயையின் தோற்றமுடையனவெனவும் நிலையுள்ள வஸ்த்து என்பது தெய்வாம்சம் பொருந்திய ஆன்மா ஒன்றே ஆகுமெனவும் வற்புறுத்துகின்றன. இக்காலத்து ஐரோப்பியக் கலையானது காணமுடியாததாகிய தெய்வத் தன்மையுடன் தன்னை ஒரு சிறிதளவேணும் தொடர்புபடுத்திக் கொள்ளாது இயற்கையோடு மாத்திரம் ஒருமைப்பாடுறுதலே அன்றித் தனது மிக உயர்ந்த நிலையிற்தானும் உலகத்தோடும் தொடர்புறுதலையே காட்டுகின்றது. ஆனால் இந்தியக் கலையோரெனின் நித்தியமானதும் (Eternal) அகண்டமாயுள்ளதும் (infinite) சர்வ சமரசமாயுள்ளதும் ஆகிய பொருள் யாதொன்றுள்ளேதா அதனையே அனுபவத்தில் உணர்த்த முயலுகின்றது. ஐரோப்பியக் கலை ஞானப் புனருத்தாரணம் மீண்டும் நிலை நிருத்துதல் (Renaissance) என்று சொல்லப்படும் இயக்கத்தின் பின் இவ்ஐரோப்பியக் கலையானது இறகுகள் கத்தரிக்கப்பட்ட பட்சியைப் போல் மேலெழாது நிலப்பரப்பிலுள்ள அழகினை மாத்திரமே அறிகின்றது. இந்தியக் கலையோவெனின் பிரபஞ்சாதீத உச்சியுட் புகுந்து எட்டாத அவ்வஸ்த்துவினது அழகை நிலவுலகிற்கு இழுக்கப் பிரயத்தனப்படுகின்றது.[7]

இவ்வகையில் மேனாட்டு கலை விமர்சகர் முல்க்ராஜ் ஆனந் போன்றவர்கள் கலைத்துறயில் கிழக்கையும் மேற்கையும் ஒப்பியல் ரீதியான ஆய்வினை மேற்கொள்ள கலாயோகியே வித்திட்டவர்.

மேனாட்டுச் சிற்பங்களைப் போல் இந்தியச் சிற்பங்கள் உடலுறுப்பு சாஸ்திர அமைப்புகளுக்கேற்ப அங்க அமைப்புக்களையும் உறுதியான நரம்புகளையும் மனித அழகையும் முகபாவத்தையும் கொண்டிருக்கவில்லை. சாதாரண பொம்மைகளாகவே இவை இருக்கின்றன எனக் கருதி வந்தவர்கள் மேற்கு நாட்டினர். மேலைத் தேசக்கலைப்படைப்புக்கள் மனிதனின் சாதாரண உணர்ச்சிகளைத் தூண்டக் கூடிய முப்பரிமாணமுள்ள தன்மை நவிற்சிப் (Realistic) படைப்புகளே. அவற்றின் உயிர்த் துடிப்பையோ உள்ளத்தின் உணர்ச்சிகளைக் காட்டும் முகபாவங்களையோ காணமுடிவதில்லை. கீழைத்தேசக்கலைகள் குறியீட்டு நோக்கமும் அரூபத்தன்மையும் அலங்காரச் சிறப்பும் ஆத்ம உணர்ச்சி வெளிப்பாடும் கொண்ட இலட்சியக் (Idealistic) கலைப்படைப்புக்கள். இவைகளிற் காணப்படும் அங்க அமைப்பும் சாயலும் கால்களின் நிலையும், கைகளின் முத்திரைகளும் ஆடை அணிகலன்களும் ஆயுதங்களும் பிறவும் மனிதத் தன்மைக்கு அப்பாற்பட்ட அரும் பெரும் தத்துவங்களை விளக்குவன. இந்தவகையில்தான இந்தியக் கலையானது இலட்சிய மயமுடையதும் (Idealistic) மறைஞானத் தன்மையுடையதும் (mystic) குறியீட்டுத்தன்மையுடையதும் (Isymbolic) பரஞானத்துவம் (Itranscendental) உடையதுமாகும்." என ஆனந்தக் குமாரசுவாமி தனது Indian Sculpture and Painting என்னும் நூலில் கூறுகின்றார்.

மேலும் இந்தியாவிலே ஓர் இனத்தின் அனுபவத்தை வெளிப்படத்தும் பொருளாகவே கலை அமைகின்றது. அதனால் முழுச் சமுகத்திற்குமுரியதாக தனிமனித மேதமைகளின் விளைவாக அல்லாது சமுகத்தின் வெளிப்படாகக் கலை உள்ளதால் அங்கு கலை அநாமேதயமாக உள்ளது. ஆனால் மேற்கில் அவ்வாறு அல்லாது தனிமனித மேதமைகளின் விளைவாக தனிமனிதப் பாணிகளை உள்ளடக்கியதாகவே கலை வரலாறு பெருமளவில் உள்ளது.

"மேலை நாட்டில் கலைப்படைப்பு எனில் உணர்வினைப் புறவழிலே காட்டுவதாகும். ஆனால் இங்கு உணர்வு அக வடிவிலே எடுத்துக் காட்டப்படும். புறவடிவிலே காட்டப்படும் பொழுது கலைஞன் வெளியே நின்று செயற்படுகின்றான். தனது கலைப்பொருட்களை ஆக்குகின்றான். ஆனால் அகவடிவிலே நோக்கும் பொழுது பொருட்களின் மையத்தில் உள்ளான்." எனவே இந்தவகையிலே மேற்குலக, கிழக்குலகக் கலைகளின் அடிப்படை வேறுபாட்டினை அவதானிக்கின்றார் கலாயோகி.

இடைக்காலத்தில் கலாயோகி அவர்கள் "கலையிற் இயற்கையின் திரிபு" (1934) போன்ற பல்வேறு வெளியீடுகளில் ஆசிய மேற்குலக சமுகங்கள் பற்றிய பல அம்சங்களை ஒப்பிட்டும் வேற்று நோக்கியும் ஆராய்ந்து இரு பண்பாடுகளிலும் பெண்களுக்குமுரிய அந்தஸ்து தொடக்கம் கலாதத்துவங்கள் அழகியல் விளக்கங்கள் வரையான அம்சங்களை மதிப்பீடு செய்கின்றார்.

"கிரேக்க தெய்வங்களின் உருவங்கள் சிறந்த இலட்சணங்கள் பொருந்திய மனித உருவத்தைப் போல் செய்யப்பட்டவை. அவ்வுருவங்களின் தசை, நரம்பு, விலா முதலிய உறுப்புக்கள் பார்ப்பவர் மனதைக் கவரத்தக்க முறையில் அமைக்கப்பெற்றவை. இந்திய உருவங்கள் அப்படி அமைக்கப்பெறவில்லை. கை கால்களின் நரம்புகள், பொருத்துக்கள் தோன்றப்பெதாமல் அமைக்கப்பட்டவை. இந்திய உருவங்கள் சடத்தன்மையை உணர்த்தாமல் தெய்வத்தன்மையை வெளிப்படுத்துவன என்பன" போன்ற கருத்துக்களை ஆனந்தகுமாரசுவாமி தனது ஒப்பியல் ஆய்வின் மூலம் வெளிக்கொணர்ந்தார்.

அமராவதி நகரில் உள்ள சிலப்பதிகாரத்துக் கல்லோவியம் எழில் மிக்க நரம்புகளுள்ள யாழின் உருவத்தை நமக்கு காட்டுகின்றது. இவ் ஓவியத்தின் நிழற் படத்தினைக் கண்ணுற்ற ஆனந்தக்குமாரசுவாமி அவர்கள் பழமை யான இக்கருவி சிலப்பதிகாரத்தின் காலத்திலும் அதற்கு முன்னும் பின்னும் தமிழ் நாட்டிலே வழங்கி வந்தது என்பதையும் உலகிலுள்ள பேரரிஞர்களுக்கு வெளியிட்டார்" என திரு விபுலானந்தர் தனது யாழ் நூலில் குறிப்பிடுகின்றார்.

இந்தியப் பாட்டினதும் இசைக் கருவியின் தனி இசையினதும் மற்றுமோர் அம்சம் அதன் விஸ்தாரமான ராக அழகுதான் பல சுரங்கள் ஒரே நேரத்தில் கேட்கும் தன்மையதே ஐரோப்பிய இசை, இங்கு ராக அழகுதான் பல சுரங்கள் ஒரே நேரத்தில் கேட்கும் தன்மையதே ஐரோப்பிய இசை, இங்கு ராக அழகு உருவக் காரணி என்று கொள்வதிலும் பார்க்க கருத்தோடு சோர்க்கப்பட்ட தேவையற்ற விஸ்தாரமாகத் தோன்றுகின்றது. ஆனால் இந்தியாவில் சுரமும் நுண்தொனி அழகும் ஒரு நெருங்கிய இணைப்பை உண்டாக்குகின்றது. ஏனெனில் ஒத்திசையில் வேறுபட்ட நிலையிலுள்ள இணையொலிகள் ஏற்படும் ஓசை போல் இந்திய இசையில் ராக அழகு இத்தொழிலைச் செய்கிறது. பக்க இசை முக்கியமாக இருக்க வேண்டிய ஐரோப்பியக் கலைச் சங்கீதத்தில் அது இல்லாத போது எவ்வாறு மொட்டையாகக் கேட்குமோ அது போன்றதே ராக அழகு இல்லாத இசை இந்திய செவிகளுக்குப்படும். இது போன்ற தனிப்பட்ட தன்மையதே இடை விடாது ஒரு சுரத்திலிருந்து ஒரு சுரத்திற்குச் செல்லும் ஒலியாகும். இந்தியாவில் பாடப்பட்ட அல்லது வாசிக்கப்பட்ட கருத்திலும் பார்க்க சுரங்களின் இடைவெளியினாலேயே ஒலியின் தொடர்ச்சியை அறிகின்றோம். இதற்கு நேர்மாறாக, ஐரோப்பிய இசையின் செங்குத்தாகப் பிரிக்கப்பட்ட ஒத்திசைத் தன்மையின் பாட்டும் குரலோடு கேட்கும் திருகானிக் கருவிகளது தன்மையதின் ஒலியும் பழக்கப்படாத இந்திய செவிகளுக்கு "குழிகள் நிறைந்ததாக தென்படும்".[13] எனக்கூறும் ஆனந்தகுமாரசுவாமி எவ்வளவு நுணுக்கமான முறையில் இந்திய இசையில் ஐரோப்பிய இசையை ஒப்பிடுகின்றார் என்பது புலப்படுகின்றது.

ஆனந்தகுமாரசுவாமியின் தளராத ஆராய்ச்சியின் மூலம் இராஜ புத்தான் ஓவிய மரபுகளின் தனித்துவமான இரு வேறு தன்மைகளை இருவித ஓவியங்களை மிக நுணுக்கமாகப் பரிசீலனை

செய்து இனங் கண்டு அவற்றை வெளிப்படுத்த முடிந்தது. கலை வரலாற்றில் அவரது ராஜபுத்தான் ஓவியங்கள் பற்றிய ஆய்வு உயர்ந்த அவரது சாதனையை எடுத்துக் காட்டுகின்றது. அவருடைய கலை பற்றிய ஆய்வும், ஆர்வமும் நிதானம் மிக்க தத்துவப் பார்வையாக ஞானமாகப் பரிணமித்தது.

இறுதிக் கால எழுத்துக்கள் தத்துவ சிந்தனை செறிந்தன. காலாதிகாலம் (**Time** and Eternity - 1947) முந்திய எல்லா ஆக்கங்களையும் மீறி அவற்றின் தத்துவ சாரமாக அமைகின்றது. இந்த வகையில் கலாயோகி ஆனந்தகுமாரசுவாமி அவர்களது கலைத்துறை - ஒப்பியல் ஆய்வு அவரை ஒரு தத்துவ ஞானியாகவும் பரிணமிக்கச் செய்தது. இந்து கலை வரலாற்றில், ஆசியக் கலை வரலாற்றில் ஏன் உலகக் கலை வரலாற்றிலேயே ஆனந்தகுமாரசுவாமி அவர்களது ஒப்பியல் ஆய்வு தனித்துவமான ஓர் இடத்தை பெறுகின்றது. கலைத் துறையில் அவரது காத்திரமான பங்களிப்பிற்கு இவ் ஒப்பியல் ஆய்வு வித்திட்டது எனலாம்.

1. கலாநிதி சூசான். எல்.ஹன்டிங்டன், PH.D, கட்டுரை - "ஆனந்தகுமாரசுவாமி அளித்த அருஞ்செல்வம்", கலாயோகி ஆனந்தகுமாரசுவாமி நூற்றாண்டு விழா, அமெரிக்க தகவல் சேவை, கொழும்பு, 1977.

2. Ibid

3. P. S. Sastri Ananda K. Coomaraswamy, Ameld Heinemann Publishers (Pvt.) Ltd., Delhi, 1974, p.149.

4. பேராசிரியர் க. கைலாசபதி, கட்டுரை - "ஆனந்தகுமாரசுவாமி அளித்த அருஞ்செல்வம", கலாயோகி ஆனந்தக் குமாரசுவாமி நூற்றாண்டு விழா, அமெரிக்க தகவல் சேவை, கொழும்பு, 1977.

5. கலாநிதி சூசான். எல்.ஹன்டிங்டன், PH.D, கட்டுரை —"ஆனந்தகுமாரசுவாமி அளித்த அருஞ்செல்வம", கலாயோகி ஆனந்தக் குமாரசுவாமி நூற்றாண்டு விழா, அமெரிக்க தகவல் சேவை, கொழும்பு, 1977.

6. Edited bu S. Durai Raja Sinham, Remembering and Remembering Again and Again Messages, 1974, Malaysia.

7. கலைப்புலவர் நவரட்னம், தென் இந்திய சிற்ப வடிவங்கள், சுன்னாகம் திருமகள் அச்சகம், யாழ்ப்பாணம், ப.99.

8. Dr. Ananda Coomaraswamy, Indian Sculpture and Painting, (தென் இந்திய சிற்ப வடிவங்கள்), p100. pp. 8-10

9. கலாநிதி நாராயண மேனன், கட்டுரை - "இந்தியாவில் இசையும் பண்பாட்டு மாற்றமும். ", தமிழாக்கம்: வி. சிவசாமி, ஈழநாட்டு வாரமலர், 13.1.80.

10. ச. அம்பிகைபாகன், கலாயோகி ஆனந்தகுமாரசுவாமி, வரதர் வெளியீடு, யாழ்ப்பாணம், 1978 ஜூலை, ப.55.

11. ஈழவேந்தன், என் நோக்கில் ஆனந்தகுமாரசுவாமி, யாழ்ப்பாணம், 1971, March, p.7.

12. Dr. Ananda Coomaraswamy. The Dance of Siva, Munshiram Manohar Lal Publishers (Pvt.) Ltd., New Delhi, 1974, pp.107-108

பக்தி இயக்கமும் தமிழும்

திரு. வ. மகேஸ்வரன், விரிவுரையாளர், தமிழ்த்துறை.

தமிழ் என்பது ஒரு தேசிய இனத்தின் மொழியின் அடையாளமாகவும், அது அத்தேசிய இனத்துக்கு உணர்ச்சியூட்டக்கூடிய ஓரம்சமாகவும் கருதப்படுகின்றது. நீண்டகாலப் பாரம்பரியமிக்க தமிழ் இலக்கியங்களைக் கற்கின்ற போது தமிழ் மொழி பற்றித் தமிழர்கள் அதிகம் சிந்தித்துள்ளமையை அறிய முடிகின்றது. தமிழ் என்பது மொழியினைக் குறிக்கும் சொல்லாக மட்டுமன்றிப் பல பொருட்களைக் குறிக்கும் சொல்லாகவும் பயன்பட்டு வந்துள்ளது. தமிழ் என்பது தமிழர் என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டது. (புறநானூறு – 19, பதிற்றுப்பத்து 1-63, 16-2 பரிபாடல் திரட்டு 7) தமிழ்நாடு என்ற பொருளில் கையாளப்பட்டுள்ளது. (பதிற்றுப்பத்து 2.5, 222,புறநானூறு, அகநானூறு 51, 168, 198) ஆரிய அரசனுக்குத் தமிழ் அறிவுறுத்துவதற்குப் பாடிய பாடல் என குறிஞ்சிப் பாட்டின் அடிக்குறிப்பு குறிக்கின்றது. இங்கு தமிழ் என்பதற்கு காதல் என்பது பொருளாகும். தமிழ் தழீய சாயலவர் எனச் சீவகசிந்ததாமணி (2026) கூறும் பொழுது இனிமை என்பதைத் தழுவி நிற்கின்றது. தமிழ் என்பதற்குப் பக்திப்பாடல்களில் பக்தி எனப் பொருளுண்டு."நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன்"என்ற தொடர் பக்தி என்ற பொருளிலேயே தமிழ் என்ற சொல் பயன்படுத்தப்படுகின்றது. தமிழர் , தமிழ் நாடு, காதல், வீரம், பக்தி – ஆகிய பல்வகைப்பட்ட பொருட்களில் தமிழ் என்ற சொல் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. இந்த பாரம்பரியத்தின் தொடர்ச்சியாகவே பாரதி, பாரதிதாசன் முதலானோர் தமிழ் பற்றிப்பாடிய பாடல்கள் அமைந்திருத்தலைக் காணலாம். நீண்ட காலமாகத் தமிழர் சமூகத்தில் கலாசாரப் பெட்டகமாகவே தமிழ் மொழியும் இலக்கியமும் விளங்கி வந்துள்ளன. தமிழ்மொழி பல்வேறு காலங்களில் முதன்மைப்படுத்தப்பட்டுள்ளது; அல்லது போராட்டக்கருவியாகப் பயன் படுத்தப்பட்டுள்ளது. எங்கெல்லம் சமூக அழுத்தங்கள் காணப்பட்டனவோ அங்கு ஏதாவது ஒரு பொருள் முனைப்புப் பெற்று அந்த அழுத்தத்தை எதிர்க்கின்ற ஆயுதமாகப் பயன்பட்டு வந்ததை நாம் சகல சமூகங்களிலும் வரலாற்று பாரம்பரியத்துடன் தொடர்புபடுத்தி அறியலாம். சமயஎழுச்சி, வர்க்கங்களின் எழுச்சி, பிராந்திய ரீதியான கருத்தியல்களின் முனைப்பு, மொழி முதன்மைப்படுத்தப்படல் ஆகிய அம்சங்கள் அவ்வப்போது நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. இந்த வகையில் தமிழ்மொழி பல்வேறு சந்தர்ப்பங்களில் முதன்மைப்படுத்தப்பட்டுள்ளது அல்லது போராட்டக்கருவியாக பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. நாம் தமிழர் என்ற மொழி வழியான இன அடையாளத்தை உறுதி செய்யும் நோக்குடன், பொதுமையான நோக்குடன் தமிழ் மொழி, தமிழர்களின் கோட்பாடு முதலியன முன்வைக்கப்பட்டதை ஆரம்பகால இலக்கியங்களில் அவதானிக்க முடியும். அதே நேரத்தில் நெருக்கடிகள் ஏற்பட்ட நேரத்தில் தமிழ் முதன்மைப்படுத்தப்பட்டமையையும் அறியமுடிகின்றது. பல்லவர் காலத்தில் நிலவிய சமஸ்கிருதச் சூழல் காரணமாக ஏற்பட்ட நெருக்கடியை எதிர்கொள்ளும் முகமாக தமிழ் முதன்மைப்படுத்தப்பட்டதை தேவாரங்களிலும், பாசுரங்களிலும் அறியமுடியும் . இது போலவே இந்தியச் சுதந்திரத்தின் முன் பின்னாக தமிழகத்தில் ஏற்பட்ட இந்தித் திணிப்பு முதலானவற்றின் எதிர் விளைவாக தமிழ் ஒரு போராட்டக் கருவியாக முதன்மைப்படுத்தப்பட்டதை அறிய முடிகின்றது.

"எங்கள் வாழ்வும், எங்கள் வளமும்
மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு...."

என்று பாரதிதாசன் பாட வேண்டிய சூழல் இங்கே ஏற்பட்டது. இது போலவே இலங்கையில் 50களின் பிற்பகுதியில் சிங்களம் மட்டும் என்ற சட்டத்தின் விளைவாகத் தமிழ் பகுதிகளில் தமிழ் மொழி முதன்மைப்படுத்தப்பட்ட ஒரு சூழல் ஏற்பட்டதையும் அதன் வழி வேறு பல புறவிளைவுகள் ஏற்பட்டதையும் அரசறிவியலாளரும் , சமூகவியலாளரும் நன்கு அறிவர். அன்னிய ஆதிக்க காலனித்துவ சூழலில் ஆங்கிலேயருடைய நலன்கள் காரணமாகவும் சமயம், பிராந்தியம், மொழி முதலானவை முதன்மைப்படுத்தப்பட்டதைக் காணலாம். சேர். ஜோன் மார்சலின் சிந்துவெளி நாகரிகத்தின் அகழாய்வு முடிவுகளும், அறிஞர் கால்டு வெல்லின் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்ற நூலும் பிரித்தானியரின் பிரித்தாளும் தந்திரத்தின் ஓர் வகை முயற்சியே என்று அறிஞர் சிலர் கூறுவர். அறிஞர் கால்ட்டு வெல் சமஸ்கிருத துணை வேண்டா திராவிட தனித்தன்மை என்ற கட்டுரையை உணர்ச்சிப் பூர்வமாக எழுதினார் இந்த கருத்தியலின் அடிப்படையில் தான் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை தன்னுடைய மனோன்மணியம் நாடகத்தின் தமிழ்த் தாய் வாழ்த்தில் .....

"ஆரியம் போலுலக வழக்கொழிந்து
சிதையா நின்
சீரிளமைத் திறம் வியந்து செயல்
மறந்து வாழ்த்துதுமே..."

என்று பாட வேண்டிய நிலை ஏற்பட்டது. தமிழகத்தில் திராவிட இயக்கங்களினது மொழி பற்றிய சிந்தனையும் செயலும், சொல்லும் ஓர் குறிப்பிட்ட காலத்தில் மிகவும் உச்ச நிலை அடைந்திருந்தமையும் அதனால் இந்தி எதிர்ப்பு போராட்டம், தனித்தமிழியக்கம், முதலிய நிகழ்வுகள் ஏற்பட்டதையும் அண்மைக்கால திராவிட பாரம்பரிய வரலாறுகளினூடாக அறியலாம்.

தமிழகத்தின் சகல விடயங்களிலும் சகல துறைகளிலும் இவ்வாறான செயற்பாடுகள் அதீத செல்வாக்குப் பெற்றதனை அறியலாம். (இது அறிவியல் உண்மைகளை புறம் தள்ளிய போதும்) மற்றொருபுறம் கர்நாடக சங்கீதத்தில் தெலுங்கு மொழியின் ஆதிக்கத்தை எதிர்த்து தமிழிசை இயக்கம் அண்ணாமலைச் செட்டியார், கல்கி போன்றோர்களால் முன்னெடுத்துச் செல்லப்பட்டதையும் அறிய முடிகின்றது. (இவ்வாறாக வளர்ந்த திராவிட இன, மொழிச் சிந்தனைகள் பின்பு தமக்குள்ளேயே முரண்பட்டுக் கொண்டன என்பது வேறுவிடயம்.)

இன்றைய நிலையில் தமிழ் மொழிக்கு விஞ்ஞான வளர்ச்சிக்கு ஏற்பட்ட எதிர் விளைவு காரணமாக பாதிப்பு ஏற்பட்டிருக்கின்றது. அதனை தமிழக வரலாற்றில் முன்னெப்போதையும் விட தமிழ் மொழியை அழிக்கும் சக்திகள் இன்று பெயரளவில் திரண்டுள்ளன. மொழியுணர்வு மட்டும் இன்று தமிழை காப்பாற்ற இயலாது. தமிழ் மொழியை அழிக்கும் அரசியல் சக்திகள் பற்றி நமக்கு ஏற்பட்டிருக்கும் உணர்வு கூட இன்று போதாது. தமிழை அழிக்க முனைந்துள்ள பொருளியல் (பொருளாதார) சக்திகள் பற்றி இன்றும் கூட நமக்கு போதிய கவனமில்லை. தமிழைக் காக்கும் அல்லது காப்பாற்ற விரும்பும் சக்திகள் இவ்வுணர்வு பெறாத நிலையில் இன்று தேய்ந்து வருகின்றன. அடுத்த நூற்றாண்டில் தமிழ் என்ற ஓர் மொழி இருக்க இயலுமா? என்று கூட சிலர் ஐயப்படுகின்றனர். இவை பற்றி எல்லாம் நாம் உரக்கச் சிந்திக்க வேண்டிய தேவை இன்று மிகுந்துள்ளது என்ற குரலோங்கி ஒலிப்பதைக் கேட்க முடிகின்றது.

பல்லவர் கால நாயன்மார்களும், ஆழ்வார்களும் தமது தேவார, திருவாசகங்களிலும், பாசுரங்களிலும் தமிழ் பற்றி பரக்கப் பாடியுள்ளனர். தமிழ் மொழியின் தொன்மை, இனிமை, தமிழிசை, முத்தமிழ் முதலிய விடயங்கள் தொடர்பாக பாடியுள்ளனர். அத்துடன் தமிழ் மொழியுடன் சிவனை இணைத்தும் பாடியுள்ளனர். மேலாகத் தத்தமது திருப்பதிகங்களின் திருக்கடைக் காப்பு அல்லது முத்திரைக் கவிகளிலே தம்மையும் தமிழையும் இணைத்துப் பாடியுள்ளனர்.

(01) தமிழின் சிறப்புப் பற்றியவை.

அணியார் செந்தமிழ்கள்	.....	சம்பந்தர் (331)
அருந்தமிழ், இன்தமிழ்	.....	சம்பந்தர் (234, 56)
செந்தமிழ்	.....	அப்பர் (163, 8)
வாயிருந்த தமிழ்	.....	அப்பர் (171 – 9)
தண்டமிழ்	.....	சுந்தரர் (90– 6)
பொய்யாத்தமிழ்	.....	சுந்தரர் (13– 11)
தண்ணார் தமிழ்	.....	மாணிக்கர் (8– 10)
தூய தமிழ்	.....	ஆண்டாள் (நாச்சியாள் திருமொழி 6–11)
இன்தமிழ்	.....	பெரியாழ்வார் (பெரிய திருமொழி3–8–10)
நற்றமிழ்	.....	குலசேகரர் (பெருமாள் திருமொழி1–5–11)
வண்டமிழ்	.....	திருமங்கையாழ்வார் (பெரிய திருமொழி1–8–11)
வழுவிலா ஒண்தமிழ்	.....	நம்மாழ்வார் (4–7–11)

(2) தமிழின் தொன்மை அல்லது சங்கத்துடன் தொடர்புபடுத்துதல்

குலவேந்தர் செந்தமிழ்	.....	(சம்பந்தர் – 193)
சங்கமலி செந்தமிழ்	.....	(சம்பந்தர் – 332)
முத்தமிழும் நான் மறையும் உயர் மதிற் கூடலில் ஆய்ந்த ஒண்தீந்தமிழ்	.....	(அப்பர் 236 –6) (மாணிக்கவாசகர் – திருக்கோவையார்)
சங்கத்தமிழ் மாலை	.....	(ஆண்டாள்– நா– திருமொழி 6– 11)
சங்கத் தமிழ் மாலை	.....	(திருமங்கையாழ்வார் பெ. திருமொழி3–4–11)
சங்கமலி தமிழ் மாலை	.....	(திருமங்கையாழ்வார் பெ. திருமொழி3–9–11)

(3) தமிழும் இசையும்

இசைமலிதமிழ்	.....	(சம்பந்தர் –2)
பண்ணருந்தமிழ்	.....	(சம்பந்தர் –323)
பண்ணும் பதமேழும் பலஓசைத் தமிழ் இவையும்	.....	(சம்பந்தர்– 337– 11)
தமிழோடு இசை பாடல் மறந்தறியேன்	.....	(அப்பர்– 1– 6)
இன்னிசைத் செந்தமிழ்	.....	(சுந்தரர் 67– 11)
ஏழிசை இன்தமிழ்	.....	(சுந்தரர் 100 – 10)
தமிழோடிசை	.....	(சுந்தரர் 65– 2)
பண்ணிசைத்தமிழ்	.....	.(சுந்தரர் 29– 6)
நல்லிசைத் தமிழ் மாலை	.....	(குலசேகரர் பெருமாள் திருமொழி 1–7)
தமிழின்னிசைமாலை	.....	(திருமங்கையாழ்வார். பெரியதிருமொழி–8)
பண்ணார் தமிழ்	.....	(நம்மாழ்வார் – திருவாய்மொழி – 2– 7–11)

(4) தமிழும் தாமும்.

நற்றமிழ் வல்ல ஞான சம்பந்தன்	.....	(242)
ஞான சம்பந்தன் வாய் நவிற்றிய தமிழ்.	.....	(117– 2)
ஆரூரன் தமிழ்	.....	(89– 11)
குலசேகரன் சொன்ன நற்றமிழ்	.....	(1– 5– 10)
சடகோபன் பண்ணிய தமிழ் மாலை	.....	(2– 7– 10)
கோதை வாய்த் தமிழ்	.....	(2– 10)
புதுவைப் பட்டன் உரைத்த தமிழ்	.....	(1– 5– 11)

(5) தமிழும் சிவனும்

பண்ணும் பதமேழும் பலவோசை தமிழவையும்
உள்நின்றதோர் சுவையும்... முழுதானான்
(சம்பந்தர் 337– 11)

அற்றன்றி யந்தண் மதுரைத் தொகையாக்கினானும்
(சம்பந்தர் 312– 11)

ஆரியன் கண்டாய்
தமிழன் கண்டாய் ..... (அப்பர் 236– 5)

வடமொழியும், தென்தமிழும் மறை நான்கும் ஆனவன் கான் (அப்பர் 300– 1)

பண்ணாரின் தமிழாய்ப் பரமாய பரஞ்சுடரே ..... (சுந்தரர் 24– 5)
தண்ணார் தமிழ் அளிக்கும் தண் பாண்டி நாட்டானை .....(திருவாசகம் 8– 10)

பக்தி இலக்கிய காலத்தில் இவ்வாறு தமிழ் முதன்மைப்படுத்தப்படுவதற்கான காரணங்களை ஆராய்வது அவசியம். பல்லவர்கள் தொடக்கத்திலே வேற்றரசர்களாய் இருந்தமையால் வடமொழி பிராகிருதம் ஆகிய மொழிகளையே பெரிதும் போற்றினர். அதே சமயத்தில் சமணரும் வடமொழி, பிராகிருதம் ஆகிய மொழிகளையே தமது சமயத்திற்குரிய சிறப்பு மொழிகளாகக் கொண்டனர். இந்நிலையில் வடமொழிக் கல்வியே பல்லவர் காலத்தில் செழித்து வளர்ந்தது. காஞ்சியிலே பல சிறப்புமிக்க வடமொழிக் கல்விக் கூடங்கள் இருந்தன. அவை "கடிகை" என அழைக்கப்பட்டன. வட மொழியே அரசனது மொழியாகவும் இருந்தது. அது மட்டுமன்றி சமண சமயப் பிரசாரத்திற்காகவும் அதனைச் சார்ந்த சில தேவைகளுக்காகவும் சமணர்களால் இயற்றப்பட்ட சில நூல்களைத் தவிர பெருந்தமிழிலக்கிய நூல்கள் இக்காலத்திலும் இயற்றப்பட்டிலை. ஆனால் இக்காலப் பகுதியில் பல சிறப்பு வாய்ந்த வட மொழி நூல்கள் தென்னிந்தியாவில் பல்வேறு பகுதிகளிலும் இயற்றப்பட்டன. பல்லவ மன்னர்களே வடமொழி நூலாசிரியராகவும் இருந்தனர். சங்க காலத்தில் பாண்டியன் அறிவுடை நம்பி போன்றோர் புலவராகவும் இருந்ததைப் போல பல்லவராட்சிக்காலத்திலே லோகவிவாகம், கிரார்த்தார் சூனியம், அவந்திசுந்தரிகதா, காவியா தரிசம், மத்தவிலாச பிரகசனம், மாகவீர சரிதம், உத்தராம சரிதம், மாலதி மாதவ, முகுந்த மாலா, முதலிய நூல்கள் இருந்தன.

பல்லவர் ஆட்சிக்காலத்தில் மன்னர்களுடைய செப்பேடுகளும் பட்டயங்களும் சமஸ்கிருத மொழியில் அல்லது கிரந்த எழுத்துக்களில் எழுதப்பட்டன. பல்லவர் தெற்கே காஞ்சிபுரம் அளவிலும் தங்களது ஆட்சியை கிறிஸ்துக்கு பின் நான்காம் நூற்றாண்டிலிருந்து வளர்த்துக் கொண்டுள்ளனர். சமஸ்கிருத மொழியையே தங்கள் ஆட்சிக்குரிய மொழியாகக் கொண்ட அம்முக்கால பல்லவர்கள் அக்காலத்து சமண, பௌத்த சமயத்தார் கையாண்டு வந்த பிராமி மொழி எழுத்துக்களைக் கொண்டு தமிழ் போன்ற மொழிக்குரிய சொல்லொலிகளை முழுமையாக எழுதவியலாத நிலையில் கிரந்த எழுத்துக்களோடு தமிழ் எழுத்துக்களையும் தேவையான அமைப்பிற் கையாண்டு புதியதொரு எழுத்துருவாக்கத்தினை வட மொழிகளுக்கும் தமிழ் ஒலிகட்கும் ஏற்பப் படைத்துள்ளனர். இவ்வாறு வடமொழிச் சொற்களையும் சுலோகங்களையும் எழுதவும் தமிழ்மொழிச் சொற்களை சொல்லொலிகள் குறையாமல் எழுதவும் ஏற்றவாறு உருவாக்கிப் பல்லவ அரசு நாட்டில் நடைமுறைப்படுத்தியதால் இப்புதுமைப் பெற்ற எழுத்துக்கள் பல்லவ கிரந்த எழுத்துக்கள் என்று பெயர் பெற்றுள்ளன.

கி. பி. ஆறாம் நூற்றாண்டுக்குப் பின்பு தமிழகத்தின் வடபகுதியை காஞ்சி மாநகரை தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த பல்லவ பேரரசர் தங்களது ஆட்சியில் வெளியிட்ட கல்வெட்டுகளிலும் செப்பேடுகளிலும் கிரந்த எழுத்துகளையே பயன்படுத்தியுள்ளனர் சமஸ்கிருதச் சொற்களையும் சுலோகங்களையும் கிரந்த எழுத்துக்களிலேயே எழுதியுள்ளனர். அக்காலத்தில் பல்லவர் ஆட்சியின் கீழ் உருவானவரும் சோழ நாட்டினை கண்காணித்தவருமான முத்தரையர் தங்கள் கல்வெட்டுக்களில்

கிரந்த எழுத்துக்களையே பயன்படுத்தியுள்ளனர். ஆகவே தமிழ் எழுத்து வடிவம் கூட அக்கால கட்டத்தில் முதன்மையற்று காணப்படுகின்றது.

அக்காலத்தில் தமிழகத்தில் வாழ்ந்த சமண, பௌத்தர்கள் சாஸ்திர தானம் என்ற போர்வையில் தமது பள்ளிகளில் தமிழ் மொழிக்கல்விக்கு முதன்மைக் கொடுத்தது மட்டுமன்றி தமிழ் மொழியிலே பல நூல்களையும் எழுதினர். வைதீகம் தமது சமய மொழியாகச் சமஸ்கிருதத்தை இறுகப் பற்றியிருந்த அதேவேளை மேற்குலத்தாருக்கு சமஸ்கிருதக்கல்வி உரிமையும் அளித்திருந்தது. இதை மீறி வேதம் ஓதிய, ஓதுவதைக் கேட்ட சூத்திரர்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட்டார்கள். என்று மயிலை சீனிவேங்கடச்சாமி கூறுவார். இந்த நிலையை தமக்குச் சாதகமாக கருதிய அவைதீகர்கள் தமிழ் மொழியைத் தமது சமய பரப்புதலுக்கு ஏற்ற ஆயுதமாகக் கையாண்டனர். இது அக்காலத்தில் வைதீக மதத்தின் பலவீனமாகவும் இருந்தது. எனவே அவ்வைதீக மதங்களுக்கு எதிரான தமது எதிர்ப்பை காட்டுவதில் மொழியையே பிரதான கருவியாகக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஆழ்வார்க்கும், நாயன்மார்களுக்கும் ஏற்பட்டிருக்க வேண்டும். அக்காலத்தில் சமணர் செல்வாக்கிலேயே பல்லவ, பாண்டிய மன்னரும் முத்தரையர் போன்ற குறுநிலத்தலைவர்களும் சிக்கியிருந்தமையால் பக்தி இயக்கத்தை முன்னெடுத்துச் சென்றவர்கள் அனைவரையும் தம் வசமாக்க விரும்பினர். எனவே செல்வாக்கின் உச்சியிலிருந்த சமய, வணிக வர்த்தகத்திற்கு எதிராகத் சமுதாயத்திலே கீழ் நிலையிலிருந்த பல சாதி மக்களையும் பரந்த ஓர் அணியில் திரட்டினர் எனலாம். வைதீக சமயத்துடன் தொன்றுதொட்டுப் பிணைந்திருந்த பிராமணரும் இயல்பாகவே இவ்வணியில் சேர்ந்தனர். சேக்கிழார் பாடியுள்ள அரனடியார் அறுபத்து மூவர் குல வரிசையை ஒரு கணம் உற்று நோக்குவோமாயின் இவ்வுண்மை புலனாகும். இவ்வாறு சாதி, குலம் முதலிய பிறப்பு வேறுபாடுகளையும் கடந்து பரந்துபட்ட மக்கள் முன்னணி ஒன்றினை உருவாக்கும்போது அதற்குப் பொதுவானதாக மொழி ஒன்றே இயல்பாக அமைகின்றது. மொழி நூல் எல்லாம் ஒப்புக் கொள்ளும் பேருண்மை இது. அது மட்டுமன்று மக்கள் அன்றாட வாழ்வில் உபயோகிக்கும் சாதாரண மொழியாகிய கருவியையே பெரும் வெகுசன இயக்கங்களைக்கட்டி வளர்ப்பவர்கள் பயன்படுத்துகின்றனர் என்ற பேராசிரியர் கைலாசபதியின் கருத்து இவ்விடத்தில் மனங்கொள்ளத்தக்கது.

பக்தி இலக்கிய காலத்திலே நாயன்மார்களும் ஆழ்வார்களும் தலயாத்திரை மேற்கொண்டனர். அன்றைய தமிழகத்தின் பிரிவுகளான சோழமண்டலம், தொண்டை மண்டலம், நடுவில் மண்டலம், பாண்டி மண்டலம், கொங்கு மண்டலம், மலை மண்டலம் ஆகிய பல மண்டலங்களுக்கும் சென்று பக்திப் பாசுரங்களைப் பாடினர். ஆழ்வாகளால் பாடப்பெற்ற தலங்கள் சோழ மண்டலத்திலே அதிகமாகவுள்ளன. 108 பாடல் பெற்ற வைஷ்ணவ தலங்களுள் சுமார் 40 தலங்கள் சோழ மண்டலத்திலேயே அமைந்துள்ளன. இது போலவே நாயன்மார்களால் பாடப் பெற்ற 274 தலங்களுள் சோழ மண்டலத்திலுள்ள காவிரியின் இரு கரைகளிலும் பாடப்பட்டவையை அதிகம். காவிரியின் வடகரையில் 63 தலங்களும், தென் கரையில் 127 தலங்களும் இவற்றுள் அடங்கியுள்ளன. உற்று நோக்குகின்ற போது சோழ மண்டலம் பக்தி இலக்கியத்தில் முதன்மை பெற்றிருப்பதை அவதானிக்க முடிகின்றது. காவிரியில் வளம் பெற்ற மண்டலத்தில் வாழும் வேளாண்மை மக்களையும் அவர்களைச் சார்ந்த உழுகுடி மக்களையும் ஓரணியில் திரட்ட, மொழியை உணர்வு பூர்வமான கருவியாக உபயோகித்ததும் அவர்களுக்கு விளங்கும் வகையிலான எளிமைப்படுத்தலும் இங்கு அவசியமாய் இருந்திருக்க வேண்டும். ஆகவே, வெகுசன இயக்கம், அல்லது கைலாசபதி அவர்கள் குறிப்பிடுவது போன்ற பொது மக்கள் முன்னணி ஒன்றினை கூட்டிணைக்க மொழி உன்னதமான கருவியாய் பயன்படுத்தப்பட்டது என்பது தெளிவாகின்றது.

சமண, பௌத்த மேலாதிக்க நிலைக்கு எதிராக கிளர்ந்தெழுந்த நாயன்மார்களும் ஆழ்வார்களும் வைதீகத்தைத் தமிழகத்தில் தக்க வைப்பதற்கு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டனர். அவற்றுள் ஒன்றே இம்மொழிக்குரிய உணர்வு. அதாவது தமிழை அக்கால தேவைக்கேற்ப ஒரு போராட்ட

கருவியாக உபயோகித்தனர். இம்மொழி உணர்வு யதார்த்த பூர்வமானதா? என்பதே இன்று எம்முன் உள்ள வினா. நாயன்மார்களதும் ஆழ்வார்களதும் தலையாய நோக்கம் சமயம் பரப்புவதே. மொழி என்பது இரண்டாம் பட்சமே. இங்கு நடைபெற்றது மொழிப் போராட்டம் அல்ல. மொழிப் பிரயோகம் அல்லது மொழிச்சிறப்பு பேசுதல் என்பது வெறும் பிரச்சார தந்திரோபாயங்களா? என்று சிந்திக்கவும் தூண்டுகின்றது. ஏனெனில், தமிழ் வரலாற்றில் காலத்திற்கு காலம் மொழியானது போராட்டக்கருவியாக பிரயோகிக்கப்பட்டதும், பின் போராட்டக்கருவியாக அக்கருத்து நிலைகள் பொய்யாய் பழங்கதையாய் கனவாய் மெல்லப் போனதும் வரலாறு கண்ட உண்மை.

ஆழ்வார்கள் மீதும் நாயன்மார்கள் மீதும் எழும் சந்தேகம் அவர்கள் சமஸ்கிருதமயமாக்கலில் இருந்து விடுபட முடியாமல் இருந்தது தான் தமிழை உயர்த்திப் பிடித்த அதே வேளையில் அவர்களது சமய மொழியான சமஸ்கிருதத்தையும் உயர்த்திப் பிடிக்க வேண்டிய கட்டாயத்திற்கு அவர்கள் உட்பட்டிருக்கின்றார்கள்.

தமிழ்ச் சொல்லும் வடசொல்லும்
தாள் நிழல் சேர ..... (சம்பந்தர் 77- 4)
ஆரியன் தமிழோடிசையானவன் .....(சம்பந்தர் 132- 3)

செந்தமிழும் வட கலையும் திகழ்ந்தவன்..... (திவ்விய பிரபந்தம்- 1654)

என்பது போன்ற தேவார, பாசுர அடிகள் மூலம் அவர்கள் அக்காலத்தில் கொண்டிருந்த மொழி பற்றிய இரட்டைத்தன்மை புலப்படுகின்றது. ஆகவே, இவ்வாறு ஆரியத்துடன் சமமாகத் தமிழைக் கூறுதல் ஆரியத்தின் மேலாதிக்கவாதத்திற்கு அனுசரணை செய்ததாகவே தோன்றுகின்றது.

குறிப்பாக சம்பந்தர் தனது பிராமண வர்க்க நிலைப்பாட்டை மீற முடியாத தன்மை கொண்டிருந்ததாகவே தோன்றுகின்றது. நாயன்மார்களதும் ஆழ்வார்களதும் தேவார திருவாசகங்களையும், பாசுரங்களையும் கால அடிப்படையில் ஆராயப் புகும் போது காரைக்காலம்மையாரிலும், முதல் மூன்று ஆழ்வார்களிலும் இவ்வாறான தன்மையை காண்பது அரிதாகவே உள்ளது. அதுபோலவே பிற்காலத்தவர் என்று கருதப்படும் சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகியோரிலும் இவ்வாறான தன்மைகள் குறைவானதாகவே காணப்படுகின்றன. ஆயின் இடைக்காலத்தவர்களான அப்பரும், சம்பந்தருமே மொழியைத் தீவிரமான பிரசாரக் கருவியாக கையாண்டமை தெரிய வருகின்றது. இவர்களது காலத்திலே தான் சமண, பௌத்த, சைவ, வைஷ்ணவ மோதல்கள் உச்ச நிலைப் பெற்றிருந்ததும் சிந்திக்கத்தக்கது. அனல், புனல் வாதங்களும், கழுவேற்றல்களும், மடங்களுக்குத் தீ வைத்தலுமான சம்பவங்கள் இருதரப்பிலும் நடத்தேறியதாக பெரியபுராணம் குறிப்பிடுகின்றது. ஆகவே காலச் சுழற்சிதான் அவர்களை அவ்வாறான செயற்பாட்டிற்கு தூண்டியுள்ளமை புலனாகின்றது.

ஆழ்வார்களது பாசுரங்களில் பெரும்பாலனவற்றில் திருக்கடைக்காப்பிலேயே அவர்கள் தமிழ் மொழிபற்றி பேசுகின்றனர். நாயன்மார்களது பாடல்கள் அவ்வாறில்லை. திருக்கடைக்காப்பிற்கு புறம்பாகவும் தமிழ் பற்றி பேசியுள்ளனர். இருந்த போதிலும் திருக்கடைக் காப்புப் பாடல்கள் இடைச் செருக்கல்களாக இருக்குமா என்ற சந்தேகமும் அறிஞரிடையே உண்டு. எனவே நாயன்மார்களதும் ஆழ்வார்களதும் திருக்கடைக்காப்பு பாடல்கள் யாப்பியல் அடிப்படையில் ஆராய்கின்ற போது அவை பற்றிய உண்மைகள் தெளிவாகலாம்.

பல்லவர் காலத்தை அடுத்த சோழர் காலத்தில் தான் தேவாரங்களும், பாசுரங்களும் தொகுக்கப்பட்டன. இடைக்காலத்தில் இவை பெரும்பாலும் பொது மக்களிடம் வழங்கி வந்திருக்க

வேண்டும். எனினும் சோழப் பேரரசு தில்லையில் மறையுண்டிருந்த எழுத்து வடிவத்திலிருந்த தேவாரங்களை தொகுப்பித்து ஆலயங்களில் அவற்றை பண்ணுடன் பாடுவிக்கும் முறைமையையும் ஏற்படுத்தியது. மாறாக வைஷ்ணவ ஆழ்வார்களது பாசுரங்கள் ஸ்ரீமத் நாதமுனியினால் சேகரிப்பு முறையில் நாலாயிரத்து திவ்விய பிரபந்தம் என்ற வடிவம் கொண்டன. இவ்விடத்தில் ஏற்படும் பிரதான வினா என்னவெனில் வெகுசனமயப்படுத்தப்பட்டு, மொழியுணர்வும் பக்தியுணர்வும் ஊட்டப்பட்ட தேவார காலத்தின் பின் பொது மக்களும் அந்த இயக்கத்தில் பங்கு கொண்டு இருப்பின் சோழகாலத்தில் அவை போன்ற இலக்கியத் தோற்றப்பாடுகளும் வெளிவந்திருக்க வேண்டும் என்பதாகும். மாறாக அரசவை இலக்கியங்களின் தோற்றத்தையே காணுகின்றோம். மேலும் தேவாரங்கள் பிற்காலத்தில் எழுந்த சைவ சித்தாந்த சாஸ்திர நூல்களுக்கு இலக்கிய ஆதாரமாக உயர்த்திப் பேசப்படும் நிலையையும் காண்கின்றோம். வைஷ்ணவ ஆழ்வார்களது பாசுரங்கள் தென்கலை வைஷ்ணவத்தின் வேதமாக உயர்ந்து அதன் சமூக அங்கீகாரத்தை நிலைநிறுத்தியது. கடையனுக்குக் கடைத்தேற்றம் என்ற அடிப்படையில் அது மொழியிலும் பக்தியிலும் தான் முன் வைத்த நேர்மையை நிலைபெறச் செய்தது ஆயின், நாயன்மார்களது தேவாரங்கள் (குறிப்பாக சம்பந்தர், அப்பர்), எந்தளவிற்கு தாம் முன் வைத்த மொழி, சமய நிலைப்பாட்டை முன்னெடுத்துச் செல்வதில் வெற்றி கண்டன என்பது ஆய்விற்குரியதாகும்.

அடிக்குறிப்பு

(1) கேசவன், கோ. திராவிட இயக்கமும் மொழிக் கொள்கையும் சிவகங்கை 1991. பக் 122

(2) கைலாசபதி, க. அடியும் முடியும், பாரிநிலையம் சென்னை – 1970. பக் – 100

(3) ஞானி தமிழகத்தில் பண்பாட்டு நெருக்கடிகள் நிகழ்,கோவை 1994. பக் 126

(5) கைலாசபதி, க. அடியும் முடியும், அடிக்குறிப்பு பக் 73

(6) கோவிந்தனார், சி. தமிழ் எழுத்தின் வரிவடிவம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம். சென்னை 1993 பக். 26

(7) வேங்கடசாமி மயிலை சினி, சமணமும் தமிழும் :

(8) கைலாசபதி க. பண்டைத்தமிழர் வாழ்வும் வழிபாடும், நியு செஞ்சரி புக் பப்ளிசிங் ஹவுஸ்,சென்னை – 1991. பக் – 114 , 115

(9) செங்கல்வரியபிள்ளை கோ.தேவார, திருவாசக, ஒளிநெறிக் கட்டுரைகள், கழக வெளியீடு

முருகவழிபாடு – சங்ககாலம் ஒரு பார்வை

செல்வி. தா. மணிமேகலா, விடுகை வருடம், கலைப் பீடம்.

சங்ககாலம் இயற்கை நெறிக்காலம் எனச் சிறப்பிக்கப்படுகின்றது. அக்காலச் சமுதாயம் பெரிதும் இம்மை வாழ்வின் செம்மையிலும் இன்பத்திலும் நாட்டமுடையதாக விளங்கியது. எனினும் சமய வளர்ச்சி கணிசமான அளவு காணப்பட்டது. சமயம் வாழ்கை நெறியாக இருந்ததே தவிர பெரிய அளவில் வளர்ந்து சமூகத்தினைக் கட்டுப்படுத்தவில்லை. மக்களின் வாழ்க்கை முறை தமிழ் நாட்டில் காணப்பட்ட ஐவகை நிலங்களுக்குமேற்ப அமைந்திருந்தது. மலையும் மலை சார்ந்த பகுதியும் குறிஞ்சி எனப்பட்டது. இந்நிலத்திற்குரிய தெய்வமாக முருகன் போற்றப்பட்டான். "சமயமே வாழ்க்கை" என்ற நிலை காணப்படாவிடினும் சமய வழிபாட்டு முறைகள் நடைபெற்றிருக்கின்றன என்பதை சங்க நூல்கள் மூலம் அறிய முடிகின்றது.

சங்ககாலத்தில் சிவன், திருமால், முருகன், பலராமன், கொற்றவை, திருமகள், இந்திரன், வருணன் போன்ற கடவுளர்கள் வழிபட்டாலும் கொற்றவையும், முருகனும் முதன்மை பெற்றுக் காணப்பட்டனர். முக்கிய வழிபாடுகளாக நடுகல் வழிபாடு, வெறியாடல், முழு நிலாக் காலங்களில் கடற்றெய்வ வழிபாடு முதலியவை காணப்பட்டன.

தமிழர்கள் வணங்கிய தெய்வங்களில் மிகவும் பழமையானது முருகனே என்பதை,

"மாயோன் மேய காடுறை யுலகமுஞ்
சேயோன் மேய மைவரை யுலகமும்"

எனும் தொல்காப்பியச் சூத்திரம் விளக்குகின்றது. திராவிட தெய்வமான முருகன் பிற்காலங்களில் வடநாட்டவரின் கார்திகேயனோடு இரண்டறக் கலக்கலானான் .முருகு என்ற சொல் இளமை, மணம், அழகு, தெய்வம் என்றெல்லாம் பொருள்படும். முருகு என்ற சொல் குறுந்தொகை ஐங்குநூறு , மதுரைக் காஞ்சி, பதிற்றுப்பத்து போன்ற நூல்களில் காணப்படுகின்றன.

தமிழரின் வழிபாட்டு முறைகளில் மிகவும் பழமையானது வெறியாட்டு என்பதாகும். இது மனிதர் மேல் தெய்வம் ஏறி வருவதுண்டு என்ற நம்பிக்கையிலிருந்து உருவானது. முருகனுக்குரிய வேலைக் கையிலேந்தி ஆடியோன் வேலன் எனப்பட்டான். வேலனின் வெறியாடல் அகப்பாடல்களில் விளக்கப்படுகின்றன.

"அணங்குடை நெடுவரை யுச்சியி னிழிதருங்
கணல்கொள் அருவிக் கான்கெழு நாடன்...
நக்கென னல்லனோ யானே யெய்த்த
நோய் தணி காதலர்..."

என்ற அகநானூற்றின் இருபத்திரண்டாம் பாடலில் வெறியாடல் பற்றிக் குறிப்பிடுகையில், தலைவிக்குத் தலைவனைக் காணாமையினால் உண்டான வருத்தத்தை அறியாதவர்களான மூதறிவுடைய பெண்கள் வெறியாட்டெடுத்து முருகனை வழிபட்டால் இவள் நோய் தீரும் என்று கூறத் தாயும் அதற்கு உடன்பட்டுக் களம் அமைத்துப் பலியூட்டி , மனைமங்களம் ஒலிய்விழா எடுத்து, வெறியாட்டுச் செய்யும் அதே வேளை வீட்டில் தலைவி இருக்கும் போது காவலர்கள் அறியாத வண்ணம் தலைவன் அவளை சந்திக்கின்றான். அப்பொழுது அவளுடைய நோய் நீங்கி சந்தோஷம் அடைகின்றாள். வீடு வந்த தாய் முதலானோர் மகளின் நோய் தணிந்திருந்தமை கண்டு சந்தோஷப்படுகின்றனர் என்று விரிவாகக்கூறப்பட்டுள்ளது.

துன்பங்கள் வேதனைகள் யாவற்றுக்கும் முருகனே காரணம் என்று கூறுவது வேலனுடைய வழக்கம். மகளின் மெலிவுக்கு காரணம் யாதென அறிய ஆவல் கொண்ட தாய் ஊர் வேலனிடம் சென்று கேட்கின்றாள். வேலன் முருகனே அவளுடைய மெலிவுக்குக் காரணம் என்றும், அதற்கான சடங்குகளை இயற்றியும் கூறுவான். ஐங்குறுநூற்றில் வெறிப்பத்து என்ற ஒருபகுதி காணப்படுகின்றது.

வெறியாடலானது மணல் முற்றத்திலேயே நடைபெறும். வெறியாடல் நடைபெறும் இடங்களில் செந் நெற்பொரி சிதறப்பட்டிருக்கும். அச்சமயத்தில் ஆட்டின் கழுத்தை அறுத்துத் தினையை உடைய பிரப்பை வைத்து வழிபடுவர். இதனைக் குறுந்தொகை "மறிக் குரலறுத்துத் தினைப் பிரப்பிரீஇ" என்று குறிப்பிடுகின்றது. இதே போன்று "சிறிய தினை அரிசியைப் பூக்களோடு கலந்து பிரப்பரிசியாக வைத்து மறியை அறுத்து" எனத் திருமுருகாற்றுப்படையில் குறிப்பிடப்படுகின்றது. வெறியாடலின் போது வேலிற்கு மாலை சூட்டிப் பலி கொடுத்து, சிவந்த தினையை இரத்தத்துடன் கலந்து தூவி முருகனை அச்சம் பொருந்திய நடு இரவில் வேலன் வரவழைப்பான்.

மதுரைக் காஞ்சியில் வெறியாடல் பற்றிப் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது; "அரிய அச்சத்தைச் செய்யும் வேலன் இடுக்கண் முருகனால் வந்ததெனக் கூறினான். தான் கூறிய அச்சொல்லின் கண்ணே கேட்போரை அதன் பக்கம் எடுக்கக்கூடிய ஓசையை உடைய இனிய வாத்தியங்கள் ஒலிக்க, கார் காலத்து மலராகிய குறிஞ்சியைச் சூடி, கடம்பணிந்த முருகனைச் செவ்விதாகத் தன் மெய்யின் கண் நிறுத்தி வழிபடுவான். அவ்வாறு வழிபட, மகளிர் தம்முள் தழுவிக் கைகோர்த்து மன்றுகள் தோறும் நின்று குரவையாடுவர்."

முருகனை வழிபடும் போது அவனுக்குகந்த உணவினைப் படைக்கும் குறமகளுடைய தன்மையைப் பற்றித் திருமுருகாற்றுப்படை கூறுகின்றது. முதலில் களத்தை அழகு செய்கின்றாள். சேவற் கொடியை நடுகின்றாள். நெய்யும் வெண் சிறு கடுகும் நெற்றியில் அப்புகின்றாள். சிறு மந்திரங்களை ஓதுகின்றாள். அழகிய மலர்களைச் சிந்துகின்றாள். இருவேறு நிறமுடைய ஆடைகளை ஒன்றன்மேல் ஒன்றாக உடுக்கின்றாள். செந்நூற் காப்பினை அணிகின்றாள். ஆட்டுக் கடாயின் குருதியை அரிசியோடு கலந்து தூவுகின்றாள். பச்சை மஞ்சளோடு சந்தனத்தைத் தெளிக்கின்றாள். செவ்வலரி மலரையும், நந்தியாவர்த்த மாலையையும் அசையுமாறு தூக்குகின்றாள். மலைப்பக்கத்து உயிர்களைப் பசியும் பிணியும் வருத்தாதொழியுமாக என்று குறிஞ்சிப் பாடலைப் பாடுகின்றாள்.

"நளிமலைச் சிலம்பி என்னகர் வாழ்த்தி
நறும்புகை யெடுத்துக் குறிஞ்சி பாடி"

எனும் பாடலடி அவளின் செயலைச் சுட்டி நிற்கின்றன. முருக வழிபாட்டில் இருவகை வழிபாட்டு முறை காணப்படுகின்றது.

1. பலியோடு கூடிய கிராம வழிபாட்டு முறை.
2. ஆத்மீகம் சார்ந்த ஆகம வழிபாட்டு முறை.

எனபனவே அவையாகும்.

முருக வழிபாட்டைப் படை, பரிபாடல் முதலிய நூல்கள் விரித்துக் கூறுகின்றன. பாமரர் முதல் ஞானிகள் வரை ஒவ்வொருவரும் தத்தம் அறிவுக்கு எட்டிய வகை முருகக் கடவுளைப் பலவாறு வழிபட்டனர். பரிபாடலில் காணப்படும் இருபத்துநான்கு பாடல்களில் எட்டுப் பாடல்கள் முருகனுக்குரியவையாகக் காணப்படுகின்றன.

"யா அ மிரப்பவை
பொருளும் பொன்னும் போகமுமல்ல, நின்பால்
அருளும் அன்பும் அறனுமே..."

என்று மக்கள் முருகனிடம் வேண்டுதல் செய்திருக்கின்றனர் என்பதைப் பரிபாடல் சுட்டி நிற்கின்றது. இதிலிருந்து மக்கள் முருகனை இவ்வுலக வாழ்க்கைத் தேவைகளை நிறைவேற்றுவதற்காக மட்டுமன்றி மறுமையின்பம் வேண்டியும் வழிபட்டனர் என்பது புலனாகின்றது. சங்ககால மக்கள்

இவ்வுலக வாழ்க்கையில் இன்பமாக வாழ்ந்து கொண்டிருந்த போதும் மரணத்தின் பின்னர் உள்ள வாழ்வைப் பற்றி அவர்கள் மறந்து விடவில்லை. அவ்வாழ்வு நல்லபடி அமைய வேண்டுமாயின் இறையருள் தேவை என்று உணர்ந்த மக்கள் முருகனை வேண்டி வழிபாடு செய்திருக்கின்றனர் என்பதை அறிய முடிகின்றது.

குறிஞ்சி நிலத் தெய்வமான முருகன் காதல் தெய்வமாக மட்டுமன்றிப் போர் தெய்வமாகவும் விளங்குகின்றான். "வெல்லும் போரை வல்ல முருகன்" என்று மலைபடுகடாம் சிறப்பிக்கின்றது. வெற்றித் தெய்வமான கொற்றவையே முருகனின் தாயெனக் கொள்ளப்படுகின்றாள். முருகன் கடம்ப மாலையை அணிந்து கடம்ப மரத்தின் கீழ் இருப்பவன் என்றும், போரை விரும்புவன் என்றும் சங்க நூல்கள் குறிப்பிடுகின்றன. மேலும் வெல்போர்க் கொற்றவை சிறுவ, வெல்போர்ச் சேஎய் கடம்ப மலர் நெடுவேள், திருத்தகு சேஎய், செருக மிகு சேஎய் என்று பலவாறாக முருகன் புகழப்படுகின்றான்.

முருகன் கோயில் 'அணங்குடை முருகன் கோட்டம்' எனப்பட்டது. திருமுருகாற்றுப்படையில் அழகிய மணிவிளக்கு ஒளிரும் திருச்சீரளவாயில் ஆறுமுகங்களும், பன்னிருகைகளுமுடைய முருகன் கோயில் கொண்டிருப்பதாகக் கூறப்படுகின்றது. இதனை

"திருமணி விளக்கின் அலைவாய்ச்
செருமிகு சேஎயொடு"

என்ற பாடலடி மூலம் அறியக் கிடைக்கின்றது. மேலும் திருமுருகாற்றுப்படையில், முருகனிடத்தில் வீடுபேற்றின்பத்தைப் பெற்றான். ஒருவன் அதனைப் பெறுவதற்கு மனங்கொண்டான் ஒருவனை முருகனுடைய படை வீடுகளுக்குச் சென்று அவனை வணங்கி வரம் பெருமாறு வழிப்படுத்தும் வகையில் பாடல்கள் அமைந்துள்ளன. அப்பாடல்கள் ஆறுபகுதிகளாக அமைந்துள்ளன. முதற்பகுதியாக திருப்பரங்குன்றம் பற்றிய அடிகளில் முருகனுடைய உடல், ஒளி, அடியவரைக் காக்கும் திறன், அவன் அணிந்த மாலைகள் அவன் தெய்வயானையின் கணவன் ஆயினமை, சூரபன்மாவை அழித்தமை முதலியவை கூறப்பட்டுள்ளன.

திருசீரலைவாய் பற்றிய பாடல் அடிகளில் முருகன் யானை மேல் அமர்ந்து காட்சியளிக்கின்றான். மயிற் கொடியின் வனப்பு, வள்ளியம்மையின் சிறப்பு, முருகனுடைய பன்னிருகைகளும் செய்யும் தொழில்கள் முதலியவை கூறப்பட்டுள்ளன. இத்திருசீரலைவாய் கடற்கரையில் அமைந்துள்ள திருச்செந்தூர் என்ற திருப்பதியாகும். இது "வெண்டலைப் புணரி அழைக்குஞ் செந்தில், செவ்வேள் நிலை இயகாமர் வியன்துறை" என்று புறநானூற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அடுத்துக் கூறப்படும் திருவாவினன்குடி என்ற பழனிமலை பற்றிய அடிகளில் பண்டைய முனிவரின் சிறப்பு, கந்தர்வர்களுடைய பெருமை, திருமால், சிவன், இந்திரன் இவர்களுடைய நலன்கள் பற்றியும், பிரமனுக்கு முருகனால் ஏற்பட்ட சாபத்தைப் போக்க தேவர்களும் முனிவர்களும் முருகனை வேண்டுவதற்காக சென்ற திறமும் அவர்களுக்கு அருளுவதற்காக முருகப்பெருமான் தெய்வயானையோடு வீற்றிருந்த வனப்பும் கூறப்பட்டுள்ளது.

திருவேரகம் எனும் சுவாமிமலை பற்றிய பாடல்களில் அந்தணர்களின் சிறப்பும், ஆறெழுத்தை உச்சரிக்கும் திறனும், பிறவும் கூறப்பட்டுள்ளன. குன்றுதோறாடல் என்ற பகுதியில் வேலன் வடுக்கும் வெறியாட்டில் முருகன் வெளிப்படும் செய்தி வருணிக்கப்பட்டுள்ளது. இதே போன்றுதான் பழமுதிர்ச் சோலையிலும் முருகன் இருக்கும் வனப்பும் ,இடத்தின் தன்மையும் வர்ணிக்கப்பட்டுள்ளது.

திருமுருகாற்றுப்படையில் திராவிட தெய்வமான முருகனின் இயல்புகள் கூறப்படுகின்றன. அதாவது, முருகனுடைய பன்னிரு கைகளும் ஆறு திருமுகங்களும் செய்யும் தொழில் பற்றி குறிப்பிடப்படுகின்றது. ஆறுமுகங்களையும் நோக்கின் முதலாவது முகம் தன்னுடைய எண்ணற்ற கதிர்களினால் உலகத்தைச் சூழ்ந்திருக்கும் அடர்ந்த இருளை அகற்றுகின்றது. இரண்டாவது முகம் தன்னில் அன்பு செலுத்துகின்றவர்களுக்கு வரங் கொடுக்கின்றது. மூன்றாவது முகம் வேதங்களிற்

கூறப்பட்ட விதிகள் பிறழாது அந்தணர் நடாத்தும் யாகங்களுக்கு தீங்கு வராதபடி துணை செய்கின்றது. நான்காவது முகம் எஞ்சிய பொருட்களை ஏமுற நாடித் திங்கள் போலத் திசை விளங்கும் . ஐந்தாவது முகம் பகைவர்களைக் கொன்று வெற்றியைக் கொண்டாடும். ஆறாவது முகம் வள்ளியுடன் அமர்ந்திருக்கும் இவ்வாறாக ஒவ்வொரு திருமுகமும் ஒவ்வொரு தொழிலைச் செய்வதாக கூறப்படுகின்றது.

அடுத்து பன்னிருகைகளில் முதலாவது கை ஆகாயத்தின்கண் செல்லும் முறைமையை உடையவர்களுக்காக உயர்த்தப்பட்டுள்ளது. இரண்டாவது கை இடுப்பிலே அமைந்து விளங்குகின்றது. மூன்றாவது கை குலிசத்தைச் செலுத்துகின்றது. நான்காவது கை நலம் பெறு கலிங்கத்தினால் மூடப்பட்டு விளங்கும் தொடையின் மீது கிடக்கின்றது. ஐந்தாவதும் ஆறாவதுமாகிய இரு கைகளும் வட்டத்தையும் வேலையும் செலுத்துகின்றன. ஏழாவது கை மார்போடு இருக்கின்றது. எட்டாவது கை மாலையோடு விளங்குகின்றது. ஒன்பதாவது கை போர்த் தொழிலுக்கு வேண்டிய ஆயத்தங்கள் செய்கின்றது. பத்தாவது கரம் மணி இரட்டி ஒலிக்கும்படி அதை அழைக்கின்றது. பதினொராவது கை நீலநிறமான வானத்திலிருந்து மழை பெய்யச் செய்கின்றது. கடைசிக்கரம் வானத்து மகளிருக்கு வதுவை சூட்டுகின்றது. இச்செய்திகளை திருமுருகாற்றுப்படை

"விண்செலன் மரபிணையர்க் கேந்திய....
வாங்கப் பன்னிரு கையும் பாற்பட வியற்றி"

என் எடுத்துக் கூறுகின்றது. ஆரம்பத்தில் முருகன் ஒரு முகமும் இரு கைகளும் உடையவனாகவே இருந்தான். பிற்காலத்தில் தான் ஆறுமுகம் பன்னிருக் கைகளுடையவனாக சித்தரிக்கப்பட்டுள்ளான் என்பர்.

முருகனுடைய தோற்றப் பொலிவினை திருமுருகாற்றுப்படை வர்ணிக்கின்றது. வேலன் தக்கோலம் எனும் செடியின் காயோடு சாதிக்காய், காட்டு மல்லிகை, வெண்கூதாளி முதலியன சேர்த்துக் கட்டிய மாலையை அணிந்திருக்கின்றான். அவனுடைய மார்பு சந்தனம் பூசப்பட்டதால் ஒளி பொருந்தியதாக இருக்கின்றது. முருகன் சிவந்த ஆடையை அணிந்துள்ளான். அவன் காதிலே அசோகின் குளிர்மை பொருந்திய தளிர் அசைகின்றது. முருகன் காலில் கழலினையும் அணிந்துள்ளான். குழலினை ஊதுகின்றான். கோட்டையும் பல்லியத்தையும் இயம்புகின்றான். கிடாயைப் பின்னிட்டு மயில் ஏறுபவன் என்றெல்லாம் வர்ணிக்கப்படுகின்றான்.

. முருகன் ஆரியக் கடவுளான சுப்பிரமணியனுடன் தொடர்புபடுத்தப்படுகின்றான். முருகன் ஆலமர்ந்த கடவுளின் மகன் , வானோர் தானைத் தலைவன், மங்கையர் கணவன். மதவலி என்ற பெயரினையுடையவன், மலை நிலத்துத் தெய்வம் என்றும், அறுவர் பயந்த ஆறமர்ச் செல்வன், ஆல்கெழு கடவுட் புதல்வன், இழையணி சிறப்பிற் பழையோன் குழவி, குறிஞ்சிக்கிழான் என்றும் மறு பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றான்.

இவ்வாறாக சங்ககாலச் சமுதாயம் பெரிதும் இம்மை வாழ்வின் செம்மையிலும் இன்பத்திலும் நாட்டமுடையதாக விளங்கினாலும் சமய வழிபாட்டிற்கு முக்கிய இடம் கொடுத்திருக்கின்றனர் என்பதை அறிய முடிகின்றது. அக்கால கடவுளர்களில் முருகன் முதன்மை பெறுவதை வெறியாடல் கொண்டு தெளியலாம். மேலும் முருகனுடைய திருமுகங்களினதும் திருக்கரங்களினதும் தொழில்களும், தோற்றப்பொலிவும் சங்க நூல்களில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளதை அறிய முடிகின்றது.

சான்றாதாரங்கள்.

1. தமிழர் சால்பு, 1954, பக். 115-124 (சங்கக் காலம்)
2. கலைக் களஞ்சியம், தொகுதி 8, பக் 437
3. அகநானூறு பக் 84
4. திருமுருகாற்றுப் படை, 1937, பக் 17-25
5. பரிபாடல் மூலமும் பரிமேலழகருரையும் 1995, ஆறாம் பதிப்பு.

தஞ்சைப் பெருங்கோயில்

(சமூக, சமயப், பண்பாட்டு நோக்கு)

செல்வி. பி. தேவகுமாரி, தமிழ் சிறப்புக்கலை. விடுகை வருடம்.

எமது முன்னோர்களைப் பற்றியும் அவர்களின் வாழ்க்கை முறைபற்றியும் அறிய முற்படுகின்ற வேளையில், கல்வெட்டுகள், பழைய நாணயங்கள், செப்பேடுகள், தொல்பொருட்கள், வெளிநாட்டார் குறிப்புக்கள் முதலிய வரலாற்று மூலங்கள் எமக்குப் பெரிதும் துணை செய்கின்றன.

இந்த வரலாற்று மூலங்கள் கொண்டு நோக்குகின்ற வேளையில் கி.பி. 9ஆம் நூற்றாண்டின் இறுதிவரையுள்ள காலப்பகுதியாகிய சோழப்பேரரசர் ஆட்சிக்காலமானது தமிழர் வரலாற்றில் ஒரு தலைசிறந்த காலப்பகுதியாகத் திகழ்கின்றதை அவதானிக்கலாம். தமிழ் நாட்டில் சங்ககாலத்தில் முடியுடை மூவேந்தர்களின் ஆட்சியில் சோழர்கள் சிறப்பானவர்களாகக் காணப்படுகினறனர். சங்க காலத்திற்குப் பின்னர் குறுநில மன்னர்களாகவும் படைத்தலைவர்களாகவும் பெரும் நிலக்கிழார்களாகவும் சோழர்கள் வாழ்ந்தனர். அதன் பின்பு பல்லவப் பேரரசர்களின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த இவர்கள் கி.பி. 9ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பல்லவர் ஆட்சியை வலிக்குன்றச் செய்து எழுச்சி பெறத் தொடங்கினர்.

இவ்வகையில் விஜயாலயன் எனும் சோழ மன்னன் தஞ்சாவூரை பல்லவர்களிடமிருந்து கைப்பற்றி அதை தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தான். அதன் பிறகு விஜயாலயனுடைய மகன், பின் அவனுடைய மகன் என்று சோழர் ஆட்சிப் பரப்பு விரிவுபடுத்தப்படுகின்றது. சோழர் ஆட்சிக்காலம் பொதுவாகவே பொற்காலம் என்று சிறப்பிக்கப்பட்டாலும், அதற்கு மூலகாரணமாய் திகழ்வது முதலாம் இராஜராஜ சோழனது (கி.பி. 985– 1014) ஆட்சிக்காலமாகும். இவன் வலிமையுள்ள தனது படைபலத்தின் துணைக் கொண்டு தமிழ் நாட்டில் வடக்கிலும் மேற்கிலுமுள்ள பல நாடுகளையும் தனது ஆட்சிக்கு உட்படுத்தியதுடன் ஈழம், கிழக்கிந்தியத் தீவுகள் முதலிய பலவற்றையும் தனது ஆட்சிக்கு உட்படுத்தி இந்திய வரலாற்றில் புகழ் பூத்த ஒரு பண்பாட்டு பேரரசை உருவாக்கி தென்னிந்திய வரலாற்றில் தனிப் பெரும் சிறப்பு வாய்ந்தவனாகத் திகழ்ந்தான்.

சோழ மன்னர்கள் பொதுவாக சுதேச மன்னர்களாக இருந்தபடியால் இந்து மதமானது அவர்களின் ஆதரவுடன் செழித்தோங்கியது. ஏனைய மதங்களும் தடை எதுவும் இல்லாமல் தம்பாட்டில் வளர்ந்தன. பல்லவர் காலத்தைப் போல் சமயப் பகை இல்லாதிருந்த போதும் மன்னர்கள் தமது ஒவ்வொரு வெற்றியைக் குறிக்கவும் ஒவ்வொரு கோயிலைக் கட்டினார்கள். அது மட்டுமன்றி பல்வேறு பொருட்களையும் ஊர்களையும் தேவதானங்களாக கோயில்களுக்கு வழங்கினார்கள். எனவே செல்வச் செழிப்புடன் திகழ்ந்த கோயில்கள் ,வெறுமனே சமய வழிபாட்டுத் தளமாக மட்டுமன்றி, சமூக, அரசியல், பொருளாதார, கலை, கலாச்சார, ஒழுக்கத்துறை என யாவற்றையும் உள்ளடக்கிய சமூக, சமய, பண்பாட்டு மையத்தானமாக விளங்கின.

இவ்வகையில் சோழர் கால கோயில்களுக்கெல்லாம் தலையாயதாகக் காணப்படுகின்ற, முதலாம் இராஜராஜனால் கட்டப்பட்ட தஞ்சைப் பெருங்கோயில் குறிப்பிடத்தக்கதாகும். இம்மன்னனின் சமய பணியையும், சிறப்புகளையும் எடுத்துக் காட்டும் தகுதிவாய்ந்த நினைவுச் சின்னமாக மட்டுமன்றி, அக்கால சமூக, சமய, கலை, கலாச்சாரம் என அனைத்தையும் பேணுகின்ற ஒரு மையத்தானமாகவும் விளங்கியது.

தென்னிந்திய கட்டடக்கலையின் உன்னத நிலையினை பிரதிபலிக்கும் இக்கோயில் 500 அடி நீளமும் 250 அடி அகலமும் உடைய நல்ல இடவசதியுள்ள ஓர் இடத்தின் மத்தியில் அமைந்துள்ளது. மதிலால் சூழப்பட்டுள்ள இக்கோயிலின் கிழக்குத்திசையில் கேரளாந்தகன் திருவாயில் என்று

அழைக்கப்படும் கோபுர வாயிலுமுண்டு. அதை அடுத்து உட்புறத்தில் இராஜராஜன் திருவாயில் என்று அழைக்கப்படுகின்ற மற்றொரு கோபுர வாயில் உண்டு. அதனைத் தொடர்ந்து உட்சென்றால் ஒரு பரந்த பேரவை போன்ற வெளிமுன் மேடை மீது ஒரே கல்லாலான மிகப் பெரிய நந்தியொன்றும் அதனைப் பாதுகாப்பதற்கான நாயக்கர்காலத்தில் கட்டப்பட்ட மண்டபமும் உண்டு. இந்த நந்தியானது 12 அடி உயரமும் 19 1/2 அடி நீளமும், எட்டரை அடி அகலமும் உடையது. அதனைத் தொடர்ந்து உள்ளே செல்லச் செல்ல மகா மண்டபம், அர்த்த மண்டபம், விமானம் என்பன ஒழுங்கு முறைப்படி அமைக்கபட்டுள்ளமையைக் காணலாம்.

இக்கோயிலின் பிரதான அம்சமாகத் திகழ்வது கருவறையின் மேலுள்ள இருநூற்றிப்பதினாறடி உயரமுடைய விமானமாகும். மேலே செல்லச் செல்ல சிறுத்துக் கொண்டு போகும் இவ்விமானம் பதின்மூன்று மாடிகளைக் கொண்டது. அதன் உச்சி அடித்தளத்தின் மூன்றில் ஒரு பகுதியாக சிறுத்துக் காணப்படுகின்றது. உச்சியில் கோள வடிவான தூபிக்கல்லும் அதன் மீது வெண்கலச் சிகரமும் உள்ளன.

சதுரமாகக் காணப்படும் கருவறையின் பக்கம் நாற்பத்தைந்து அடி நீளமுள்ளது. 9அடி அகலமுள்ள வழியொன்று இதனைச் சுற்றி காணப்படுகின்றது. கருவறையில் பிருகதீஸ்வரர் என்று அழைக்கப்படுகின்ற மிக பிரமாண்டமான இலிங்கமொன்று உள்ளது. இக்கோயிலின் வெளி மதிலின் உட்புறத்தில் மூலைக்கு ஒன்றாக நான்கு சிறு கோயில்கள் உள்ளன. நான்கு சுவர்களின் ஓரங்களிலும் மேலும் பல துணைக் கோயில்கள் உள்ளன. இக்கோயிலிற் காணப்படுகின்ற ஏழு வாயில்களினதும் இரு மருங்கிலும் பதினெட்டு அடி உயரமும் எட்டடி அகலமுமுள்ள 14 துவார பாலகர்கள் அமைக்கப்பட்டிருக்கின்றனர். இவ்வாறு இக்கோயிலின் சிறப்பினை விபரித்துக் கொண்டே போகலாம். இதனைக் கோயில் என்பதை விட கோயில் நகரம் என்பதே சாலச்சிறந்ததாகும். இக்கோயிலை இராஜராஜ சோழன் ஆறு ஆண்டுகள் அரும்பாடுபட்டு கட்டுவித்ததாக கல்வெட்டுகளின் மூலம் அறியலாம்.

நாற்பத்தோராயிரத்து ஐந்நூறு கழஞ்சு (500 இறாத்தல்) அளவுடைய தங்கம் பத்தாயிரத்து இருநூறு காசு பெறுமதியான நகை ஐம்பதினாயிரத்து அறுநூற்று ஐம்பது கழஞ்சு (600 இறாத்தல்) அளவுடைய வெள்ளி அணிகலன்கள், பாத்திரங்கள் என்பனவும், இலங்கை உட்பட அவனுடைய ஆட்சிக்குற்பட்ட பல இடங்களிலுள்ள பல ஊர்களையும் தேவதானமாக இராஜராஜன் இப்பெருங்கோயிலுக்கு வழங்கியுள்ளான். அந்த ஊர்களிலிருந்து ஆண்டு தோறும் ஒரு இலட்சத்து 16ஆயிரம் கலம் நெல் கிடைத்து வந்தது. 1100 காசு வருமானமாகவும் கிடைத்தது. இவனைச்சார்ந்த மேலும் பலரும் பல்வேறு விதத்தில் இக்கோயிலுக்குத் தேவ தானங்களை வழங்கியுள்ளனர். எனவே இக்கோயில் பொருளாதார வளத்தில் மிகவும் உன்னத நிலையில் இருந்தமையால் சமய பணிகளுடன் மட்டும் நின்றுவிடாமல் தனக்குக் கிடைத்த அறக்கட்டளைகளிலிந்தும் ஏனைய சொத்துக்களிலிருந்தும் ஒரு காசுகூட வீணாகாமல் சமூகத்திற்கு பயன்படும் விதத்தில் நிர்வகிக்கப்பட்டுள்ளது.இதற்காக பலர் நியமிக்கப்பட்டு, ஊதியம் வழங்கப்பட்டது.

கோயிற் திருப்பணி செய்பவர் நியமிக்கப்பட்டனர். அவர்கள் ஸ்ரீ காரியம் செய்பவர்கள் என்று அழைக்கப்பட்டனர். இவ்வாறு ஸ்ரீ காரியம் செய்பவர்களுக்குத் தலைவனாக பொய்கை நாட்டுக் கிழவன் ஆதித்தன் சூரியனான தென்னவன் மூவேந்த வேளாளன் என்பவன் நியமிக்கப்பட்டிருந்தான். ஸ்ரீ காரியம் செய்பவர்களை கண்காணிப்பதற்காக மேலும் ஒருவன் நியமிக்கப்பட்டிருந்தான். அர்ச்சகராக சிவாச்சாரியார் பவனபிடான் என்பவர் நியமிக்கப்பட்டிருந்தார். திருவிழாக்களின்போதும் பூசை நேரங்களிலும் பதிகங்கள் பாடுவதற்கென்று ஐம்பது பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டிருந்தது. அதில் திருப்பதிகம் விண்ணப்பம் செய்பவர்கள் 48 பேரும் உடுக்கை வாசிப்பவன் ஒருவனும் கெட்டி மேளம் வாசிப்பவன் ஒருவனும் இடம் பெற்றனர்.மேலும் கானபாடி ஆரியம் பாடுவார், தமிழிசைப்பாடுவார் என சிலரும் இடம் பெற்றிருந்தனர். கோயிற் திருப்பணிகளை குறைவறச் செய்வதற்கு நாடெங்கிலுமுள்ள பல கோயில்களிலிருந்து நானூறு தேவ தாசிகள் தெரிவு செய்யப்பட்டு பொட்டுக்கட்டப்பட்டனர். இவர்கள் ஒவ்வொருவருக்கும் கோயிலுக்குச் சொந்தமான நிலத்தில் ஒரு குறிப்பிட்டளவு (ஒரு வேலி) நிலமும் ஒரு வீடும் கொடுக்கப்பட்டது அந்த நிலமானது ஆண்டு தோறும் நூறு கலம் நெல் அறுவடை செய்யகூடிய விளை நிலமாகவும் இருந்தது.

இசையில் வல்ல பெண்கள் காந்தர்விகள் என்றும் இசையில் வல்ல ஆடவர்கள் காந்தர்வர்கள் என்றும் அழைக்கப்பட்டனர். காந்தர்வர் 25 பேர் இக் கோயிலில் நியமனம் பெற்றிருந்தனர். மகரதோரணம் கட்டுபவர்கள் குடைபிடிப்பவர்கள் அவர்களுக்கு கீழ் வேலை செய்பவர்கள் எனப் பலர் கடமையாற்றினர்.

மடைப்பள்ளித் தொழிலில் 166 பேர் ஈடுபடுத்தப்பட்டனர். இவர்கள் மட்டுமன்றி கோயிலினதும் கோயிலை சேர்ந்தவர்களதும் தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு சலவைத் தொழிலாளி, சிகை அலங்கரிப்பவன், மரவேலை செய்பவன், பொற்கொல்லன், இரத்தினத்தய்யா, இவர்களைக் கண்காணிப்பதற்கு கண்காணி மெய்ப்பாதுகாவலன் என்போரும் தொழிலுக்கு அமர்த்தப்பட்டிருந்தனர். இவர்கள் ஒவ்வொருவரும் நாள் ஒன்றுக்கு இரண்டு மரக்கால் நெல் ஊதியமாகப் பெற்றனர்.

மேலும் கணக்கு வேலை செய்வோர், சங்கூதுவோர், நீர்தெளிப்போர், விளக்குப் பிடிப்போர் எனப் பலர் நியமிக்கப்பட்டனர். இவர்கள் முறையே இருநூறு கலம், 100 கலம், 50 கலம் என நெல்லை ஆண்டுக்கு ஊதியமாகப் பெற்றனர். இவ்வாறு வேலை வழங்குவதில் உண்மையில் ஒரு தொழிற்சாலையாகவே இக்கோயில் தொழிற்பட்டுள்ளது.

இக்கோயில் கோடிக்கணக்கான சொத்துகளைக் கொண்டிருந்தமையால் கடன் வழங்கும் வங்கியாகவும் தொழிற்பட்டுள்ளது. கணிசமான தொகை கிராம சபைகளுக்கு நூற்றுக்கு 12 வீத வட்டிக்கு கொடுக்கப்பட்டது. அவ்வாறு கொடுக்கப்பட்ட தொகை பின்பு காசாகவோ அல்லது நெல்லாகவோ மீளப்பெறப்பட்டது. மேலும் இக்கோயில் பொதுமக்களின் சேமிப்பு நிதியமாகவும் பயன்பட்டது. பல்வேறு சந்தர்ப்பங்களில் அவர்களும் அதில் கடன் பெற்றுக் கொண்டனர். அதனை மீளச் செலுத்த முடியாத வேளையில், தமது நிலம் அல்லது சொத்துக்களை பதிலாகக் கொடுத்தனர். அல்லது கோயிலுக்குச் சொந்தமான நிலத்தில் வேலை செய்தோ அல்லது கோயிற் பணி செய்தோ அக்கடனைத் தீர்த்தனர்.

ஆரம்பக்கல்வியிலிருந்து உயர்கல்விவரை பயில்வதற்காக பள்ளிகள், கல்லூரிகள் என்பனவும் அமைக்கப்பட்டிருந்தன. அதில் பயிலும் மாணவர்களும் ஆசிரியர்களும் நன்கு பராமரிக்கப்பட்டனர். இதற்காகவே பல அறக்கட்டளைகள் வழங்கப்பட்டுள்ளன. போட்டிப் பரீட்சைகள் வைக்கப்பட்டு பரிசில்களும் வழங்கப்பட்டன.

அது மட்டுமன்றி இக்கோயில் ஆதுலர் (மருத்துவ)சாலையாகவும் செயற்பட்டு வந்துள்ளது. கோயிலில் வேலை செய்பவர்கள், திருவிழாக்களுக்கு வருபவர்கள் என பலரதும் சௌகரியம் கருதி அவ்வாறு திகழ்ந்தது. அங்கும் பலர் பணிபுரிந்தனர். அது மட்டுமன்றி கோயிலுக்குத் தேவையான அனைத்துப் பொருட்களையும் உற்பத்தி செய்வதற்கும் விற்பனை செய்வதற்கும் பல பணியாளர்கள் இக்கோயிலிலேயே செயற்பட்டனர். இவ்வாறு ஒரு சமூகத்தில் காணப்படுகின்ற அனைத்து நடவடிக்கைகளையும் கொண்டதாக இக்கோயில் செயற்பட்டுள்ளது.

அங்குள்ள இறைவனுக்கு நாள்தோறும் எண்ணிறைந்த நெய் விளக்குகள் ஏற்றப்பட்டன. அதற்காக ஆடுகள், மாடுகள், எருமைகள் என்பன வழங்கப்பட்டு, இடையர்களின் பாதுகாப்பில் விடப்பட்டன. அவர்கள் அவற்றிலிருந்து பெற்றுக் கொண்ட நெய்யில், நாள்தோறும் ஒரு விளக்கிற்கு ஓர் உழக்கு வீதம் நெய் கொடுத்தனர். கோயிலில் பூஜை நேரங்களாகிய மூன்று பொழுதிலும் திருவமுது செய்யப்பட்டது. விழாக்களின் போது விஷேடமாக அமுது செய்யப்பட்டது. மேலும் வழிப்போக்கர்கள், ஏழைகள், அங்கவீனர்கள் என பலருக்கும் நாள் தோறும் உணவளிக்கும் அன்ன சத்திரமாகவும் செயற்பட்டது.

அது மட்டுமன்றி இசை, நடனம், ஓவியம், கட்டிடம், சிற்பம் போன்ற நுண்கலைகளின் உறைவிடமாகவும் இக்கோயில் திகழ்ந்தது. தென்னிந்திய கட்டிடக் கலை வரலாற்றிலேயே ஓர் உன்னத நிலையை பிரதிபலிக்கும் இக்கோயில் போல் அதற்கு முன்போ பின்போ கட்டப்படவில்லை என்று கூறக்கூடிய வகையில் சிறப்பு வாய்ந்ததாகவுள்ளது.

இக்கோயிலின் உள்ளறைச் சுவரில் தீட்டப்பட்டுள்ள காட்சிகளில், சுந்தரரை இறைவன் தடுத்தாற் கொண்ட காட்சியும், அவரும் சேரமான் பெருமாளும் கைலை செல்லும் காட்சியும், இக்காட்சிக்கு மேற்கே தட்சணாமூர்த்தியும், அவர்களுக்கு சூழவுள்ளவர்களும் அழகுற தீட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவற்றிற்கெல்லாம் மேலாக சிவபெருமான் திரிபுரத்தை எரித்த காட்சி அமைந்துள்ளது.

இந்த கோயிலின் கருவறையில் அமைக்கப்பட்டுள்ள சிவலிங்கமே மாபெரும் கலைப் பெட்டகமாகத் திகழ்கின்றது. ஒரு கல்லில் அமைக்கப்பட்டுள்ள நந்தியும் குறிப்பிடத்தக்கது. உலகப் புகழ் பெற்ற வெண்கலச் சிலைகள் இக்கோயிலில் இருந்துள்ளன. மேலும் இறைவன், இறைவியர், சீதை, இராமன் போன்றோரின் திருவுருவங்கள் இங்கு காணப்படுகின்றன. இவற்றுள் எல்லாம் மேலானதாக ஒரு வட்டத்திற்குள் நின்று ஆனந்தக் கூத்தாடும் கூத்தரின் சிலை அமைந்துள்ளது. இந்து சமயத்தின் மாபெரும் தத்துவத்தை உணர்த்தி நிற்கும் இச்சிலையில் லயம் , உணர்ச்சி, உவகை முதலியன ஒருங்கே பொருந்தியுள்ளதை அறியலாம் மேலும் கோயிலின் உயர்ந்த மதில் மீது இருந்து விழுந்து பிறர் எடுத்தது போக எஞ்சியுள்ள நூற்றுக்கணக்கான நந்தியுருவங்களே இக்கோயிலின் சிற்பக்கலையின் சிறப்புக்கு சான்று பகர்கின்றது. கோயிலின் விமானத்தில் தென்புற மதிற்பக்கத்தில் சோழ வீரர்களின் உருவங்கள், திருமால், பிள்ளையார், பிச்சாடனர், சூலதேவர், தென்முகக்கடவுள், அர்த்தநாரீஸ்வரர், மார்க்கண்டேயர், கல்யாணசுந்தரர், மகிடாசுரமர்த்தனி சிற்பங்கள் என பல சிற்பங்கள் எழிலுற அமைக்கப்பட்டுள்ளன. மேலும் திருச்சுற்று மாளிகையின் தென்பக்கம் தவிர மற்றைய பாகங்களில் மகாலிங்கங்கள், நாககன்னியர், சமயகுரவர் எனப் பல படிமங்கள் காணப்படுகின்றன. திருவிழாக்களின் போதும் நாளாந்த பூஜை வேளைகளிலும் பண்ணோடு பாடல் இசையமைப்பதற்கும், இசைக்கருவிகளை மீட்டுவதற்கும், நடனமாடுவதற்கும் பல குழுக்கள் நியமிக்கப்பட்டிருந்தமையையும் அறிய முடிகின்றது.

தொகுத்து நோக்குமிடத்து தஞ்சைப் பெருங்கோயில் மனித வாழ்வை நெறிப்படுத்தும் சமயத்தை வளர்த்ததோடு அல்லாமல் கோடிக்கணக்கான சொத்துகளின் அதிபதியாக பொருளாதாரத்தில் சிறந்து விளங்கியதுடன் வேலை வழங்கும் நிறுவனமாகவும் வங்கியாகவும் ஆதுலர்சாலையாகவும் அரும்பொருட்காட்சிக் கூடமாகவும் நாடக மேடையாகவும் எனப் பல்வேறு வகையிலும் சமூக நிறுவனமாக விளங்கியதோடு இசை, நடனம், ஓவியம், கட்டிடம், சிற்பம் எனப் பல கலைகளை வளர்த்து வந்த சமூக, சமய, பண்பாட்டிற் சிறந்த ஒரு நிறுவனமாகவும் அவற்றைப் பேணிப் பாதுகாக்கின்ற ஒரு மையத்தானமாகவும் திகழ்ந்தது என்பதில் ஐயமில்லை எனலாம்.

உசாத்துணைநூல்கள்

1. நீலகண்ட சாஸ்திரி, கே.ஏ. (1966) தென்னிந்திய வரலாறு (தமிழாக்கம்) கொழும்பு அரசாங்கப் பாஷைப்பகுதி.

2. நீலகண்ட சாஸ்திரி, கே.ஏ. (1989) சோழர்கள், புத்தகம் 1, தமிழாக்கம்: ராமன், கே.வி., சென்னை.

3. தங்கவேலு, கே ( ) இந்திய வரலாறு, முதலாம் புத்தகம், தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவன வெளியீடு.

4. தங்கவேலு, கே. (1976) இந்திய வரலாறு, இரண்டாம் புத்தகம், சென்னை, தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவன வெளியீடு.

5. திருநாவுக்கரசு, க. த. (1975) முதலாம் இராஜராஜசோழன், சென்னை.

6. இராசமாணிக்கனார், மா ( ) சோழர் வரலாறு, முதலாம் பாகம், சென்னை.

கண்ணகி வழிபாடும் மட்டக்களப்பு பிரதேசமும்

செல்வன்.செ. சிங்காரவேல், தமிழ்த்துறை (2ம் வருடம்),கலைப்பீடம்.

இலங்கையில் வாழும் இந்துக்களிடையே கிராமிய தெய்வ வழிபாடு முக்கிய இடத்தினை வகிக்கின்றது. ஆகமம் சாரா இத்தெய்வ வழிபாடு நம்பிக்கையின் அடிப்படையில் இன்றும் பெரிதும் மதிக்கப்படுகின்றது. கிராமிய தெய்வங்களாக கண்ணகை அம்மன், பேச்சி அம்மன், கரகத்து அம்மன், வைரவர், வீரபத்திரர், நாக்சியார், மாரியம்மன், கடலம்மன், இராக் குருசியம்மன், நாகம், முதலிய தெய்வங்கள் அடங்குகின்றன. இவ்வழிபாடானது கிழக்கு மாகாண இந்துக்களிடையே சிறந்து காணப்பட்ட போதிலும் கற்புக்கரசி பத்தினி தெய்வம், கண்ணகியம்மன் வழிபாடே பிரபல்யம் பெற்றுள்ளது.

இக்கண்ணகை அம்மன் வரலாற்றை நோக்கும்போது கடலில் பேழையில் மிதந்து வந்த குழந்தையை மாநாயக்கன் செட்டியார் எடுத்து கண்ணகி என பெயரிட்டு வளர்த்து கோவலனுக்கு மணம் செய்து கொடுத்ததாகவும், கோவலனுடன் இல்லறம் நடத்தும் வேளை கோவலன் மாதவி எனும் ஆடல் அழகியுடன் தொடர்பு கொண்டு செல்வங்களை எல்லாம் இழந்து பின் கண்ணகியிடம் வந்தடைந்து அவளுடன் வாணிக நோக்குடன் மதுரைக்கு சென்றதாகவும், அங்கு கோவலன் காற்சிலம்பை விற்கச் சென்ற வேளை அந்நாட்டு மன்னனான பாண்டியனால் கள்வனென கருதப்பட்டு கொல்லப்பட்டதாகவும், அவ்வேளை கண்ணகி விரித்த கூந்தலுடன் விரைந்து, மன்னனை சந்தித்து, வாதில் வென்று, தனது மார்புகளில் ஒன்றை திருகி எறிந்து, மதுரையை எரித்து விட்டு விரிகூந்தலுடனும் ஒற்றை மார்புடனும் மதுரைக்கு தென்மேற்கே உள்ள வேங்கை மரத்தடியை சேர்ந்து காலகதியில் அவள் உருவம் மறைகின்றது எனவும், அதை அவதானித்த செங்குன்றக் குரவர்கள் சேரன் செங்குட்டுவனிடம் கூறியதாகவும் அவள் பெருமைகளை உணர்ந்த செங்குட்டுவன் இமயத்தில் கல்லெடுத்து கண்ணகிக்கு சிலை செய்து வந்து மாநகரில் அச்சிலையை பிரதிட்டை செய்தான் எனவும் , அவ்வேளை கடல் ஆழ் இலங்கை கஜபாகு மன்னனும் அவ்விழாவில் இருந்தான் எனவும் அவனே சந்தன கட்டையிலான சிலை, சிலம்பு என்பவற்றுடன் இலங்கையின் வடபாகத்திலுள்ள திருவடி நிலையில் இறங்கி யானை மீது ஊர்வலமாக கண்டி வரை கொண்டு வந்து ஆலயம் அமைத்து வழிபட்டான் எனவும் கண்ணகி வழக்குரை கூறுகின்றது. இதனை கடல் சூழ் இலங்கை கயவாகு வேந்தனும் (வரந்தரு காதை 160 – 164)எனும் பாடல் மூலம் அறியலாம்.

இவ்வாறு கொண்டு வரப்பட்ட கண்ணகி வழிபாடு இன்று கிழக்கு மாகாணத்தில் பல்கிப் பெருகியுள்ளதை இங்குள்ள ஆலயங்களே நிரூபித்து விடுகின்றன. கண்ணகி ஆலயங்கள் இருக்கின்ற இடங்களை நோக்குகின்ற போது,

மட்டகளப்பு மாவட்டத்தில்:– துறை நீலாவணை கோட்டைக் கல்லாறு, மகிழூர், எருவில், களுவாஞ்சிக்குடி, செட்டிப்பாளையம், புதுகுடியிருப்பு, மண்முனை, பட்டிப்பாலை, பழுகாமம், பதினான்காம் கொலனி, முதலைக்குடா, கொக்கட்டிச்சோலை, வந்தாறுமூலை, சிற்றாண்டி, ஆரயம்பதி போன்ற ஊர்களிலும் ,

அம்பாறை மாவட்டத்தில்:–தம்பிலுவில், வீரமுனை, காரைதீவு, கல்முனை , பாண்டியிருப்பு, போன்ற ஊர்களிலும்,

திருகோணமலை மாவட்டத்தில்:- உவர் மலைப்பகுதியில் ஒரு ஆலயம். இவ்வாறு கிழக்கில் பல இடங்களில் கண்ணகிக்கு ஆலயங்கள் அமைத்து வழிபடுகின்றார்கள். இதனை கண்ணகி வழக்குரை யில் வரும் பட்டிநகர் தம்பிலுவில் காரை நகர் வீரமுனை , எனும் பாடலில் அறியலாம்.

இந்த ஆலயங்களில் தின பூஜை இடம் பெறுவதில்லை. ஆனால் சில ஆலயங்களில் வெள்ளிக்கிழமைகளிலும் ,விஷேடதினங்களிலும் வெளிப் பூஜை மட்டுமே இடம் பெறும். ஆனால் எல்லா ஆலயங்களிலும் மிகவும் சிறப்பான முறையில் வருடத்திற்கு ஒரு முறை வருகின்ற வைகாசி மாதத்தில் பூரணை நாளை இறுதி நாளாக கொண்டு முன்னுள்ள எட்டு நாட்களிலும் பெருந் திருவிழா (சடங்கு) நடைபெறும். இது சில ஆலயங்களில் பத்து நாட்கள் இடம் பெறுகின்றன. இவ்வேளை அதாவது திருவிழா காலங்களிலும் அதற்கு ஓரிரு தினங்களுக்கு முன்னும் மக்கள் சில ஆசாரங்களை பயபக்தியுடன் கடைப்பிடிக்கின்றார்கள்.

ஆசாரங்கள்:-

கோயிலையும் சூழலையும் தெருக்களையும் கூட்டிப் பெருக்கி புனிதப்படுத்துவார்கள். கோயிற் கதவு திறந்து அடைக்கும் வரை மாமிச உணவுகளை உண்ணமாட்டார்கள். மற்றும் கோயிலை அண்டிய பகுதிகளிலுள்ள வீடுகளில் மாதவிலக்கான பெண்கள் இருந்தால் அவர்களை ஆலய சூழலுக்குத் தொலைவிலுள்ள தங்கள் உறவினர் வீட்டிற்கு அனுப்பி வைப்பர். அத்துடன் இவ்வாறு உள்ளவர்கள் தங்களது வீடுகளுக்கு வராமலிருக்க தெரு வாயில்களில் வேப்பிலையைக் கட்டித் தொங்க விடுவார்கள். மற்றும் இக்காலப்பகுதியில் திருமணங்கள், ஆடம்பர விழாக்கள் எதனையும் செய்ய மாட்டார்கள்; தூர இடங்களுக்குப் பிரயாணம் செய்ய மாட்டார்கள். திருவிழாக்காலங்களில் ஆலய வீதிகளைப் பெண்கள் ஒவ்வொரு அதிகாலையிலும் கூட்டித் துப்பரவு செய்தல் போன்ற விடயங்களை மிகவும் புனிதத்துடன் கடைப்பிடிப்பர்.

கதவு திறப்பும் சடங்கு முறைகளும்:-

வைகாசி மாதத்தில் வரும் பூரணை நாளை இறுதி நாளாகக் கொண்டு பல ஆலயங்களில் எட்டு நாட்களுக்கு முன் கதவு திறக்கப்பட சில ஆலயங்களில் பத்து நாட்களுக்கு முன் திறக்கப்படுகிறது. கதவு திறக்கப்படும் அன்றிரவு ஆலய நிருவாகத்தினால் தெரிவுசெய்யப்பட்ட ஒருவர் கடல் நீர் கொண்டு ஊரின் நாலாபுறமும், வீதிதோறும் தெளித்துவிட்டு வருவார். இதனை "ஊரைக்காவல் பண்ணுதல்" என்று சொல்வர். பின் சாமத்தில் கதவு திறப்பதற்கான பூஜை இடம்பெறும். இக்கோயில்களில் பூஜை செய்பவர்கள் கட்டாடியார் என்றே அழைக்கப்படுவர். இப்பூஜையின் போது அம்பாளின் மூலஸ்தானக் கதவின் முன் பழம், பாக்கு, வெற்றிலை, பூ என்பன கொண்ட மூன்று மடை வைத்து அதனருகே பூ மாலையணிந்த இரு விளக்குகளும் சுற்றி வைக்கப்படும். நடு மடையில் அக்கதவுத் திறப்பும் துப்பரவு செய்து வைக்கப்படும். பின் பூஜை இடம்பெறும். இதனை விளக்குப் பூஜை என்பர். இது இலட்சுமி ஒளியைக் கொடுப்பதற்காகவும், செல்வத்தைக் கொடுப்பதற்காகவும், செய்யப்படுகின்ற பூசையாகும். பூசை முடிந்த பின் கட்டாடியார் மந்திரங்களை உச்சரித்த வண்ணம் கதவினைத் திறப்பார். இதனை "திருக்கதவு திறத்தல், கதவு திறத்தல்" என்பர்.

பின்பு பூசகர் (கட்டாடியார்) வலது காலை வைத்து உள்ளே சென்று இரு விளக்குகளையும் உள்ளே வைத்து விட்டு அறையைத் துப்பரவு செய்வார். பின் கண்ணகையம்மனையும், பரிவாரத் தெய்வங்களான கரகத்துஅம்மன், பேச்சியம்மன் சிலைகளையும் நீராட்டுவதற்காக வெளியில் எடுத்து வருவார். இவ்வேளை வயது சென்ற ஆண்களும், பெண்களும் குரவை ஒலி எழுப்புவார்கள். அது மட்டுமல்ல பறைமேளத்தின் ஒலியும் இடை விடாது ஒலித்துக் கொண்டிருக்க "அரோகரா" என்ற

சத்தமும் நிறைந்திருக்கும். நீராட்டி முடிந்ததும் உடையணிந்து அறைக்குள்ளே வைத்து 23 கும்பங்களையும் வைத்துப் பூசை பண்ணுவர். அவ்வேளை ஆலய உள்வீதியிலுள்ள சப்த கன்னிகளுக்கும் (காவற் கன்னிகள் 7 பேர்) வெளி வீதியிலுள்ள 7 காவற்காரர்களுக்கும் மடை வைத்துப் பூஜை இடம் பெறும். (இங்கு செய்யப்படுகின்ற பூசைகள் அனைத்தும் சடங்குகள் என்றே பெயர் பெறும்) இவ்வேளை ஆலயத்தின் வடகிழக்கு மூலையில் கொடிமரம் நாட்டுவதோடு பெரும்பாலான ஆலயங்களில் இதே சடங்குகளுடன் கல்யாணக்கால் நாட்டும் வைபவமும் இடம் பெறும்.

ஒரு நாளில் பகற்சடங்கு, இரவுச்சடங்கு என இரண்டு சடங்குகளே இடம் பெறும். அதனைக் குடியாரே பொறுப்பேற்றுச் செய்வர். குடிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப சடங்குகள் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கும். (குடி என்பது தாய் வழிவழியாக வந்த ஒரு வம்சமாகும். ஒவ்வொரு ஊரிலும் பலகுடிகள் பலபெயருடன் இருக்கும்) சடங்குகளிலே கல்யாணச்சடங்கு, குளிர்த்தி போன்றவை மிகவும் முக்கியம் வாய்ந்ததோடு மக்களைக் கவருகின்றனவாகவும் இருக்கின்றன. இக்காலங்களில் பக்தர்கள் நேர்த்திக் கடனாக சேலை, தலையணை, தாலிக் கொடி, மோதிரம், தங்கத்தினாலான அம்மனது உறுப்புகள், ஆடு, மாடு, போன்றவற்றை வழங்குவர். இது பக்தியையும் நம்பிக்கையின் உச்சக்கட்டத்தையும் காட்டுகிறது.

கல்யாணச் சடங்கு:-

சடங்குகளில் கல்யாணச் சடங்கும், குளிர்த்தியுமே விசேடமானவை. கோவலருக்கும், கண்ணகிக்கும் கலியாணம் நடப்பது போல் பாவனை செய்து செய்யும் சடங்கே கல்யாணச்சடங்காகும். கல்யாணச்சடங்கு அன்று பகல் கல்யாணக்கால் வெட்டுவதற்காக தெய்வங்களும் கட்டாடியாரும் ஊர்மக்களும் சென்று பொருத்தமான மரத்தில் தடி ஒன்றை வெட்டி, உரித்து, மஞ்சள்நீரில் கழுவி, திருநீறு பூசி, மாலையணிந்து கோயிலுக்கு கொண்டு வருவர். அதையே கல்யாணப் பெண்போல் அலங்கரித்து சடங்கு நடைபெறும். இவ்வேளை கண்ணகியின் திருமணம் நடந்ததை பாடலாக அந்தந்த ஊர்களுக்கே உரித்தான மெட்டுடன் பாடுவார்கள். இதனை கல்யாணப் படிப்பு என்பர். இச்சடங்கின் போது மக்கள் கூரைச் சேலையில் தாலிக்கொடி, மோதிரம், பலகாரங்கள், பூசைப் பொருட்கள் என்பவற்றைக் கொண்டு கொடுப்பர். பூசை முடிந்ததும் அடியார்களுக்கு கல்யாணப் பலகாரம் பரிமாறப்படும். இதில் ஏராளமான கன்னிகள் கலந்துகொள்வர். இந்த ஆலயம் திருமண வீடுபோல் அலங்கரிக்கப்பட்டிருத்தல் குறிப்பிடத்தக்கது.

சடங்குகளின் போது சில ஆலயங்களில் தெய்வங்கள் ஆட்டப்படுகின்றன. அதாவது அம்மனின் பாடல்களால் உருக் கொண்ட ஆணும் பெண்ணும் ஆடுவர். இதனை தெய்வம் ஆடுதல் என்பர். அப்போது அவர்களிடமிருந்து வருகின்ற வார்த்தைகள் தெய்வத்திடமிருந்து வருவதாக மக்கள் நம்புவர். இதனை "கட்டுச் சொல்லல்" என்பர். பெரும்பாலும் இரவு சடங்குகள் முடிந்த வேளை அம்மனை ஊர்வலமாகக் கொண்டுச் செல்வர். அவ்வேளை மக்கள் வீதிகளில் (வாசல்களில்) நிறைமுட்டி, விளக்கு வைத்திருப்பர். அதனை கட்டடியார் எடுத்து அதன் தேங்காயை மந்திரமோதி இரண்டாக உடைத்து முட்டிக்குள் இருக்கும் நீரையும் அவ்விடத்தில் ஊற்றிவிட்டு தெய்வத்திடம் தீபம் காட்டி விட்டுச் செல்வர்.

குளிர்த்தி:-

இறுதி நாளன்று இடம்பெறும் சடங்கு குளிர்த்திச் சடங்காகும். இன்று மட்டும் பகற் சடங்கு இருக்காது. ஆனால் இன்று காலையிலிருந்தே நேர்த்திக்கடனில் ஆண்கள் ஆலயத்தைச் சுற்றி உருண்டு வருவர். இதனை புரட்டணம் செய்தல் என்பர். பெண்கள் வீடு தோறும் சென்று நெல், காசு முதலியவற்றை சேலை முந்தானைக்குள் பெற்றுக் கொண்டு கோயிலில் கொடுப்பர். இதனை மடிப்பிச்சை எடுத்தல் என்பர். இதைவிட பெண்கள் கற்பூரச் சட்டி எடுத்தல் ,ஆலாத்தி எடுத்தல் போன்ற நிகழ்ச்சிகளும் இடம்பெறும். குளிர்த்தி சடங்குக்கு முன் விநாயகருக்கும்,

அம்மனுக்குமாக 3 பானைகள் வைத்து பொங்கல் பொங்குவார்கள். இதன் பின் ஏராளமான அடியார்களும் பொங்கல் பொங்குவார்கள். பின் அம்மனுக்கும் ஏனைய தெய்வங்களுக்கும் பூசை செய்து முடித்ததும் அம்மன் குளிர்த்தி ஆடுவதற்காக கட்டாடியார் அம்மன் போல் பாவனை பண்ணி அம்மனையும் கொண்டுவர இருவர் வெள்ளைச்சேலையால் கட்டாடியாரின் தலைக்கு மேலாக விரித்து பிடிப்பர். கட்டாடியார் குளிர்த்திப் பானை (பொங்கல் பானை)க்கு பக்கத்தில் வந்ததும் அடியார்கள் அம்மனின் குளிர்த்திப்பாடலை மாறி மாறி படிப்பர். (குளிர்த்தி பாடலானது மதுரையை எரித்த அம்மனின் ஆவேசத்தை தணிப்பதாக பாடப்படும் பாடல்கள்) இது நடைபெறும் வேளை அடியவர்கள் குரவை ஒலி எழுப்ப பறை மேளத்தின் ஒலியும் ஒலிக்கும் . இது எல்லோரையும் பரவசப்படுத்திவிடுகின்றது. இது முடிந்ததும் அம்மனை ஆலயத்தைச் சுற்றிக் கொண்டு உள்ளே வைத்து விடுவர் . இதன் பின் தெய்வங்கள் பலியைப் பெற்று சுயநினைவிற்கு வரும். பின் அடியார்கள் பிரசாதத்தைப் பெற்று மன நிறைவுடன் வீடுகளுக்குச் செல்வர். இதோடு அம்மனின் கதவும் அடைக்கப்படும்.இச்சடங்கு பூரணை நாள் இடம் பெறும்.

இச்சடங்குகள் வெறுமனே ஒரு வழிபாடு மட்டுமல்ல ஊரிலுள்ள அத்தனை மக்களும் ஒன்று கூடி ஆசாரசீலத்துடன் தெய்வசக்தியை ஆராதனை செய்யும் ஒரு நிகழ்வாகும். வருடத்தில் ஒரு முறை விழா நடந்தாலும் வருடம் முழுவதும் அம்மனின் அருள் கிராமத்தையும் கிராம மக்களையும் அரவணைத்துப் பிடிப்பதாகவே இம்மக்கள் இன்றும் நம்புகின்றனர். அது மட்டுமல்ல வெப்பக் கொடுமை இதன் பின்னர் தணிவதாகவும் ,சின்னம்மை போன்ற நோய்கள் தடுக்கப்படுவதாகவும் மக்கள் நம்புவதோடு இம்மக்கள் மத்தியில் கண்ணகி ஒரு பத்தினி தெய்வமாகவே இன்றும் மதிக்கப்படுவதையும் கிழக்கு மாகாணத்தினில் காணமுடிகின்றது.

உசாத்துணைகள்;-

i கண்ணகி வழக்குரை (V. C. கந்தையா)

ii. கிராமியத் தெய்வங்கள் (இ. சமய ஆசிரியர் கல்விப்பாடநெறி)

iii. தினகரன் (6. 2. 96)

iv. பெரியோர்கள்

"தெய்வ நம்பிக்கை உள்ளவர்களானாலும் சரி,
தெய்வ நம்பிக்கை இல்லாதவர்களானாலும் சரி,
எந்த மார்க்கத்தைச் சார்ந்தவர்களானாலும் சரி,
அவர்களுக்கு தியானம் அவசியம்."

-பாரதியார்

ஆலய வழிபாடு

– ஒரு வித்தியாசமான பார்வை

செல்வன். தே. சேந்தன், 3ம் வருடம், பொறியியற் பீடம்.

ஆலய வழிபாடு பற்றிப் பல சான்றோர்களும் பெரியோர்களும் நிறைய எழுதியிருக்கிறார்கள். அவற்றிற்காகத் தனியான புத்தகங்களே வெளிவந்திருக்கின்றன. இந்துதருமத்தில் கூட நிறையக் கட்டுரைகள் வந்திருக்கின்றன. எனினும், பொதுவாக இக்கட்டுரைகளில் வந்திருக்கக்கூடிய கருத்துக்களிலிருந்து சற்றுவிலகி, அக்கருத்துக்களுடன், அதற்கு மேலதிகமாக, ஒரு வித்தியாசமான கோணத்தில் ஆலய வழிபாட்டினை ஆராய விளைவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். ஆயின் அதற்கு முன்னமே ஒரு கேள்வி எழுகிறது. ஆண்டவன் உண்டா, இல்லையா? என்று எனவே சிறிது அது பற்றியும் பார்த்து பின் எமது தலைப்பைப் பார்போம்.

முதன் முதலாக ஒரு விஞ்ஞானி (பெயர் நினைவில்லை) முன்மொழிந்தார். . சடப்பொருள் மூலகங்களிலிருந்துதான் உயிரணுக்கள் உருவாக்கப்படுகின்றன. என்று. ஏனைய விஞ்ஞானிகள் அவரைக் கேள்விக்கண்ணோடு பார்க்கையில் ஒருவர் கூறினார், அப்படியாயின் இவர் கேட்கும் மூலகங்களை நாம் பெற்றுக் கொடுப்போம். இவர் உயிரணுவை உருவாக்கிக் காட்டட்டும் என்று. சபையில் , கொல்லென்று ஒரே சிரிப்பு. ஆனால் முன்னையவர் மனந்தளரவில்லை. அவர் சொன்னார் , நான் எனது கடிகாரத்தினை பாகங்களாகப் பிரித்துப் போடுகிறேன். உடனடியாக உங்களில் யாராவது ஒருவர் அதனை மீண்டும் பொருத்தி சரியாக போட வைப்பீர்களானால் நீங்கள் கேட்டதையும் என்னால் செய்ய முடியும். சபையில் நிசப்தம். அந்த பாகங்களிலிருந்து கடிகாரத்தை உருவாக்க எமக்கு தெரியவில்லை என்பதற்காக கடிகாரங்கள் அவற்றிலிருந்து உருவாவதில்லை என நாம் கூறமுடியுமா?

